# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடமாகாணம்

## 2011

க.பொ.த (உ/த) புதிய பாடத்திட்டத்திற்கு
அமைவாக தயாரிக்கப்பட்ட

வினா-விடைத் தொகுப்பு

# வர்த்தகம்

வடமாகாணக்கல்வித்திணைக்களம்
மருதனார்மடம்,
யாழ்ப்பாணம்.

# மாகாணக்கல்வித்திணைக்களம்

# வடமாகாணம்

# 2011

க.பொ.த(உ/த) புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தாயரிக்கப்பட்ட

# வினாவிடைத் தொகுப்பு

## வர்த்தகம்

வடமாகாணக் கல்வித் திணைக்களம்,
மருதனார்மடம்,
யாழ்ப்பாணம்.



# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக மாற்றியமைக்கப் பட்ட பாடத்திட்டத்தினையும் மதிப்பீட்டுத் திட்டத்தினையும் கருத்திற்கொண்டு க.பொ.த உயர்தர வணிகத்துறை மாணவர்கள் இலகுவாகப் புரிந்து கொண்டு எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்கு விடையளித்து அதியுயர் புள்ளிகளைப் பெறும் வகையில் வினாவிடைத் தொகுப்பு ஒன்று வடமாகாணக் கல்வித் திணைக்கள கல்விப்புலம் சார் ஆளணியினரால் வெளியிடப்படுவதையிட்டு நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.

இரண்டு வருடங்களாக இரவு பகல் என்று பாராமல் கற்ற பாடப் பரப்பில் மூன்று மணித்தியாலத்தில் விடையளித்து போட்டிப் பரீட்சையில் முன்னணி வகிக்க வேண்டிய, மாணவர்களின் தேவையை நன்குணர்ந்து இச்செயற்பாட்டில் ஈடுபட்ட ஆளணியினரை நான் மிகவும் பாராட்டி வரவேற்கின்றேன்.

கல்விக் கடலின் ஆழமறியாது பயணம் செய்யும் மாணவர் களுக்கு இத்தொகுப்பு நிச்சயமாக ஒரு கலங்கரை விளக்காக அமையும் என்றால் மிகையாகாது.

இத்தொகுப்பு தொடர்ந்து வெளிவர இறைவன் அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

வளர்க நும்பணி.

ப.விக்கினேஸ்வரன்
கல்விப்பணிப்பாளர்,
வடமாகாணம்.

# வளவாளர் விபரம்

## கணக்கீடு

| No | Name | Designation | Name of School |
|---|---|---|---|
| 01. | திரு. தி, முகுந்தன் | ஆசிரியர் | யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி |
| 02. | திருமதி. ந. கணேசமூர்த்தி | ஆசிரியர் | யா/வடஇந்துமகளிர் கல்லூரி |
| 03. | திரு. சு. பத்மராஜன் | ஆசிரியர் | வ/ வவுனியா தமிழ் |
| 04. | திரு. இ. கைலைவாசன் | ஆசிரியர் | யா/ விக்ரோரியாக் கல்லூரி |
| 05. | திரு.க. சத்தியானந்தன் | ஆசிரியர் | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 06 | திரு.எஸ்.எஸ் கருணைதாஸ் | ஆசிரியர் | யா/யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை |
| 07. | திருமதி. சி .நந்தகுமார் | ஆசிரியர் | யா/புனித அந்தோனியார் கல்லூரி |
| 08. | செல்வி.ஜெ.செந்திவேல் | ஆசிரியர் | யா/புனித அந்தோனியர் கல்லூரி |
| 09. | திரு.சி. ஞானசேகரம் | ஆசிரியர் | யா/கனகரட்ணம் ம.வி |
| 10. | திரு.ச. சுகந்தன் | ஆசிரியர் | வ/நெளுக்குளம் கலைமகள் வி. |
| 11. | திரு.அ.நிமால்கொன்சன்ரைன் | ஆசிரியர் | வ/புதுக்குளம் ம.வி |
| 12. | திருமதி கி.சிவமோகன் | ஆசிரியர் | யா/வேம்படி மகளிர் கல்லூரி |
| 13. | திரு.வே. உருத்திரசிங்கம் | ஆசிரியர் | யா/க.தியாகராஜா ம.மவி |
| 14. | திரு.சி.சிவரூபன் | ISA | வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி |
| 15. | திரு, அவகிஸ்டஸ் பொர் | ஆசிரியர் | புனி/தசவேரியார் பெண்கள் கல்லூரி |
| 16. | திருமதி பி. இதயராஜன் குரூஸ் | ஆசிரியர் | யா/மீசாலை வீரசிங்கம் ம.வி |
| 17. | திரு. சி.சிறீரங்கன் | ஆசிரியர் | கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி |
| 18. | திருமதி அ.சிவலோகராஜா | ஆசிரியர் | யா/டிறிபேக்கல்லூரி சாவகச்சேரி |
| 19. | திரு. இ.பாக்கியநாதன் | ISA | வலயக்கல்வி அலுவலகம் , வவுனியா வடக்கு |
| 20. | திரு.ஜெ. ஜெயாட்னா | ஆசிரியர் | மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி |

# வளவாளர் விபரம்

வணிகக்கல்வி

| No | Name | Designation | Name of School |
|---|---|---|---|
| 01. | சி.சண்முகதாஸ் | ஆசிரியர் | யா/மெதடிஸ்த வண்கள் உயர்தர பாடசாலை |
| 02 | த.சிவாந்தி | ஆசிரியர் | யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 03. | வா.தவராஜா | ஆசிரியர் | யா/மீசாலை வீரசிங்கம் ம.வி |
| 04. | த.பாலகிருஷ்ணர் | ஆசிரியர் | யா.சாவகச்சேரி இந்துக்கல்லூரி |
| 05. | வை.க.ரவீகரன் | ஆசிரியர் | யா/புனிதபத்திரிசியார் கல்லூரி |
| 06 | க.கார்த்திகேயன் | ஆசிரியர் | கிளி/பூநகரி ம.வி |
| 07. | திரு.செ.பிரான்சிஸ் | ஆசிரியர் | மன்/முருங்கன் ம.வி |
| 08. | திரு.க.கோமளேஸ்வரன் | ஆசிரியர் | வ/நெளுக்குளம் கலைமகள் வி |
| 09 | திரு.ச.பிரதீபன் | ஆசிரியர் | கிளி/பரந்தன் இந்து ம.வி |
| 10. | திரு.ச.யசோதரன் | ஆசிரியர் | யா/ஊர்/புனித அந்தோ.கல்லூரி |
| 11. | திருமதி.ம.இராசேந்திரா | ஆசிரியர் | யா/டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி |
| 12. | திரு.க.சத்தியதாசன் | ஆசிரியர் | வ/வவுனியா தமிழ். ம.ம.வித் |
| 13. | திரு.இ.துரைசிங்கம் | ஆசிரியர் | யா/மகாஜனாக்கல்லூரி |

பொருளியல்

| No | Name | Designation | Name of School |
|---|---|---|---|
| 01. | சி.தவராஜா | ஆசிரியர் | மன்/பற்றிமா ம.ம.வி |
| 02 | ந.சுந்தரமூர்த்தி | ஆசிரியர் | யா/ஹாட்லிக்கல்லூரி |
| 03. | இ.ஞானேஸ்வரன் | ஆசிரியர் | யா/மகாஜனக்கல்லூரிதெல்லிப்பளை |
| 04. | ஜீ.பி.சுரேந்திரன் | ஆசிரியர் | யா/வேம்படி மகளிர் |
| 05. | திரு. ஒ. விஜயரத்தினம் | ஆசிரியர் | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 06 | செல்வி செ. மரியைரோசா | ஆசிரியர் | மன்/புனித ஆனான்ம.ம.வி |
| 07. | திருமதி வ. பூலோகராஜா | ஆசிரியர் | கிளி/வட்டக்கச்சி ம.வி |
| 08. | திரு,வே. கருணாநிதி | ஆசிரியர் | யா/ஞானசாரியர் கல்லூரி |
| 09 | திருமதி வா. இந்திரகுமார் | ஆசிரியர் | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி |
| 10. | திரு. அ. பிரபாகரன் | ஆசிரியர் | யா/விக்ரோரியாக் கல்லூரி |
| 11. | C. திவ்வியரூபன் | ஆசிரியர் | வவு/நெடுக்குளம் கல்லூரி |
| 12. | ஞா.ஞானச்சந்திரன் | ஆசிரியர் | யா/யாழ்மத்தியகல்லூரி |
| 13. | திருமதி. சு. கோவர்த்தன் | ஆசிரியர் | யா/கொக்குவில் இந்துக்கல்லூரி |
| 14. | நா. உதயகுமார் | ஆசிரியர் | கிளி/திருவையாறு ம.வி |
| 15. | வே. கருணாகரன் | ஆசிரியர் | யா/கனகரத்தினம் ம.வி |
| 16. | திரு. த.சிற்செல்வம் | ஆசிரியர் | யா/வேலணை மத்திய கல்லூரி |

# பொருளடக்கம்


## வணிகக்கல்வி

மாதிரிவினாத்தாள் - 1
- வினா 01 - 13
- விடை 14 - 24

மாதிரிவினாத்தாள் - 2
- வினா 25 - 37
- விடை 38 - 49

மாதிரி வினாத்தாள் - 3
- வினா 50 - 61
- விடை 62 - 72

மாரி வினாத்ள் - 4
- வினா 73 - 83
- விடை 84 - 95

## கணக்கீடு

மாதிரிவினாத்தாள் - 1
- வினா 96 - 115
- விடை 116 - 129

மாதிரிவினாத்தாள் - 2
- வினா 130 - 146
- விடை 147 - 163

மாதிரி வினாத்தாள் - 3
- வினா 164 - 184
- விடை 185 - 197

மாதிரி வினாத்தாள் - 4
- வினா 198 - 216
- விடை 217 - 228

## பொருளியல்

மாதிரிவினாத்தாள் - 1
- வினா 229 - 240
- விடை 241 - 248

மாதிரி வினாத்தாள் - 2
- வினா 249 - 259
- விடை 260 - 266

மாதிரிவினாத்தாள் - 3
- வினா 267 - 278
- விடை 279 - 286

மாதிரி வினாத்தாள் - 4
- வினா 287 - 300
- விடை 301 - 306

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# வணிகக்கல்வி | 32 | T | I |

## மாதிரி வினாத்தாள் - 1

தரம் -13     பகுதி I     இரண்டு மணித்தியாலம்

**கவனிக்க:**

**எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

**இலக்கம் 1 - 30 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிக் கோட்டில் இடுக.**

01. வர்த்தகத்தின் விருத்திப் படிநிலைகள் கீழே தரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| A) சுய உற்பத்தி | B) பண்டமாற்று | C) வியாபாரம் |
| D) மிகைஉற்பத்தி | E) சிறப்புத்தேர்ச்சி | F) வர்த்தகம் |

மேலே தரப்பட்ட விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு வர்த்தகத்தின் விருத்தி நிலைகளினை ஒழுங்குமுறையாக விபரிப்பது.

1) A, D, E, B, F    2) A, E, D, B, C    3) E, A, B, C, F
4) B, D, E, F, A    5) B, E, D, C, A    (.........)

02. மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் தனித்தனியே அடையாளப்படுத்த முடியும் மனிதத் தேவைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது.

1) உணவு, காற்று, நீர், பொழுதுபோக்கு
2) கல்வி, உடை, நீர், இடியப்பம்
3) போக்குவரத்து, கல்வி, மின்சாரம், பொழுதுபோக்கு
4) வாழ்விடம், தொடர்பாடல், மின்சாரம், உடை
5) உணவு, உறைவிடம், உடை, போக்குவரத்து    (.........)

03. தனிப்பட்டோர் நம்பிக்கைகள் பெறுமானங்கள், நியமங்கள் என்பவை எவ் வணிகச் சூழலின் கீழ் கருதப்படும்.

1) பொருளாதாரச் சூழல்    2) இயற்கைச் சூழல்
3) சமூக கலாசாரச் சூழல்    4) தொழில்நுட்பச் சூழல்
5) அரசியல் சட்டச் சூழல்    (.........)

04. முதலீட்டாளர் சார்ந்த வணிகங்களின் சமூகப் பொறுப்பு அல்லாதது.

1) பங்காளருக்கு நியாயமான இலாபத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
2) பொருளாதார நலன்களை மேம்படுத்தல்.
3) வணிக ஊழியர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.
4) முகாமையாளர் நிதி மோசடிகளின்றி செயலாற்றுதல்
5) முதலீட்டாளர் சார்பில் நீதியாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ளல்.    (.........)

05. அரசிற்கும் வணிகங்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பினைப் பேணவேண்டியது மிக அவசியம். அதற்கேற்ப அரசினால் வணிகங்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய கருமமொன்றாக முன்வைக்கக்கூடியது.

1) நுகர்வோர் நலன்களில் அக்கறை கொள்ளுதல்.
2) முதலீட்டுக்கு பாதுகாப்பு வழங்கல்.
3) ஊக்குவிப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
4) வேலைவாய்ப்பை வழங்கல்.
5) உயர்ந்த இலாப எல்லையை அடைதல்.

(..........)

06.

| அ) | ஆ) |
|---|---|
| 1. நுகர்வோரை பாதுகாப்பதில் அதிகளவு பொறுப்பும் அதிகாரமும் கொண்டிருத்தல். | A) நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம். |
| 2. தேசிய தரங்களினை வரையறுத்து தர தகுதிச் சான்றிதழ் வழங்கல். | B) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை |
| 3. நுகர்வோர் தம்மைத் தாமே பாதுகாத்தல். | C) மத்திய சுற்றாடல் அதிகார சபை. |
| 4. தேசிய ரீதியாக சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளிற்கு பொறுப்பாக இருத்தல். | D) இலங்கை தரக் கட்டளைகள் பணியகம். |

மேலே "அ" நிரலில் தரப்பட்ட கருமங்களுடன் தொடர்புடைய அமைப்புகள் "ஆ" நிரலில் காட்டப்பட்டுள்ளன. அவற்றை "அ" நிரலில் உள்ள ஒழுங்கின்படி இணைக்கும் போது சரியாக அமைவது.

1) A, D, B, C
2) D, C, A, B
3) A, D, B, C
4) B, D, A, C
5) D, A, B, C

(..........)

07. பங்குடமையில் பங்காளர்களின் உச்ச அளவு எண்ணிக்கையை வரையறுக்கும் சட்டம்.

1) பங்குடமைக் கட்டளைச் சட்டம்
2) கம்பனிச் சட்டம்
3) மோசடி தடுப்புச் சட்டம்
4) வியாபாரப் பெயர்ப் பதிவுக் கட்டளைச் சட்டம்.
5) கூட்டுறவுச் சட்டம்.

(..........)

08. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றில் மாத்திரம் காணப்படும் பண்பாக இருப்பது.

1) நீண்ட வாழ்வுத் தன்மை காணப்படலும், வரையறுக்கப்பட்ட பொறுப்பும்.
2) பங்குகளைச் சுதந்திரமாகக் கைமாற்றலும், வரையறுக்கப்பட்ட பொறுப்பும்.
3) ஆகக்குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை 01, உச்ச எண்ணிக்கை வரையறையில்லை
4) ஆகக்குறைந்த இயக்குனர் எண்ணிக்கை 01, உச்ச எண்ணிக்கை 50
5) கடனை மீளச் செலுத்தும் ஆற்றல் தொடர்பான பரிசீலனை அறிக்கை தேவையில்லை.

(..........)

09. முயற்சியாண்மைச் செயற்பாட்டின் முதன்மையாக அமைகின்ற செயற்பாடு.

1) புத்தாக்கம் புனைதல்
2) செயற்படுத்தல்
3) வளர்ச்சி
4) மதிப்பீடு செய்தல்.
5) நட்டப் பொறுப்பை ஏற்றல்

(..........)

10. சிறிய அளவு முயற்சியைப் பாரிய அளவு முயற்சி ஒன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது.

1) விற்பனைப் புரள்வு
2) ஊழியர் எண்ணிக்கை
3) மூலதனத்தின் அளவு
4) பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம்
5) யாவும் சரி

(..........)

11. சிறந்த பணம் கொண்டிருக்க வேண்டிய பிரதான சிறப்பியல்பு யாது?

1) உலோகப் பெறுமானம்.
2) பொதுவாக ஏற்றுக் கொள்ளும் தன்மை
3) அருமைத்தன்மை
4) போலிகளை உருவாக்கல் கடினம்.
5) நீண்ட காலப் பயன்பாடு

(..........)

12. காசோலை ஒன்றில் சிறப்பு முறை குறுக்குக் கோடுகளை இடக் கூடிய தரப்பினர்

1) வரைவோன், வங்கி, பெறுவோன்.
2) வரைவோன் மாத்திரம்
3) வங்கி மாத்திரம்
4) வரைவோன், பெறுவோன்
5) வங்கி தவிர்ந்த ஏனையோர்.

(..........)

13. ஆயுள் காப்புறுதியுடன் தொடர்பற்ற தத்துவங்கள்

1) காப்புறுத்தும் உரிமை, மிக்குயர் நம்பிக்கை
2) மிக்குயர் நம்பிக்கை, இழப்பீட்டுத்தத்துவம்
3) பதிலாள் வைப்புத்தத்தும், இழப்பீட்டுத் தத்துவம்.
4) காப்புறுதி செய்யும் உரிமை, இழப்பீட்டுத் தத்துவம்
5) மிக்குயர் நம்பிக்கை, பங்களிப்புத் தத்துவம்

(..........)

14. வினைத்திறனான போக்குவரத்தின் பண்புகளை சரியாகக் காட்டும் தொகுதி பின்வருவனவற்றுள் எது?

அ) விரைவு　　ஆ) பாதுகாப்பு　　இ) கிரயம்
ஈ) இயலளவு　　உ) தாராளத்தன்மை　　ஊ) ஊடகம்

1) அ, ஆ, இ, ஈ, உ
2) அ, ஆ, இ, ஈ, ஊ
3) அ, ஆ, இ, உ, ஊ
4) ஆ, இ, ஈ, உ, ஊ
5) அ, இ, ஈ, உ, ஊ

(..........)

15. சுருக்கமான முறையில் செய்தி ஒன்றைப் பரிமாற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் எழுத்து மூலமான சாதனம்

1) அறிவிப்புப் பலகை
2) மெமோ
3) கடிதம்
4) சுவரொட்டி
5) பத்திரிகை

(..........)

16. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வெளிநாட்டு வியாபாரத்திற்கு சிறப்பான ஓர் ஆதரவினை நல்கிவரும் நிறுவகம்.

1) உலக வங்கி
2) ஐரோப்பிய சங்கம்
3) உலக வர்த்தக நிலையம்
4) சரவதேச நாணய நிதியம்
5) மேற்கூறிய யாவும்.

(..........)

17. பின்வருவன தலைவர், முகாமையாளர்களின் பண்புகளாகும்

அ) மாற்றங்களை புத்தாக்கங்கள் மூலம் செயற்படுத்துபவர்
ஆ) ஏனையவர்களின் அக்கறையினை எதிர்பார்ப்பவர்
இ) பதவி வழியாக அதிகாரம் கிடைத்தல்.
ஈ) எதிர்காலம் தொடர்பாக தூர நோக்கு உடையவர்
உ) ஏனையவர்கள் மீது அக்கறை செலுத்துவர்
ஊ) பலம் தனித்துவத்தால் கிடைக்கும்.

இங்க கூறப்பட்டவற்றிலிருந்து தலைவருக்கு மாத்திரம் பொருந்துகின்ற பண்புகள் முறையே

1) அ, ஆ, இ
2) ஆ, இ, ஈ
3) ஆ, உ, ஊ
4) இ, உ, ஊ
5) அ, உ, ஊ

(..........)

18. முகாமைத்துவத்தின் தேவை அதிகரித்தற்குரிய காரணமாக அமைவது
1) மாற்றமுறும் வணிகச் சூழலுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்தல்.
2) பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்தல்.
3) போட்டித் தன்மைக்கு முகம் கொடுத்தல்.
4) நிறுவன நோக்கம், இலக்குகளை அடைதல்.
5) மேற்கூறப்பட்ட அனைத்தும். (..5.......)

19. உற்பத்தித் தரத்தைப் பரிசோதிப்பதற்காக பயன்படுத்தப்படும் முறைகளை எடுத்துக் காட்டும் சரியான தொகுதி எது?
அ) தரக் கட்டுப்பாடு
ஆ) தரப்பாதுகாப்பு
இ) முழுமையான தர முகாமைத்துவம்
ஈ) ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்
1) அ, ஆ, இ 2) அ, ஆ, ஈ 3) அ, இ, ஈ 4) ஆ, இ, ஈ 5) அ, ஆ
(.........)

20. ஒரு உற்பத்தியின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை தன்னந்தனியாக செய்து முடிக்கும் உற்பத்தி முறை
1) தொகுதி உற்பத்தி 2) வேலை உற்பத்தி 3) பாய்ச்சல் உற்பத்தி
4) பேரளவு உற்பத்தி 5) செயற்பாட்டு உற்பத்தி (.........)

21. சந்தைப்படுத்தலில் பொருள் வாழ்க்கை வட்டம் (Product Life Cycle) கீழே தரப்பட்டுள்ளது.
A) அறிமுகக் கட்டம் B) அபிவிருத்திக் கட்டம் C) முதிர்ச்சிக் கட்டம்
D) வளர்ச்சிக் கட்டம் E) வீழ்ச்சிக்கட்டம்

மேற்குறிப்பிடப்பட்ட வாழ்க்கை வட்டத்தினை ஒழுங்குமுறையாகக் காட்டும் தொகுதி
1) A, B, C, D, E 2) B, A, D, C, E 3) A, B, D, C, E
4) B, A, C, D, E 5) A, B, D, E, C (..2.......)

22. சின்னங்களை இடுவதனால் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் நன்மையாக அமையாதது.
1) இலகுவாகப் பொருட்களைத் தெரிவு செய்தல்
2) போலிப் பொருள்களிலிருந்து பாதுகாப்புப் பெறல்
3) முறைப்பாடுகளை முன்வைத்தல் இலகு.
4) பெறுமதி ஒன்று உருவாகும்
5) பிரசித்தமான சிறந்த தரத்துடனான பண்டங்களைக் கொள்வனவு செய்தல். (..3.... .)

23. பின்வருவனவற்றிலிருந்து மூலதனச் சந்தையை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவு செய்க
1) திறைசேரி உண்டியல் சந்தை / வணிகப்பத்திர சந்தை / உள்நாட்டு செலாவணி சந்தை
2) திறைசேரி முறிகள் சந்தை / கூட்டிணைக்கப்பட்ட முறிகள் சந்தை / பங்குச் சந்தை
3) பங்குச் சந்தை / திறைசேரி முறிகள் சந்தை / வணிகப் பத்திர சந்தை
4) பங்குச் சந்தை / திறைசேரி உண்டியல் சந்தை / திறைசேரிகள் முறிகள் சந்தை
5) கூட்டிணைக்கப்பட்ட முறிகள் சந்தை / பங்குச் சந்தை / வங்கிகளுக்கிடையிலான அழைப்புகடன் சந்தை
(.........)

24. காசு உட்பாய்ச்சலுக்கான உதாரணமாக அமையாதது.
1) காசு விற்பனை 2) பெறப்பட்ட வருமானங்கள் 3) உரிமையாளரின் மூலதனம்
4) கடன் பெறுவனவு 5) நடைமுறையிலான சொத்துக்களின் காசுக் கொள்வனவு (.5......)

25. புறநிதி மூலங்களில் நடுத்தரகால நிதிமூலங்களின் தொகுதியைக் காட்டும் சரியான தொகுதி
1) வாடகைக் கொள்வனவு, குத்தகை, வங்கிக்கடன், அரச உதவிகள்.
2) வாடகைக் கொள்வனவு, வங்கி மேலதிகப் பற்று, வங்கிக்கடன், குத்தகை
3) வாடகைக் கொள்வனவு, வங்கிக்கடன், வங்கியல்லா நிதி நிறுவனக் கடன், காரணிப்படுத்தல்
4) வங்கிக்கடன், குத்தகை, வாடகைக் கொள்வனவு, ஈட்டுக்கடன்.
5) தொகுதிக்கடன், வங்கிக்கடன், ஈட்டுக்கடன், வியாபாரக்கடன். (.........)

26. மனித வளத்திற்கான கேள்வியை எதிர்வு கூறும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்

1) ஓய்வு பெறுதல் 2) விலகிச் செல்லல் 3) மரணம்
4) சேவையை முடிவுக்குக் கொண்டுவரல் 5) யாவும் சரியானது (.........)

27. தரவு ஒழுங்கமைக்கும் செயற்பாட்டுக் கருமங்களுக்குள் உள்ளடக்கப்படாதது

1) வகைப்படுத்தல் 2) தெரிவு செய்தல் 3) தரவு தயாரித்தல்
4) கணித்தல் 5) பொழிப்பாக்கல் (.........)

28. சிறந்த ஊழியர்களின் உறவின் பயன்கள்

1) ஊழியர் வரவின்மை குறைவடையும்
2) வளங்களின் வீண் விரயங்கள் குறைவடையும்
3) நிறுவனத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாகப் பாய்ந்து செல்லும்
4) ஊழியர்களின் விளைதிறன் அதிகரிக்கும்
5) அனைத்தும் சரி (...5...)

29. வணிகத்திட்டம் ஒன்றின் பிரதான பகுதியாக அமையாதது

1) நிறைவேற்றுச் சுருக்கம்
2) சந்தைப்படுத்தல் திட்டம்
3) காசுப் பாயச்சல்கூற்று
4) வணிக விபரம்
5) மனித வளத் திட்டம் (...3....)

30. வணிகத் திட்டம் தொடர்பான கூற்று

1) வணிகத்தின் இலக்கையும் நோக்கத்தையும் விபரிக்கும்
2) வளங்களை முறையாகப் பயன்படுத்துவதற்கு உதவும்
3) ஒழுங்குமுறையாக தகவல்கள் காணப்படும்.
4) வணிகத்தை சரியாக இனங்காட்டும்
5) யாவும் சரி (...5...)

**31 40 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைப் பயன்டுத்தி கீறிட்ட இடங்களை நிரப்புக.**

31. அ) விவசாயம், கடற்றொழில் சுரங்கமும் அகழ்தலும் ............................ எனவும் உற்பத்திக் கைத்தொழில், மின்சாரம், கட்டிட நிர்மானம் ............................ என்வும் அழைக்கப்படும்.

ஆ) விவசாயம், கடற்றொழில் ............................ எனவும், சுரங்கமும் அகழ்தலும், உற்பத்திக் கைத்தொழில் ............................ எனவும் அழைக்கப்படும்.

32. வணிக ஒழுக்கக் கோவை ஒன்றினைக் கட்டியெழுப்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய 4 அம்சங்களைக் குறிப்பிடுக.

1) ............................ 3) ............................
2) ............................ 4) ............................

33. அ) தனியுடைமை வணிகத்தைப் பதிவு செய்வதற்கு ............................ அத்தாட்சிப்படுத்தல் கடிதத்தை ஒப்படைத்தல் வேண்டும்.

ஆ) கூட்டுறவுச் சங்கம் ஒன்றைப் பதிவு செய்யும் போது ............................ இரண்டு பிரதிகள் கூட்டுறவு ஆணையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

34. மிகச் சிறந்த முகாமையாளராவதற்கு(1) ......அறிவு......................................,
(2)......திறன்..........., ..........................(3) [illegible]......
அவசியமாகும்

35. வேலை உற்பத்தி, தொகுதி உற்பத்திகளில் முறையே பின்வரும் நியதிகளின் போக்கினைக் குறிப்பிடுக.

| நியதிகள் | வேலை உ/தி | தொகுதி உ/தி |
|---|---|---|
| 1) கட்டளைகளின் அளவு | ........சொற்பம்........ | ........அதிகளவு........ |
| 2) உற்பத்திப் பொருள் வரிசை | ........பல்லினம்........ | ........ஒரேவகை........ |

36. சேவைச்சந்தைப்படுத்தல் கலவை, பொருள் சந்தைப்படுத்தல் கலவைக்கு மேலதிகமான மூன்று மாறிகளை

(3Ps) உள்ளடங்கியுள்ளது. அவை யாவை?

1. ......மக்கள்.................. 2. ......செயன்முறை............... 3. பௌதீகஆதாரம்..

37. நிதி முகாமை ஒன்றினால் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள் 1)......நிதித்தீர்மானம்........,.........
2)......முதலீட்டுத்தீர்மானம்............ ஆகும்.

38. அ) ஊழியர் ஒருவரை தொடர்ச்சியாக ஒரு பணியில் ஈடுபடுத்தாமல் காலத்திற்குக் காலம் வெவ்வேறு

பணிகளிற்கு நியமிப்பது ........................................ ஆகும்.

ஆ) ஊழியர் ஒருவரின் தொழில் சார் தகைமையினை மதிப்பிட ஒதுக்கப்பட்ட காலப்பகுதி

........................................... எனப்படும்.

39. வணிகர் ஒருவர் வணிக நடவடிக்கையின் போது நவீன இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் மூலம் உரையாடலை மேற்கொள்ளும் முறைகள்

1) .............................. 2) .............................. 3) ..............................

40. அ) வணிகத்திற்கு வழிகாட்டும் ஒரு வழிப்படம் .............................. ஆகும்.

ஆ) தனிநபர் அல்லது அமைப்பு ஒன்றின் தேவை அல்லது விருப்பத்தினை நிறைவு செய்யக்கூடிய

உற்பத்திகள் தொடர்பாக முயற்சியாளரினுள் உருவாகின்ற மனநிலை ..............................

..........ஆகும்.

**41 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்குரிய விடையை எழுதுக.**

41. அ) தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக தற்போது காணப்படுகின்ற சந்தை ........................

............................ ஆகும்.

ஆ) இலங்கையில் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் .............................. எனுமிடத்தில் அமைந்துள்ளது.

42. வணிகமானது சமூகத்திற்கு நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புகள் 4 ஐத் தருக?

1)............................................ 2)............................................

3)............................................ 4)............................................

43. அ) வணிகத்தின் புறச்சூழல் (1) ................................., (2)............................... என இரு வகைப்படும்.

ஆ) வணிகத்தின் புறச்சூழலின் மூலமாக (1) ....................................., (2)................................. இனங் காணப்படுகின்றன.

44. அ) பங்குடமை வணிகமொன்றின் அனுகூலங்கள் 2 தருக?

1)..................................................... 2).........................................

ஆ) கம்பனிகள் தொடர்பாகக் காணப்படக் கூடிய பிரதி கூலங்கள் 2 தருக?

1)............................................................

2)............................................................

45. அ) முயற்சியாளர் ஒருவருக்கு சிறந்த (1) ................................., (2)............................... காணப்படுதல் வேண்டும்.

ஆ) (1) ........................., (2) ........................... (3) ................................. என்பன முயற்சி யாண்மையின் நாளாந்த செயற்பாடுகளாகும்.

46. தரக்கட்டுப்பாட்டுக்குப் பயன்படுத்தக் கூடிய நுட்பமுறைகள் நான்கு குறிப்பிடுக?

1)............................................ 2)............................................

3)............................................ 4)............................................

47. வியாபார நிலையமற்ற வணிக முறைகளின் பிரதான இரு வகுதிகளும் எவை?

1)............................................ 2)............................................

48. விநியோக முறையினை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளப்படும் பிரதான காரணிகள் 3 தருக.

1)............................................ 2)............................................

3)............................................

49. அ) தொழில் தளம் ஒன்றில் ஊழியர் ஒருவரின் வேலைத் தரத்தினை மதிப்பிடும் நுட்பம் ..................... ............ எனப்படும்.

ஆ) நிறுவனமொன்றின் மொத்த வெளியீட்டினை உற்பத்திக்கு பங்கு பற்றிய ஊழியர் தொகையினால் வகுக்க வருவது ............................................................................................ எனப்படும்.

50. அ) சகல வலயமைப்பிலும் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மென்பொருட்கள் 3 தருக.

1)............................................ 2)............................................

3)............................................

ஆ) தேடுதல் பொறிக்கு மூன்று உதாரணங்கள் தருக.

1)............................................ 2)............................................

3)............................................

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# வணிகக்கல்வி 32 T II

மாதிரி வினாத்தாள்-1

தரம் -13 மூன்று மணித்தியாலம்

கவனிக்க: -

**ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடைதருக**

பகுதி - I

(01) i. வணிகமானது கைத்தொழில், வியாபாரம் என்ற அடிப்படையில் பரந்து செல்லும் செயற்பாடாகும். இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா ? காரணம் தருக? (4 புள்ளி)

ii. ரதன் உயர்தர வணிகப் பிரிவில் கல்வி கற்கும் மாணவராவார். அவரது தந்தையாரான ரகு எழுதுவினைஞராகப் பணிபுரிகின்றார். இவர் ஓய்வு நேரத்தில் பிரத்தியேக வகுப்புக்களில் கற்பித்து வருகின்றார். அவரது நண்பரான நாதன் என்பவர் இந்தியாவில் இருந்து புடவைகளை இறக்குமதி செய்து விற்பனை செய்கிறார். அவரிடம் ரகு சலுகை அடிப்படையில் பொருட்களை கொள்வனவு செய்து அதனை வீடு வீடாக கொண்டு சென்று விற்பனையில் ஈடுபடுகின்றார். அத்துடன் ரதனின் தாயார் வீட்டுத் தோட்டத்தில் காய்கறிகளைப் பயிரிட்டு அதில் இருந்து வரும் பயனில் தனது வீட்டுத் தேவைக்கு பயன்படுத்தியவை போக மிகுதியை சந்தைக்குக் கொண்டுசென்று விற்பனை செய்கின்றார். இவ்விடய ஆய்விலிருந்து விபரிக்கப்பட்டுள்ள எவ்விடயங்களின் மூலம் பின்வரும் எண்ணக் கருக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

1) நேர் உற்பத்தி 2) நேரில் உற்பத்தி 3) நடைபாதை வியாபாரம்

4) நேர் சேவை (4 x 1 = 4)

iii a. தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினைத் தருக.

b. இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைப்படி சேவைத்துறையின் பங்களிப்பு அதிகரித்து வருகின்றது. இவ்வதிகரிப்புக்கு ஏதுவான காரணங்களைத் தருக. (2 x 2 = 4)

iv. வணிகம் ஒன்று தனது இலக்கினை வினைத்திறனாக அடைந்து கொள்வதற்கு அகச் சூழல் காரணிகளுக்கு மேலதிகமாக வேறு சூழல் காரணிகள் மீதும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

a. நீர் இக்கூற்றுடன் உடன்படுகின்றீரா? (1 புள்ளி)

b. அகச் சூழல் காரணிகள் எனக் கருதுபவை எவை? (1 ½ புள்ளி)

c. கவனத்தில் கொள்ள வேண்டிய வேறு சூழல் காரணிகள் எவை? (1 ½ புள்ளி)

v. நிகழ்காலத்தில் வணிகங்கள் சமூகப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய தேவை முக்கியமான விடயமாக மாறிவிட்டது.

1) சமூகப் பொறுப்பு என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(1 புள்ளி)

2) சமூகப் பொறுப்பின் தேவை அதிகரித்து வருவதற்கான காரணங்கள் யாவை?

(1 ½ புள்ளி)

3) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனூடாக வணிகங்கள் அடையக்கூடிய நன்மைகள் யாவை?

(1 ½ புள்ளி)

## 02)

i. பல்பொருள் வணிகம் ஒன்றை நடாத்திவரும் நடராசா தனது 2010 ஆம் ஆண்டிற்கான வருமான வரியாக ரூபா 30000 ஐச் செலுத்தியுள்ளார்.

அ) வரி என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (1 புள்ளி)

ஆ) பின்வரும் வரிவகைகளை விளக்குக.

1) நேர் வரி  2) நேரில் வரி  3) வருமான வரி (3x1=3 புள்ளி)

ii. 2003ம் ஆண்டு பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை உருவாக்கப்பட்டுள்ளது.

அ) இச் சபையின் நோக்கங்கள் எவை? (2 புள்ளி)

ஆ) இச் சபையினால் நிறைவேற்றப்படும் கடமைகள் எவை? (2 புள்ளி)

iii. சிவகுமார் அலங்காரப் பொருட்களை விற்பனை செய்யும் ஒரு தனி வியாபாரி ஆவார். இவர் அதிகரித்த மூலதனத் தேவை காரணமாகவும் வேலைப்பழுவைப் பகிரும் நோக்கம் கருதியும் தனது நண்பரான டிலானை பங்காளராக இணைத்து தனது வணிகத்தை சிவா அன்கோ என்னும் பங்குடமையாக மாற்றினார்.

அ) பங்குடமையின் சிறப்புப் பண்புகள் 2 தருக? (1 புள்ளி)

ஆ) இப்பங்குடமையைப் பதிவு செய்யப்பட வேண்டுமா? உமது காரணத்தை நியாயப்படுத்துக? (1 புள்ளி)

இ) பங்குடமையாக தனது வணிகத்தை மாற்றியதன் மூலம் சிவகுமார் பெற்றுக் கொண்ட அனுகூலம் இரண்டையும், பிரதிகூலங்கள் இரண்டையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

iv. அங்கீகார வணிகச் செயற்பாட்டின் மூலம் அங்கீகாரம் பெறுபவர், அங்கீகாரம் வழங்குபவர் பெறும் நன்மைகள் யாவை? (4 புள்ளி)

v. "எந்தவொரு வணிக அமைப்பும் வெற்றிகரமாக செயற்படுவதற்கு நிர்வாக அமைப்பு ஒன்று அவசியமாகும்". அந்தவகையில் கம்பனி அமைப்பின்

1) நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் யார்? (1 புள்ளி)

2) அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு ஒருவர் கொண்டிருக்கவேண்டிய தகமைகள் எவை? (3 புள்ளி)

## 03)

i. குமார் என்பவர் கணினி பொருத்துதல் தொடர்பாக வணிகம் ஒன்றைச் செயற்படுத்தி வருகின்றார், இவரது வேலைகளுக்கு உதவியாக மூன்று பணியாளர்களை ஈடுபடுத்தியுள்ளார். கணினிக்கான உதிரிப்பாகங்களை உருவாக்குவதும் பழுதுபார்த்தலும் நிறுவனத்தின் பிரதான செயற்பாடாகும்.

அ) உமது கருத்துப்படி முயற்சியாண்மை என்பதை வரைவிலக்கணம் செய்க? (2 புள்ளி)

ஆ) இவ்வணிகத்தினால் குமாருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டையும் சமூகத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii. அ) சிறுவணிகங்கள் தமக்கே உரித்தான சிறப்புப் பண்புகளைக்கொண்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. அத்தகைய சிறப்புப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக? ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

ஆ) சிறிய வணிகங்களை ஆரம்பிக்கும் போது பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். அத்தகைய அம்சங்கள் நான்கினைத் தருக. ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

iii. அ) நிதிக்கம்பனிகள் தற்காலத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றன. அந்நிதிக்கம்பனிகளின் கருமங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (4 x ½ = 2 புள்ளி)

ஆ) வியாபார வங்கிகளினால் வணிகர்களுக்கு பல சேவைகள் வழங்கப்படுகின்றன. அத்தகைய சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 x ½ = 2 புள்ளி)

iv. தன்னியக்க வங்கிச் சேவையின் மூலம் வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் ஏற்படும் அனுகூலங்கள் எவ்வை? (4 புள்ளி)

v. பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்புத் தருக.

1) ஒன்லைன் வங்கிச் சேவை - Online Banking
2) அடகுச் சேவை - Pawning
3) இலத்திரனியல் பணம் - E - money
4) கடனட்டை - Credit card (4x1=4 புள்ளி)

## 04)

i. மதன், சுதன் ஆகிய இருவரும் இணைந்து கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்த "மதுசூதனன் இன்டஸ்ரிஸ்" இன்று இரும்பு உருக்கு உற்பத்தியில் மிகப் பிரபலம் பெற்ற தொழிற்சாலையாக திகழ்கின்றது. இதில் 60 இற்குமேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிவதுடன், பணிநேரத்தில் சில தவிர்க்க முடியாத உடல் ஊறுகளுக்கும் உள்ளாகின்றனர். நாளாந்தம் இரும்புப் பொருள் விற்பனையின் மூலம் பெறப்படும் பணமும் காசோலையும் உடனுக்குடன் வங்கியில் வைப்பிலிடப்படுகின்றது. விநியோக நடவடிக்கைகளுக்காக பார ஊர்திகள் இரண்டுகொள்வனவு செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இரும்பு உருக்குவதற்காக தீப்பற்றக்கூடிய எரிவாயு பயன்படுத்தப்படுகின்றது.

a. மதுசூதனன் இன்டஸ்றீஸ் எதிர்நோக்கும் அபாயங்களையும், அவற்றுக்காக அவர்கள் மேற்கொள்ளக் கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகளையும் தனித் தனியாக குறிப்பிடுக?( 2 புள்ளிகள்)

ii. தற்காலத்தில் போக்குவரத்து முறைகள் விரிவடைந்து செல்லும் போக்கு காணப்படுகின்றது.

அ) போக்குவரத்துடன் தொடர்புறும் அடிப்படை அம்சங்கள் யாவை? (1 புள்ளி)

ஆ) வீதிப் போக்குவரத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை? (1 புள்ளி)

iii. தொடர்பாடல் கருமமானது தனிநபர்கள் மற்றும் நிறுவனச் செயற்பாடுகளுக்குச் முக்கியத்துவம் பெறும் விடயமாக மாறிவருகின்றது.

அ) தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படை அம்சங்களைக் குறிப்பிடுக? (2 புள்ளி)

ஆ) வணிகச் செயற்பாடுகளுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவம் யாது? (2 புள்ளி)

iv. அ) முகவர் களை வரையறை செய்க? (1 புள்ளி)

ஆ) முகவர்களை அவர்கள் வழங்கும் சேவையின் அடிப்படையில் வகைப்படுத்துக. (3 புள்ளி)

v. சிறுகுறிப்பு வரைக

அ) உலக வர்த்தக மையம் ஆ) ஒபேக் இ) சுமைச்சீட்டு ஈ) நாணயக் கடிதம் (4x1=4 புள்ளி)

### பகுதி - II

05) i. முகாமையாளருக்கு தொழில்நுட்பத்திறன், மானிடத்திறன் எண்ணக்கருத்திறன் என்பவற்றிற்கு மேலதிகமாக காணப்பட வேண்டிய திறன்கள் எவை? (4 புள்ளி)

ii. வினைத்திறன், விளைதிறன், உற்பத்தித்திறன் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி அவற்றுக்கிடையிலான தொடர்பை சுருக்கமாக குறிப்பிடுக.

(4புள்ளி)

iii. முகாமைத்துவத்தில் கட்டுப்படுத்தல் படிமுறைகளைத் தருவதுடன் நுட்பமுறைகளையும் தருக?

(4புள்ளி)

iv. சந்தைத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி சவர்க்கார உற்பத்தியில் நிறுவனமொன்று ஈடுபடுத்தப்படுகின்றது.

அ) இந்நிறுவனம் எத்தகைய உற்பத்தி முறையைப் பின்பற்றுகின்றது?

(2 புள்ளி)

ஆ) இவ்வுற்பத்தி முறையின் சாதக, பாதக பண்புகளைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)

v. உற்பத்தித்திறனை விருத்தி செய்து கொள்வதற்காக நவீன தொழில்நுட்ப முறையொன்றாகிய கணனித்தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட முடியும். இதன் முக்கியமான துறைகளைக் குறிப்பிடுக.

(4புள்ளி)

## 06)

i. உற்பத்தி நிறுவனத்தின் கிரயத்தை இழிவுபடுத்தலில் J.I.T. முறையும் ஒன்றாகும். ஆனால் அவற்றினால் பிரதிகூலங்களும் காணப்படுகின்றன. அப் பிரதிகூலங்களைத் தருக?

(4புள்ளி)

ii. குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான பாதணிகள், ஆடைகள், கைப்பணிகளினை, உற்பத்தி செய்யும் சத்துரிக்கா பெஷன் உற்பத்தி நிறுவனம் தனது இலக்கு வாடிக்கையாளரைக் கவர்ந்து சந்தையில் நிலைத்திருப்பதற்காக பின்வரும் சில உபாயங்களை கைக்கொள்ள முற்பட்டுள்ளது. அதில் தனது உற்பத்திப் பொருள் அனைத்திற்கும் ஒரே வியாபாரக்குறியினை பயன்படுத்துவதுடன், பொதி கட்டல், தரம், மற்றும் திருப்தியடையாத வாடிக்கையாளருக்கு மீள ஒப்படைக்கும் வசதி என்பவற்றினையும் விநியோக நடவடிக்கைகளை இலகுவாக்க இருப்புகளை உரிய முறையில் பேணி, விளம்பரம் மற்றும் நேர்சந்தைப்படுத்தல் என்பவற்றில் கூடிய அக்கறை செலுத்துவதுடன் வாடிக்கையாளரை திருப்திப்படுத்த விலைக்கழிவுகள், கொடுப்பனவுகாலம், கடன் நிபந்தனைகள் என்பவற்றையும் நெகிழ்வடையச் செய்துள்ளது.

அ) மேற்போன்ற நிறுவனம் சந்தையில் நிலைத்திருப்பதற்கு கைக்கொண்ட உபாயம் எவ்வாறு அழைக்கப்படும்.

(1 புள்ளி)

ஆ) அவ் உபாயத்தின் மாறிகளில் அவர் பின்பற்றியுள்ள நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுக?

(3 புள்ளி)

iii. அ) சந்தை, கொடுக்கல் வாக்கல் ஆகிய எண்ணக்கருத்தினை தனித்தனியே விளக்குக?

(2x1=2 புள்ளி)

ஆ) இன்று சந்தைக்கு சமர்ப்பிக்கப்படும் பெறுமதியுமைய உருப்படிகள் எவையேனும் எட்டினை (8) குறிப்பிடுக?

(8x1/4=2 புள்ளி)

iv. அ) சந்தை துண்டமாக்கல் என்பதனால் கருதப்படுவது யாது?

(1 புள்ளி)

ஆ) உற்பத்தி நிறுவனமொன்றிக்கு சந்தைத்துண்டமாக்கலின் நன்மைகளை விளக்குக.

(3 புள்ளி)

v. நிதித் தேவையினை நிர்ணயிக்கும் காரணிகளைக் கூறுக.

(4 புள்ளி)

07)

i. அ) வணிகமொன்றின் நிதித் தேவைப்பாட்டின் இருவகைகளையும் குறிப்பிடுக.

(2 x ½ = 1 புள்ளி)

ஆ) மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

(விளக்கம் 1x2, உ-ம் -½x2)

ii. கொழும்பு பங்குப் பரிமாற்று நிலையத்தில் பங்குத் தரகர் வகிக்கும் கடமைப் பங்கினை விளக்குக.

(4x 1 = 4 புள்ளி)

iii. புதிய நிதி மூலம் எதனையும் தெரிவு செய்தல் தொடர்பில் ஒரு நிதி முகாமையாளரும் அந் நிதியை வழங்குபவர் ஒருவராலும் கருதப்படவேண்டிய முக்கிய விடயங்கள் உள்ளன.

அ) நிதிமுகாமையாளரால் கருதப்படவேண்டிய விடயங்கள் எவை?

(4 x ½ = 2 புள்ளி)

ஆ) நிதி வழங்குனரால் கருதப்படும் விடயங்கள் எவை? (4 x ½ = 2 புள்ளி)

iv. நிதி, பௌதீக வளங்களுடன் ஒப்பிடும்போது மனித வளமொன்றில் காணப்படத்தக்க விசேட சிறப்பியல்புகள் 04 தருக.

(4 x 1 = 4 புள்ளி)

v. நிறுவனம் ஒன்றிற்கு தேவையான ஊழியர்களை உள்ளக ரீதியாகவோ அல்லது வெளியக ரீதியாகவோ இருந்து சேர்த்துக்கொள்ளலாம்.

அ) அகரீதியாக ஊழியர்களை சேர்த்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் முறைகளைக் குறிப்பிடுக.

(4x1/2=2 புள்ளி)

ஆ) அகத்தே உள்ள ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதில் உள்ள அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் தனித்தனியாக விளக்குக.

(அனுகூலம் 2 x½ = 1 புள்ளி)

(பிரதிகூலம் 2 x½ = 1 புள்ளி)

08)

i. அ) தகவல் தொழிநுட்பம் என்றால் என்ன?

(1 புள்ளி)

ஆ) தகவல் தொழிநுட்பத்தின் அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(3 புள்ளி)

ii அ) இணையத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகளைக் குறிப்பிடுக.

(2 புள்ளி)

ஆ) நிறுவனக் கருமங்களை இலகுபடுத்திக் கொள்வதற்கு இணையப் பங்களிப்பு முறையைக் குறிப்பிடுக.

(2 புள்ளி)

iii. பின்வருவம் பதங்களைச் சுருக்கமாக விளக்குக.

அ) உரையாடும் வசதிகள் - Chatting facilities

ஆ) இலத்திரனியல் அஞ்சல் - E-mail

இ) அகஇணையம் - Intranet

ஈ) பஸ் வலையமைப்பு - Bus Network (4x1=4 புள்ளி)

iv. மனிதவளத் திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் தகவல்களைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளி)

# வணிகக்கல்வி- மாதிரி வினாத்தாள் - 1
## புள்ளித்திட்டம்
## பகுதி I,II
### பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 2 | 02) | 1 | 03) | 3 | 04) | 3 |
| 05) | 2 | 06) | 4 | 07) | 2 | 08) | 5 |
| 09) | 1 | 10) | 5 | 11) | 2 | 12) | 1 |
| 13) | 3 | 14) | 1 | 15) | 2 | 16) | 3 |
| 17) | 5 | 18) | 5 | 19) | 1 | 20) | 2 |
| 21) | 2 | 22) | 4 | 23) | 2 | 24) | 5 |
| 25) | 1 | 26) | 5 | 27) | 3 | 28) | 5 |
| 29) | 3 | 30) | 5 | | | | |

31) அ) முதனிலை உற்பத்தி, இரண்டாம் நிலை உற்த்தி ஆ) விவசாயத்துறை, கைத்தொழில்துறை

32) 1. வணிகம் 2) வாடிக்கையாளர் 3) ஊழியர் 4) போட்டியாளர்

33) அ) கிராம சேவகர் ஆ) உப விதி

34) அறிவு, திறன், நேரான மனப்பாங்கு

35) 1) மிகச் சிறியது, நடுத்தரளவானது 2) பல்லினம், சிலவகைகள் மட்டும்

36) 1) மக்கள் 2) செயன்முறை 3) பௌதீக ஆதாரம்

37) நிதித் தீர்மானம், முதலீட்டுத் தீர்மானம்

38) அ) வேலைச் சுழற்சி ஆ) தகுதிகாண் காலம்

39) 1. எழுத்து வடிவிலான உரையாடல், 2. குரல் வடிவிலான உரையாடல்
3. வீடியோவடிவிலான உரையாடல்

40) அ) வணிகத்திட்டம் ஆ) வணிக எண்ணம்

41) அ) சந்தைவெளி ஆ) வீரவில

42) 1. வேலை வாய்ப்பிற்கு பங்களிப்புச் செய்தல் 2. வரியை ஒழுங்காகச் செலுத்துதல்
3. கழிவுப் பொருள் முகாமைத்துவம்
4. சமூக நலனோம்புச் சேவைகள்

43) அ) அண்மிய சூழல், பேரினச் சூழல் ஆ) வாய்ப்பும், அச்சுறுத்தலும்

44) அ 1) இலகுவாக ஆரம்பிக்க முடிதல் 2) கூடுதலான மூலதனத்தைத் திரட்டலாம்

ஆ) 1) சட்டக் கட்டுப்பாடுகள் கடினமாயிருத்தல் 2) ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள் சிக்கலானவை

45) அ) அறிவும், அனுபவமும்

ஆ) புதியது புனைதல், வணிக வாயப்புகளை உருவாக்குதல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து தல்.

46) 1) தர உறுதி 2) பூச்சிய வழு 3) தரநியமம் 3) தரவட்டம்

47) அ) இலத்திரனியல் சில்லறை வணிகம் (e-tailing) ஆ) நேரச் சந்தைப்படுத்தல் - (Direct Marketing)

48) 1) பொருளின் தன்மை 2) கேள்வியின் தன்மை 3) உற்பத்தியாளரின் தன்மை

49) அ) செயல்திறன் மதிப்பீடு அ) ஊழிய உற்த்தி திறன்

50) அ) Internet Explorer, Netscape, Saffari

ஆ) Google, Yahoo, MSN

## பகுதி II

(1 புள்ளி)

1) இல்லை

வணிகமானது கைத்தொழில்வர்த்தகம் என்ற இரு செயற்பாடுகளின் சேர்க்கையாகும். வியாபாரமும் துணைச் சேவைகளும் சேர்ந்த செயற்பாடு வர்த்தகமாகும். வியாபாரத்தை விட வர்த்தகம் பரந்த எண்ணக்கருவாகவும் , வர்த்தகத்தை விட வணிகம் விரிவான எண்ணக் கருவாகவும் காணப்படுகிறது.
(3 புள்ளி)

2. அ) நேர் உற்பத்தி - தாயார் வீட்டுத் தோட்டத்தில் காய்கறிகளைப் பயிரிட்டு சுய தேவைக்குப் பெற்றுக் கொள்ளல். (1புள்ளி)

ஆ) நேரில் உற்பத்தி - சுய தேவைக்குப் பயன்படுத்தியது போக மிகுதி காய் கறிகள் சந்தையில் விற்கப்படுகின்றன. (1புள்ளி)

இ) நடை பாதை வியாபாரம் - நாதன் புடைவைகளை வீடுவீடாக விற்பனை செய்தல் (1புள்ளி)

ஈ) நேர் சேவை - பிரத்தியேக வகுப்புக்களில் ஆசிரியர் சேவையினை வழங்குதல் (1புள்ளி)

3. அ)

| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| 1. முதல் நிலைக்குரியவை | இரண்டாம் நிலைக்குரியவை |
| 2. வரையறுக்கப்பட்டவை | வரையறுக்கப்படாதவை |
| 3. பொதுவானவை | ஆளுக்காள் வேறுபடும் |
| 4. அத்தியாவசியமானது | அத்தியாவசியமானதல்ல |
| 5. மனிதத் தோற்றத்துடன் உருவானது | வணிகத்தால் உருவாக்கப்பட்டது. |

(4x1/2=2)

ஆ)
- நுகர்வோரின் செலவிடக்கூடிய வருமானம் அதிகரிப்பு
- இலத்திரனியல் வணிகத்தின் விருத்தி
- மக்களின் வாழ்க்கைப் பாணியில் ஏற்பட்ட மாற்றம்
- அதிகமான வணிகங்களில் உயர் தொழிலுக்கான கேள்வி அதிகரித்தல்
- சேவை வணிகத்தில் நுழைவதற்கான தடைகள் குறைவடைதல்

(4 x ½ = 2)

4. அ) ஆம் (1 புள்ளி)

ஆ)
- ✍ உரிமையாளர்கள்
- ✍ முகாமையாளர்கள்
- ✍ ஊழியர்கள்
- ✍ அமைப்புக்கலாசாரம்
- ✍ அமைப்பு முறை
- ✍ வளங்கள் (3 x ½ = 1 ½)

இ)
- ✍ மக்கட் சூழல்
- ✍ அரசியல் சட்டச் சூழல்
- ✍ பொருளாதாரச் சூழல்
- ✍ சமூகச் சூழல்
- ✍ தொழிநுட்பச் சூழல்
- ✍ இயற்கைச் சூழல்
- ✍ அண்மிய /வேலைச் சூழல் காரணிகள்

(3 x ½ = 1 ½)

5. அ) தனது வணிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் அதனால் சமூகத்திற்கு ஏற்படுகின்ற தாக்கம் தொடர்பாகவும் தனிப்பட்ட வகையில் வணிகங்களுக்குள்ள பொறுப்பு சமூகப் பொறுப்பு ஆகும்.
(ஏனைய பொருத்தமான வரைவிலக்கணங்களுக்கும் புள்ளி வழங்கலாம்) (1 புள்ளி)

ஆ)
- ✍ இலத்திரனியல் வணிகத்தின் செல்வாக்கு
- ✍ பூகோளமயமாதல்
- ✍ வணிகப் போட்டி அதிகரித்தல் (3 x ½ = 1 ½)

இ)
- ✍ வணிகத்தின் நிலைப்பாடு உறுதிப்படுத்தப்படுகின்றது.
- ✍ நன்மதிப்பு உயர்வடைதல்
- ✍ வணிகத்தினுடைய நம்பகத் தன்மை உறுதியாதல் (3 x ½ = 1 ½)

02)

01) அ) எந்தவித குற்றத்திற்கோ / தண்டனைக்கோ அன்றி தனிநபர் ஒருவரினால் அல்லது நிறுவனம் ஒன்றினால் கட்டாயமாக செலுத்தவேண்டுமென அரச அதிகாரம் கொண்ட நிறுவனம் ஒன்றினால் விதிக்கப்படும் குறைந்த பட்சத் தொகை வரியாகும்

(1 புள்ளி)

ஆ) 1. நேர் வரி: குறித்த நபர் அல்லது நிறுவனத்தால் வரிச்சுமையை வேறு ஒருவருக்கு சாட்டுதல் செய்ய முடியாத வரியே நேர் வரி ஆகும்.
2. நேரில் வரி: செலுத்தப்பட்ட வரியை இன்னொருவர் மீது சுமத்தக் கூடியதான வரி நேரில் வரி
3. வருமான வரி: குறித்த நபர் அல்லது நிறுவனத்தின் வருமானத்தின் மீதுவிதிக்கப்படும் வரி வருமான வரியாகும். (3x1=3 புள்ளி)

02) அ) 1. நுகர்வோருக்கு தீங்கு விளைவிக்கும் பொருள் சேவை விற்பனைக்கு எதிராக அவர்களை பாதுகாத்தல்
2. நியாயமற்ற வியாபார நடைமுறைக்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாத்தல்
3. நுகர்வோர் போட்டி விலைகளில் பொருட்களை பெறுதலை உறுதிப்படுத்தல்
4. வியாபாரிகளின் சுரண்டல்களுக்கு எதிராக நியாயம் வழங்குதல் (2x1=2 புள்ளி)

ஆ) 1. முயற்சியாளருக்கிடையேயான மட்டுப்பாடுடைய ஒப்பந்தங்களை கட்டுப்படுத்தலும் அகற்றுதலும்
2. சந்தையில் முதன்மை பெறுவதற்கான முறையீனமான செயற்பாடுகளை ஒழித்தல்

3. பொருளாதார விருத்தியில் ஒழுங்கீனமான போட்டி தொடர்பான தடைகளை ஒழித்தல்
4. பொருட்கள் சேவைகளின் விலை, தரம். பெற்றுக் கொள்ளல் தொடர்பில்நுகர்வோர் உரிமை, தொடர்பு என்பவற்றை மேம்படுத்துதல்
5. கொள்வனவுக்கு வைக்கப்பட்டுள்ள பொருள் தொடர்பில் நுகர்வோரை அறிவுடையவராக்குதல் (2x1=2 புள்ளி )

03) அ) 1. தனியாட்கள் இணைதல்
2. இலாபநோக்குடன் செயற்படல்
3. ஒன்றிணைந்து செயற்படல்
4. வியாபார நிலையம் ஒன்றிருத்தல் (2x1/2=1 புள்ளி)

ஆ) ஆம்
பங்குடமை பங்களார்களின் சொந்தப் பெயரில் இல்லாமல் பொதுப் பெயரில் அமைவதால் பதிவு செய்யப்படல் வேண்டும். (1 புள்ளி)

இ) அனுகூலம்
அதிகளவு மூலதனத்தை திரட்ட முடியும்
தீர்மானங்களை இலகுவாக மேற்கொள்ள முடியும் (1 புள்ளி)

பிரதிகூலங்கள்
வியாபார இரகசியங்களை பேணப்படமாட்டாது
இலாப நட்டம் இருவருக்கிடையில் பகிரப்படல் (1 புள்ளி)

04) பெறுபவர்
1. நன்மதிப்புள்ள வணிகப் பெயர், உற்பத்திகளை வணிகத்தை ஆரம்பிக்கும்போதே பெற்றுக் கொள்ளமுடியும்
2. அங்கீகாரமளிப்பவருடைய முகாமைப்பயிற்சி, உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம். (2x1=2 புள்ளி )

வழங்குபவர்
1. முதலிடாமலே வணிகத்தை விரிவாக்கமுடியும்.
2. விளம்பரச் செலவுகளை அங்கீரகாரம் பெற்றவருடன் பகிர முடியும் (2x1=2 புள்ளி)

05) I) இயக்குநர் சபை
II) i. 18 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
ii. சொத்து முறிவுக்கு உட்படாதவராக இருத்தல்
iii. கம்பனி இயக்குநர் அல்லது மேம்படுத்தல் அக் கம்பனி நிர்வாக கருமங்களில் ஈடுபடும் தகைமை பெற்றவர்
(3 புள்ளி)

03) I அ) முயற்சியாண்மை என்பது தேசிய உற்பத்தியின் பெறுமதிகளை அதிகரிக்கச் செய்தல், புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளல். நடைமுறையிலுள்ள பொருளாதார முறைமையை மாற்றியமைத்தல் போன்ற பல விடயங்களுடன் தொடர்புடையது. முயற்சியாண்மை எனப்படும். ஒரு முயற்சியாளர் தனது பலம், பலவீனம் பற்றி அறிந்திருப்பதோடு எதிர்காலத்தில் தன்னால் அடையக்கூடிய எண்ணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். (2 புள்ளி)

ஆ) ✍ குமாருக்கு
✍ தொழில் திருப்தி
✍ நிதி ர்தியான இலாபம்
✍ சமூக அந்தஸ்து (2x1/2=1 புள்ளி)

சமூகத்திற்கு
✍ வேலைவாய்ப்பு
✍ பிரதேச வளங்கள் பயன்படுத்தப்படுதல்.
✍ வருமானத்திற்கான சந்தர்ப்பங்கள் தோன்றுதல். (2x1/2=1 புள்ளி)

2) i)

- சந்தை சிறிதாயிருத்தல்.
- குறைந்தளவு மூலதனம் முதலிடப்பட்டிருத்தல்.
- குறைந்தளவு ஊழியர் தொகையொன்று காணப்படல்.
- குடும்ப அங்கத்தவரின் உழைப்புக் காணப்படல்.
- நவீன தொழில்நுட்பப் பயன்பாடு குறைவாக இருத்தல்.
- வணிகத்தின் முகாமை சுதந்திரமாக இருத்தல்.
- தீர்மானம் எடுத்தல் தன்னிடமுள்ள தரவுகளினடிப்படையில் மாத்திரம் இடம்பெறல்.
- பாரிய வணிகங்களுடன் ஒப்பிடும்போது இவற்றின் மூலதன இணைப்பு குறைவாக இருத்தல்.

(4x1/2=2 புள்ளி)

ii)
- வணிகத்தின் தன்மை.
- உற்பத்தியின் தன்மை.
- தேவையான மூலதனமும் அதனைப் பெற்றுக் கொள்ளும் முறையும்.
- போட்டித் தன்மை.
- அமைப்பின் தோற்றம்.
- சந்தை.
- செல்வாக்குச் செலுத்தும் சட்டதிட்டங்கள்.

(4x1/2=2 புள்ளி)

3) i)
- வாடகைக் கொள்வனவு வசதிகளை வழங்கல்.
- ஆதனம், சொத்து வியாபாரங்களில் ஈடுபடல்.
- குத்தகை நிதி வசதிகளை வழங்கல்.
- குறுங்காலக் கடன்களை வழங்கல்.
- நிலையான வைப்புக்களை ஏற்றல்.
- அரச பிணைப் பத்திரங்களில் முதலீடு செய்தல்.

(4x1/2=2 புள்ளி)

ii)
- செயற்றிட்ட அறிக்கைகளைத் தயாரித்துக் கொடுத்தல்.
- நிதி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் ஆலோசனைச் சேவை வழங்கல்.
- ஒப்புறுதிச் சேவை தயாரித்தல்.
- குத்தகைச் சேவைகளை வழங்கல்.

(4x1/2=2 புள்ளி)

4)

| வங்கிகளுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் | வாடிக்கையாளனுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் |
|---|---|
| 1. செலவு குறைவடைதல் | 1. நேரம் மீதமாதல் |
| 2. நெருக்கடிகள் குறைதல் | 2. 24 மணிநேரமும் கொடுக்கல் வாங்கல் செய்து முடிதல் |
| 3. சரியான தன்மை அதிகரித்துக் காணப்படல் | 3. சிட்டைகளுக்கான செலுத்துகைகளை இலகுபடுத்தல் |
| 4. குறைவான ஊழியர்களைப் பயன்படுத்த முடிதல் | 4. கணக்கின் தகவல்களை அறியக்கூடியதாக இருத்தல் |
| 5. வங்கிகளது சேவைகள் அதிகரித்து இலாபத்தன்மை அதிகரித்தல் | 5. விரைவாக மற்றோர் கணக்கிற்கும் பணத்தினை மாற்றீடு செய்ய முடிதல் |
| (4x1/2=2 புள்ளி) | (4x1/2=2 புள்ளி) |

05) i) வலைப்பின்னலூடாக வங்கியின் இணையத்தளத்தில் பிரவேசித்து இரகசிய இலக்கத்தினைப் பயன்படுத்தி தன்னியக்கமாக தமது வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதை இது குறிக்கின்றது.

ii) தங்க ஆபரணங்களைப் பிணையாக வைத்து அவசரப் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு வணிக வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கப்படுவது இதுவாகும்.

iii) தகவல், டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பெறுபேறாக உருவாகி உள்நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் கொடுக்கல் வாங்கல்களின் கொடுப்பனவுகளைமேற்கொள்வதற்கு பயன்படுத்தப் படும் பணமாகும். உ.ம்: வரவு அட்டை

iv) யாதேனுமொரு குறிப்பிடப்பட்ட பெறுமானம் வரையில் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் பொருட்கள் சேவைகள் பெற்றுக் கொள்ளமுடியுமானவாறு வணிகவங்கிகள் அல்லது அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் விசேடமான இலத்திரனியல் பிளாஸ்திக் அட்டையாகும்.

உ-ம்: செலான் அட்டை- செலான் வங்கி

பீப்பிள்ஸ் அட்டை- மக்கள் வங்கி

(4x1=4 புள்ளி)

04)

1)

| அபாயம் | காப்புறுதி |
|---|---|
| 1. உரிமையாளர் ஆயுள் | - ஆயட்காப்புறுதி |
| 2. தொழிற்சாலை | - தீ அபாயக் காப்புறுதி |
| 3. ஊழியர் | - ஊழியர் பொறுப்புக் காப்புறுதி |
| 4. பார ஊர்தி | - முழுமையான மோட்டாரர் வாகனக் காப்புறுதி |
| 5. பண இடமாற்றம் | - வழிப்பணக் காப்புறுதி |
| 6. பொருள் இடமாற்றம் | - வழிப் பொருள் காப்புறுதி |

(4x1=4 புள்ளி)

(1 புள்ளி)

ii) அ) பாதை, தரிப்பிடம், சக்தி, ஊடகம்

ஆ) 1. A9 திறக்கப்பட்டமை

2. அதிவேக வீதிகள்

3. மேம்பாலங்கள்

4. வடக்கு கிழக்கு போக்குவரத்து மீள் கட்டுமாணம்

5. வடக்கிற்கானபேரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டமை

6. புதிய பேருந்து டிப்போக்கள் (6 x ½ = 3 புள்ளி)

iii) அ) அனுப்புபவர்

செய்தி

ஊடகம்

பெறுபவர்

துலங்கல்

பின்னூட்டல் (2 புள்ளி)

ஆ) ✍ வியாபாரகொடுக்கல் வாங்கல்களின் போது உரிய தரப்பினரிடையே கருத்துக்களை பரிமாற

✍ உரிமையாளர் - ஊழியர் தொடர்பினைப் பேண

✍ விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக

✍ மனித, பௌதீக வளங்களை சிறப்பாக முகாமைத்துவம் செய்வதற்காக (2 புள்ளி)

iv) அ) முதல்வர் ஒருவரின் அதிகாரத்தின் கீழ் ஏதாவது செயற்பாடொன்றில் ஈடுபடுபவர் முகவர் ஆவார் (1புள்ளி)

(1 புள்ளி)

உ-ம் தரகர்

ஆ) ✍ தரகுமுகவர்

✍ தரகர்

✍ காரணீகர்

✍ பொறுப்பு முகவர்

✍ ஏலவர் (2 புள்ளி)

v) அ) உலக வர்த்தகமையம்

உலக வர்த்தக நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள மத்திய நிலையம் உலக வர்த்தகமையமாகும். இலங்கையில் 1991ல் இது ஆரம்பிக்கப்பட்டது.

ஆ) ஒபெக்:

எண்ணெய் வள ஏற்றுமதி நாடுகள் தமக்கிடையே ஒன்றிணைந்து ஏற்படுத்திக் கொண்ட அமைப்பு ஒபெக் ஆகும்.

இ) சுமைச்சீட்டு:

கப்பல் கம்பனிக்காக கப்பல் தலைவர் அல்லது அவரது முகவர்களால் ஏற்றுமதியாளனுக்கு வழங்கும் ஆவணம் சுமைச்சீட்டாகும். பொருள் கப்பலில் ஏற்றப்பட்தை உறுதிப்படுத்தி இது வழங்கப்படுகின்றது.

ஈ) நாணயக்கடிதம்:

இறக்குமதியாளரின் நாணயத்தை உறுதிப்படுத்தி இறக்குமதியாளரின் வேண்டுகோளின் பேரில் அவனுடைய வங்கி பிறப்பிக்கும் ஒரு ஆவணம் நாணயக் கடிதமாகும்.

(4x1=4 புள்ளி)

05.

i) தகவல் தொழில்நுட்பத்திறன்
உலகமயமாக்கல் திறன்
நேரமுகாமைத்துவத் திறன்
தீர்மானம் எடுத்தல் திறன

(4 புள்ளி)

ii) வினைத்திறன் : வளங்களைவிரையமாக்காமல் குறைந்தளவு வளங்களை குறைந்தளவு கிரையத்துடன் பயன்படுத்தி அதிகளவு வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ளல் ஆகும்.

விளைதிறன் : சரியாகச் செய்வதற்கு முன் சரியானதைத் தெரிவு செய்தல் (Doing the right things) பயனுறுதி எனப்படும். இங்கு தெரிவு முக்கிய காரணியாகக் கருதப்படுகின்றது.

உற்பத்தித்திறன்: குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறுவனததின் உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலானன தொடர்பை வெளிப்படுத்துவதே உற்பத்தித்திறனாகும்.

தொடர்பு : உற்பத்தித்திறனின் மூலமே வினைத்திறனும் விளைதிறனும் ஏற்படுகின்றது.

(4x1=4 புள்ளி)

iii) அ.

நியமங்களை உருவாக்குதல்
செயற்பாடுகளை மதிப்பிடுதல்
வேறுபாடுகளை இனங்காணல்
வேறுபாடுகள் இருப்பின் அவற்றைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் (2 புள்ளி)

ஆ. நுட்ப முறைகள்

முன்னூட்டப்பட்ட கட்டுப்பாடு
நடைமுறைக் கட்டுப்பாடு
பின்னூட்டக் கட்டுப்பாடு

(2 புள்ளி)

iv) அ) பாய்ச்சல் உற்பத்தி முறை (1புள்ளி)

ஆ) <u>சாதக பண்புகள்</u>

1) பாரியளவு அனுகூலங்கள் காரணமாக அலகுக்கிரயம் குறைவடைதல்
2) முறையான சந்தைத் தேவையை கவனத்தில் கொள்ளல்
3) நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்த முடியுமாக இருத்தல்.

(1/2x3=1 ½ புள்ளி)

பாதக பண்புகள்

1) பாரியமுதலீடொன்று தேவையாக இருத்தல்

2) ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒழுங்கு முறைக்கேற்ப உற்பத்தி நடைபெறுவதனால் மாற்றங்களைச் செய்வது சிரமமாக இருத்தல்

(3x1/2=1 1/2 புள்ளி)

v) கணனி உதவியுடனான வடிவமைப்பு / ஆக்கம் - CAD
கணனி உதவியுடனான உற்பத்தி - ACM
கணனியுடன் ஒருங்கிணைந்த உற்பத்தி - CIM
கணனி எண் சார் கட்டுப்பாட்டகம் - CNC

(4 புள்ளி)

06)

i)
- பாதுகாப்புச் சரக்கிருப்பு இல்லாது போதல்
- பெருந்தொகையில் சரக்குக் கொள்வனவினால் வரும் அனுகூலங்கள் இல்லாது போகும்.
- அடிக்கடி பொருள் கொள்வனவு செய்வதால் போக்குவரத்துச் செலவு அதிகரிக்கும்
- வேலைநிறுத்தம் அல்லது இயந்திர உபகரணம் பிழைகளின் போது உற்பத்திக் கருமங்கள் பிரச்சினைக்குளாக முடியும்.

(4x1=4 புள்ளி)

II) அ) சந்தைப்படுத்தல் கலவை (1 புள்ளி)

ஆ) உற்பத்திப் பொருள் - பொதியிடல், தரம், வியாபாரக் கழிவு
விலை - கொடுப்பனவுக் காலம், கடன் நிபந்தனை
இடம் - இருப்பு
மேம்படுத்தல் - விளம்பர நோக்கம், நேர்ச் சந்தைப்படுத்தல்

(1 ½ புள்ளி) (1 ½ புள்ளி)

III) அ) நுகர்வோரினது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்துகொள்ளும் பொருட்டு பரிமாற்றத்திற்கு விரும்பும் கொள்வனவு சக்தியுள்ள பல்வேறுபட்ட வாடிக்கையாளர்களின் சேர்க்கை சந்தையாகும். (1 புள்ளி)

ஆ) கொடுக்கல் வாங்கல் - இருபிரிவினரிடையே அல்லது பலரிடையே பெறுமதியானவைகளை பரிமாறிக் கொள்ளல் மூலமாக கொடுக்கல் வாங்கல் ஒன்று உருவாகும்.

(1 புள்ளி)

1) பௌதீகப் பொருட்கள்
2) சேவை
3) செயற்பாடுகள்
4) அனுபவம்
5) தனிநபர்கள்
6) இடம்
7) நிறுவனம்
8) எண்ணம்
9) ஆதனம்
10) தகவல்

(4x1/4=2 புள்ளி)

IV) அ) முரண்பாடான பண்புகளைக் கொண்ட அனைத்துச் சந்தைகளையும் சமூகப்பண்புகளுடன் கூடிய குழுக்களாக வகைப்படுத்தி வேறுபடுத்தல் சந்தைத் துண்டமாக்கல் எனப்படும் (1 புள்ளி)

ஆ) 1) அனைத்துச் சந்தைகளும் பகுப்பாய்விற்கு உட்படுத்துவதனால் சந்தை தொடர்பான சிறந்த விளக்கத்தினைப்பெற முடிதல்
2) பொருத்தமான நிகழ்கால சந்தைச் சந்தர்ப்பங்களை இனம் காணமுடியுமாயிருத்தல்
3) துண்டமாக்கப்பட்ட சந்தையினை இன்னும் சிறப்பாக துண்டாக்கமுடியுமாயிருத்தல்
4) நிறுவனத்திடமுள்ள வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்த முடிதல்
5) நிறுவனத்திற்குச் சந்தை தொடர்பாகக் காணப்படுகின்ற அச்சத்தினைக் குறைத்துச் கொள்ள முடிதல்
6) சந்தைப்படுத்தல் வேலைத்திட்டத்தினை மிகவும் சிறப்பாக மேற்கொள்ள முடிதல்.

(3 புள்ளி)

v) 1. நிதிக்கான கிரயம்
2. மூலதன இணைவில் ஏற்படும் தாக்கம்
3. பிணைகளின் தேவையும் பிணை வழங்கக்கூடிய வசதியும்
4. வணிக நட்ட அச்சம்
5. செயற்பாட்டு இணைவு
6. பங்கொன்றின் உழைப்பு வீழ்ச்சியடைதல்
7. வாக்குரிமையின் தாக்கம்
8. பங்குகளின் நிகழ்காலச் சந்தை விலை
9. நிதி தேவையான காலம்
10. தேவையான நிதியின் அளவும் அதனைச் செலுத்தும் முறையும் (8x1/2= 4 புள்ளி)

7)1. அ) தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு
நீண்டகால நிதித் தேவைப்பாடு (2x1/2= 1 புள்ளி)

ஆ) <u>தொழிற்படு மூலதனம்:</u>
அன்றாட வணிக நடவடிக்கையினை நடாத்திச் செல்வதற்குத் தேவையான நிதியினைக் குறிக்கும்.
உ-ம்: சரக்குகளைக் கொள்வனவு செய்தல்
சம்பளம் வழங்கல்
தொலைபேசி, மின்சாரக் கட்டணம் செலுத்தல்

<u>நீண்டகால நிதி</u>
வணிகமொன்றினை ஆரம்பிக்கும் போது, வணிக நடவடிக்கையினை நடாத்திச் செல்லுகின்றபோதும் ஆரம்பத்தில் தேவையான நடைமுறையல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியினைக் குறிக்கும்
உ-ம்: காணி கட்டடங்கள்
இயந்திர உபகரணங்கள் (விளக்கம் 2x1 = 2 புள்ளி)
மோட்டார் வாகனங்கள் (உதாரணம் 2x1/2 = 1 புள்ளி)

2. 1) முதலீட்டாளர்கள் சார்பாக மத்திய வைப்பக முறையில் கணக்குகளை ஆரம்பித்தல்
2) முதலீட்டாளர்களின் கொள்வனவு விற்பனைக் கட்டளைகளைப் பொறுப்பேற்று அவற்றை நடைமுறைப்படுத்தல்.
3) முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்கல்
4) கம்பனிகளைப் பட்டியல்படுத்தும்போது உரிமை வழங்கலின் போதும் அதற்கு அனுசரனை வழங்குதல்
5) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகளது மூலதனத்தைத் திரட்டுவதற்கு உதவுதல்
6) கம்பனிகளை சுவீகரிக்கும்போதும் ஒன்றிணைக்கும் போதும் அதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வசதிகளையும் அளித்தல் .(4x1=4 புள்ளி).

03. அ)
1. கிரயம் எவ்வளவாகும் (நேர், நேரில் கிரயம்)
2. தேவையான நிதியின் அளவு
3. நிதி தேவைப்படுகின்ற காலம்
4. வணிக ஒழுங்கமைப்பின் தன்மை (தனியுரிமை / பங்குடமை / கம்பனி)
5. முன் வைக்கவேண்டிய பிணைப்பாதுகாப்பு தொடர்பான நிலைமைகள்
6. வணிகத்தின் மூலதன அமைப்பில் ஏற்படக்கூடிய தாக்கம்
7. வணிக முகாமைத்துவத்திற்கு ஏற்படும் தாக்கம்
(2 புள்ளி)

ஆ)
1. நிதி மூலத்துக்கான வருவாய்
2. நிதியிடலுக்கான இடர் மட்டம்
3. நிதியிடல் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு செலுத்த வேண்டிய வரியின் அளவு

4. வழங்குனர் முதிர்வுகால நிதியை மீளப் பெறுவதற்குகான வழிமுறைகள்
5. மீளப் பெறல்
6. முதலீட்டுக்கான ஏனைய மாற்று வழிகள் (2 புள்ளி)

04. 1. உயிருள்ளது
2. எதிர்விளைவினைக் காட்டக்கூடியது
3. ஏனைய அனைத்து வளங்களையும் கட்டுப்படுத்தக் கூடியது.
4. பயிற்றுவிக்க முடியுமானது (4 புள்ளி)
5. குழுவாக கருமமாற்றக் கூடியது

05. அ) 1. தொழில் அறிவித்தல்
2. திறன் அட்டவணை
3. அகத்தே உள்ள ஊழியர்களை அறிமுகப்படுத்தல் (1 புள்ளி)
4. பதிலாள் திட்டம்

ஆ) <u>அனுகூலங்கள்</u>
1) ஊழியர்கள் தூண்டப்படல்
2) சிறந்த ஊழியர் தொடர்பு ஏற்படல்
3) பொருத்தமான ஊழியர்களை தக்க வைத்துக் கொள்ள முடிதல்
4) ஆட்சேர்த்தலுக்கான செலவு குறைவு
5) ஊழியர்களுக்கு நிறுவனத்திடம் காணப்படும் ஈடுபாடும், அர்ப்பணிப்பும் அதிகரிக்கும் (1 1/2 புள்ளி)

<u>பிரதிகூலங்கள்</u>
1. நவீன அறிவு நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படாதிருக்கும்
2. பயிற்சிக்காகக் கூடிய செலவுகளை ஏற்க வேண்டியிருக்கும்.
3. ஊழியர்களுக்கிடையே தேவையற்ற வகையில் போட்டி உருவாகுதல் (1 1/2 புள்ளி)

08)
1. அ) தொடர்பாடல் தொழில் நுட்பமும் கணினித் தொழில் நுட்பமும் இணைந்த தகவல் தொழில்நுட்பம் (2 புள்ளி)

ஆ) ✍ மிகச்சரியான தீர்மானம் எடுக்கலாம்
✍ நம்பகத்தன்மை அதிகரிக்கும்
✍ வினைத்திறன் உயரும்
✍ வெளியீடு தரம் உயரும் (2 புள்ளி)
✍ போட்டியை இலகுவாக சமாளிக்கலாம்
✍ தொடர்பாடல் இலகு

2. அ)
✍ இணைய சேவை (w.w.w)
✍ E - mail
✍ கோப்பு மற்றும் சேவை
✍ உரையாடல் சேவை
✍ தொலைக்காட்சி சேவை
(2 புள்ளி)


ஆ)
✍ e-mail
✍ செய்திக் குழு / தொடர்புபடுத்தல்
✍ முகாமையை இலகுபடுத்தல்
(2 புள்ளி)

3. அ) உலகளாவிய ரீதியில் தனிநபர்கள், நிறுவங்கள் உரையாடலை மேற்கொள்ள இணையம் வழங்கும் வசதியே உரையாடல் வசதியாகும்

ஆ) இணையத்தின் ஊடாக தபால் அனுப்பும் முறையே இலத்திரனியல் அஞ்சல் ஆகும்.

இ) தனிநபர் / நிறுவனம் ஒன்றின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் இணையம் அக இணையமாகும்.

ஈ) சகல கணனிகளும் பொதுவா நேரடியாக தொடர்புபடும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் வலையமைப்பு (4x1=4 புள்ளிகள்)




4. ✍ நிர்வாகக் கட்டமைப்பு
✍ பதவியும் பொறுப்புகளும்
✍ மனித வளத்திற்கான வருடாந்த செலவு

(1 புள்ளி)

<u>நிர்வாக கட்டமைப்பு</u>

1. வணிகம் ஒன்றின் பல்வேறு பிரிவுகளையும், பதவிகளையும் அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் கொண்டது

2. மனிதவளத்திற்கான வருடாந்த செலவு
வணிகம் ஒன்றின் தன்மைக்கேற்ப பதவியாளர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம், கூலி போன்றவற்றை உள்ளடக்கியது.

(2x1/2=1 புள்ளி)

5. ✍ நிதி அளவை தீர்மானித்தல்
✍ முதலீடு தொடர்பான தீர்மானங்களை எடுத்தல்
✍ நிதி மிகை, குறைகளை அறிய
✍ நிதியை வினைத்திறனாகப் பயன்படுத்தல்.

(4x1/2=2 புள்ளி)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# வணிகக்கல்வி | 32 | T | I |

## மாதிரி வினாத்தாள - 2

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

கவனிக்க:-

**எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**
**இல.1-30 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் போது மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. தேவை விருப்பம் தொடர்பான பல்வேறுபட்ட இலக்கணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

   A- பொதுவானவை
   B பல்வேறுபட்டவை
   C வரையறுக்கப்பட்டவை
   D வரையறுக்கப்படாதவை
   E கட்டாயம் பூர்த்தி செய்ய வேண்டியவை
   F இரண்டாம் நிலைக்குரியவை

   மேற்கூறியவற்றுள் விருப்பம் தொடர்பான இலக்கணங்கள்

   1) A,C,E  2) A,B,C  3) B,D,F
   4) A,C,F  5) B,D,F

   (    )

2. பின்வருவன வணிகத்தினை வகைப்படுத்தலுக்கான அடிப்படைகளும் அவற்றின் உப பிரிவும் தரப்பட்டுள்ளது. நியதிகளின் ஒழுங்கில் வரிசைப்படுத்துக.

| நியதிகள் | வகைகள் |
|---|---|
| 1. உற்பத்தியின் தன்மை அடிப்படையில் | A- கைத்தொழில் |
| 2. அளவின் அடிப்படையில் | B தனியார் துறை |
| 3. உற்பத்தி துறையின் அடிப்படையில் | C- சேவை நோக்கம் |
| 4. உற்பத்தி நோக்கத்தின் அடிப்படையில் | D- இரண்டாம் நிலை உற்பத்தி |
| 5. உரிமையின் அடிப்படையில் | E- நுண்ணளவு |

   1) A,B,D,C,E  2) B,C,A,D,E  3) D,E,A,C,B
   4) D,E,A,B,C  5) C,D,A,B,E

   (    )

3) பின்வரும் கூற்றுக்களில் துணைச் சேவையைத் தெளிவுபடுத்தும் கூற்றினைத் தெரிவு செய்க.

   1. விமல் தனது வீட்டுப் பாவனைக்குத் தேவையான மிளகாயை தானே உற்பத்தி செய்கிறார்.
   2. குமாரி தனது பிள்ளைகளுக்குத் தேவையான ஆடைகளைத் தானே தயாரிக்கின்றார்.
   3. புல்லாங்குழல் தயாரிப்பவரான ரஞ்சித் தனது ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி புல்லாங்குழல் தயாரித்து விற்பனை செய்கிறார்.
   4. பாறுக் தனது வியாபாரத்திலுள்ள சொத்துக்களை X என்ற காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்தள்ளார்.
   5. தேவகி றோசா மலர்களை வீட்டுத் தோட்டத்தில் வளர்த்து அதனை ஆலய உற்சவங்களுக்கு இலவசமாக வழங்குகின்றார்.

   ( 4 )

4) "அ" பகுதியில் காணப்படும் அக்கறை கொள்ளும் தரப்பினர் ஒவ்வொருவருக்கும் பொருத்தமான காரணங்களை "ஆ" பகுதிகளிலிருந்து தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
| --- | --- |
| A. உரிமையாளர் | 1. சம்பளம், மேலதிக கொடுப்பனவு வேலையில் திருப்தி |
| B. முகாமையாளர் | 2. இலாபம், அபிவிருத்தி, சந்தைப்பங்கு |
| C- ஊழியர் | 3. சூழலைப் பாதுகாத்தல், வேலை வாய்ப்பு |
| D- சமூகம் | 4. இலாபம், அபிவிருத்தி, தீர்மானங்களில் வெற்றித்தன்மை |
| E- அரசு | 5) வரி, வேலை வாய்ப்பு |

1) A-2, B-4, C-1, D-3, E-5
2) A-5, B-2, C-1, D-3, E-4
3) A-2, B-5, C-1, D-4, E-3
4) A-4, B-2, C-1, D-3, E-4
5) A-5, B-2, C-1, D-4, E-3

( 1 )

5. பெற்றோலின் விலை தற்போது உலக சந்தையில் அதிகரித்து காணப்படுகின்றது. வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் இதற்கான சூழலானது.

1) அரசியல் சட்டச்சூழல்
2) பொருளாதாரச்சூழல்
3) இயற்கைச் சூழல்
4) தொழிநுட்பச்சூழல்
5) பூகோளச் சூழல்

( 2 )

6. "சமூகத்தினுள் நேரடித் தாக்கத்தினை உருவாக்குவதற்கு வணிக நடைமுறைகளை முகாமைத்துவம் செய்வது எவ்வாறு" என்ற கருத்தே சமூகப் பொறுப்பாகும் எனக் கூறியவர்.

1) Robert, L.Kerts
2) Hentry Mintzberg
3) Stoner Freeman and Gilbert
4) Mallen Baker
5) Merry Parker Follett

( 4 )

7. வணிகங்களினால் அக்கறை செலுத்தும் தரப்பினர்களும் வணிகங்களினால் நிறைவேற்றவேண்டிய சமூகப் பொறுப்புக்கள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன.

| அக்கறை கொள்ளும் தரப்பினர் "அ" | நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் "ஆ" |
| --- | --- |
| அ. ஊழியர் | A. பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல் |
| ஆ. உரிமையாளர் | B. பசுமை உற்பத்தி |
| இ. வாடிக்கையாளர் | C. நியாயமான தன்மை |
| ஈ. சமூகம் | D. உரிமைகளைப் பாதுகாத்தல் |

"அ" பகுதிக்கு பொருத்தமான "ஆ" பகுதியைத் தெரிவு செய்க

1) D,C,A,B,
2) C,A,D,B
3) B,A,C,D
4) D,C,B,A
5) A,C,B,D

( 2 )

8. மரபு ரீதியான சில்லறை வணிகம் ஒன்றினை விட சிறப்பு சந்தை (Supper Market) ஊடாக கொள்வனவு செய்வதில் நுகர்வோருக்குக் காணப்படும் விசேட உரிமை

1) தகவல் பெறும் உரிமை
2) கவனத்தை ஈர்க்கும் உரிமை
3) இழப்பீடு கோரும் உரிமை
4) தெரிவு செய்யும் உரிமை
5) பாதுகாப்பு பெறும் உரிமை

( 4 )

9. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றில் மாத்திரம் காணக்கூடிய பண்பொன்றாக இருப்பது

1) பங்குகளை சுதந்திரமாக கைமாற்ற முடிதலும் உச்சப் பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப்படா திருத்தலும்
2) நீண்டகால வாழ்வுத் தன்மை காணப்படலும், வரையறுக்கப்பட்ட பொறுப்பும்
3) பங்குகளைச் சுதந்திரமாக கைமாற்ற முடியாதிருத்தலும் வரையறுக்கப்பட்ட பொறுப்பும்
4) வரையறுக்கப்பட்ட பொறுப்பும் பங்குகளையும் தொகுதிக் கடன்களையும் கொள்வனவு செய்யும் படி பொது மக்களைப் பகிரங்கமாக அழைக்க முடியாமையும்
5) உச்சப்பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருத்தலும் நீண்ட வாழ்வுத்தன்மை யொன்று காணப்படலும்

( 1 )

10. பின்வருன பங்காளர்களின் உரிமைகளும் கடமைகளுமாகும்.

A- பங்குடமை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளல்
B- இலாபத்தில் பங்கு கொள்ளல்
C- தனிப்பட்ட இலாபம் பெறாதிருத்தல்
D- நட்டத்தில் பங்கு கொள்ளல்
E- இட்ட மூலதனத்திற்கு வட்டி பெறுதல்

மேற்கூறியவற்றுள் பங்காளர்களின் கடமைகளை மட்டும் கொண்ட தொகுதி.

1. A,B,E
2. A,B,C
3. B,C,D
4. A,C,D
5. C,D,E

( 1 )

11. பின்வரும் கூற்றுக்கள் முயற்சியாண்மை தொடர்பானவை

A- சமூக முயற்சியாண்மை
B- முகவராக செயற்படுதல்
C- கைத்தொழில் முயற்சியாண்மை
D- பெண் முயற்சியாண்மை
E- உள்ளக முயற்சியாண்மை

மேற் கூறப்பட்டவற்றுள் முயற்சியாண்மையின் நவீன போக்குகளை மட்டும் கொண்ட தொகுதி

1. A,D,E
2. A,B,C
3. D,E,B
4. A,D,B
5. C,D,E

( )

12. முயற்சியாண்மையினூடாக தனிநபருக்கு ஏற்படும் அனுகூலங்களாக அமைவது

1. சமூக அந்தஸ்து, பிரதேச வளங்களின் பயன் அதிகரித்தல்
2. சமூக ஏற்புடமை, தனிப்பட்ட நிதி கிடைத்தல்
3. தனிப்பட்டநிதி , கைத்தொழில் அபிவிருத்தி
4. தனிநபர் திறன் பயன்படுத்தப்படல், புதிய சந்தைகளின் தோற்றம்
5. மக்களின் வாழ்க்கைத் தர உயர்வு, சமூக அந்தஸ்து

( 2 )

13. பின்வருவனவற்றுள் எது பணத்தில் காணப்படும் சிறந்த பண்புகளைக் கொண்ட தொகுதியாக அமைவது

A- எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படல்
B- பெறுமானத்திரட்டாகத் தொழிற்படல்
C- இலகுவாக இனம் காணக்கூடியதாக இருத்தல்
D- கணக்கீட்டு அலகாகத் தொழிற்படல்

1. A மட்டும்
2. A யும் B யும்
3. A யும், C யும்
4. A யும், D யும்
5. Bயும், D யும்

( 3 )

14. மத்தியவங்கி தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு மேற்கொள்ளும் பிரதி நிதித்துவ சேவையொன்றாகக் கருதக்கூடியது

1. நாணயக் கொள்கைகளை அமுல்படுத்தல்
2. நாணய மாற்று வீதங்களை அமுலாக்கல்
3. அந்நிய செலாவணிக் கட்டுப்பாடு
4. தீர்வளவு வசதிகள் மேற்கொள்ளல்
5. அரசின் பொருளாதார ஆலோசகராகச் செயற்படல்

( 3 )

15. மாதவன் தனது தொழிற்சாலையை A,B ஆகிய இரண்டு காப்புறுதி நிறுவனங்களில் முறையே 50,000/=, 100,000/= ஆகிய தொகைளுக்கு நியாய காப்புறுதி செய்திருந்தார். தொழிற்சாலையின் ஒரு பகு சேதமடைந்து நட்டம் 50000/= என மதிப்பீடு செய்யப்பட்டது. அவர் பெற்றுக் கொள்ளக் கூடிய இழப்பீட்டு தொகையாது , எத் தத்துவத்தின் கீழ்

1) 50000/= பதிலாள் வைப்புத் தத்துவம்
2) 50000/= காப்புறுதி உதவு தொகை
3) 50000/= காப்புறுதி செய்யும் உரிமை
4) 150000/= காப்புறுதி உதவு தொகை
5) 150000/= அண்மைக் காரணி

( )

16. A,B,C,D என்பன சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தும் ஆவணங்கள் 1,2,3,4 என்பது அதனை வழங்குகின்ற நபர் அல்லது நிறுவனங்களாகும்.

A- நாணயக் கடிதம் — 1. வணிகக் கழகம்
B- நட்ட ஈட்டுக் கடிதம் — 2. ஏற்றுமதியாளர்
C- கப்பல் தளப்பத்திரம் — 3. வங்கி
D- தோற்றுவாய்ச் சான்றிதழ் — 4. சுங்கத்திணைக்களம்

ஆவணங்களுடன் தொடர்புடைய தரப்பினரை சரியாகக் காட்டும் தொகுதி எது?

1) A-3, B-1, C-2, D-4
2) A-3, B-2, C-4, D-1
3) A-2, B-1, C-4, D-1
4) A-4, B-2, C-3, D-1
5) A-4, B-3, C-2, D-1

( 2 )

17. கிரயம், விரைவு என்பவற்றின் அடிப்படையில் மிகவும் அனுகூலமான தொடர்பாடல் முறை

1) தொலைநகல்
2) மின்னஞ்சல்
3) கூரியர்
4) தந்தி
5) குரலஞ்சல்

( 2 )

18. "மாற்றமடைந்துள்ள சூழலுக்கு ஏற்றவாறு அமைப்பினுள் மாற்றத்தினை ஏற்படுத்தல்" என்ற வகிபாகத்திற்குரிய செயற்பாட்டின் மூலம் ஹென்றி மின்ற்பேர்க் வெளிப்படுத்தப்படுபவர் பின்வருவனவற்றில் யார்

1) தலைவர்
2) கண்காணிப்பாளர்
3) நடுநிலையாளர்
4) முயற்சியாளர்
5) மேலதிகாரி

( 4 )

19. பின்வருவோர் நிறுவனத்தின் பல்வேறுபட்ட முகாமை மட்டங்களில் உள்ளடக்குவோர் ஆவார்.

அ. மேற்பார்வையாளர்
ஆ. தலைவர்
இ. உப தலைவர்
ஈ. நிதி முகாமையாளர்
உ. பிரதான கட்டளைப் பணிப்பாளர்

மேலே கூறப்பட்ட விடயங்களில் இருந்து உயர்மட்ட முகாமையாளர்களை உள்ளடக்கும் தொகுதி.

1) அ, ஆ, இ
2) அ, ஆ, ஈ
3) ஆ, இ, உ
4) ஆ, உ, இ
5) ஆ, இ, ஈ

( 3 )

20. பின்வருவன திட்டமிடல் கருமங்கள் தொடர்பான படிமுறைகளாகும்

அ. திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
ஆ. உபாய வழிமுறைகளை இனம் காணல்
இ. சூழல் பகுப்பாய்வு
ஈ. தூரநோக்கு, இலட்சிய நோக்கு, நோக்கங்கள் இலக்கு என்பவற்றை உருவாக்கல்
உ. பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் என்பவற்றை இனம் காணல்.
ஊ. வெற்றியினை அளவிடலும் கட்டுப்படுத்தலும்

மேற்கூறிய படிமுறைகளிலிருந்து சரியான ஒழுங்குபடுத்தலைக் காட்டும் தொகுதி

1) இ, ஆ, அ, ஊ, ஈ, உ
2) ஆ, உ, ஈ, அ, ஊ, இ
3) இ, உ, ஈ, ஆ, அ, ஊ
4) இ, அ, ஆ, ஊ, ஈ, உ
5) அ, ஆ, இ, ஈ, உ, ஊ

( 3 )

21. பின்வரும் தகவல்கள் ஒரு உற்பத்திப் பொருள் தொடர்பானவை

| | |
|---|---|
| மூலப்பொருள் | - 30/= |
| ஊழியக்கொடுப்பனவு | - 20/= |
| நேர்ச் செலவு | - 15/= |
| மாறும் உற்பத்தி மேந்தலை | - 20/= |
| மாறும் நிர்வாக மேந்தலை | - 15/= |

மாறும் விற்பனை மேந்தலை - 10/=
பொருளின் விற்பனை வினை - 300/=
நிலையான செலவு - 190,000

மேற்குறித்த உற்பத்தி பொருளின் சமப்பாட்டுப் புள்ளி யாது

1) 10,000 2) 1000 3) 5000
4) 2000 5) 3000

( )

22) மூலப்பொருட்களையும் முடிவுப்பொருட்களையும் பூச்சியமாகப் பேணி, களஞ்சியக் கிரயத்தினை இழிவு படுத்திக் கொள்வதற்காக பின்பற்றப்படும் முறையாக கருதப்படுவது.

1) ABC பகுப்பாய்வு
2) இரு கொள்கல முறை
3) கணினி செயல்திட்டம்
4) JIT முறைமை
5) தொடர் இருப்பெடுத்தல்

( )

23) உற்பத்தி நிறுவனம் ஒன்றில் பயன்படுத்தக்கூடிய உற்பத்தித்திறனை விருத்தி செய்து கொள்வதற்கான நவீன நுட்ப முறையாகக் கொள்ளக் கூடியது

1) தரவட்டத்தைப் பயன்படுத்தல்
2) பல்லினத்தன்மை கொண்ட உற்பத்தி
3) கணினி எண்சார் கட்டுப்பாட்டகம்
4) நிதிசார், நிதிசாரா ஊழியர் ஊக்குவிப்பு

( 3 )

24) சந்தைப்படுத்தலினால் வணிகருக்கு ஏற்படும் முக்கியத்துவம் அல்லாதது

1) நிறுவனத்தின் வெற்றியை உறுதிப்படுத்தல்
2) போட்டி நிலைமைகளை வெற்றி கொள்ளல்
3) சந்தைப்பங்கை விஸ்தரித்தல்
4) சந்தையில் பொருட்களும் சேவைகளும் கிடைக்கப்பெறல்
5) உரிமையாளர், ஊழியர் திருப்பதியை மேம்படுத்தல்

( 4 )

25. பின்வரும் "அ" பகுதியில் மேம்படுத்தல் கலவைகள் காட்டப்படுகின்றன. "ஆ" பகுதியில் மேம்படுத்தல் கலவையின் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. விளம்பரம் | A. வாடிக்கையாளருடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்பல் |
| 2. விற்பனை மேம்படுத்தல் | B. இலக்க நுகர்வோருடன் தொடர்பைப் பேணி உற்பத்தியைக் கொள்வனவு செய்யத் தூண்டல் |
| 3. மக்கள் தொடர்பும் பிரசித்தப்படுத்தலும் | C. கொடுப்பனவுடன் கூடிய தனிநபர் அல்லாத சமர்ப்பணம் |
| 4. நிகழ்வும் அனுபவமும் | D. குறுங்கால விற்பனைத் தூண்டல் |
| 5. நேரடிச் சந்தைப்படுத்தல் | E. நிறுவன அனுசரணையுடனான, நிகழ்வுகள், செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரித்து செயற்படுத்தல் |

"அ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மேம்படுத்தல் கலவைக்குப் பொருத்தமான கருத்தைக் கொண்டுள்ள "ஆ" பகுதியை கொண்டுள்ள சரியான தொகுதி

1) C,D,A,E,B 2) C,D,E,A,B ✗ 3) D,C,A,E,B
4) C,D,B,A,E ✗ 5) C,D,B,E,A ✗

( 1 )

26. மனித வளமுகாமைத்துவம் தொடர்பான தொழிற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - தொழில் இசைவாக்கம்
B - ஆட்சேர்ப்பு
C - வேலை வடிவமைப்பு
D - ஊழியர் செயற்திறன் மதிப்பீடு
E - பதவியில் அமர்த்துதல்

மேற்குறிப்பிட்ட தொழிற்பாடுகளை ஒழுங்கு முறையாகக் காட்டும் விடைத் தொகுதியாக அமைவது

1) B,C,A,D,E    2) B,C,E,A,D    3) C,B,A,D,E
4) C,B,E,A,D    5) C,B,E,D,A

( 4 )

27. ஆட்சேர்ப்பு விளம்பரம் ஒன்றில் இருந்து பின்வரும் விபரங்கள் பிரித்தெடுக்கப்பட்டு உமக்கு தரப்படுகின்றன.

A - வயது    E - பால் வகுப்பு
B - சம்பள அளவுத்திட்டம்    F - நியமன நிலையம்
C - அனுபவமும் பயிற்சியும்    G - பதிலளிக்க வேண்டிய பொறுப்பு
D - கல்வித்தகமை    H - பணியின் தன்மை

தொழில் நியமம் ஒன்றிற்குப் பொருத்தமான விடயங்களினை சரியாகக் காட்டும் தொகுதி எது

1) A,B,D,E    2) A,C,D,E    3) A,C,D,F
4) B,F,G,H    5) A,D,G,H

( 2 )

28. பின்வருவனவற்றுள் நேர் நிதி மூலம் அல்லாதது

1) நிறுத்தி வைத்த இலாபம்    2) பங்கு வழங்கல்
3) வணிகப்பத்திரம்    4) தொகுதிக்கடன்
5) தேய்வு ஏற்பாடுகள்

( 3 )

29. மனித வள முகாமைத்துவத்தில் தகவல் முறைமை பயன்படுத்தப்படுகின்றது. பின்வருவனவற்றுள் எத் தேவைக்கு தகவல் முறைமை பயன்படுத்தப்படுகின்றது?

1) பண முகாமைத்துவம்    2) மூலதனப்பாதீடு
3) பொது நாட்குறிப்பு    4) ஆற்றுகை மதிப்பீடு
5) உற்பத்தி ஆய்வு

(    )

30. சந்தைப்படுத்தல் திட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படுபவற்றைச் சரியாக காட்டும் தொகுதி

1) சந்தை, போட்டி, விநியோகச் சந்தைப்படுத்தல் வழிமுறை, விற்பனை
2) சந்தை, போட்டி, நிதி, விற்பனை
3) போட்டி, நிதி, உற்பத்திக்கலவை, மூலப்பொருள் தேவை
4) சந்தை, மூலதனம், போட்டி, உற்பத்தித் திட்டம்
5) விநியோகச் சந்தைப்படுத்தல், ஊழியர் தேவை, சந்தை, போட்டி

(    )

**31 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி கீறிட்ட இடங்களை நிரப்புக.**

31. பொருட்களைப் பாவனை அடிப்படையில் ...................... எனவும் ...................... எனவும் வகைப்படுத்தலாம்.

32. பொருளாதார நோக்கங்களை அடைவதற்காக அரசு பின்பற்றும் இரு பிரதான பொருளாதாரக்கொள்கைகள்

(1) ...................................................... (2)...................................................... ஆகும்.

33. வணிகம் ஒன்றை நடாத்திச் செல்வது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற விதிகள் அல்லது

நியமங்கள் ...................................................... என அழைக்கப்படும்.

34. நேர் வரிகளாக ......................................, ......................................................

...................................................... என்பவற்றைக் கொள்ள முடியும்.

35. பொருளாதாரம் ஒன்றில் காணப்படும் பொதுவான நோக்கங்களாக

1) ..........................................................................................
2) ..........................................................................................
3) ..........................................................................................
4) ..........................................................................................

என்பவற்றை கொள்ள முடியும்

36. அரச வருமானம் திரட்டலில் பின்வரும் நிறுவனங்கள் ஈடுபடுகின்றன.

1) ..........................................................................................
2) ..........................................................................................
3) ..........................................................................................
4) ..........................................................................................

37. அ. கடலுணவுப் பொருட்களில் அடங்கியுள்ள இரசாயனங்களின் அளவுகளை உறுதி செய்யும் சர்வதேச தரம் ................................................................ ஆகும்.

ஆ. முடிவுப்பொருள் வணிகம் ஒன்றில் களஞ்சியப்படுத்தல் கிரயத்தினை இழிவு படுத்திக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் நுட்ப முறை ........................................ என அழைக்கப்படும்.

38. பயணி ஒருவர் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு விமான வழியாக செல்ல விரும்புகின்றார். அவர் தன்னுடன் வைததிருக்க வேண்டிய பொருரூத்தமானஆவணங்களாவன

1) .......................... 2)..................... 3) ......................

39. அ. நெறிப்படுத்தல் கருமத்துடன் தொடர்புபட்ட கருமங்களாக ...................... ,............................ ............................ என்பன கொள்ளப்படுகின்றன.

ஆ. அதிகாரம் மேல் மட்ட முகாமையிடம் குவிந்து காணப்படுவது ................... என அழைக்கப்படும்.

40. அ. உயர்மட்ட முகாமையாளர்களிடம் ............................ திறன் அதிகமாகவும், கீழ்மட்ட முகாமையாளர்களிடம் ............................ திறன் அதிகமாகவும் காணப்படல் வேண்டும்.

ஆ. ஒரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கைப்படுத்தும் ஊழியர்களின் எண்ணிக்கை .................... ஆகும்.

## இலக்கம் 41 - 50 வரையிலான வினாக்களுக்குரிய விடையை எழுதுக.

41. தீர்மானம் எடுத்தலின் தர்க்க ரீதியான செயன்முறை பல படிமுறைகளைக் கொண்டுள்ளது. அவற்றை ஒழுங்குமுறைப்படித் தருக

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

4) ..........................................................................................

5) ..........................................................................................

42. அ. வாடிக்கையாளர் ஒருவரின் குறித்த கட்டளைக்கு அமைவாக நடைபெறும் உற்பத்தி ........................ ...... ... .............. ஆகும்.

ஆ. தொகுதி உற்பத்தியின் சாதக பண்புகளாக

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) .......................................................................................... என்பவற்றைக் கொள்ள முடியும்.

43. பொருட் கொள்வனவு ஒன்றுடன் தொடர்புபட்ட ஐந்து சரியான விடயங்களும் எவை?

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

4) ..........................................................................................

5) ..........................................................................................

44. தரக்கட்டுப்பாடு மேற்கொள்வதற்காக நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் நுட்பமுறைகள்

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

4) ..........................................................................................

45. முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவுடன் தொடர்பு பட்ட பிரிவுகளாக

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

4) ..........................................................................................

என்பவற்றைக் கொள்ள முடியும்

46. சேவைச் சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய மாறிகள்

1) ..........................................................................................
2) ..........................................................................................
3) ..........................................................................................
4) ..........................................................................................
5) ..........................................................................................
6) ..........................................................................................
7) ..........................................................................................

47. நிறுவனம் ஒன்றின் திரவத்தன்மையினை வெளிப்படுத்தும் வீதம் இரண்டினைக் குறிப்பிடுக.

1) ..........................................................................................
2) ..........................................................................................

48. கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் பரிமாற்றப்படும் பிணைப்பத்திரங்கள்

1) ..........................................................................................
2) ..........................................................................................
3) ..........................................................................................
4) ..........................................................................................
5) ..........................................................................................
6) ..........................................................................................

49. அகரீதியாக ஊழியர்களைச் சேர்த்து கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள்

1) ..........................................................................................
2) ..........................................................................................
3) ..........................................................................................
4) ..........................................................................................

50. அ. வணிகத்திற்கு வழிகாட்டும் ஒரு வழிப்படம்............................................... ஆகும்.

ஆ. வணிகம் ஒன்றில் காணப்படும் பல்வேறு பிரிவுகளுக்கும் பதவிகளுக்குமிடையில் காணப்படும் இடைத் தொடர்பு ........................... என அழைக்கப்படும்.

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# வணிகக்கல்வி

32 T II

## மாதிரி வினாத்தாள் - 2

தரம் -13

மூன்று மணித்தியாலம்

கவனிக்க:- ஒவ்வொரு பிரிவிலிருந்தும் குறைந்த பட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

1]

01. வணிகம் என்பது இலாபம் பெறும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பொருளாதாரச் செயற்பாடு ஒன்றாகும். இக்கூற்றுக்கு உடன்படுகிறீரா? காரணம் தருக. (4 புள்ளி)

02. மாலா தனது தோட்டத்தில் பப்பாசிப் பழங்களை உற்பத்தி செய்கின்றார். இவற்றை சங்கர் என்பவர் கொள்வனவு செய்து பழச்சாறு, ஜாம் என்பவற்றைத் தயாரித்து தகரத்தில் அடைத்து விற்பனை செய்து வருகின்றார்.

1) இவ்விடயத்தில் காணப்படும் தொடர்பை விளக்கும் எண்ணக்கரு யாது ? (1 புள்ளி)

2) மேற்கூறிய கூற்றுடன் தொடர்பு படுத்தி

I) முதலாம் நிலை உற்பத்தி

II) இரண்டாம் நிலை உற்பத்தி

III) மூன்றாம் நிலை உற்பத்தி என்பவற்றை விளக்குக. (3 x 1 = 3)

3) I) வணிகங்கள் பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாகும். அந்நோக்கங்களைக் குறிப்பிடுக.

II) வியாபாரத்திற்கு அவசியமான சேவைகள் எவ்வாறு வணிகத்தின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் பங்களிப்புச் செய்யமுடியும் எனச் சுருக்கமாக விளக்குக ? (2x2=4)

4) வணிகம் ஒன்றின் வெற்றிக்கும் தோல்விக்கும் வணிகச் சூழலே காரணமாகின்றது .

I) வணிகச் சூழல் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? (01 புள்ளி )

II) வணிகச் சூழலின் வகைகளைப் பாய்ச்சல் கோட்டுப்படத்தில் காட்டுக. (03 புள்ளி)

5) I) பாடசாலை ஒன்றில் பின்பற்றப்படுகின்ற ஒழுக்க விழுமியங்கள் 4 தருக ? (02 புள்ளி)

II) வணிகத்தின் ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெழுப்பும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் எவை? (2 புள்ளி)

2]

1) அரச வருமானங்களையும் அரச செலவினங்களையும் பாய்ச்சல் கோட்டுப் படம் ஒன்றின் மூலம் காட்டுவதுடன், அரச வருமானத்தையும் செலவினத்தையும் வரையறுக்குக. (4 புள்ளி)

2) நுகர்வோர் பாதுகாப்பின் தேவையானது தற்காலத்தில் அதிகம் உணரப்படும் விடயமாக மாறிவருகின்றது.

அ) நுகர்வோர் பாதுகாப்பு என்பதன் மூலம் கருதப்படுவது யாது? (1 புள்ளி)

ஆ) நுகர்வோர் பாதுகாப்பின் தேவை அதிகரித்தமைகான காரணங்கள் யாவை? (1 புள்ளி)

இ) நுகர்வோர் பாதுகாப்பினை நிறைவேற்றுவதன் ஊடாக பின்வரும் தரப்பினர் அடையும் நன்மைகள் எவை?

A. வணிகம  B. நுகர்வோர் (2 புள்ளி)

3) கம்பனியின் வகைகளை வெளிப்படுத்தும் பாய்ச்சல்கோட்டுப்படம் ஒன்றினை வரைக. (4 புள்ளி)

4) "சமூக பொருளாதார கலாசார மேம்பாட்டிற்காகச் சுயேச்சையாக ஒன்று சேர்ந்து உருவாகும் ஒரு அமைப்பு கூட்டுறவாகும்"

அ) கூட்டுறவுக் கொள்கைகள் யாவை? (2புள்ளி)

ஆ) கூட்டுறவைப் பதிவு செய்யும் நிறுவனம் யாது? (1 புள்ளி)

இ) கூட்டுறவுப் பதிவிற்காகச் சமர்ப்பிக்கப் வேண்டிய ஆவணங்கள் யாவை? (1புள்ளி)

5) இன்று தனியார் மயமாக்கல் செயற்பாடுகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அ) தனியார் மயமாக்கல் இடம்பெறுவதற்கான காரணங்கள் யாவை? (2 புள்ளி)

ஆ) தனியார் மயமாக்கலின் விளைவுகள் யாவை? (2 புள்ளி)

## 03]

ஜேம்ஸ் என்பவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1990ம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்று அங்கு குடியுரிமை பெற்று வாழ்ந்து வந்தவர், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சாதகமான நிலைமையினால் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வந்து குடியேறி வணிகம் ஒன்றை ஆரம்பித்து நடத்தி வருகின்றார். இவரின் வணிகமானது கழிவுப் பொருட்களைக் கொண்டு இயற்கைப் பசளைகளைத் தயாரிக்கும் வணிகமாகும். பிரதேசத்தில் குவிந்துள்ள கழிவுப் பொருட்களும் இயற்கைப் பசளைக்கும் உள்ள கேள்வியும் இவரை இவ் வணிகத்தில் ஈடுபடத்தூண்டியுள்ளது. அத்தோடு இவரின் தந்தையாரும் ஒரு பிரபலமான வணிகராக உள்ளார். மேலும் இவர் அமெரிக்காவில் இருந்த காலத்தில் அந்நாட்டின் அதீத வளர்ச்சியும். முயற்சியாளர்களின் செல்வச் செழிப்பும், அவர்களுக்கு காணப்பட்ட மதிப்பும் மரியாதையும் ஜேம்சுக்கு தானும் ஒரு முயற்சியாளராக வரவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஜேம்சினுடைய வணிகத்திற்குக் காணப்படுகின்ற அதிகரித்த கேள்வி காரணமாக வணிகத்தை விரிவுபடுத்தி வருகின்றார்.

1). அ. முயற்சியாளர் என்னும் பதத்திற்கான வரைவிலக்கணம் யாது? (1 புள்ளி)

ஆ. ஜேம்ஸ் ஒரு முயற்சியாளராக உருவாக்குவதற்கான பின்னணிக் காரணிகளைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

இ. ஜேம்ஸ் மேற்குறித்த வணிகத்தில் ஈடுபட வாய்ப்பாக இருந்த விடயங்கள் எவை? (1 புள்ளி)

2) அ. புழக்கப்பணம் என்பதை வரையறுக்க? (1 புள்ளி)

ஆ. புழக்கப்பணத்தை வகைப்படுத்தி அவற்றினை விளக்குக? (3 புள்ளி)

3) அ. வரவட்டை என்பதனை அறிமுகம் செய்க? (2 புள்ளி)

ஆ. வரவட்டையின் முகப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் குறிப்பிடுக? (2 புள்ளி)

4) அ. சட்டப்படி கைமாற்றத் தக்க சாதனங்களின் வகைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ. கைமாற்றத்தகாத சாதனங்களில் உள்ளடக்கப்படும் விடயங்கள் எவை? (2 புள்ளி)

5) அ. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்புத் தருக.

1. பணத்தின் கொள்ளவு சக்தி
2. வீடுவரை வங்கி
3. இணைய வங்கி
4. காவியின் காசோலை

(4 x1=4புள்ளி)

## 04]

1) ஆயுட் காப்புறுதிக்கும் ஏனைய காப்புறுதிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை? (4 புள்ளி)

2) சிவா கண்டியிலிருந்து விற்பனைக்காக பழங்களைக் கொழும்பிற்கு கொண்டு செல்ல விரும்புகின்றார்?

அ. கண்டியிலிருந்து கொழும்புக்குப் பழங்களைக் கொண்டு செல்லப் பொருத்தமான போக்குவரத்து முறை யாது? (2 புள்ளி)

ஆ. சிவா பழங்களை அனுப்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் எவை? (2 புள்ளி)

3) இலங்கையில் வசிக்கும் விவேக்கும் சுவீடனில் வசிக்கும் வடிவேலும் வியாபாரம் சம்மந்தமாக

தொலைபேசியில் உரையாடும் போது தொடர்பாலில் தடைகள் உள்ளதை உணர்ந்தனர்.

அ) தொடர்பாடலுக்கான தடைகள் யாவை? (2 புள்ளி)

ஆ) சிறுகுறிப்பு எழுதுக?

1. அக இணையம்
2. குரல் அஞ்சல் (2 x1 = 2 புள்ளி)

4) சில்லறை வியாபாரிகள் தமது செயற்பாட்டை அதிகரிக்கத் தற்காலத்தில் கையாளும் நுட்பங்கள் யாவை? (4 புள்ளி)

5) அ. இலத்திரனியல் வணிகம், இலத்திரனியல் வர்த்தகம் எனும் விடயங்களை வேறுபடுத்துக? (2 புள்ளி)

ஆ. இலத்திரனியல் வணிகத்தின் வகைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

## பகுதி II

## 05]

1) தற்காலத்தில் முகாமைத்துவத்தின் தேவையானது அதிகரித்துச் செல்கின்றது.

அ. முகாமைத்துவம் என்பதை வரையறுககுக (2 புள்ளி)

ஆ. முகாமைத்துவத்தின் தேவை அதிகரித்துச் செல்வதற்கான காரணங்கள் எவை, (2 புள்ளி)

2) முகாமைத்துவ பணிகளில் ஒழுங்கமைத்தல் பிரதான பணியாகும்.

அ. ஒழுங்கமைத்தல் என்பதை வரையறுக்குக

ஆ. ஒழுங்கமைத்தல் படிமுறைகளைத் தருக. (2 x 1 = 2புள்ளி)

3) அதிகாரம், பொறுப்பு, வகைகூறல் எனும் பதங்களை வரையறுப்பதுடன் அவற்றிற்கிடையிலான தொடர்பையும் காட்டுக (4 புள்ளி)

4) உற்பத்தியில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்டுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் யாவை? (4 புள்ளி)

5) அ. இட அமைவுத் திட்டமிடல் என்றால் என்ன? (4 புள்ளி)

ஆ. செயல்முறை இட அமைவுத்திட்டத்தின் பிரதான வகைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

## 06]

1) இருப்புக் கட்டுப்படுத்தலுக்கு கணனிச் செயல்த்திட்டத்தினைப் பயன்படுத்துவதிலுள்ள அனுகூலங்களைக் குறிப்பிடுக. (4புள்ளி)

2) பொதியிடலொன்றின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற அடிப்படைத் தொழிற்பாடு பொருளின் பாதுகாப்பாகும். ஆயினும் தற்போது பொதியிடலானது சந்தைப்படுத்தல் கருவியொன்றாகவும் செயற்படுகின்றது. பொதியிடலானது சந்தைப்படுத்தல் கருவியொன்றாகச் செயற்படுகின்ற முறையினை விபரிக்குக. (4 புள்ளி)

3) i) விநியோகம் என்பதனை வரையறை செய்க.

ii) மேம்படுத்தல் கலவையின் பகுதிகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

4) வெவ்வேறு சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களுக்கிடையிலான ஒப்பீட்டினைத் தருக. (4 புள்ளி)

5) அ) உற்பத்திப் பொருளின் இறுதி விலை நிர்ணயத்தில் கருத்தில் கொள்ளப்படும் விலையிடல் உபாயமுறைகளைத் தருக. (2 புள்ளி)

ஆ) விளம்பரத்தின் அடிப்படையான நோக்கங்களைக் கூறுக. (2 புள்ளி)

## 07]

1) அ) காசுப் பாதீடு என்றால் என்ன? (2 புள்ளி)

ஆ) ஒரு கம்பனிக்குக் காசுப் பாதீட்டை தயாரிப்பதால் கிடைக்கின்ற நன்மைகள் யாவை? (2 புள்ளி)

2) அ) பணச் சந்தை என்றால் என்ன? (2 புள்ளி)

ஆ) பணச் சந்தையின் உபசந்தைகள் 4 குறிப்பிடுக? (2 புள்ளி)

3) அ) செயற்திறன் மதிப்பீடு என்பதனால் கருதப்படுவது யாது? (2 புள்ளி)

ஆ) செயற்திறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியருக்கும் நிறுவனத்திற்கும் கிடைக்கும் நன்மைகளை தனித்தனியாகக் குறிப்பிடுக? (2 புள்ளி)

4) அ) ஆட்சேர்ப்பு என்பதனால் கருதப்படுவது யாது? (1 புள்ளி)

ஆ) ஆட்சேர்ப்பின் பிரதான இரு முறைகளையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

இ) மேற்கூறிய ஆட்சேர்ப்பிற்கு பிரசித்தம் செய்யப்படும் முறைகளைத் தனித்தனியாக குறிப்பிடுக. (1 புள்ளி)

5) அ) தொழிற் சங்கம் என்பனால் கருதப்படுவது யாது? (1 புள்ளி)

ஆ) தொழிற்சங்கம் ஒன்றின் நோக்கங்களை விளக்குக? . (3 புள்ளி)

## 08]

1) தரவு (Data) தகவல் (Information) என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

2) அ) தரவுகளை ஒழுங்கமைக்கும் செயற்பாட்டினைத் தெளிவுபடுத்துக.

ஆ) தரவுகள் தயாரிக்கப்படும் நுட்பமுறைகளைக் குறிப்பிடுக. (4புள்ளி)

3) வணிகத்திட்ட அறிக்கையொன்றினைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் பிரதான விடயங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

4) வணிகத்திட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படும் பிரதான விடயங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

5) வணிகத்திட்டமொன்றில் உள்ளடக்கப்படுகின்ற செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடங்குகின்ற விடயங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளி)

# வணிகக்கல்வி- மாதிரி வினாத்தாள் - 2
## புள்ளித்திட்டம்
## பகுதி I,II
### பகுதி I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 2) | 3 | 3) | 4 | 4) | 1 | 5) | 2 |
| 6) | 5 | 7) | 2 | 8) | 4 | 9) | 1 | 10) | 1 |
| 11) | 1 | 12) | 2 | 13) | 3 | 14) | 3 | 15) | 2 |
| 16) | 2 | 17) | 2 | 18) | 4 | 19) | 3 | 20) | 3 |
| 21) | 2 | 22) | 4 | 23) | 3 | 24) | 4 | 25) | 1 |
| 26) | 4 | 27) | 2 | 28) | 3 | 29) | 4 | 30) | 1 |

31) நுகர்வுப்பொருள், கைத்தொழில் பொருள்

32) இறைக்கொள்கை, நாணயக்கொள்கை

33) வணிக விழுமியம்

34) வருமான வரி, கம்பனி வரி. மூலதன இலாபவரி

35) 1. பூரண வேலைவாய்ப்பு மட்டம்
2. பொருளாதார உறுதி
3. நியாய வருமானப்பரம்பல்
4. சிறப்பான சர்வதேச வர்த்தகம்
5. முறையான பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்
6. சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல்

36) 1. வருமானவரித் திணைக்களம்
2. மதுவரித் திணைக்களம்
3. சுங்கத் திணைக்களம்
4. மோட்டார் வாகனத் திணைக்களம்

37) அ) அவதிக்கட்டுப்பாட்டுப் புள்ளி
ஆ) JIT முகாமைத்துவம்
இ) கடவுச்சீட்டு நுழைவுச்சீட்டு

38) விமானச் சீட்டு

39) அ) தலைமைத்துவம், ஊக்கப்படுத்தல், தொடர்பாடல்
ஆ) மையப்படுத்தல்

40) அ) எண்ணக்கருவாக்கத்திறன், தொழினுட்பத்திறன்
ஆ) கட்டுப்பாட்டு விலாசம் / கட்டுப்பாட்டுத்துணை

41) 1) பிரச்சினைகளை இனம் காணல்
2) மாற்றுத் தீர்வுகளை கட்டியெழுப்பல்

3) மாற்று வழிகளை மதிப்பீடு செய்தல்
4) சிறந்த மாற்று வழியைத் தெரிவு செய்தல்
5) செயற்படுத்தல்

42) அ) வேலை உற்பத்தி
ஆ) 1) பாரியளவான மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதனால் கூடுதலான கழிவு கிடைக்கும்
2) பொருளின் தொகுதிக்குத் தொகுதி உற்பத்தி வெளியீட்டினை மாற்ற முடியுமாயிருத்தல்.
3) அலகுக் கிரயம் குறைவடைதல்.

43) சரியானவிலை
சரியான அளவு
சரியான தரம்
சரியான நேரம்
சரியான இடம்

44) 1) தர உறுதி
2) பூச்சியவழு
3) தரவட்டம்
4) தரநியமம்
5) மொத்த தர முகாமைத்துவம்
6) புள்ளி விபர செயன்முறைக்கட்டுப்பாடு

45) 1) தொடர்புச் சந்தைப்படுத்தல்
2) ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல்
3) அகச் சந்தைப்படுத்தல்
4) சமூகப் பொறுப்பு சந்தைப்படுத்தல்

46) உற்பத்தி
பொருள்
இடம்
மேம்படுத்தல்
மக்கள்
செயன்முறை
பௌதீக ஆதாரம்

47) 1) நடைமுறை விகிதம்
2) திரவ விகிதம்

48) 1) சாதாரண பங்கு
2) முன்னுரிமைப்பங்கு
3) பங்கு ஆணைப்பத்திரம்
4) கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக்கடன்
5) அரச கடன் பிணைப்பத்திரம்

49) 1) தொழி அறிவித்தல்
2) திறன் அட்டவணை
3) அகத்தேயுள்ள ஊழியர்களை அறிமுகப்படுத்தல்
4) பதிலாள் திட்டம்

50) அ) வணிகத்திட்டம்
ஆ) அமைப்பு வரைபடம்

## பகுதி I

01. 1) ஆம் (1 புள்ளி)

வணிகத்துடன் இணைந்த செயற்பாட்டுச் சக்தி இலாபம் அல்லது இலாப எதிர்பார்ப்பாகும். வணிகங்கள் இலாபத்தை வலியுறுத்துவதனால் இலாப நோக்கில் மேற்கொள்ளப்படும் பொருளாதாரச் செயற்பாடு எனப்படும்.

இலாபத்தை வலியுறுத்தாத சேவை நோக்கம் கொண்ட நிறுவனங்களும் சேவையை வழங்குவதற்கு குறித்த அளவு இலாபத்தை உழைக்க வேண்டியுள்ளது.

*(விளக்கம் 3 புள்ளி)*

2) (i) உற்பத்திச் சங்கில் *(1புள்ளி)*

(ii) 1ம் நிலை உற்பத்தி - இயற்கையிலிருந்து பொருட்களை அகழ்ந்தெடுத்து அவ்வாறே நுகர்வுக்குப் பயன்படுத்தல். இங்கு பப்பாசிப் பழங்களை உற்பத்தி செய்தல் இதற்குள் அடங்கும்

*(1 புள்ளி)*

2ம் நிலை உற்பத்தி - முதலாம் நிலை உற்பத்தியிலிருந்து பெறப்பட்டவற்றை மாற்றத்திற்குட்படுத்தி நுகர்தல். இங்கு பப்பாசிப் பழங்களிலிருந்து பழச்சாறு தயாரித்தல்

*(1 புள்ளி)*

3ம் நிலை உற்பத்தி -முதலாம் நிலை, . ரண்டாம் நிலை வணிகத்திற்கு உதவுகின்ற பல்வேறு சேவைகள் - இங்கு பழச்சாறு விற்பனை

*(1 புள்ளி)*

3) (i) சந்தையில் நிலைத்திருத்தல்
இலாபத்தை உச்சப்படுத்தல்
விற்பனையை உச்சப்படுத்தல்
சந்தைப் பங்கினை உச்சப்படுத்தல்
ஊழியர் நலனை உச்சப்படுத்தல்
பங்கின் விலையை உச்சப்படுத்தல்

(4x1/2 = 2 புள்ளி)


(ii) வங்கிகள் - வணிகங்களுக்கு நிதியீட்டம் செய்தல், நுகர்வோருக்கும் வணிகருக்கும் கடன் வழங்கல்
காப்புறுதி - வணிகங்களின் இடர்களுக்குப் பாதுகாப்பளிப்பதன் மூலம்
போக்குவரத்து - பொருட்களைத் தேவையான நேரத்தில் கிடைக்கச் செய்தலும், நுகர்வோர், வியாபாரி, உற்பத்தியாளர்களுக்கிடையிலான இடைத்தொடர்புகளைப் பேணுதலும்.
தொடர்பாடல் - நுகர்வோருக்கு அறிவூட்டலுக்கும், மேம்படுத்தலுக்கும் உதவுகிறது.

*( 2 புள்ளி)*

4) (i) வணிக நடவடிக்கைகளில் தாக்கங்களை உருவாக்குகின்ற காரணிகள் செயற்படும் சூழலினை வணிகச் சூழல் எனலாம்.

*(1 புள்ளி)*

(ii)




*(3 புள்ளி)*


5) (i) பாடசாலைக்குரிய உரிய சீருடையுடன் செல்லுதல்
உரிய நேரத்திற்கு பாடசாலைக்குச் செல்லுதல்
பாடசாலைக் கீதம், பாடசாலைக் கொடி என்பவற்றுக்கு மதிப்பளித்தல்
அதிபர், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல்
பாடசாலையின் ஏனைய ஒழுக்க விழுமியங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தல்

(4x1/2 = 2 புள்ளி)

(ii) வணிகம்
வாடிக்கையாளர்
ஊழியர்
போட்டியாளர்
சமூக கலாசாரம்
அமைப்பு கலாசாரம்
நடைமுறைக்கு சாத்தியப்படக் கூடியது

(4x1/2 = 2 புள்ளி)

02) (i)




(2புள்ளி)

அரச வருமானம்
பொருளாதாரம் ஒன்றிற்கு நிதியாண்டு ஒன்றினுள் கிடைக்கப்பெறுகின்ற வருமானங்களாகும்
(1 புள்ளி)

செலவினம்
அரசு ஒன்று அன்றாடக் கருமங்களை மேற்கொள்வதற்காகவும், பொருளாதார அபிவிருத்திக் கருமங்களுக்காகவும் குறித்த ஆண்டினுள் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளாகும்

(1 புள்ளி)

(ii)

அ) நுகர்வோர் செலுத்துகின்ற பணத்திற்குப் போதுமான அளவு திருப்பதியினைப் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்தும் முகமாக வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு ஆகும்.

(1 புள்ளி)

ஆ) சந்தை விரிவாக்கம்
போட்டி நிலை
சுதந்திர வர்த்தகம்
பூகோளமயம்

(1 புள்ளி)


இ) A. வணிகர் -
விற்பனை அதிகரித்து இலாபம் அதிகரிக்கும்
ஒரே தரத்திற்கு அமைய உற்பத்தி நடைபெறுவதால் செலவு குறையும்
நுகர்வோரின் நம்பிக்கையினைப் பெற்றுக்கொள்ளல்

(இரு விடைக்கு 01 புள்ளி)

B நுகர்வோர்
செலுத்தும் பணத்திற்குத் திருப்பதியினைப் பெற்றுக்கொள்ளல்
வியாபார மோசடிகளுக்கு எதிராக சட்டப் பாதுகாப்பினைப் பெறல்
நுகர்வோர் உடல் நலன் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல்

*(இரு விடைக்கு 01 புள்ளி)*

(iii)




*(04 புள்ளி)*

(iv)

(அ) சுயேற்சையான திறந்த அங்கத்துவம்
ஜனநாயக அங்கத்துவக் கட்டுப்பாடு
அங்கத்தவரின் பொருளாதார ஈடுபாடு
சுதந்திர உரிமை
கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்
சமூகம் தொடர்பான அக்கறை
பிரதேச, தேசிய, சர்வதேச என்ற முறைகளில் கூட்டுறவுச் சங்கங்களிடையேயான ஒத்துழைப்பு

*(நான்கு விடைகளுக்கு 02 புள்ளி)*

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களம் *(01 புள்ளி)*

(இ) பதிவிற்கான விண்ணப்பம்
உப விதிகளின் இரு பிரதி
முன்மொழியப்பட்ட பொருளாதாரக் கருமம்
சங்கத்தை பதிவு செய்வதற்கான பொதுச்சபை கூட்ட தீர்மான அறிக்கையும் வரவு விபரங்களும்
சங்கம் அமைந்துள்ள இடத்தை காட்டும் வரைபடம்
அங்கத்தவர்களின் அங்கத்துவப் பணம் செலுத்தியமையை உறுதிப்படுத்தும் செயற்குழுச் சான்று

*(எதேனும் நான்கிற்கு 02 புள்ளி)*

(V) (அ)

அரச துறை வணிகங்கள் செயற்றிறன் குறைந்தவையாகக் காணப்படல்
அரச சட்டங்கள் விதிகளுக்கு அமைவாக அரச வணிகங்கள் கட்டுப்படுத்தப்படல்
தேவையற்ற அரச தலையீடு
உரிமையை விரிவாக்கம் செய்தல்
பொறுப்பு அதிகரித்தல்

(எதேனும் நான்கிற்கு 02 புள்ளி)

(ஆ)

இலாப நோக்கம் முக்கியத்துவம் பெறல்
நுகர்வோரை மையமாகக் கொண்டு கருமாற்றல்
முதலீடு அதிகரித்தல்
நவீன பொருட்கள் சேவைகள் வழங்கப்படல்
சில சந்தர்ப்பங்களில் பொருட்கள் சேவைகளின் விலை வீழ்ச்சியடைதல்

(எதேனும் நான்கிற்கு 02 புள்ளி)

03) 1) அ) நடைமுறையிலுள்ள பொருளாதார முறையினை மாற்றி புதிய மூலப்பொருட்களைத் தேடி அல்லது புதிய ஒழுங்கமைப்பு முறையொன்றை உருவாக்கி புதிய பொருட்கள் சேவைகளை அறிமுகப் படுத்துகின்ற நபர் முயற்சியாளர் ஆவார்.

(1 புள்ளி)

ஆ) அமெரிக்காவின் அதீத வளர்ச்சி
அந்நாட்டில் முயற்சியாளர்களுக்கிருந்த மதிப்பு மரியாதை
அமெரிக்க நாட்டில் முயற்சியாளர்களின் செல்வச் செழிப்பு
அவரின் தந்தை வணிகராக இருந்தமை
கூய ஆக்கத்தில் ஈடுபடுதவற்கான ஆர்வம்

(2 புள்ளி)

இ) பிரதேசத்தில் குவிந்து காணப்பட்டிருந்த கழிவுப் பொருட்கள்
இயற்கைப் பசளைகளுக்கான கேள்வி

(1புள்ளி)

(ii) (அ) பொது மக்களினால் புழக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும், மத்தியவங்கியால் வெளியிடப்படும் தாள் உலோக நாணயங்கள் (1 புள்ளி)

(ஆ) வரையறையுள்ள சட்டவிதிப்பணம் - ஒரு ரூபா அல்லது அதை விடக் குறைவான சில்லறை நாணயங்கள் (1 1/2 புள்ளி)
வரையற்ற சட்ட விதிப்பணம் - ஒரு ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தாள் குற்றி நாணயங்கள் (1 1/2 புள்ளி)

(iii) (அ) கொள்வனவின் போதான கொடுப்பனவுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு வகை பிளாஸ்டிக் அட்டை வரவு அட்டை ஆகும் (1 புள்ளி)

(ஆ) வழங்கிய வங்கிக்குரிய குறியீடு
முப்பரிமாணப்படம்
வரவட்டை இலக்கம்
வரவட்டை வியாபாரக்குறி
காலம் முடிவடையும் திகதி
வரவட்டைக்குரியவரின் பெயர்

(3 புள்ளி)

(iv)

(அ) வாக்குறுதிச் சீட்டு
மாற்றுண்டியல்
காசோலை

(ஆ) காசுக்கட்டளை, நிலையான வைப்புச்சான்று, பங்குச்சான்று

(v)

1. பணத்தின் கொள்வனவு சக்தி - ஓர் அலகு பணத்தினைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு

(1 புள்ளி)

2. வீடு வரை வங்கி - வாடிக்கையாளரின் இடத்திற்கே சென்று வங்கிச் சேவைகளை வழங்கும் முறை

3. இணைய வங்கி - இணையத்தினூடாகத் தொடர்பு கொண்டு வங்கிகளில் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவை இதுவாகும் (1 புள்ளி)

4. காவியின் காசோலை - காசோலையை வங்கிக் கருமப்பீடத்தில் சமர்ப்பிக்கும் எவரும் பணமாகக் கூடிய வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ள காசோலைகள் (1 புள்ளி)

04)

(i)

| ஆயுட் காப்புறுதி | ஏனைய காப்புறுதி |
|---|---|
| இழப்பீடு நிச்சயம் | இழப்பீடு நிச்சயமில்லை |
| இழப்பீட்டு தத்துவம் பொருந்தாது | இழப்பீட்டு தத்துவம் பொருந்தும் |
| ஒப்பந்தத்தை பயன்படுத்தி கடன் பெற முடியும் | கடன் பெற முடியாது |
| பிற நலன்கள் வழங்கப்படும் | வழங்கப்படுவதில்லை |

(4 புள்ளி)

(ii)

(அ) தரைப்போக்குவரத்து
உதாரணம் - லொறி

(2 புள்ளி)

(ஆ) பாதுகாப்பு
விரைவு
பழங்களின் அளவு
தூரம்

(2 புள்ளி)

(iii)

(அ) தொடர்பாடல் முறை
அமைப்பின் குறைபாடு
பௌதீகத்தன்மை
மனப்பாங்கின் குறைபாடு
மொழி கலாசார வேறுபாடுகள்

(2 புள்ளி)

(ஆ) 1- அக இணையம்
வெப் தொழில் நுட்பத்தையும் இணையத் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு நிறுவனம் ஒன்றினுள் விரிவான தொடர்புகளை இனையத்தினூடாக ஏற்படுத்திக் கொள்ளல் அக இணையமாகும்.

2- குரல் அஞ்சல்

அனுப்புவரினால்தொலைபேசியில் வாய்மொழி மூலம் வழங்கப்படுகின்ற செய்தியை வலைப்பின்னலூடாக வெளிப்படுத்தி பின்னர் பெற்றுக்கொள்ளும் நோக்கில் களஞ்சியப் படுத்திப் பயன்படுத்தும் ஒலிப்பதிவு செயற்பாட்டு முறை குரல் அஞ்சல் ஆகும்

(iv) மொத்த வியாபார கருமங்களையும் பொறுப்பேற்றல்

சிறப்புச் சந்தை (பாரியளவாக வியாபாரங்களை மேற்கொள்ளல்)

சேவை வழங்கலுடன் சில்லறை வியாபாரத்தை இணைத்தல்

நவீன முகாமைத்துவ நுட்ப முறைகளைப் பயன்படுத்தல்

தேவைக்கேற்ப இருப்பைப் பேணல்

(நான்கிற்கு 4 புள்ளி)

(v)

(அ) சர்வதேச இலத்திரனியல் வலையமைப்பை பயன்படுத்தி உற்பத்தி வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் இலத்திரனியல் வணிகம் எனப்படும். மாறாக இலத்திரனிய வல்லையமைப்பை பயன்படுத்தி சந்தை வாய்ப்புக்களைத் தோற்றுவித்து பொருட்களின் கொள்வனவு விற்பனை நடவடிக்கைகள் இடம் பெறுதல் இலத்திரனியல் வர்த்தகம் ஆகும்.

(2 புள்ளி)

(ஆ) வணிகத்திலிருந்து வணிகத்திற்கு (B2B)

வணிகத்திலிருந்து வாடிக்கையாளருக்கு (B2C)

வாடிக்கையாளரிடமிருந்து வாடிக்கையாளருக்கு (C2C)

அரசின் மூலம் மக்களுக்கு (G2C)

(2 புள்ளி)

## பகுதி II

05) 01.

(அ) அமைப்பு ஒன்றின் நோக்கங்களை பயனுறுதியாக, அடைவதற்கு வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனாகக் கையாளுதல் முகாமைத்துவம் என சுருக்கமாக வரையறுக்கப்படுகின்றது. (ஏனை வரைவிலக்கணங்களையும் கருத்தில் கொள்க.)

(ஆ)
1. நிறுவனமொன்றின் நோக்கங்கள் விளைதிறனாக அடைவதனை உறுதிப்படுத்தல்.
2. தவறுகளினை பூச்சிய நிலைக்கு இட்டுச் செல்லுதல்
3. வரையறுக்கப்பட்ட, வளங்களினைக் கொண்டு உச்ச பயனை அடைதல்
4. நிச்சயமற்ற சந்தைச் சவால்களினை வணிகங்கள் திறமையாக எதிர் கொள்வதற்கு
5. ஊழியர்கள் மத்தியில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அதிகரித்து வருவதனால் அவர்களைத் திறமையாக கையாள வேண்டி இருத்தல்.

(நான்குகாரணிகள் மாணவர் குறிப்பிட்டு இருப்பின் 2 புள்ளி வழங்குக)

02.

(அ) அமைப்பு ஒன்றின் நோக்கங்களை பயனுறுதியாக அடைவதற்கு வரையறுக்கப்பட்ட வளங்களை எவ்வாறு கையாள்வது என்பதனை நிச்சயிக்கும் கருமம் ஒழுங்கமைத்தல் எனப்படும்.

(ஆ) நடவடிக்கைகளினை இனம் காணல்
↓
வேலைப்பகிர்வு
↓
திணைக்களப்படுத்தல்
↓
அதிகாரம், பொறுப்புக்களினை கையளித்தல் (Authority Delectation)
↓
ஒன்றிணைத்தல் (Co-ordination)

03. தீர்மானம், எடுக்கவும் வளங்களை கையாளவும் ஊழியர்களினை மேம்படுத்தவும் கட்டுப்படுத்தவும் பதவி வழி உத்தியோகத்தர் ஒருவருக்குள்ள சட்ட ரீதியான பலம் அதிகாரம் எனப்படும்.
பதவிவழி உத்தியோகத்தர் பதிவியின் நிமிர்த்தம் கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய, கடமைகள் பொறுப்பு எனப்படுகிறது.
அதிகாரம் பொறுப்புக்களினைப் பெற்றுக் கொண்டவர்கள் அவற்றை வழங்கியோருக்கு தமது நடவடிக்கை தொடர்பாக வகை சொல்ல வேண்டிய தன்மை பதிலளிக்கும் பொறுப்பு எனப்படுகிறது.
தொடர்பு தீர்மானம் எடுப்பதற்கு ஒருவருக்குள்ள உரிமை அதிகாரம் ஆகும். அதிகாரம் பெற்றவர்கள் நிறைவேற்ற வேண்டிய பணிகள் பொறுப்புக்கள் ஆகும். பொறுப்புக்களினை நிறைவேற்றம் போது உருவாகும் விளைவுகளிற்கு பதிலளித்தல் வகை கூறல் எனப்படுகின்றது.

04.

01. சூழல் தொகுதிகள் மாசடைதல்
02. ஊழியத்திற்கான, தொழில் வாய்ப்புக்கள் குறைவடைதல்
03. மனிதர்களிற்கு இடையிலான தொடர்புகள் குறைவடைதல்
04. பாரம்பரிய உற்பத்தி நுட்பங்களை இழக்க வேண்டி இருத்தல்

05. (அ) வினைத்திறனான உற்பத்திச் செயல்முறையினை உருவாக்குவதற்காக வேலைமத்திய நிலையம், பொருட்கள், கருவிகள், துணைச் சேவைகள் என்பவற்றை முற்கூட்டியே நிர்ணயித்தல் இட அமைவு திட்டமிடல் ஆகும்.

(ஆ) செயன்முறை தளவமைப்பு
உற்பத்திப் பொருள் தளவமைப்பு
கலத் தளவமைப்பு
நிலையான இட தளவமைப்பு

06. (i) கணினிச் செயல்திட்டத்தினைப் பயன்படுத்துவதனால் பின்வரும் அனுகூலங்களைப் பெறலாம். அவையாவன.
சரக்கிருப்புக் கட்டுப்பாடு செயற்திறனடைதல்
மிகவும் திருத்தமான தன்மை
சரக்கு பெறுதல் விநியோகித்தல் உடனடியாக அப்போதே பதிவு செய்யப்படுதல்
தேவையான எந்த வேளையிலும் சரக்குகள் தொடர்பான அறிக்கைகளைப் பெறமுடிதல்
நிறுவனத்திற்குப் பொருத்தமான முறையில் பயன்படுத்தக்கூடிய நெகிழுந்தன்மை
(விரும்பிய நான்கிற்கு 4 புள்ளி)

(ii)

1. உற்பத்திப் பொருட்களை இலகுவாக இனங்காண முடிதல்
2. உற்பத்திப் பொருள் தொடர்பான தகவல்களை வழங்க முடிதல்
3. மேம்படுத்தல் கருவியொன்றாக பயன்படுத்த முடிதல்

4. உற்பத்திப் பொருளுக்கு கவர்ச்சிகரமான தன்மையினைப் பெற்றுக்கொடுத்தல்

5. களஞ்சியப்படுத்தல், காட்சிப்படுத்தல், போக்குவரத்து என்பவற்றிற்கு இலகு தன்மையை ஏற்படுத்தல்

(விரும்பிய நான்கிற்கு 4 புள்ளி)

(iii)

(அ) பொருள் அல்லது சேவையொன்று இலக்கு நுகர்வோரை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்குரிய செயல்முறையே விநியோகம் எனப்படும்.

(ஆ) (i) விளம்பரம் செய்தல்
(ii) விற்பனை மேம்படுத்தல்
(iii) மக்கள் தொடர்பும் பிரசித்தமும்
(iv) நிகழ்வும் அனுபவமும்
(vii) தனிப்பட்ட விற்பனை
(viii) நேரடிச்சந்தைப்படுத்தல்.

(இவ்வாறு இருப்பின் 2 புள்ளி)

(iv)

| எண்ணக்கரு | தொடக்க நிலையம் | அக்கறை | உபாய முறை | இறுதி இலக்கு |
|---|---|---|---|---|
| உற்பத்தி செயல் | தொழிற்சாலை | உற்பத்தி ஆக்கச்செயல் (பொருள் +சேவை) | உற்பத்தி செயற்திறனை உயர்த்துதல் கிரயத்தை இழிவுபடுத்தல் பரந்தளவிலான விநியோகம் | உற்பத்தி அளவை அதிகரிப்பதன் மூலம் இலாபத்தை அதிகரித்தல் |
| உற்பத்தி பொருள் | தொழிற்சாலை | உற்பத்தி | தரத்தை உயர்த்தல். நவீன உற்பத்தியை சமர்ப்பித்தல் | உயர்ந்த தரத்திலான பொருள்களை வழங்குவதன் மூலம் இலாபத்தை உச்சமாக்குதல் |
| விற்பனை | தொழிற்சாலை | வாடிக்கையாளர் தேவைகளும் விருப்பங்களும் | விற்பனையை அதிகரித்தலும் சந்தைப்படுத்தல் மேம்மாடும் | விற்பனையை அதிகரித்து இலாபத்தை உச்சமாக்குதல் |
| சந்தைப்படுத்தல் | இலக்கு சந்தை | அக்கறை கொண்ட தரப்பினருடைய எதிர்பார்ப்பும் சமூக எதிர்பார்ப்பும் | ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் உபாயங்கள் | வாடிக்கையாளர் திருப்தியூடாக இலாப நோக்கத்தையடைதல் |
| முழுமையான சந்தைப்படுத்தல் | சந்தை | | தொடர்புறும் ஒருங்கிணைந்த சமூகப் பொறுப்புச் சந்தைப்படுத்தல் | அக்கறை கொண்ட வர்களுக்கு நலன்களை அளிப்பதன் மூலம் வணிகத்தின் இலக்கை அடைதல் |

(v) (அ) 1. உளவியல் விலை
2. பூகோள விலை
3. மேம்படுத்தல் விலை
4. பேதப்படுத்தல் விலை
5. பொருள் கலவை விலை

(ஆ) 1. அறிவு வழங்குதல்
2. தூண்டுதல்
3. ஞாபமூட்டுதல்
4. வலுவூட்டுதல்

07. (I) அ) குறிப்பிட்ட ஒரு எதிர்காலப்பகுதிக்கு எதிர்வு கூறப்பட்ட காசு வருமானங்களையும் கொடுப்பனவுகளையும் வெளிப்படுத்தும் கூற்று

ஆ) 1. எதிர்காலத்தில் காசு மிகை ஒன்று ஏற்படுமாயின் அதனை முன்கூட்டியே அறிய முடிவதால் அப்பணத்தினை வினைத்திறனாக முதலீடு செய்ய முடியுமாயிருத்தல்

2. எதிர்காலத்தில் காசுக்குறைவொன்று எற்படுமாயின் அதனை முன்கூட்டியே அறிந்து அதற்கு முகம் கொடுக்கத் தயாராக முடியும்.

3. உண்மையான பணத்தினது செயற்பாட்டினை ஒப்பிடுவதன் மூலம் காசு தொடர்பான திட்டமிடலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் இலகுவாகும்.

(ii)

அ) குறுங்கால நிதியினைப் பரிமாற்றிக் கொள்ளும் சந்தை பணச்சந்தை எனப்படும்.

ஆ) வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் சந்தை
உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை
திறைசேரி உண்டியல் சந்தை
வணிகப்பத்திரச் சந்தை
வணிக வங்கிகளின் குறுங்கால கொடுக்கல் வாங்கல் சந்தை

(iii)

அ) நிறுவனம் ஒன்று ஊழியரிடமிருந்து எதிர்பாக்கப்படும் திறனுக்கமைய ஊழியரின் செயற்பாடு காணப்படுகிறதா இல்லையா என்பதான மதிப்பீடு செய்தல்

<u>ஊழியர்</u>

ஆ) ஊழியர் ஊக்கப்படுத்தல் உயர்வடைதல்
ஊழியர் வினைத்திறன் அதிகரித்தல்
பயிற்சித் தேவைகளை அறிந்து கொள்ளலாம்
சம்பள உயர்ச்சி, பதவியுயர்வு என்பவற்றைத் தீர்மானிக்கலாம்.
திறமையான ஊழியர் மேலும் ஊக்குவிக்கப்படுவர்
குறை, நிறைகளை கண்டறிந்துஅவற்றை நிவர்த்தி செய்யலாம்.

<u>நிறுவனம்</u>

பதவியுயர்வு, இடமாற்றம் பதவி நீக்கம் என்பவற்றுக்கு பொருத்தமான ஊழியரை அறியலாம்.
வினைத்திறன் வாய்ந்த ஊழியரை அறிந்து கொள்ளலாம்.
பயிற்சி. அபிருத்தித் திட்டங்களை வடிவமைக்கலாம்.
ஒழுக்காற்று நடைமுறைகளை எடுப்பதற்கு
ஊழியர் தொகுதியை தூண்டச் செய்யலாம்.
சம்பள உயர்வு. சம்பளக் கொடுப்பனவு பற்றி தீர்மானிக்கலாம்.
கிரயத்தை குறைக்க உதவும்

(iv) அ) நிறுவனப் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானவரை விண்ணப்பிக்கத் தூண்டும் செயற்பாடு ஆட்சேர்ப்பு எனப்படும்.

ஆ) அக ஆட்சேர்ப்பு     புற ஆட்சேர்ப்பு

இ) அக ஆட்சேர்ப்பு தொழில் அறிவித்தல்
திறன் அட்டவணை     அக இணையம்
விதந்துரைப்பவர் பட்டியல்     பதவி உயர்வு /மரபுரிமை திட்டம்

(எ) <u>புற ஆட்சேர்ப்பு</u>

ஊடக விளம்பரம்
கல்வி தொழில்சார் நிறுவனங்கள் மூலம்
இணையம் மூலம்
கடந்தகால ஊழியத்தைப் பயன்படுத்தல்
தொழில் முகவர் நிலையங்கள் மூலம்
தொழில் சந்தை

*(4 விடயம் 1 புள்ளி)*

(v) அ) தொழில் உரிமைகளைப் பெற்று கொள்வதற்கும் அதனைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் ஏதாவதொரு தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழில் கொள்வோர் அல்லது ஊழியர் குழு தன்னிச்சையாக உருவாக்கிக்கொள்ளும் அமைப்பு ஆகும்.

(ஆ) நியாயமான சம்பளத்தினையும் சிறந்த வேலைச் சூழல் ஒன்றையும் பெற்றுக் கொடுத்தல்
வேலை செய்யும் நேரத்தைக் குறைத்தல்
தொழில் நலன்களையும் தொழில் ரீதியான இடர்களிலிருந்தும் பாதுகாப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.
நிறுவனத்தின் முகாமைத்துவ தீர்மானங்களில் கலந்து கொள்ளல்
தொழில் பாதுகாப்பினை உருவாக்கி கொடுத்தல்
கல்வியினையும் பயிற்சியினையும் பெற்றுக் கொடுத்தல்

08. 1. பௌதீக நிகழ்வுகள் அல்லது வணிகக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விடயங்களை விபரிக்கும் அடிப்படை விடயம் அல்லது விளக்கம் தரவு ஆகும். *01 புள்ளி*
இறுதிப்பயன்பாட்டாளர்களால் விளங்கிக் கொள்ள கூடியதும் பயன்படுத்தக் கூடியதுமான முறையில் தயாரிக்கப்பட்ட தரவுகள் தகவல் எனப்படும். *01 புள்ளி*

| <u>தரவு</u> | <u>தகவல்</u> |
|---|---|
| உள்ளீடு | வெளியீடு |
| தீர்மானம் எடுக்கப் பயன்படுத்த முடியாது | தீர்மானம் எடுக்கப்பயன்படுத்த முடியும் |
| பெறுமதி குறைவு | பெறுமதி அதிகம் |

*(2x1=2 புள்ளி)*

2. அ). தரவு ⟶ செயன்முறை ⟶ தகவல் *(2x1=2 புள்ளி)*

ஆ) மனிதவலு
இலத்திரனியல் பொறிமுறை
பகுதிக் கையளிக்கும் முறை
இலத்திரனியல் தரவு தயாரித்தல்

*(4x1/2=2 புள்ளி)*

3. கவர்ச்சிகரமானதாக இருத்தல் வேண்டும்.
உள்ளடக்கத்தினைச் சரியான பக்க இலக்கத்துடன் சிறப்பாக முன்வைத்தல் வேண்டும்.
நல்ல காரணிகளைப் பயன்படுத்தி பதிப்பு செய்ய வேண்டும்.
முக்கியமான தகவல்களை நெறிப்படுத்திக் காட்டல்
அனைத்துப் பிரதான தலைப்புக்களையும் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல்.

*(4x1=42 புள்ளி)*

4. நிறைவேற்றுச் சுருக்கம்
வணிக விபரம்
சந்தைப்படுத்தல் திட்டம்
மனிதவளத்திட்டம்
நிதித்திட்டம்
செயற்பாட்டுத்திட்டம்

*(முழுமைக்கு 4 புள்ளி)*

5. உற்பத்தித்திட்டம்
இயந்திர உபகரணங்களின் தேவை
மூலப்பொருட்களின் தேவை
உற்பத்தி பொது மேந்தலைக் கிரயம்
மொத்த உற்பத்திக்கான அலகுக் கிரயம்
தொழிற்சாலையின் இட அமைவுத் திட்டம்
கழிவுப் பொருட்களை வெளியேற்றலும் சூழலின் தாக்கமும்

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# வணிகக்கல்வி | 32 | T | I |

## மாதிரி வினாத்தாள் - 3

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

கவனிக்க:

* எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

* இலக்கம் 1 - 30 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிக் கோட்டில் இடுக.

01. சமகாலத்தில் மனித தேவைகள் சந்தை ஒன்றில் பெற்றுக்கொள்ளப்படும் வெளியீடுகளினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சந்தை ஒன்றில் இருந்து தேவைகளினை நிறைவு செய்வது.

1. நேரில் உற்பத்தி 2) வர்த்தகம் 3) பரிமாற்றம்

4) பண்டமாற்று 5) சுய உற்பத்தி (........)

02. முதனிலை உற்பத்திகளைச் சரியாகக் காட்டும் தொகுதி

1) விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, மொத்த சில்லறை வர்த்தகம்.

2) விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, சுரங்கமறுத்தலும் அகழ்வும்

3) சுரங்கமும் அகழ்வும், உற்பத்தித் தொழில், போக்குவரத்தும் தொடர்பாடலும், மின்சாரம் வாயு நீர்

4) சேவை, விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு

5) வேளாண்மை, காட்டுத்தொழில், சுரங்கமும் அகழ்வும், தயாரித்தற்தொழில் (........)

03. தங்கத்தின் விலை அதிகரிப்பின் காரணமாக இரத்தினக்கல்லுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இரத்தினபுரியில் வாழும் பாலித என்பவர் இரத்தினக்கற்களை வாங்கி விற்கும் வணிகச் செயற்பாட்டில் ஈடுபடத் தீர்மானித்துள்ளார். இதனோடு தொடர்புடைய வணிகச் சூழல்கள்

1) அரசியல் சட்டச் சூழல் / பொருளாதாரச் சூழல் / தொழில்நுட்பச் சூழல்

2) பூகோளச்சூழல் / இயற்கைச் சூழல் / பொருளாதாரச் சூழல்

3) இயற்கைச் சூழல் / பொருளாதாரச் சூழல் / தொழல்நுட்பச் சூழல்

4) இயற்கைச் சூழல் / பொருளாதாரச் சூழல் / அரசியல் சட்டச்சூழல்

5) இயற்கைச் சூழல் / பொருளாதாரச் சூழல் / மக்கட்சூழல் (........)

04. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாகப் புதிய பல உற்பத்திகள் நாள்தோறும் சந்தைக்குள் பிரவேசிப்பதனை காணமுடிகின்றது. புதிதாச் சந்தைக்ப் பிரவேசிக்கும் பொருள் ஆரம்பத்தில் நுகர்வோர் பார்வையில் எத்தகைய பொருளாக் காணப்படும்.

1) நுகர்வுப் பண்டம் 2) நாடாப்பண்டம் 3) சிறப்புப் பண்டம்

4) கடைப்பண்டம் 5) கைத்தொழில் பண்டம் (.........)

05. சந்தைப்படுத்தல் தொடர்பான ஓர் ஒழுக்க நெறியாக அமைவது
1) வணிகங்கள் பின்பற்றும் போட்டி விரோத நடவடிக்கைகள்
2) முறைகேடான விளம்பர முறைகள்
3) போட்டி விலைத் தந்திரோபாயங்கள்
4) நுகர்வோரை ஏமாற்றும் தகவல்களை வழங்குதல்
5) நியாயமான விலையிடல் முறைகளைப் பின்பற்றுதல் (........)

06. கணேஸ் ஆடைகளை ஏற்றுமதி செய்யும் நிறுவனமொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளார். இதற்காகத் தனது கட்டடத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்தியுள்ளார். இக்கட்டடத்திற்கு மின்சார வசதி இல்லாததால் இலங்கை மின்சாரசபை அவ்வசதிகளை ஏற்படுத்தியுள்ளதுடன் கணேஸின் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக மக்கள் வங்கி கடனை வழங்க முன்வந்துள்ளது. மேலும் கணேஸின் நிறுவனம் அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் சலுசல நிறுவனத்தின் கிளையும் உருவாகியுள்ளது. மேற்குறித்த கணேஸின் நிறுவனத்திற்கு அரசாங்கம் செல்வாக்குச் செலுத்துகின்ற முறைகள்
1) உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் / கொள்கைகளை உருவாக்கல் / சட்டங்களை விதித்தல்
2) போட்டியாளராக இருத்தல் / கொள்கைகளை உருவாக்கல் / சட்டதிட்டங்களை விதித்தல்
3) உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் / போட்டியாளராக இருத்தல் / ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
4) கொள்கைகளை உருவாக்கல் / வரி அறவீட்டாளராக இருத்தல் / ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல்.
5) ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல் / வரிஅறவீட்டாளராக இருத்தல் / கொள்வனவுகளை உருவாக்குதல். (........)

07. சர்வதேச ரீதியாக நுகர்வோருக்கு முன்மொழியப்பட்ட உரிமைகள் கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| A) | பாதுகாப்புப் பெறுதல் | B) | தெரிவுரிமை |
| C) | நுகர்வோர் கல்வி | D) | இழப்பீடு கோரல் |
| E) | கவனத்தை கவரும் உரிமை | F) | ஆரோக்கிய சூழலில் வாழ்தல் |
| G) | அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் | H) | தகவல் பெறும் உரிமை |

மேலே தரப்பட்ட உரிமைகளில் சர்வதேச நுகர்வோர் சங்கத்தால் (IOCU) முன்மொழியப்பட்ட நுகர்வோர் உரிமைகளினைச் சரியாகக் காட்டும் தொகுதி
1) A, B, H, E 2) C, D, E, H 3) B, C, F, G
4) C, D, E, F 5) C, D, F, G (.........)

08. பின்வருவன பங்காளரின் பண்புகளில் சிலவாகும்.
A - மூலதனத்திற்குப் பங்களிப்பு செய்தல்
B - வியாபாரத்திற்குத் தனது பெயரைப் பயன்படுத்துதல்
C - இலாபத்தில் பங்குபெறுவர்
D - மூலதனத்திற்கு பங்களிப்புச் செய்யாமை
E - வரையறுக்கப்பட்ட பெறுப்பு

மேற்குறித்த பண்புகளில் பெயரளவுப் பங்காளருக்குரிய பண்புகளை மாத்திரம் கொண்ட விடைகளைக் தெரிவு செய்க.
1) A, B, C 2) A, E, D 3) B, C,D 4) C, D, E 5) B, D, E (.........)

09. தற்போது பொதுத் துறை நிறுவனங்களின் செயற்பாடுகள் வினைத்திறன் குறைந்ததாகக் காணப்படுவதற்தா கப்பலராலும் விமர்சிக்கப்படுகின்றது. வினைத்திறன் குறைந்த பொதுத்துறை வணிகங்களை வினைத்திறனுள்ளதாக மாற்றுவதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாட்டு முறைமை
1) மக்கள் மயப்படுத்தல் 2) சுவீகரித்தல் 3) இணைத்தல்
4) தனியார் மயப்படுத்தல் 5) முகாமைத்துவ ஆலோசனை (........)

10. கீழே முயற்சியாளர்கள் தோற்றம் பெறுவதற்கான பின்னணிக் காரணிகள் சிலவும் அவற்றுக்கான உதாரணங்கள் சிலவும் தரப்பட்டுள்ளன. A நிரலுக்குப் பொருத்தமான வகையில் அவற்றினைச் சரியாகக் காட்டும் தொகுதி.

| A | B |
|---|---|
| 1) சுய ஆக்கம் | a) நுகர்வோர் பராமரிப்பு இல்லம் அமைத்தல் |
| 2) பாரம்பரியம் | b) பெற்றோர் முயற்சியில் ஈடுபட்டிருத்தல் |
| 3) சமூகப்பின்னணி | c) புதிய பொருட்கள் சேவைகளை உருவாக்கல் |
| 4) சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடல் | d) மதிப்புக் கிடைத்தல் |

1) a, b, c, d 2) c, b, a, d 3) b, c, d, a 4) c, b, d, a 5) c, a, b, d (..........)

11) முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
1) ஆரம்பிக்கும் திறன், கனவு காணுதல், சந்தர்ப்பங்களை இனங்காணல்
2) அர்ப்பணிப்புடன் வேலையில் ஈடுபடல், தீர்மானம் எடுத்தல், பங்கிடுதல்
3) ஆரம்பிக்கும் திறன், சந்தர்ப்பங்களை இனங்காணல், பிரச்சினைகளைத் தீர்த்தல்.
4) பற்றும் ஈடுபாடும், கனவு காணுதல், விதியை நம்பியிருத்தல், தூரநோக்குடையவர்
5) பற்றும் ஈடுபாடும், கனவு காணுதல், புத்தாக்கம், தலைமைத்துவம். (........)

12) இலங்கையில் செயற்படும் உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் எண்ணிக்கை
1) 23 2) 32 3) 33 4) 21 5) 36 (........)

13. பின்வருவனவற்றில் ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களை மட்டும் கொண்ட தொகுதியாக அமையக்கூடியது.
1) உரிமம் பெற்ற வணிக வங்கி, காப்புறுதிக் கம்பனிகள்
2) இலங்கை மத்திய வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியம்
3) அலகுப் பொறுப்பாட்சி, ஊழியர் நம்பிக்கை நிதியம்
4) காப்புறுதிக் கம்பனிகள், ஊழியர் நம்பிக்கை நிதியம்
5) பங்குமுகவர் கம்பனிகள், கூட்டுறவு கிராமிய வங்கி (.........)

14. பின்வருவன சில வகையான காப்புறுதி வகைகளாகும்.

A) ஊழியர் பொறுப்புக்காப்புறுதி
B) தனியாள் சடுதி விபத்துக் காப்புறுதி
C) உற்பத்திப் பொருள் விபத்துக் காப்புறுதி
D) களவபாயக் காப்புறுதி
E) ஆதன உரிமைக்காப்புறுதி
F) தீயபாயக் காப்புறுதி

இவற்றில் பொறுப்புக் காப்புறுதி வகைகளைச் சரியாகக் காட்டும் தொகுதி
1) A, B, E 2) A, C 3) A, E, F 4) A, D, E 5) B, C,F (........)

15. போக்குவரத்து முறைமையின் அடிப்படை அம்சங்களைச் சரியாகக் காட்டும் தொகுதி
1) விரைவு, பாதை, சக்தி, தரிப்பிடம்
2) பாதை, கிரயம், சக்தி, சாதனம்
3) பாதை, சாதனம், வலு, தரிப்பிடம்
4) சக்தி, பாதை, விரைவு, கிரயம்
5) வேகம், சக்தி, சாதனம், சொகுசு (.........)

16. கீழே சில தொடர்பாடல் முறைகள் தரப்பட்டுள்ளன.

A - மெமோ (memo) B - கடிதம் C - தொலைபேசி
D - சுற்றறிக்கை E - தனிப்பட்ட உரையாடல் F - கூட்டம்

இவற்றுள் வாய்மொழியல்லாத தொடர்பாடல் முறைகளை வெளிக்காட்டும் தொகுதி
1) A, B, F 2) B, E, F 3) C, E, F 4) A, B, D 5) A, C, E

17. கயானி என்பவர் தனது வீட்டில் இடம்பெறவுள்ள ஓர் விசேட நிகழ்வுக்காக 5 மூடை அரிசியையும் ராகவி என்பவர் தனது சிற்றுண்டிச்சாலைக்கான பகல் உணவுத் தேவைக்காக 2 மூடை அரிசியையும் கொள்வனவு செய்தனர். இங்கு இடம்பெறும் வியாபார முறைமையை சரியாக வெளிக்காட்டுவது.
1) மொத்தவியாபாரம், சில்லறை வியாபாரம்
2) சில்லறை வியாபாரம், சில்லறை வியாபாரம்
3) சில்லறைவியாபாரம், மொத்த வியாபாரம்
4) தனிவியாபாரம், சில்லறை வியாபாரம்
5) சில்லறைவியாபாரம், பங்குடமை வணிகம் (........)

18. பின்வருவன ஹென்றி மிற்ஸ்பேக்கின் முகாமைத்துவ வகிபாகங்கள் தொடர்பான விடயங்களாகும்.

A - கண்காணிப்பாளர்
B - தகவல் வழங்குபவர்
C - தொடர்புகளைப் பேணுபவர்
D - தலைவர்
E - உத்தியோகபூர்வ பேச்சாளர்
F - நடுநிலையாளர்

மேலே கூறப்பட்ட வகிபாகத்தில் பின்வரும் விடயத்தை வெளிப்படுத்தும் அமைப்பினை பிரதிநிதித்துவப்படுத்தி வெளியகப் பிரிவினர்களுக்கு தகவல்களை வழங்குதல் "மற்றும்" அமைப்பின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தனக்கு கீழ் உள்ள ஊழியர்களை ஊக்கப்படுத்தலும் தூண்டுதலும் வகிபாகங்கள் முறையே

1) D, A  2) D, B  3) E, C  4) D, E  5) B, F  (........)

19. தொழிலாளர்களை ஏதேனும் அடிப்படையில் ஏதேனும் திறன்களைப் பிரயோகித்து கவரக்கூடிய ஆற்றல் தலைவரிடம் இருத்தல் வேண்டும் என்பதை வெளிப்படுத்துவது.

1) சீரமைக்கும் பலம்  2) சிறப்பாற்றல பலம்  3) ஆளுமைப் பலம்
4) வெகுமதி அளிக்கும் பலம்  5) தகவல் பலம்  (.........)

20. உருப்படிகளினை பெறுமதி அடிப்படையிலும், அளவு அடிப்படையிலும் பேணுகின்ற நுட்பத்திற்கு வழங்கப்படும் பெயர்

1) ABC பகுப்பாய்வு
2) இரு கொள்கலன் முறைமை
3) கணனிச் செயல்திட்டம்
4) தொடர் இருப்பெடுத்தலைப் பதிவு செய்யும் முறை
5) இருப்பு மட்டங்களை பேணும் முறை  (........)

21. விலையிடல் முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - கிரயத்துடன் குறித்த இலாபம் சேர்த்து விலையிடல்
B- உணரப்படும் பெறுமதியில் விலையிடல்
C - இலக்கு திரும்பல் விலையிடல்
D - பெறுமதி விலையிடல்
E - நடப்பு விலையிடல்
F - ஏல விலையிடல்

மேற்குறித்த விலையிடல் முறையில் முறையே கிரயம் சார்ந்த, போட்டி சார்ந்த, வாடிக்கையாளர் சார்ந்த விலையிடல் முறையாக அமையும் சரியான தொகுதி

1) AC, EF, BD  2) CD, FE, BA  3) AC, BD, EF
4) BD, EF, AC  5) AC, BF, ED  (........)

22. பின்வருவனவற்றுள் நேரில் நிதிமூலமாக அமைவது

1) குத்தகை  2) வணிகப்பத்திரம்  3) நிறுத்தி வைத்த இலாபம்
4) வங்கிமேலதிகப் பற்று  5) வங்கிக்கடன்  (.......)

23. உள்ளக ரீதியான ஆட்சேர்ப்பின் ஓர் அனுகூலமாக பின்வருவனவற்றுள் எதனைக் கருத முடியாது.

1) ஊழியர்கள் தூண்டப்படல்
2) சிறந்த ஊழியத் தொடர்பு ஏற்படுதல்
3) ஆட்சேர்த்தலுக்கான கிரயம் குறைவடைதல்
4) புதிய அறிவு நிறுவனத்திற்கு வந்து சேருதல்
5) பொருத்தமான ஊழியர்களை நிறுவனத்திற்குள் வைத்திருக்க முடிதல்  (.........)

24. தகுதிகாண் காலத்தினுள் ஊழியர் ஒருவர் சிறப்பாகச் செயற்படாதுவிடின் நிறுவனம் ஒன்று மேற்கொள்ளக் கூடிய ஓர் நடவடிக்கை அல்லாதது.

1) வேலையை முடிவுறுத்தல்
2) தகுதிகாண் காலத்தை நீடித்தல்
3) தண்டணை வழங்குதல்
4) இடமாற்றம் செய்தல்
5) வாய்மொழி, எழுத்துமூலம் எச்சரிக்கை செய்தல் (.........)

25. பல்லூடகம் எனப்படுவது.

1) சலனமற்ற படம்
2) சலனப்படம்
3) ஒலி
4) எழுத்தாக்கம்
5) யாவும் சரி (.......)

26. நடுத்தரமட்ட முகாமையினால் பயன்படுத்தும் தகவல் முறைமை எது

1) முகாமைத் தகவல் முறைமை, தீர்மான உதவி முறைமை
2) கட்டளை உதவி முறைமை, தீர்மான உதவி முறைமை
3) காரியாலய தன்னியக்க முறைமை, கட்டளை உதவி முறைமை
4) கொடுக்கல் வாங்கல் தயாரிப்பு முறைமை, கட்டளை உதவு முறைமை
5) அறிவுப் பணி முறைமை, கொடுக்கல் வாங்கல் முறைமை (........)

27. ஊழியர் பொறுப்பொன்றாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?

1) அமைப்பின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய முறையில் வேலை செய்தல்
2) வேலை செய்யுமிடத்தில் ஒழுங்காக நடந்துகொள்ளுதல்
3) தெளிவான ஒழுக்கக்கோவை ஒன்றினை நடைமுறைப்படுத்துதல்
4) வேலை ஒப்பந்தத்திற்கேற்ப கருமங்களை மேற்கொள்ளுதல்
5) ஒப்படைக்கும் கருமங்களை உரியவேளையில் செய்து முடித்தல். (.........)

28. உற்பத்தி நடைமுறைகள், உற்பத்தி இயந்திரமும் கருவிகளும் தேவையான உற்பத்தி மட்டம், கைத்தொழில் நிலையத்தை ஓரிடப்படுத்தல், உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் முறை, தேசிய சர்வதேச தரங்களைப் பெற்றுக்கொள்ளும் முறை என்பவற்றை வெளிப்படுத்தும் திட்டத்தின் துணைப்பகுதி எது

1) நிறைவேற்றுச் சுருக்கம்
2) வணிக விபரம்
3) செயற்படுத்தல் திட்டம்
4) சந்தைப்படுத்தல் திட்டம்
5) மனித வளத்திட்டம் (.........)

29. காசுப்பாய்ச்சல் தொடர்பான சில விடயங்கள் வருமாறு

A) உரிமையாளரின் மூலதனம்
B) கடன் பெறுவனவு
C) கடன்பட்டோரிடம் சேகரிப்புக்கள்
D) குத்தகைக் கொடுப்பனவு
E) நடைமுறையல்லாத சொத்துக்களின் காசுக்கொள்வனவு
F) பெறப்பட்ட வருமானங்கள்

பின்வருவனவற்றுள் காசுஉட்பாய்ச்சல் விடயங்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி.

1) A, B, C, D
2) A, B, C, F
3) A, C, E, F
4) A, B, D, F
5) B, C, D, E (.........)

30. தொழிற்சங்கங்களின் செயற்பாடொன்றாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?

1) சட்டப்படி வேலை செய்தல்
2) பகிஷ்கரிப்பு
3) வேலைநிறுத்தம்
4) இடமாற்றம் செய்தல்
5) கூட்டுப்பேரம் பேசுதல் (........)

**30 - 40 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி கீறிட்ட இடங்களை நிரப்புக.**

31. நேரில் உற்பத்தியின்பிரதான கூறுகளினைத் தருக.

1) .......................................... 2)...................................... 3) ..........................................

32. புவி வெப்பமடைதலை இழிவுபடுத்தும் முகமாக 2010ஆம் ஆண்டு உலகத் தலைவர்கள் ஒன்று கூடி நிகழ்த்திய மாநாடு ........................................................ ஆகும்.

33. தனிநபர்களின் நம்பிக்கைப் பெறுமானங்கள், எதிர்பார்ப்புக்கள் போன்றவை ............................ ஆக இருப்பதுடன் வணிகத்தின் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பேரினச் சூழல் ................................................ ஆகம்.

34. அ) பொதுக்கம்பனியானது கடனை மீளச் செலுத்தும் ஆற்றல் தொடர்பான.............................யைப் பரிசீலித்து பங்கு இலாபத்தை பகிர்தல்.

ஆ) குறித்த பிரதேச சந்தையொன்றில் விற்பனை செய்வதற்குப் பயன்படுத்தும் வேறொரு நிறுவனத்திற்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்குப் பயன்படுத்தும் வணிக அமைப்பு ................................................ எனப்படும்.

35. சுனாமியால் பாதிக்கப்பட்ட முயற்சியாளர்களுக்கு இலங்கை வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட கடன் திட்டம் ..................................... ஆகும்.

36. அ) சொத்து ஒன்றின் இழப்பீடு தொடர்பாக சில காப்புறுதி நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஒப்பந்தத்தை பொறுப்பேற்றல் ........................................................ எனப்படும்.

ஆ) ஒரு சொத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்தல் ............................ எனப்படும்.

37. அ) உற்பத்திச் செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இடம் பெறும் கட்டுப்பாடானது . ........................................................ என அழைக்கப்படும்.

ஆ) ஊழியர்கள் தமது சுயவிருப்பத்துடன் கருமங்களில் ஈடுபடுவதற்கு தூண்டப்படல் ..................................... எனக் கூறப்படும்.

38. உற்பத்திச் செயற்பாட்டின் ஒரு படிமுறையில் பூரணப்படுத்தத் தேவையான எல்லாம் ஒரே இடத்தில் நிகழத்தக்க முறையில் ஒழுங்குசெய்த இடம் ........................................................ எனப்படும்.

39. விலையிடலின் போது கவனத்தில் கொள்ளப்படும் (3Cs) மூன்று காரணிகள் யாவை?

1) ........................................ 2) ........................................ 3) ........................................

40. அ) அரசு தனது குறுங்கால நிதித்தேவையினைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்தும் பிரதான கருவி . ................................................ ஆகும்.

ஆ) பங்குச்சந்தை ஒன்றில் முன்னணியில் உள்ள கம்பனிகளின் விலை அசைவினை வெளிப்படுத்தும் சுட்டி .............................. ஆகும்.

## இலக்கம் 41 - 50 வரையான வினாக்களுக்குரிய விடையை எழுதுக.

41. வணிகமொன்றின் திரவத்தன்மையினை வெளிப்படுத்தும் வீதம் மூன்றினைக் குறிப்பிடுக.

1) ........................................................................................................

2) ........................................................................................................

3) ........................................................................................................

42. ஆட்சேர்ப்பு ஒன்றுக்கான பத்திரிகை விளம்பரமொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்களினைப் பிரதானமாக பின்வரும் இரு வகுதிகளின் கீழ் உள்ளடக்கமுடியும் அவற்றை குறிப்பிடுக.

1) ..........................................................................................................................................................

2) ..........................................................................................................................................................

43. வேலை ஒன்றிற்கு மிகப்பொருத்தமான ஊழியர்களைத் தெரிவு செய்யும் போது பயன்படுத்தும் நுட்பங்கள் 4 தருக.

1) ........................................................ 2) ..........................................................................

3) ........................................................ 4) ..........................................................................

44. அறிவு மட்டத்தகவல் முறைமையைப் பயன்படுத்தும் நபர்களைக் குறிப்பிடுக?

1) ........................................................ 2) ..........................................................................

45. அ) ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது எதிர்பாராமல் ஏற்படும் விபத்துகளுக்கு எதிராக பாதுகாப்பை பெறுவதற்குகாக தொழில் கொள்வோரால் செய்யப்படும் காப்புறுதி ................................ ஆகும்.

ஆ) காப்புறுதி செய்ய முடியாத இரு இடர்களுக்கு உதாரணம் தருக.

1) ........................................................ 2) ..........................................................................

46. கடனட்டை ஒன்றில் காணப்படும் 4 விடயங்களைத் தருக.

1) ........................................................ 2) ..........................................................................

3) ........................................................ 4) ..........................................................................

47. அ) இலங்கை நாணயத் தாள்களில் இருவருடைய கையொப்பங்கள் காணப்படுகின்றன. அவர்களின் பதவிப் பெயர்களைக் குறிப்பிடுக.

1) ........................................................ 2) ..........................................................................

ஆ) வணிகமொன்றின் சமூகப் பொறுப்பு தொடர்பாக அக்கறை கொள்ளும் தரப்பினர் 4 ஐக் குறிப்பிடுக?

1) ........................................................ 2) ..........................................................................

3) ........................................................ 4) ..........................................................................

48. அ) நபர் அல்லது அமைப்பு ஒன்றின் தேவையினை அல்லது விருப்பத்தினை நிறைவு செய்யக்கூடிய உற்பத்திகள் தொடர்பாக முயற்சியாளரினுள் உருவாகின்ற மனநிலை ........................................ எனப்படும்.

ஆ) கட்டளைச் சுருக்கம் எப்பொழுதும் ..............................................., .................................... ஆக இருத்தல் வேண்டும்.

49. தேடுதல் பொறிகளுக்கு (Search Engine) இரு உதாரணங்கள் தருக.

1) ........................................................ 2) ....................................................................

50. கீழ்க் குறிப்பிடப்படுவது இணையத்தளத்தினது பெயராகும்.

www.np.gov.lk

அ) இங்கு gov மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது? ..........................................................

ஆ) .lk மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது? ..........................................................

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# வணிகக்கல்வி

| 32 | T | II |
|---|---|---|

மாதிரி வினாத்தாள் - 3

தரம் -13

மூன்று மணித்தியாலம்

கவனிக்க:

**ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - I

01 ]

1) வணிகத்தின் பிரதான தொழிற்பாடுகளாக உற்பத்தி நிதி என்பன காணப்படுகின்றன. இவற்றுக்கும் மேலாக உள்ள தொழிற்பாடுகளைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளி)

2) இலங்கையில் செயற்படும் பிரபல்யமான தொலைத்தொடர்பு நிறுவனமொன்று நீண்டகாலத்தில் இலங்கையில் தொடர்பாடல் சேவையை வழங்கும் நிறுவனங்களில் முதன்மை நிறுவனமாக வர எண்ணியுள்ளது. இதற்காக இலங்கையிலுள்ள கைத்தொழிலாளர்கள், வியாபாரிகள், தனிநபர்கள் ஆகியோரது திருப்தியினை உச்சப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. தனது வாடிக்கையாளரைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டு சந்தையில் நீண்டகாலத்திற்கு நிலைத்திருப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதே நேரம் தனது விற்பனை வருமானத்தை அடுத்த வருடம் 10% னால் அதிகரிக்க உத்தேசித்துள்ளது. இக்கூற்றுக்களிலிருந்து பின்வரும் எண்ணக் கூற்றுக்களை விளக்குக.

1. தூரநோக்கு (Vision)
2. இலட்சிய நோக்கு (Mission)
3. இலக்கு (Goal)
4. குறிக்கோள் (Objective) (4 புள்ளி)

3)
1. கைத்தொழில் பின்னடைவு என்பதனால் நீர் கருதுவது யாது? (1 புள்ளி)
2. இலங்கையில் கைத்தொழில் பின்னடைவுக்கு ஏதுவான காரணிகள் யாவை? (3x1=3 புள்ளி)

4)
1. பேரினச் சூழல் காரணிகளுக்கிடையேயுள்ள இடைத்தொடர்வை உதாரணம் மூலம் விளக்குக. (2 புள்ளி)
2. வணிகமொன்று மக்கட் சூழலில் கவனம் செலுத்த வேண்டிய காரணத்தை விளக்குக? (2 புள்ளி)

5) வணிகங்கள் சமூகப்பொறுப்பினை பல்வேறு தரப்பினருக்கும் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
1. வணிகங்கள் எத்தரப்பினருக்கு சமூகப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டியுள்ளது என குறிப்பிடுக? (2 புள்ளி)
2. வணிகங்கள் சமூகப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் வணிகத்திற்கு கிடைக்கும் அனுகூலங்கள் எவை? (2 புள்ளி)

02 ]

1) அரசாங்கம் வரிக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் போது வணிகங்களில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது? (4 புள்ளி)

2) துசி என்பவர் பழங்களைச் சேகரித்து பழச்சாறு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர் தனது உற்பத்திப் பொருட்களுக்கு SLS தரச் சான்றைப்பெற விரும்புகின்றார்.

அ) SLS தரச் சான்றிதழைப் பொறுவதற்கான படி முறைகள் ஒழுங்கு முறையாகத் தருக? (2 புள்ளி)

ஆ) இச்சான்றைப் பெறுவதால் வணிகர், நுகர்வோர் ஆகிய இருவரும் பெறும் அனுகூலங்களைத் தருக? (2 புள்ளி)

3) அ) பங்குடமை முயற்சி ஒன்றுக்கு பங்குடமை ஒப்பந்தம் ஒன்று பயன்படும் விதத்தைக் குறிப்பிடுக? (1 புள்ளி)
ஆ) பங்குடமை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தக் கூடிய முறையைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
இ) பங்குடமை ஒப்பந்தமொன்றில் பொதுவாக உள்ளடக்கப்படுகின்ற விடயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

4) அங்கீகார வணிகம் பிரபல்யம் அடைவதற்கான காரணங்கள் 4 தருக. (4 புள்ளி)

5) வரையறுக்கப்பட்ட அஜித் கம்பனி இந்தியாவில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இருப்பினும் மீண்டும் இலங்கை கம்பனிச் சட்டத்தின் கீழ் தன்னைப் பதிவு செய்துள்ளது. அத்துடன் தனது செயற்பாடுகளை வெளிநாட்டில் (இலங்கைக்கு வெளியே) மேற்கொள்கின்றது.
அ) இது எவ்வகையான கம்பனியாகும்? (1 புள்ளி)
ஆ) 2007ஆம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டப்படி கம்பனி தன்னை பதிவு செய்ய சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் யாவை? (2 புள்ளி)
இ) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

## 03 ]

1) நடேசன் ஒரு வணிக முயற்சியாளர், இவர் மன்னாரின் பெரும்போக அறுவடையை வணிக வாய்ப்பாகக் கருதி சிவப்பு நெல்லைக் கொள்வனவு செய்து அதனை அரிசியாக்கிய துடன் சிவப்பு அரிசியை மாவாக்கி அரிசி மாவில் கேக் தயாரித்து விற்பனை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இவரின் இந்தப் புதிய முயற்சிக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் காணப்படுகின்றது. இவர் இம்முயற்சியை ஆரம்பித்த பின் தமிழ் சிங்கள புத்தாண்டும் அதனைத் தொடர்ந்து ஈஸ்டர் பெருவிழாவும் இவரின் உற்பத்திப் பொருளுக்கு சாதகமா வாய்ப்பாக இருந்தது. இவரின் தொழிற்சாலையில் 5 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவரின் அன்பும், அணுகுமுறைகளும் தொழிலில் இவர் கொண்டுள்ள அர்ப்பணிப்பும், ஆர்வமும் தொழிலாளர்களை வெகுவாகக் கவர்ந்ததால் தொழிலாளர்கள் மிகவும் மகிழ்ச்சியுடனும் அர்ப்பணிப்புடனும் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். நடேசனின் வணிகம் விரிவடைந்து செல்வதுடன் இவரின் உற்பத்திப் பொருட்கள் மன்னார் மாவட்டத்தில் மட்டுமன்றி வவுனிய மாவட்டத்திலும் சந்தைப்படுத்தப்படுகின்றன.
அ) நடேசனின் வணிகத்திற்கு வாய்ப்பான சந்தர்ப்பங்கள் எவை? (2 புள்ளி)

ஆ) இந்தியாவின் முயற்சியாண்மை அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின்படி முயற்சியாண்மைக்குரிய தேர்ச்சிகளாக பல காணப்படுகின்றன. மேற்காட்டிய விடய ஆய்விலிருந்து நடேசனுக்குக் காணப்படும் முயற்சியாண்மைத் தேர்ச்சிகள் எவை? (2 புள்ளி)

2) அ) அடிப்படைப் பணம் என்பதனை வரையறுக்குக? (2 புள்ளி)
ஆ) அடிப்படைப் பணத்தில் உள்ளடக்கப்படும் பிரிவுகள் எவை? (2புள்ளி)

3) அ) கொடுக்கல் வாங்கலில் கொடுப்பனவைத் தீர்ப்பதற்கான இரு கருவிகளும் எவை? (2 புள்ளி)
ஆ) கொடுப்பவை தீர்ப்பதற்கான புழக்கப்பணத்தின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக? (2 புள்ளி)

4) அ) கடன் அட்டை ஒன்றுடன் தொடர்புடைய தரப்பினர் யாவர்? (2 புள்ளி)
ஆ) "காசு செலுத்தி கொள்வனவு செய்வதைவிட கடன் அட்டை மூலம் கொள்வனவு செய்வது அனுகூலமானது" இதற்குரிய ஆதாரங்களைத் தருக? (2 புள்ளி)

5) அ) கைமாற்றத் தக்க சாதனம் ஒன்றில் காணப்படவேண்டிய அம்சங்கள் எவை? (2 புள்ளி)
ஆ) மாற்றுண்டியல் என்பதனை வரையறுக்குக? (2 புள்ளி)

6) பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்புத் தருக.
அ) மாஸ்ரர் காட்
ஆ) ரெலி வங்கிச்சேவை
இ) முற்பணக்கொடுப்பனவு அட்டைகள்
ஈ) காகிதப்பணம் (4x1=4 புள்ளி)

## 04 ]

1) அ) பின்வரும் காப்புறுதித் தத்துவங்களை சுருக்கமாகவிளக்குக.

1. உயர்ந்த நன்நம்பிக்கை

2. அண்மிய காரணத்தத்துவம் (2 புள்ளி)

ஆ) காப்புறுத்தக் கூடிய நட்ட அச்சம் ஒன்று கட்டாயம் கொண்டிருக்கவேண்டியஅம்சங்கள் நான்கும் எவை? (2 புள்ளி)

2) தற்காலத்தில் கைத்தொலைபேசிப் பாவனை மிகவும் வேகமாக அதிகரித்துச் செல்கின்றது.

அ) கைத்தொலைபேசியை மக்கள் விரும்புவதற்கான காரணங்கள் எவை? (2 புள்ளி)

ஆ) நவீன தொடர்பாடல் சாதனங்களினால் கிடைக்கும் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

3) அ) போக்குவரத்துச் சாதனம் ஒன்றைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய காரணிகள் எவை? (2 புள்ளி)

ஆ) ஏனைய போக்குவரத்து முறைகளை விட வீதிப் போக்குவரத்து முறைகளை மக்கள் பெருமளவு தெரிவு செய்வதற்கான காரணங்கள் யாவை? (2 புள்ளி)

4) மொத்த வியாபாரியால் ஆற்றப்படுகின்ற சேவைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

5) சிறுகுறிப்பு வரைக.

அ) சுக நல சான்றுப் பத்திரம்

ஆ) வங்கி வரைவு

இ) தரவாணை

ஈ) இறக்குமதிக் குறிப்பு (4x1=4 புள்ளி)

### பகுதி 11

## 05 ]

1) முகாமைத்துவம் என்பது ஒரு பிரயோகச் செயற்பாடாகும்

அ) முகாமைத்துவச் செயற்பாட்டை வரைபடம் மூலம் காட்டுக. (2 புள்ளி)

ஆ) முகாமைத்துவத்தின் திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட இரு செயற்பாடுகளாகும். விளக்குக. (2 புள்ளி)

2) திணைக்களப்படுத்தல் என்பதனை வரையறுப்பதுடன் அதன் அடிப்படைகள் யாவை? (4புள்ளி)

3) முகாமைத்துவத் தீர்மானம் எடுத்தலின் படிமுறைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

4) உற்பத்தியில் இட அமைவுத் திட்டம் முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளி)

5) பண்டத்தின பண்பு அல்லது தரம் என்பது பலபிரிவுகளின் சேர்க்கையாகும். அத்தகைய சேர்க்கைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

## 06 ]

1) செயற்பாட்டு முகாமைக்குரிய பிரதான கருமங்களைக் குறிப்பிடுக? (4புள்ளி)

2) அ) வியாபாரக்குறி என்பதனால் கருதப்படுவது யாது? (1 புள்ளி)

ஆ) வியாபாரக்குறியினால் உற்பத்தியாளருக்கும் வாடிக்கையாளருக்கும் கிடைக்கும் நன்மைகளைத் தனித்தனியாக விளக்குக. (3 புள்ளி)

3) அ) விற்பனை ஊழியர்கள் தமது கருமங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எத்தகைய தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்? (1 புள்ளி)

ஆ) விற்பனை ஊழியர்களின் கருமங்களை எடுத்துக் கூறுக. (3 புள்ளி)

4) அ) நேர்ச்சந்தைப்படுத்தல் கருவிகளைத் தருவதுடன் அவற்றில் இரண்டினை விளக்குக. (4 புள்ளி)

5) (Marketing Public Relation) MPR திணைக்களத்தின் கருமங்களைக் கூறுக. (4 புள்ளி)

## 07 ]

1) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை உருவாக்குவது நிதிச்சந்தையின் வளர்ச்சி பிரதான இடத்தினை வகிக்கின்றது.

அ) நிதிச் சந்தை என்பதை நீர் வரையறை செய்க? (2புள்ளி)

ஆ) இலங்கையின் நிதிச் சந்தையின் கட்டமைப்பினைக் கோட்டுப்படம் மூலம் காட்டுக. (2புள்ளி)

2) அ) பங்குச் சந்தை என்பதை வரையறுத்து அதன் பிரதான கூறுகளைப் பெயரிடுக? (2புள்ளி)

ஆ) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பங்குச் சந்தை பெறும் பொருளாதார முக்கியத்துவத்தினை விபரிக்குக. (2புள்ளி)

3) மனிதவள முகாமைத்துவத்தின் கருமங்களை ஒழுங்குமுறையில் பட்டியல் படுத்துக. (4 புள்ளி)

4) அ) கைத்தொழில் உறவு என்பதால் கருதப்படுவது யாது? (1 புள்ளி)

ஆ) சிறந்த கைத்தொழில் உறவினால் நிறுவனம் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் யாவை? ($1\frac{1}{2}$ புள்ளி)

இ) பாதகமான கைத்தொழில் உறவினால் நிறுவனம் ஒன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிடுக. ($1\frac{1}{2}$ புள்ளி)

5) அ) ஊழியர் மனத்தாங்கல் என்பதனால் கருதப்படுபது யாது? (1 புள்ளி)

ஆ) ஊழியர் மனத்தாங்கல்களை வெல்லுவதற்கு தொழில் தருநர் ஒருவர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை? (3 புள்ளி)

## 08 ]

1) நல்ல தகவலின் பிரதான பண்புகளைக் குறிப்பிடுக? (4 புள்ளி)

2) அ) தகவல் முறைமையினை வரைவிலக்கணப்படுத்துக. (1 புள்ளி)

ஆ) தகவல் முறைமையொன்றின் கருமங்களை வகைப்படுத்திக் காட்டுக. (3புள்ளி)

3) அ) வணிகத்திட்டம் என்றால் என்ன? (2 புள்ளி)

ஆ) வணிகத்திட்டமொன்றின் முக்கியத்துவம் யாது? (2 புள்ளி)

4) சந்தைப்படுத்தல் திட்ட மொன்றில் உள்ளடங்குகின்ற பிரதான விடயங்கைளக் குறிப்பிடுக? (4 புள்ளி)

5) மதிப்பிடப்பட்ட வருமானக் கூற்றில் உள்ளடங்க வேண்டிய பிரதான விடயங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

# வணிகக்கல்வி- மாதிரி வினாத்தாள் - 3
## புள்ளித்திட்டம்
## பகுதி I,II
### பகுதி I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 2) | 2 | 3) | 5 | 4) | 2 | 5) | 5 |
| 6) | 3 | 7) | 5 | 8) | 3 | 9) | 4 | 10) | 4 |
| 11) | 3 | 12) | 1 | 13) | 4 | 14) | 2 | 15) | 3 |
| 16) | 4 | 17) | 3 | 18) | 4 | 19) | 2 | 20) | 1 |
| 21) | 1 | 22) | 3 | 23) | 4 | 24) | 4 | 25) | 5 |
| 26) | 1 | 27) | 3 | 28) | 3 | 29) | 2 | 30) | 4 |

31) முதனிலை உற்பத்திகள், இரண்டாம்நிலை உற்பத்திகள், மூன்றாம் நிலை உற்பத்திகள்

32) ஹோபன் ஹர்பன் மாநாடு

33) சமூக கலாசார சூழல், மக்கட் சூழல்

34) i) கடன் தீர்பரிசோதனை அறிக்கை ii) அங்கீகார வணிகம்

35) சுசகஸ

36) i) ஒப்புறுதி ii) இரட்டைக் காப்புறுதி

37) i) நடைமுறைக் கட்டுப்பாடு ii) ஊக்குவித்தல்

38) செயலிடம்

39) கிரயம், வாடிக்கையாளர் கேள்வி, போட்டி

40) i) திறைசேரி உண்டியல்கள் ii) மிலங்கா விலைச்சுட்டி

41) நடைமுறை விகிதம், அமில விகிதம், காசு விகிதம்

42) தொழில் விபரணம், தொழில் நியமம்

43) எழுத்துப் பரீட்சை, நேர்காணல், செய்முறைப் பரீட்சை, பின்புலஆய்வு, மருத்துவப் பரிசோதனை

44) பொறியியலாளர், முகாமையாளர், வரைபடஆக்குநர்

45) (i) ஊழியர் பொறுப்புக் காப்புறுதி (ii) சுவை மாற்றம், காலங்கடத்தல், பரீட்சையில் சித்தியடையாமை, நாகரிக மாற்றம்

46) கடனட்டை உரிமையாளரின் பெயர், கடனட்டை வழங்கும் வங்கியின் பெயர், செல்லுபடியாகும் காலம், கடனட்டை இலக்கம், வங்கி இலட்சினை, உரிமையாளரின் கையொப்பம்.

47) i) நிதியமைச்சர், ஆளுநர் ii) அரசு, வாடிக்கையாளர், நிறுவனம், முகாமையாளர், ஊழியர்

48) i) வணிக எண்ணம் ii) கவர்ச்சி, சுருக்கம்

49) Google , yahoo, MSN

50) i) Government, ii) Sri Lanka

01. 1) ஆளணி

நிர்வாகம்

சந்தைப்படுத்தல்

ஆராய்ச்சி அபிவிருத்தி (4 புள்ளி)

2) தூரநோக்கு - நிறுவனமொன்று நீண்டகாலத்தில் அடைய எதிர்பார்க்கும் வணிகக் கருமம்

உ-ம்: தொடர்பாடல் சேவை நிறுவனம் ஒன்று அச் சேவை நிறுவனங்களில் முதன்மை நிறுவனமாக வருதல்

இலட்சிய நோக்கு - தூரநோக்கினை அடைவதற்கான செயற்பாடுகளினை உள்ளடக்கியது.

உ-ம்: எல்லாத் தரப்பினரதும் திருப்தியினை உச்சப்படுத்தல்.

இலக்கு - இலட்சிய நோக்கு மேலும் விரிவுபடுத்தப்படும்போது பெறப்படுவதே இலக்குகளாகும்.

உ-ம்: சந்தையில் நீண்டகாலத்தில் நிலைத்திருப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள்

குறிக்கோள் - வணிகத்தின் இலக்கினை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளே குறிக்கோளாகும்.

உ-ம்: விற்பனை வருமானத்தை 10 வீதத்தினால் அதிகரித்தல்

3) i) ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியே கைத்தொழில் பின்னடைவு எனப்படும் (1 புள்ளி)

ii) அரசின் கைத்தொழில் கொள்கையின் குறைபாடு

வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகள் வீழ்ச்சியடைந்தமை

வெளிநாட்டு உற்பத்திகளின் கடுமையான போட்டி

பதிலீட்டு உற்பத்திகள் அதிகரித்தமை

நுகர்வோன் சுவை மாற்றம் காரணமாகக் கேள்வி குறைவடைந்தமை (3x1=3 புள்ளி)

4) i) இரத்தினக்கற்களுக்கான கேள்வி இயற்கைச் சூழலுக்கு உரித்தானது. ஆயினும் அதனை வணிகச் செயற்பாடாக மாற்றும் போது சட்ட அனுமதி பெறல் அவசியம். எனவே இயற்கைச் சூழலும் சட்டச் சூழலும் தொடர்புபடுகின்றது.

வணிக வங்கியினால் தன்னியக்க டெலர் இயந்திரத்தைப் பொருத்தும்போது மத்திய வங்கியின்அனுமதி பெறல்

சமூக காலாச்சார சூழல் தொடர்பான விடயங்களை நடைமுறைப்படுத்தும் போது மக்கட் சூழலுடன் தொடர்புபடுகின்றது.

(2x1=2 புள்ளி)

ii) வணிகம் தனது இலக்கினை அடைந்து கொள்ளவேண்டுமாயின் சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் வெற்றியளிக்க வேண்டும். சந்தை என்பது சனத்தொகையை அல்லது பல்வேறு தனிநபர்களை

உள்ளடக்கிய தொகுதியாகும். எனவே மக்கட் சூழல் விசைகளில் கவனம் செலுத்தும் போதே சந்தைப்படுத்தல் வெற்றியடைய முடியும்.

(2 புள்ளி)

05) i) உரிமையாளர்கள்
வாடிக்கையாளர்கள்
ஊழியர்கள்
சமூகம்

(4x1/2=2 புள்ளி)

ii) நன்மதிப்பு உயர்வடைதல்
வணிகம் தொடர்பான நம்பகத்தன்மை உறுதியாதல்
வணிகத்தின் நிலைப்பாடு உறுதி செய்யப்படுகின்றது.

(2x1=2 புள்ளி)

(02)1) அறவிடப்படும் வரி அரசு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பயன்படுத்தப்படுகின்றது.
இறக்குமதிகள் மீது விதிக்கப்படும் பல்வேறு வரிகள் காரணமாக உள்நாட்டு உற்பத்தித் துறைகள் பாதுகாக்கப்படல்
பொருட்களின் விலை உயர்வடைதல்
ஆரம்ப முயற்சியாளர்கள் மனச்சோர்வடைதல் (4x1=4 புள்ளி)

ii) அ)
விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தல்
மாதிரிப் பொருளை இணைத்தல்
விண்ணப்பத்தையும் மாதிரிப் பொருளையும் கட்டளைகள் பணியகத்திடம் சமர்ப்பிக்கப்படல்

(2 புள்ளி)

ஆ) <u>வணிகர்</u>
பொருட்களின் நன்மதிப்பை உயர்த்த முடியும்
விற்பனையை அதிகரிக்க முடியும் (2x1/2=1 புள்ளி)

<u>நுகர்வோர்</u>
தரமான பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்
உச்ச நலன் நோக்கத்தைப் பூர்த்தி செய்யமுடியும் (2x1/2=1 புள்ளி)

iii) அ)
பங்காளர் பங்குடமை பற்றித்தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு உதவுகின்றது.
பங்காளர் நலன்களை உறுதிப்படுத்த உதவுகின்றது.
பங்காளரிடையே தோன்றும் பிணக்குகளை தீர்க்க உதவுகின்றது.
சட்ட தேவைகளை பூர்த்திசெய்ய உதவுகின்றது. (1 புள்ளி)

ஆ)
வாய்மொழி மூலம்
எழுத்து மூலம்
நடத்தை மூலம்

இ)
பங்குடமை பெயர் பங்காளர் சம்பளம்

பங்குடமையின் கால எல்லை

பங்காளர் மூலதன அளவு

பங்காளர் உரிமைகள்

இலாபநட்டப் பகிர்வு முறை

முரண்பாடுகளை தீர்க்கும் முறை

பங்காளர் கடமைகள்

(4x1/2=2 புள்ளி)

iv) ஆரம்பிக்கும்போதே பெரிய வியாபாரத்தில் பிரவேசிக்க முடிதல்

தோல்வியடையக்கூடிய சந்தர்ப்பங்கள் குறைவாகக் காணப்படல்

அங்கீகாரம் பெறுபவரும், வழங்குபவரும் இலாபமடைய முடிதல்

நன்மதிப்பை இலகுவாக அதிகரிக்க முடிதல்

ஆலோசனைகள் உதவிகளை பரஸ்பரம் பெறமுடிதல் (4 புள்ளி)

v) அ) கரைகடந்த கம்பனி (1புள்ளி)

ஆ) விண்ணப்பப் படிவம்

கம்பனி அகவிதி

கம்பனி பெயர் அறிவுக்கெட்டியவரை தற்போதுள்ள கம்பனி பெயரை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என உறுதிப்படுத்திய கூற்று

இயக்குனர் சம்மதக்கடிதம்

செயலாளர் சம்மதக்கடிதம் (4x1/2=2 புள்ளி)

இ) பங்கு வழங்கல் மேற்கொள்ளப்படுவதில்லை

ஆகக்குறைந்த பங்குதாரர் இருவராக இருத்தல்

பொது நோக்கத்தை முன்னுணர்ந்து ஆரம்பித்தல்

அகவிதிகளில் உத்தரவாதத் தொகையை குறிப்பிடல்

இலாபத்தைப் பகிர்ந்தளிக்காமை (4x1/2=2 புள்ளி)

03 i) அ

மன்னாரின் பெரும்போக அறுவடை

பண்டிகைக் காலங்கள்

கோதுமை மா கேக்கில் மக்களுக்கு ஏற்பட்ட சலிப்புத் தன்மை (2 x 1 = 2)

ஆ)

ஆரம்பிக்கும் திறன்

சந்தர்ப்பங்களை இனங்காணலும் செயற்படுத்தலும்

செல்வாக்குச் செலுத்தும் திறன்

தூண்டும் திறன்

செல்வாக்கு உத்திகளைப் பயன்படுத்தல் (4 x ½ =2)

ii) அ) மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பணம் (1புள்ளி)

ஆ) 1. பொதுமக்களிடம் புழக்கத்திலுள்ள பணம்

2. வணிக வங்கிகளில் ஒதுக்காக உள்ள பணம்

3. மத்திய வங்கியிலுள்ள வங்கிகளின் ஒதுக்குகள் (3 புள்ளி)

iii) அ) கடன் அட்டை உரிமையாளர்கள்

கடன் அட்டையைப் பிறப்பிக்கும் வங்கி

வியாபார நிறுவனம்

கடன் அட்டைச்சங்கம் (2 புள்ளி)

ஆ) இலகு, பாதுகாப்பு, கடன் எல்லை வரை கொள்வனவு செய்யலாம், பகுதி பகுதியாக கொள்வனவு செய்யலாம், செலவுகளைத் தீர்க்க வசதியானது, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கொள்வனவு செய்வதனால் தரமான பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்.

iv) அ) சுதந்திரமாக ஒப்படைக்க முடிதல்
ஒப்படை பெற்றவருக்கு மிகச்சிறப்பான உரிமை கிடைத்தல்
ஒப்படை பெற்றவர் செலுத்திய தொகையைப் பெற்றுக் கொள்ள முடிதல்
உண்மையெனக் கொள்ளும் கருதுகோள். (2புள்ளி)

ஆ) குறித்த நபருக்கு அல்லது கட்டளைக்கு அல்லது கொண்டுவருபவருக்கு கேட்ட போது அல்லது கட்டளையிடப்படும் எதிர்காலத்தில் குறித்த பணத்தொகையை கொடுக்க வேண்டுமெனக் கட்டளையிட்டு மற்றொருவருக்கு பிறப்பிக்கும் நிபந்தனையற்ற எழுத்திலான கட்டளை

v) மாஸ்ரர் காட் : Master Card world wide எனும் பல்தேசியக் கம்பனியால் 1966ல் அறிமுகம் செய்யப்பட்டு உலகம் முழுவதும் உள்ள நிதி நிறுவனங்களால் வெளியிடப்படும் Master என்னும் பதம் Card ல் காணப்படுவதே Master Card ஆகும்.
ரெலி வங்கிச் சேவை: குறித்த வங்கியின் வாடிக்கையாளர்கள் வணிக வங்கிகளுக்குச் செல்லாது தொலைபேசி மூலமாக வங்கிச் சேவையினைப் பெறும் முறை
முற்பணக் கொடுப்பனவு அட்டைகள்:
முற்கூட்டியே பணத்தினைச் செலுத்தி அட்டைகளைக் கொள்வனவு செய்து அதன் மூலம் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்ய வசதியளிக்கும் அட்டை (1 புள்ளி)
காகிதப்பணம் அரசினால் வெளியிடப்படும் தாள் நாணயங்களைக் குறிக்கும் (1 புள்ளி)

04 )

1) *1)* a. காப்புறுதி கொடுக்கல் வாங்கள்களில் அல்லது காப்புறுதி ஒப்பந்தத்தில் காப்புறுத்துவோர் காப்புறுதி செய்வோர் ஆகிய இரு தரப்பினரும் அதி உயர் நம்பிக்கையுடன் எப்பொழுதும் கருமமாற்றுதல் வேண்டும் என்பது உச்ச நம்பிக்கைக் காப்புறுதி தத்துவமாகும். (1 புள்ளி)

b. காப்புறுதி செய்யப்பட்ட ஆதனம் தொடர்பாக நட்டம் ஏற்படும் போது அது காப்புறுதி செய்யப்பட்ட பாதுகாப்பு தொடர்பான நட்டமாக இருந்தால் மட்டுமே இழப்பீடு செலுத்தப்பட வேண்டும் என கூறும் தத்துவமே இதுவாகும். (1புள்ளி)

ஆ) எதிர்வு கூறக்கூடியதாக இருத்தல்
தற்செயலாக நிகழக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
நட்டம் மற்றொரு காப்புறுதி நட்டத்துடன் தொடர்புபடுத்தப்பட்டதாக இல்லாதிருத்தல் வேண்டும்.
நிச்சயிக்க கூடியதாக இருத்தல் (2 புள்ளி)

2) அ) விரும்பிய நேரத்தில் தொடர்பாடலை மேற்கொள்ளலாம்
இலகுவாக காவிச் செல்ல முடியும்
பல்வேறு நவீன வசதிகள் கைத்தொலைபேசியில் இணைக்கப்பட்டிருத்தல் உ-ம் இணையம்
குறைந்த செலவுடன் தெளிவான தொடர்பாடலுக்கு உதவுதல் (2 புள்ளி)

ஆ) <u>அனுகூலம்</u>
விரைவான தொடர்பாடலை மேற்கொள்ளலாம்
தெளிவான தொடர்பாடலை மேற்கொள்ளலாம்

விரும்பிய வடிவில் தகவல்களைப் பரிமாறலாம். (1புள்ளி)

பிரதிகூலம்

பயன்படுத்துவதற்கு தொழில்நுட்ப அறிவு அவசியம்

உடல்நல பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படல்

மூலதனச் செலவு உயர்வாகக் காணப்படல் (1 புள்ளி)

iii) அ) பொருளின் தன்மை

தூரம்

வேகம்

பாதுகாப்பு

கிரயம்

கொள்ளளவு

கிடைப்பனவு தன்மை (4x1/2=2 புள்ளி)

ஆ) நாடு முழுவதும் பரந்து காணப்படல்

தேவைப்கேற்ப விரும்பிய வேளையில் பயன்படுத்தலாம்

தேவைக்கேற்ப ஊடகத்தை தெரிவு செய்யலாம்

பயணம் ஆரம்பித்து நிறைவுறும் வரையில் ஒரே சாதனத்தைப் பயன்படுத்தலாம்

குறுகிய தூரப்பயணத்திற்கு வேகமான முறையாகக் காணப்படல் (4x1/2=2 புள்ளி)

iv) மீள் விற்பனைக்காக பொருட்களை கொள்வனவு செய்து விற்பனை செய்தல்

களஞ்சியப்படுத்தல் சேவை

பொருட்களுக்கு விளம்பரங்களைமேற்கொள்ளல்

சில்லறை வியாபாரிகளுக்கு கடன் வசதியளித்தல்

சந்தை ஆராய்ச்சியில் ஈடுபடுதல்

இடரைத் தாங்கிக் கொள்ளல்

மேம்படுத்தல் கருமங்களில் ஈடுபடல் (4x1/2=2 புள்ளி)

v) a) சுகநல சான்றுப் பத்திரம்

விவசாய உற்பத்திகள் மற்றும் பொதி செய்யப்படாத பொருட்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும்போது அவற்றால் சுகாதாரத்திற்கு தீங்கு ஏற்படாது உன உறுதிப்படுத்தி ஏற்றுமதி யாளர்களால் வழங்கப்படும் ஒரு ஆவணம் சுகநல சான்றுப்பத்திரமாகும்.

b) வங்கி வரைவு

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஒருவருக்கு வங்கியூடாக பணத்தை மாற்றுவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு ஆவணம் இதுவாகும்.

C) தரவாணை


இது இறக்குமதியாளர் ஏற்றுமதியாளருக்கு அனுப்பும் ஒரு கட்டளையாகும். இதில் இறக்குமதியாள னுக்கு அவசியமான பொருட்களின் விபரம், விலை, போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

d) இறக்குமதி குறிப்ப

இறக்குமதியாளனுக்கு துறைமுகத்திற்கு வந்துள்ள பொருட்கள் தொடர்பான உரிமையை உறுதி செய்வதற்காக இறக்குமதியாளர் அல்லது அவரது முகவர் சுங்கத்திற்கு சமர்ப்பிக்கும் ஆவணம் இறக்குமதி குறிப்பாகும்.

(4x1=4 புள்ளி)

திட்டமிடல்




ஆ. நிறுவனமொன்றின் நோக்கத்தினை உருவாக்குவதும் அதனை அடைந்து கொள்வதற்குப் பொருத்தமான நடைமுறைகளைத் தயாரித்துக் கொள்வதும் திட்டமிடலாகும். கட்டுப்படுத்தல் என்பது திட்டமிடப்பட்ட பெறுபேறுகளுடன் நிறுவனத்தினது உண்மையான பெறுபேற்றினை ஒப்பிடுதலும், வேறுபாடுகள் இருப்பின் அவற்றை இனங்கண்டு சரியான முறையில் செயற்படுத்தும் வழிமுறைகளுமாகும் இந்த வகையிலே திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட செயற்பாடுகளாகும்.

ii) நிறுவனமொன்றின் கருமங்களில் காணக்கூடிய பொதுவான பண்புகளைப் பயன்படுத்தி தொழிலை தொகுதிகளாக்கும் செயன்முறை திணைக்களப்படுத்தலாகும்.

<u>அடிப்படைகள்</u>

தொழிற்பாட்டு அடிப்படை
உற்பத்திப் பொருள் அடிப்படை
வாடிக்கையாளர் அடிப்படை
புவியியல் அடிப்படை
கலவை அடிப்படை

iii) <u>தீர்மானம் எடுத்தலின் படிமுறைகள்</u>

i. பிரச்சினைகளை இனங்காணல்
ii. மாற்றுத் தீர்வுகளைக் கட்டியெழுப்புதல்
iii. மாற்று வழிகளை மதிப்பீடு செய்தல்
iv. சிறந்த மாற்றுவழியைத் தெரிவு செய்தல்
v. செயற்படுதல்

iv) 1. பொருட்கள், இயந்திரங்கள் என்பவற்றைப் பயன்படுத்துகின்ற செயற்றிறன் அதிகரித்தல்
2. இடவசதிகளின் மூலம் உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருத்தல்.
3. பொருள் பயன்படுத்தலின் கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருத்தல்
4. பொருட்களும் ஊழியர்களும் அசையும் போது ஏற்படக்கூடிய தடைகள் குறைவடைதல்.
5. விபத்துக்கள் குறைவடைதல்
6. தொடர்பாடல் ஒருங்கிணைத்தல், கண்காணிப்பு என்வன இலகுவாக இருத்தல்

7. ஊழியர்களின் மனோபலம் அதிகரிக்கும் (moral)

v) சிறந்த செயற்பாடு

நீண்ட காலம் நிலைத்திருத்தல்

நம்பிக்கைத் தன்மையைக் கொண்டிருத்தல்.

நியமங்களுக்கு ஏற்புடையதாயிருத்தல்

உரிய கருமத்திற்கு பொருத்தமாயிருத்தல்

பாதுகாப்பானதாக இருத்தல்

(4x1=4 புள்ளி)

06.

i) வழங்கல் சங்கிலியை இனம்காணுதல்

கேள்வியை எதிர்வு கூறுதல்

இயலுமையைத் திட்டமிடுதல்

வசதிகள் உள்ள இடத்தைத் தெரிவு செய்தல்

வசதியான அமைப்புத்திட்டத்தைத் தயாரித்தல்

பணிகளை ஒழுங்காக வரிசைப்படுத்தல் (4 புள்ளி)

ii) அ) நுகர்வோர் போட்டிப் பொருள்களுக்கிடையில் குறித்த பொருளை வேறுபடுத்தி இனங்காண வசதியளிக்கும் சொல் அல்லது குறியீடு அல்லது அவையிரண்டும் இணைந்த கலவை வியாபாரக் குறி எனப்படும் (1புள்ளி)

ஆ) <u>உற்பத்தியாளர்</u>

1. போட்டியாளர் பொருட்களில் இருந்து தமது பொருட்களை வேறுபடுத்திக் காட்ட முடியும்.
2. கட்டளைகளைப் பெறும்போது இலகுவாயிருத்தல்
3. சட்டரீதியான பாதுகாப்பினைப் பெறுதல்
4. நுகர்வோரிடையே வியாபாரக் குறி தொடர்பான பக்கச் சார்பொன்றினை ஏற்படுத்த முடிதல்.
5. சிறந்த வியாபாரக்குறியின் மூலம் நிறுவனத்தின் முழுமையான அடையாளத்தை மேம்படுத்த முடியுமாயிருத்தல்
6. வணிகத்திற்கு பெறுமதியொன்று உருவாக்கல் (3x1/2=1 1/2புள்ளி)

<u>வாடிக்கையாளர்கள்</u>

1. இலகுவான பொருட்களைத் தெரிவு செய்ய முடிதல்
2. போலிப் பொருட்களிலிருந்து பாதுகாப்பு பெற முடிதல்
3. தமக்குத் தேவையான பண்டத்தைத் தெளிவாக கேட்டுப் பெறமுடிதல்
4. பிரசித்தமான சிறந்த தரத்துடனான பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு இலகுவாக அமைதல்
5. முறைப்பாடுகளை முன்வைக்க இலகுவாக அமைதல்

(3x1/2=1 1/2புள்ளி)

iii) அ) கல்வி / அறிவு

பயிற்சியும் அனுபவமும்

சிறப்பாற்றல்

நட்புணர்வு

வாடிக்கையாளருக்கு உதவுதல் (4x1/2=2 புள்ளி)

ஆ) விற்பனை வாய்ப்புக்களைத் தேடுதல்

இலக்கை நிர்ணயித்தல்

தொடர்பாடல்

விற்பனை செய்தல்

பல்வேறு சேவைகள் வழங்குதல்

தகவல்கள் சேகரித்தல் (4x1/2=2 புள்ளி)

iv) அ) நேர் அஞ்சல்

நேருக்குநேர் விற்பனை
கட்லொக் மூலமான சந்தைப்படுத்தல்
தொலைபேசி சந்தைப்படுத்தல்
இலத்திரனியல் சந்தைப்படுத்தல

(4x1/2=2 புள்ளி)

ஆ) 1) பொருட்களுக்கு கட்டளை அனுப்புவதற்கு அறிவுறுத்தல் செய்ய நினைவூட்டுவதற்கு இது பயன்படுகின்றது.
உ-ம்: ஒலிநாடா, ஒளி நாடா, தகவல், பிரசுரம், கடிதம், கானொளித்தட்டு

2) விற்பனை முகவர்கள் / ஊழியர்கள் நேரடியாக வாடிக்கையாளரைச் சந்தித்து தகவல் வழங்கி கட்டளைகள் பெறுதல்

3) பொருட்கள் தொடர்பான முழுவிபரங்களையும் உள்ளடக்கி அச்சிடப்பட்ட கட்லொக் இலக்கு வாடிக்கையாளர் அனுப்பி கட்டளை பெறுதல்
உ - ம் CD, Videos, Web site

4) தொலைபேசி மூலமாகக் கட்டளைகளை பெறுதல், வினாக்களுக்கு விடையளித்தல் என்பவற்றை சிறப்பாக ஆற்றுதல்


5) நேர் விற்பனைக்காக இன்ரநெற்றினைப் பயன்படுத்தல் இதனூடாக கட்டளை பெறல், பொருள்களை வழங்குதல், Market Space வாய்ப்புக் கிடைத்தல், கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துதல்
உ-ம்: Cash, Smarts cards, Digital cash

v) புதிய பொருட்களை அறிமுகம் செய்வதற்கு உதவுதல்
முதிர்ச்சிப் பண்டங்களை நவீனப் படுத்த உதவுதல்
வீழ்ச்சிப் பணிகளை மீளமைக்க உதவுதல்
இலக்குக் குழுக்கள் தொடர்பாக செல்வாக்குச் செலுத்துதல்
பொருள் தொடர்பான பொதுமக்கள் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து பிரச்சனைகளைத்தீர்த்தல்
கம்பனி தொடர்பான நல்லபிப்பிராயத்தை உருவாக்குதல்.

07

i) அ) நீண்டகால, குறுங்கால அடிப்படையிலான நிதிப் பரிமாற்றங்களில் ஈடுபடுவோர் தொடர்புறும் ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை நிதிச்சந்தை எனப்படும்

ஆ)




(3 புள்ளி)

ii) அ) வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் பங்குகளையும் பிணைப்பத்திரங்களையும் பகிரங்கமாக பரிமாற்றுகின்ற பொதுவான தளம் பங்குச் சந்தை எனப்படும். *(1 புள்ளி)*

ஆ) 1. பொருளாதார அபிவிருத்திக்கான நீண்டகால நிதியை திரட்ட முடிதல்
2. அந்நிய முதலீடுகளைக் கவர முடிதல்
3. தொழில் வருமானங்கள், அரச வருமானங்கள் கிடைத்தல்.
4. நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படல்

(3x1=3 புள்ளி)

iii) தொழில் உருவாக்கம்
வேலைப் பகுப்பாய்வு
மனிதவள திட்டமிடல்
ஆட்சேர்ப்பு
தெரிவு
இணைத்துக் கொள்ளுதல்
அறிமுகப்படுத்தல்
பயிற்சியும் அபிவிருத்தியும்
ஊழியர் அசைவுகள்
செயற்றிறன் மதிப்பீடு
கொடுப்பனவு முகாமைத்துவம்
ஊழியர் நலன்புரிச் சேவை
ஊழியர் தொடர்பு

(8x1/2=4 புள்ளி)

iv) அ) தொழில் கொள்வோருக்கும் ஊழியர்களுக்கும் இடையில் காணப்படும் உறவு, இவ்வுறவானது சாதகமான அல்லது பாதகமாகக் காணப்படல்.

*(1 புள்ளி)*

ஆ) நிறுவனத்தின் ஊழியர் வினைத்திறன் அதிகரிக்கும்
நிறுவன செயற்பாடுகளை சுமூகமாக மேற்கொள்ளலாம்
ஊழியர் புரள்வு வீழ்ச்சியடையும்
ஊழியர் வரவின்மை வீழ்ச்சியடையும்
ஊக்கமுள்ள ஊழியர் குழுவொன்று உருவாகும்
வளவிரயம் குறைவடையும்

(3x1/2=1 1/2 புள்ளி)

இ) ஊழியர் போராட்டம், வேலைநிறுத்தம், போன்றவற்றால் வணிகச் செயற்பாடுகள் தடைப்படும்.
ஊழியர் வினைத்திறன் பாதிக்கப்படும்
ஊழியர்களுக்கு உளப்பாதிப்புக்கள் அதிகரிக்கும்
வளங்கள் வீண் விரயம் உயரும்
முழு நிறுவனத்தினதும் வினைத்திறனும், விளைதிறனும் பாதிக்கப்படல்

(3x1/2=1 1/2 புள்ளி)

v) அ) ஊழியர் கூலிக்கொடுப்பனவு வேலை மணித்தியாலம், வேலை நிபந்தனை, வேலைச்சூழல் போன்றவை காரணமாக ஊழியருக்கு ஏற்படும் திருப்தியின்மை மனத்தாங்கல் எனப்படும் *(1 புள்ளி)*

ஆ) ஊழியரது கருத்துக்களுக்கு செவிமடுத்தலும் பேச்சுவர்த்தை நடத்துதலும்
மனத்தாங்கல் தொடர்பான விடயங்களைப் பார்வையிடல்
மனத்தாங்கல் தொடர்பாக பொருத்தமான அதிகாரிகளுக்கு அறிவித்தல்
ஊழியரிடையே நம்பிக்கையை ஏற்படுத்தல்
தவறுகள் ஏற்பட்டிருப்பின் அதனை ஏற்று நிவர்த்தி செய்தல் *(3 புள்ளி).*

08

i) 1. பொருத்தமாக இருத்தல்
2. பூரணமாக இருத்தல்
3. நம்பிக்கைத் தன்மை
4. பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்
5. குறைந்த செலவு
6. திருத்தமானதாக இருத்தல்

(4x1=4 புள்ளி)

ii) அ) அமைப்பொன்றிற்குத் தேவையான தகவல்களைத் ஒன்று சேர்த்தல், மாற்றீட்டுச் செயல் முறைகளுக்குட் படுத்தல் பகிர்தல் போன்ற மனிதச் செயன்முறைகளினாலும் வளங்களினாலும் கூட்டிணைக்கப்படும் செயற்பாடு (2புள்ளி)

ஆ) உள்ளீடு - Input
செயன்முறை - Processing
வெளியீடு - Output
களஞ்சியப்படுத்தல் - Storage

iii) அ) வணிகமொன்றின் இலக்கு, நோக்கம் என்பவற்றை அடைந்து கொள்வதற்கான முறையினை விபரிக்கும் அட்டவணை (2புள்ளி)

ஆ) வணிகக்கருமங்களுக்கான வழிகாட்டல் வணிகத்திற்கு ஊழியர்களையும் நிதி வசதிகளையும் பெற வணிகத்தில் அக்கறை காட்டும் தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்த (2புள்ளி)

iv) சந்தைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் பொருட்கள் சேவைகள்
இலக்கு சந்தை
போட்டி நிலைமைகளின் பகுப்பாய்வு
போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாயம்
சந்தைப்படுத்தல் செலவு
முயற்சியாளர்களின் உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிகள்
திட்டமிடப்பட்ட விற்பனை (4x1=4 புள்ளி)

v) மொத்த விற்பனை
தேறிய விற்பனை
மொத்த இலாபம்
உற்பத்தியல்லாதகிரயம்
வரிக்கு முன் தேறிய இலாபம்
வரிக்கு பின்னரான தேறிய இலாபம்

(4x1=4 புள்ளி)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# வணிகக்கல்வி 32 T I

## மாதிரி வினாத்தாள்-4

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

கவனிக்க:-

எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிவேயே விடை எழுதுக. இலக்கம் 1- 30 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் போது மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளி கோட்டில் எழுதுக.

1)

| அ | ஆ |
|---|---|
| 1. தேவை ஒன்றிற்கான தீர்வு | A.விருப்பம் |
| 2. தேவை ஒன்றிற்கான நுகர்வு வடிவம். | B.உற்பத்தி |
| 3. தேவை விருப்பங்களினைப் பூர்த்தி செய்யும் பொருளாதார நடவடிக்கைகள் யாவும் | C.வர்த்தகம் |
| 4. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் நுகர்வோரைச் சென்றடையும் வரையான கருமம் | D.வணிகம் |

"அ" பகுதியில் தரப்பட்ட கூற்றுக்களிற்கு பொருத்தமான எண்ணக்க கருக்கள் "ஆ" இல் தரப்பட்டுள்ளன. "அ" பகுதியில் ஒழுங்கிற்கு அமைவாக சரியாகக் காட்டும் தொகுதி.

1. A,B,C,D 2. B,A,D,C 3. A,D,C,B 4. C,D,A,B 5. D,C,B,A

(...............)

2) வர்த்தகத்திற்குச் சமமானது பின்வருவனவற்றுள் எது

1. துணை நிலைச் சேவை 2. முதனிலை உற்பத்தி
3. இரண்டாம் நிலை உற்பத்தி 4. மூன்றாம் நிலை உற்பத்தி
5. வியாபாரம் (...............)

3) வணிகம் ஒன்றில் சிற்றினச்சூழலில் காணப்படும் விசை பின்வருவனவற்றுள் எது?

1. பொருளாதாரம் 2. கலாசாரம் 3. அரசியல் சட்டம்
4. போட்டி 5. தொழில்நுட்பம் (...............)

4) பின்வரும் வரி முறைகளில் நேரில் வரியினை மட்டும் உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.

1. வருமானவரி, சுங்கவரி, பெறுமதி சேர்வரி
2. பெறுமதி சேர்வரி, சுங்கவரி, உற்பத்திவரி
3. வருமான வரி, கம்பனிகள் வரி, மூலதன இலாப வரி
4. சுங்கவரி, பெறுமதிசேர் வரி, வங்கிவரவு வரி
5. சுங்கவரி, உற்பத்தி வரி, கம்பனிகள் வரி (...............)

5) அண்மைக் காலமாக நுகர்வோர் பாதுகாப்பின் தேவை அதிகரித்துள்ளமைக்குரிய காரணியாகக் கொள்ளக்கூடியது எது?

1. நுகர்வோர் கல்வி அதிகரிப்பு 2. தொழில்நுட்ப மாற்றம்
3. இலத்திரனியல் வர்த்தகம் 4. வணிகச் சூழலின் செல்வாக்கு
5. சந்தை விரிவாக்கம் (...............)

6) (1) முயற்சியாண்மை மூலதனக் கம்பனி (2) தேசிய அபிவிருத்தி வங்கி
(3) DFCC (4) ஸ்மெட் நிறுவனம்

மேற்படி நிறுவனங்கள் யாவும்

1. உட்கட்டமைப்பு வசதியை வழங்குகின்றன.
2. சந்தைப்படுத்தல் வசதியை வழங்குகின்றன.
3. ஆலோசனைச் சேவையை வழங்குகின்றன.
4. நிதி வசதியை வழங்குகின்றன.
5. தொழில் நுட்ப சேவையை வழங்குகின்றன. (..............)

7) A- சந்தை சிறியதாயிருத்தல் B- குறைந்த மூலதனம் C- குறைந்த ஊழியர் தொகை D- நவீன தொழில்நுட்ப பயன்பாடு குறைவாகக் காணப்படல் E- சுதந்திர செயற்பாடு காணப்படல்.

மேற்கூறப்பட்டவை யாவும் சிறுவணிகங்களுக்கு உரித்தான சில............ ஆகும்

1. தேர்ச்சிகள் 2. பண்புகள் 3. அனுகூலங்கள்
4. பிரதிகூலங்கள் 5. பின்னணிகள் (..............)

8) இலங்கை மத்திய வங்கியின் ஒரு குறிக்கோள் எது?

1. நிதிமுறையின் உறுதியான தன்மையினைப் பேணுதல்
2. ஊழியர் சேமலாப நிதியை முகாமைத்துவம் செய்தல்
3. வங்கிகளின் கண்காணிப்பாளராகச் செயற்படல்
4. நாணயங்களை வெளியீடு செய்தல்
5. வெளிநாட்டு ஒதுக்கங்கைள முகாமை செய்தல் (..............)

9) காப்புறுதி செய்த ஒருவர் வெளிக்கட்சியினரிடமிருந்து நட்டஈட்டைப் பெறுவதற்கான உரிமையைக் காப்புறுத்துவோருக்கு மாற்றும் தத்தும் பின்வருவனவற்றுள் எது?

1. பதிலீட்டு / பதிலாள் வைப்புத்தத்துவம் 2. காப்புறுத்தும் உரிமைத்தத்துவம்
3. உயர் நம்பிக்கைத் தத்துவம் 4. அண்மிய காரணத் தத்துவம்
5. அங்கத்துவத் தத்துவம் (..............)

10) போக்குவரத்து முறைமையின் அடிப்படை அம்சங்களைச் சரியாகக்காட்டும் தொகுதி

1. விரைவு, பாதை, சக்தி, தரிப்பிடம் 2. பாதை, சாதனம், வலு, தரிப்பிடம்
3. பாதை, கிரயம், சகதி, சாதனம் 4. சக்தி, பாதை, விரைவு, கிரயம்
5. வேகம், சக்தி, சாதனம், சொகுசு (..............)

11) சிறந்த தொடர்பாடல் முறைமையின் சிறப்பியல்பு எது?

1. பின்னூட்டல் 2. சுருக்கத்தன்மை 3. செய்தி 4. குறிக்கோள்
5. நோக்கம் (..............)

12) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றில் மாத்திரம் காணக்கூடிய பண்பொன்றாக இருப்பது.

1. பங்குகளை சுதந்திரமாகக் கைமாற்ற முடிதலும் உச்ச பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப்படாதிருத்தலும்
2. நீண்ட வாழ்வுத் தன்மை காணப்படலும் வரையறுக்கப்பட்ட பொறுப்பும்
3. பங்குகளைச் சுதந்திரமாகக் கைமாற்ற முடியாதிருத்தல் வரையறுக்கப்பட்ட பொறுப்பும்
4. வரையறுக்கப்பட்ட பொறுப்பும் பங்குகளையும் தொகுதிக்கடன்களையும் கொள்வனவு செய்யும்படி பொதுமக்களைப் பகிரங்கமாக அழைக்க முடியும்
5. உச்ச பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருத்தலும் நீண்ட வாழ்வுத் தன்மையொன்று காணப்படலும் (..............)

13) கப்பலேற்றும் பண்டங்கள் ஏற்றுமதி செய்யும் நாட்டினால் உற்பத்தி செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்தி வழங்கப்படும் ஆவணம்.
1. இறக்குமதிக் குறிப்பு 2. ஏற்றுமதிக்குறிப்பு 3. நட்டஈட்டுக்கடிதம்
4. சுகநலச் சான்றுப் பத்திரம் 5. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் (...............)

14) ஏற்றுமதியாளருக்கான ஏற்றுமதிக் கொடுப்பனவுக்கு உத்தரவாதமளிக்கும் ஆவணம் எது?
1. காப்புறுதிச் சான்றிதழ் 2. ஈடுகொடுத்தற் பத்திரம் 3. நாணயக்கடிதம்
4. சுமைச்சீட்டு 5. ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் (...............)

15) நேர்விற்பனையில் தவிர்க்கப்படக்கூடிய தரப்பினர்கள் யார்?
1. மொத்த வியாபாரியும் சில்லறை வியாபாரியும்
2. மொத்த வியாபரமும் சில்லறை வியாபாரமும்
3. மொத்த வியாபரமும் மொத்த வியாபாரியும்
4. சில்லறை வியாபாரமும் சில்லறை வியாபாரியும்
5. மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரியும் (...............)

16) முன்னோக்கிச் செயற்படும் சிந்தனைத் திறனை வேண்டி நிற்கும் முகாமைத்துவத் தொழிற்பாடு
1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. தலைமை வகித்தல்
4. கட்டுப்படுத்தல் 5. கூட்டிணைத்தல் (...............)

17) முகாமையாளர் ஒருவரது பிரதான கடமைப்பாடு எது?
1. பணியாளர்களை மகிழ்வித்தல் 2. இலாபங்களைப் பெருக்குதல்
3. நீடித்திருத்தலை உறுதி செய்தல் 4. வாடிக்கையாளர்களை மகிழ்வுறச் செய்தல்
5. நிறுவன இலக்குகளை நிறைவேற்றுதல் (...............)

18) பின்வருவனவற்றுள் இருப்பினை வைத்திருத்தற் செலவாக அமைவது
1. போக்குவரத்து செலவு 2. கட்டளைகளை முன்வைத்தற் செலவு
3. உபயோகமற்றுப் போதல் செலவு 4. ஒப்படைப்புச் செலவு
5. இருப்பு தீர்ந்து போதற் செலவு (...............)

19) உற்பத்தி செய்யப்படுகின்ற சகல பொருட்களும் பிழையின்றி உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் தரக்கட்டுப்பாட்டு முறை
1. பூச்சிய வழு 2. தர உறுதி 3. தரவட்டம் 4. தரநியமம்
5. மொத்ததர முகாமைத்துவம் (...............)

20) இருப்புக் கட்டுபாட்டிற்காக உருவாக்கப்படுகின்ற கணனி மென்பொருளைப் பயன்படுத்துதல் எவ்வாறு அழைக்கப்படும்?
1. கணனிச் செயற்றிட்ட இருப்புக்கட்டுப்பாடு 2. ABC பகுப்பாய்வு
3. HACCP முறை 4. Just in time
5. இரட்டைக் கொள்கலன் முறை (...............)

21) வணிக நிறுவனமொன்று பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்களுக்கு வெவ்வேறு சின்னங்கள் பயன்படுத்துதல்.
1. பொருள் சின்னம் 2. தனிப்பட்ட சின்னம் 3. குடும்பச் சின்னம்
4. தேசிய சின்னம் 5. வியாபாரச் சின்னம் (...............)

22) வாடிக்கையாளர் எதிர்பார்க்கின்ற மட்டங்களுக்கும் மேலாகப் பொருட்கள் விருத்தி செய்யும் மட்டம்
1. முதலாம் மட்டம் 2. இரண்டாம் மட்டம் 3. மூன்றாம் மட்டம்
4. நான்காம் மட்டம் 5. ஐந்தாம் மட்டம் (...............)

23) பின்வரும் நிதி மூலங்களில் எது வணிகமொன்றிற்கு மலிவான நிதி மூலமாகக் கருதக் கூடியது.

1. பகிரப்படாத இலாபம் 2. வங்கி மேலதிகப்பற்று 3. பங்குமூலதனம்
4. ஈட்டுக்கடன் 5. கடன் கொடுத்தோர் (...............)

24) இலங்கை அரசு திறைசேரி உண்டியல் ஊடாகத் திரட்டும் நிதியின் அளவினை தீர்மானிக்கும் அமைப்பு

1. திறைசேரி 2. மத்திய வைப்புத் திட்டமிடல் முறைமை
3. பாராளுமன்றம் 3. மத்திய வங்கி ஆளுனர் 5. கணக்காய்வாளர் நாயகம் (...............)

25) பத்திரங்கள் அற்ற பிணையைத் தீர்வை முறை (SSSS) சுருக்குமான் முறையில் எவ்வாறு அழைக்கப்படும்

1. லங்கா செக்குவர் முறைமை 2. லங்கா செற்றில் முறைமை
3. அதே நேர திரட்டிய தீர்ப்பனவு முறைமை 4. ஏக வங்கி முறைமை
5. வங்கிகளிற்கு இடையிலான வலைப்பின்னல் (...............)

26) மனித வள முகாமை ஒன்றின் தொழிற்பாடு ஒன்றாக எதனைக் கருத முடியாது

1. மனிவளத் திட்டமிடல் 2. தொழிலாளர் நலன் பேணல்
3. ஆட்சேர்ப்பும் தெரிவும் 4. ஊழியப் புரள்வு 5. பயிற்சி வழங்கல் (...............)

27) ஊழியர் ஒருவரின் வேதனத்தைத் துணியும் காரணிகள் கீழே தரப்படுகின்றது.

A- பணியின் தன்மை D- ஆளுமை G- சார்ந்திருப்போன்
B- வேலைத்தளத் தூரம் E- சேவைக்காலம் H- அர்ப்பணிப்பு
C- பயிற்சி தகைமை F- வாழ்க்கைச் செலவு

மேலே தரப்பட்ட விடயங்களில் இருந்து ஊழிய வேதனத்தைத் துணியும் காரணிகளைச் சரியாகக் காட்டும் தொகுதி

1. ACDF 2. ABCF 3. ACEF 4. BCDF 5. ABCH (...............)

28) வெளிநாட்டு வர்த்தகத்திற்கு எதிராகக் காணப்படும் தடைகளை இழிவுபடுத்தும் செயற்பாட்டில் ஈடுபடும் நிறுவனம் அல்லாதது.

1. உலக வர்த்தக அமைப்பு (WTO) 2. IBRD
3. சர்வதேச நாணய நிதியம் (IMF) 4. எட்டு நாடுகள் குழு (G8)
5. சார்க் அமைப்பு (...............)

29) உயர் மட்ட முகாமை பயன்படுத்தும் தகவல் முறைமை

1. முகாமைத்தகவல் முறைமை, தீர்மான உதவி முறைமை
2. கட்டளை உதவி முறை, தீர்மான உதவி முறைமை
3. காரியாலய தன்னியக்க முறைமை, கட்டமளை உதவி முறைமை
4. கொடுக்கல் வாங்கல் தயாரிப்பு முறைமை, கட்டளை உதவு முறைமை
5. அறிவுப் பணி முறை , கொடுக்கல் வாங்கல் முறைமை (...............)

30) வணிகத்திட்டம் ஒன்றின் பிரதான பகுதியாக அமையாதது

1. நிறைவேற்றுச் சுருக்கம் 2. சந்தைப்படுத்தல் திட்டம் 3. காசுப்பாய்ச்சல் கூற்று
4. வணிக விபரம் 5. மனிதவளத்திட்டம் (...............)

**31- 40 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திக் கீறிட்ட இடங்களை நிரப்புக.**

31) சமகால சந்தைகள் இரு வேறு தளங்களில் தோற்றம் பெறுகின்றன. அவற்றைத் தருக?
(1)................................................ , (2) ................................................

32) அ. தேசிய பொருளாதாரம் உலகச் சந்தையோடு ஒன்றிணைத்தலுக்கு வழங்கும் பெயர் ........................................... எனப்படுகின்றது.

ஆ. வணிகம் ஒன்றிற்கு புறத்திலானதும் வணிகத்தின் மீது கணிசமான செல்வாக்கினை செலுத்தக் கூடிய காரணிகளைக் கொண்ட தொகுதி .......................................... எனப்படும்.

33) வணிகத்தின் புறச்சூழலின் மூலமாக ......................................... , ......................................... இனங்காணப்படுகின்றன.

34) அ. பொதுவான நோக்கத்தை அடைவதற்காக இணைந்துள்ள தனிநபர்களைக் கொண்டுள்ள சமூக அலகு ..................................... எனலாம்.

ஆ. பங்கு வழங்கல் மற்றும் பங்குகளுக்கான அழைப்புக்கள் தொடர்பில் வருமதியாகவுள்ள தொகைகளின் கூட்டுத்தொகை ..................................... எனப்படும்.

35) அ. ஏதேனும் பொருள் அல்லது சேவையை வழங்கும் நிறுவனம் ஒன்று அப்பொருள் / சேவையை விற்பனை செய்வதற்கு வேறு ஒரு நிறுவனத்திற்கு அனுமதி வழங்கும் வணிக அமைப்பு முறை .................................. வணிகம் எனப்படும்.

ஆ. சிறு வணிகங்களை இனம் காண்பதற்கு அடிப்படையிலான அம்சங்கள் .................................. .......................................... என வகைப்படுத்தப்படும்.

36) அ. கம்பனிகளுக்கு பொருத்தமான சட்டம் பற்றிய ஏதாவது காரணம் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ......................................... உருவாக்கப்பட்டது.

ஆ. கம்பனி ஒன்றில் கணக்காய்வாளராக நியமனம் பெறுவதற்கு ............................, ................... தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

37) அ. நிலையான சேமிப்பு வைப்புக்கள், வணிகத்தாள், திறைசேரி உண்டியல்கள் என்பன ..............................பண வகைக்குள் அடங்கும்.

ஆ. காப்புறுதி தத்துவத்தின் பிரதான தத்துவங்களாக ............................, ......................, ................. காணப்படுகின்றன.

38) அ. Expo News என்ற சஞ்சிகையை .................................. நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்றது.

ஆ. Euro நாணய அலகை பெறுமதி மிக்க நாணயமாக ............................, .............................., ................................... ஆகிய நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

39) அ. ஊழியர் சாதனை மதிப்பீடு ஆனது ................................ , .................................. கருதி நிறைவேற்றப்படுகின்றது.

ஆ. தொழில் தருனர் தொழில் பெறுநர்களின் ஆற்றல்களினை நேரடியாக மதிப்பிடும் நிலைமை ................................ எனப்படும்.

40) தரக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவங்கள் நான்கு குறிப்பிடுக.
1. ...................................
2. ...................................
3. ...................................
4. ...................................

## 41- 50 வரையிலான வினாக்களுக்குரிய விடையை எழுதுக.

41) அ) தேசிய பொருளாதாரம் உலகச் சந்தையோடு ஒன்றிணைவதற்கு வழங்கும் பெயர் ..........................................

ஆ) சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக 2010இல் நடைபெற்ற மாநாடு ..........................................

42) மக்கட் சூழலில் உள்ளடங்கும் விசைகள் யாவை?

1.......................................... 2.......................................... 3..........................................

4.......................................... 5.......................................... 6..........................................

43) அ) பங்குடமை வணிகத்தின் எல்லாப் பங்காளரும் அவர் செயல் தொடர்பில் ஒருமித்த பொறுப்புடையவர் என்பது வெளிப்படுத்தும் வணிகப்பதம் .......................................... ஆகும்.

ஆ) கூட்டுறவு தொடர்பான உயர்மட்ட நிறுவனம் எது? ..........................................

44) அ) பிரச்சினையை இனங்கண்டு அதிலிருந்து சந்தர்ப்பங்களை தோற்றுவித்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எண்ணத்தை உருவாக்கிக் கொள்ளல் தொடர்பான முயற்சியாண்மை ..........................................ஆகும்.

ஆ) இலங்கையில் சமூகப் பொருளாதார அபிவிருத்தியில் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகள் .......................................... , .......................................... ஆகும்.

45) காசோலை ஒன்றுடன் தொடர்புபடும் கட்சியினர்கள்

1. .......................................... 2. .......................................... 3. ..........................................

4. .......................................... 5. .......................................... 6. ..........................................

46) கீழ் குறிப்பிடப்படும் போக்குவரத்து முறையில் பண்டங்களை நகர்த்துவதற்குப் பயன்படுத்தப்படும் ஆவணம்

1) புகையிரதப்போக்குவரத்து - ..........................................
2) தெருப் போக்குவரத்து - ..........................................

47) அ) நிறுவனம் ஒன்றின் முகாமையாளருக்கு கிடைக்கின்ற சட்டரீதியான பலம் அல்லது வலு ..........................................

ஆ) நிறுவனம் ஒன்றின் கிடை ஒழுங்கமைப்பு காணப்படுமானால் கட்டுப்பாட்டின் தூரம் .......................................... காணப்படும் அதே போல் நிலைக்குத்து ஒழுங்கமைப்பு காணப்படுமானால் கட்டுப்பாட்டின் தூரம் .......................................... காணப்படும்.

48) பொதியிடல் வகைப்படுத்தல் மூன்றையும் தருக?

1. .......................................... 2. .......................................... 3. ..........................................

49) பங்குச் சந்தையில் விலைப் போக்கினை கணிப்பதற்குப் பயன்படுத்தும் 3 சுட்டிகள் யாவை?

1. .......................................... 2. .......................................... 3. ..........................................

50) தகவல் தொழில் நுட்பத்தின் சேர்க்கைகள் 3 தருக.

1. .......................................... 2. .......................................... 3. ..........................................

(50x2=100புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# வணிகக்கல்வி

32 T II

மாதிரி வினாத்தாள் - 4

தரம் -13

மூன்று மணித்தியாலம்

கவனிக்க:-

**ஒவ்வொரு பகுதியிலுமிருந்தும் ஆகக் குறைந்தது இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

1) 1. "வணிகங்களை பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தலாம்" அவ்வாறான காரணிகளைப் பட்டியற்படுத்துக. (4 புள்ளி)

2. குமரன், ஆனந்தன் இருவரும் 12ம் தரத்தில் கல்வி பயில்கின்றனர். இவர்களது தந்தையார் நாதன் என்பவர் வணிக நிறுவனமொன்றை நடாத்தி வருவதுடன் வீட்டுத்தோட்டம் ஒன்றையும் செய்து வருகின்றார். குமரனும் ஆனந்தனும் ஓய்வாக இருக்கும் போது தமது வணிக நிறுவன வேலைகளைப் பிரித்துக் கொடுத்து தமது வேலைகளை இலகுவாக நிறைவேற்றுகின்றார். தமது பிள்ளைகள் அக்குறிப்பிட்ட வேலைகளில் சிறப்புத்தேர்ச்சியடைவதை அவர் கண்டார். இவ்விடய ஆய்வுடன் தொடர்புடைய பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ) தொழிற்பிரிப்பு என்றால் என்ன? (1 புள்ளி)

ஆ) தொழிற்பிரிப்பினால் ஏற்படக்கூடிய அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

(இ) சிறப்புத்தேர்ச்சி என்பதை வரையறுக்குக. (1 புள்ளி)

3. அ) வணிகம் ஒன்றில் அக்கறை செலுத்தும் 4 தரப்பினரைக் குறிப்பிட்டு அவ்வாறு அக்கறை செலுத்துவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ) வணிகம் அப்பிரிவினர் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

4. தொழில்நுட்பச் சூழலானது வணிகத்தில் எத்தகைய தாக்கங்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதை விளக்குக? (4 புள்ளி)

5. அரசானது வணிகங்களின் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற முறைகள் 4ஐக் குறிப்பிட்டு விளக்குக? (4 புள்ளி)

2) 1. இலங்கை தர நிறுவனத்தினால் தரத்தினை அமுல்ப்படுத்துவதற்கு பின்பற்றும் தரப்படுத்தல் முறைகள் யாவை எனக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குக? (4 புள்ளி)

2. தற்காலத்தில் பண நிரம்பலானது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது.

அ) பணக் கொள்கையினை அமுல்படுத்தும் நிறுவனம் யாது? (1 புள்ளி)

ஆ) கடன் கட்டுப்பாட்டு முறைகள் எவை? அம்முறைகளில் பயன்படுத்தப்படும் கருவிகள் எவை? (3 புள்ளி)

3. ரங்கனும் ரமணனும் பல்கலைக்கழகத்தில் ஒன்றாக வணிகத்துறையில் கற்கும் போது தாம் பல்கலைக்கழக கல்வியை முடித்த பின் நாமும் நாட்டின் பொருளாதார உறுதியடையக்

கூடிய நன்கு நிலை பெறக்கூடிய வணிக அமைப்பு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என ஆர்வம் கொண்டிருந்தனர்.

அ) ரங்கனும் ரமணனும் ஆரம்பிக்க எண்ணிய வணிக அமைப்பு வகை யாது? (1 புள்ளி)

ஆ) இவ் அமைப்பினை பதிவு செய்வது தொடர்பாக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் யாவை? (2 புள்ளி)

இ) இவ் அமைப்பின் மூலம் பொருளாதாரம் உறுதி அடையும் என கருதிய விடயங்கள் யாவை? (1 புள்ளி)

4. வரையறுத்த கம்பனிகள் தொடர்பாக காணப்படக்கூடிய அனுகூலங்களையம் பிரதிகூலங்களையும் தனித்தனியே குறிப்பிடுக? (4 புள்ளி)

5. அ) அங்கீகார வணிகம் என்பதால் கருதப்படுவது யாது? (1 புள்ளி)

ஆ) அங்கீகார வணிகம் பிரதானமான 3 முறைகளில் மேற்கொள்ளப்படும். அவற்றைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

2)

1. சுஜா என்பவர் எல்லோரும் அழகாக இருக்கவேண்டும் என்பதில் ஆர்வமுடையவர். தன்னைச் சிறப்பாக அழகுபடுத்துவதுடன் தன்னடைய இரு தங்கைகளையும் அழகாக வைத்திருப்பதில் ஆர்வமாக இருந்தார். தன்னுடைய பொழுதுபோக்காக இதைச்செய்து வந்தார். சிறிது நாட்களின் பின்னர் ஒரு அழகுநிலையத்தை நாம் ஏன் நடாத்தக்கூடாது என்ற எண்ணம் மனதில் உருவாக, ஒரு அழகு நிலையத்தை தொடங்கினார். இவரின் புன்முறுவலும் அன்பான பேச்சும் எல்லோரையும் கவரக்கூடிய ஒன்றானதால் இவரின் அழகு நிலையத்தைத் தேடிப் பல பெண்கள் வருகை தந்தனர். அதிகமான வாடிக்கையாளரின் வருகையினால் தனி ஒருவராக இருந்து வணிகத்தை நடத்த முடியாததை உணர்ந்து விட்டு வேலையின்றி இருக்கும் சிலோஜா, கிரிஜா ஆகியோரைத் தனது நிலையத்தில் தனக்கு உதவியாளராகச் சேர்த்துக் கொண்டார். அவர்களுடன் இனிமையாகப் பழகுவதுடன் அன்பாக நடந்து கொள்வதால் உதவியாளர்கள் மிகவும் மகிழ்ச்சிகரமாக பணியாற்றுவதுடன் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதால் அதிகமான பெண்கள் வயது வேறுபாடின்றி இந்நிலையத்தை தேடி வந்ததால் வணிகம் விரிவடைந்ததுடன் வடமாகாணம் முழுவதும் கிளைகளை நிறுவ சுஜா தீர்மானித்துள்ளார்.

அ) சுஜா இவ்வணிகத்தில் ஈடுபடத்தூண்டிய காரணிகள் எவை? (1 புள்ளி)

ஆ) சுஜாவிடம் காணப்பட்ட முயற்சியாண்மைத் தேர்ச்சிகள் எவை? (2 புள்ளி)

இ) சுஜாவின் இவ்வணிகச் செயற்பாட்டினால் சமூகத்திற்குக் கிடைக்கும் 2 நன்மைகளைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

2. இலங்கையில் தற்போதுள்ள சிற்றளவு வணிகங்களை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் வகைப்படுத்துக? (4 புள்ளி)

3. அ) இலத்திரனியல் பணமாகக் கருதக்கூடிய இலத்திரனியல் அட்டைகள் 4 ஐக் குறிப்பிடுக. (4x1/2=2 புள்ளி)

ஆ) இவ்வட்டைகள் மூலம் கொடுப்பனவுகளை இலகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் வசதிகள் 4 ஐக் குறிப்பிடுக? (4x1/2=2 புள்ளி)

4. அ) வங்கிப் பணத்தை அண்மிய பணத்திலிருந்து வேறுபடுத்துக? (2 புள்ளி)

ஆ) நல்ல பணத்தின் பண்புகள் 4ஐக் குறிப்பிடுக? (2புள்ளி)

5. அ) காசோலையொன்றின் அடிப்படை அம்சங்கள் எவை? (எட்டு விடயங்கள் தருக) (2 புள்ளி)

ஆ) காசோலையில் புறக்குறிப்பிடல் செய்யப்படும் சந்தர்ப்பங்கள் எவை? (2 புள்ளி)

4)

1. அ) வணிகத்தைச் சிறப்பாக நடாத்துவதற்கு முக்கியத்துவம் பெறும் காப்புறுதி ஒப்பந்தங்களை குறிப்பிடுக.? (2 புள்ளி)

ஆ) ஒப்புறுதி என்பதால் கருதப்படுவது யாது? (2 புள்ளி)

2. அ) செய்தித் தொடர்பாடலின் அடிப்படை அம்சங்கள் எவை? (2 புள்ளி)
ஆ) செய்தி ஒன்றை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் அம்சங்கள் எவை? (4x1/2=2 புள்ளிகள்)

3. பின்வரும் போக்குவரத்து முறைகளை சுருக்கமாக விளக்குக.
A. குழாய் வழிப்போக்குவரத்து
B. கம்பிவழிப் போக்குவரத்து
C. அண்டவெளிப் போக்குவரத்து
D. மிருகங்களினால் இயக்கப்படும் போக்குவரத்து

4. இன்றைய உலகில் இலத்திரனியல் வணிகச் செயற்பாடுகள் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அதனைப் பயன்படுத்வோர் தொகையும் அதிகரித்து வருகின்றது.
அ) இலத்திரனியல் வணிகத்தின் ஊடாக கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் எவை? (2 புள்ளி)
ஆ) இணையத்தின் ஊடாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் தரப்பினர் யாவர்? (2 புள்ளி)


5. அ) சுதந்திர வர்த்தகம் என்பது யாது? (2 புள்ளி)
ஆ) சுதந்திர வர்த்தகத்திற்கு தடையாக உள்ள காரணிகள் யாவை? (2 புள்ளி)

## பகுதி II

5)
1. Hentry Mintzberg இன் கருத்திற்கமைய முகாமையாளரின் பிரதான வகிபாகங்கள் எவை? (4 புள்ளி)

2. அ) அமைப்பொன்றில் தலைமைத்துவம் முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் தருக?
ஆ) அமைப்பு முறையொன்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் அம்சங்கள் யாவை? (4 புள்ளி)

3. அ) ஊக்கப்படுத்தல் வணிகத்திற்கு முக்கியமானதாக அமைவதற்கான காரணங்கள் தருக
ஆ) ஊக்கப்படுத்தல் வகைகள் யாவை? உதாரணம் மூலம் விளக்குக. (4 புள்ளி)



மேலே காட்டப்படுடுள்ள இருப்புக்கட்டுப்பாட்டு வரைபடத்திலிருந்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

அ) முதன்மைக் காலம் எவ்வளவு?

ஆ) இருப்பு சுழற்சிக் காலம் எவ்வளவு?

இ) மறுதரம் கட்டளையிடும் தொகை எவ்வளவு (4 புள்ளி)

5. உற்பத்தித்திறனை விருத்தி செய்யக்கூடிய வழிமுறைகள் எவை? (4 புள்ளி)

6)

1. அ) உற்பத்தித்திட்டமிடலின் சமப்பாட்டுப்புள்ளிப் பகுப்பாய்வு என்பதிலிருந்து விளங்கிக் கொள்வது யாது? (1 புள்ளி)

ஆ) பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

1. தரவட்டம் 2. மொத்த முகாமை
3. JIT 4. EOQ (3 புள்ளி)

2. இன்று வணிகங்களிடையே சந்தைப்படுத்தலின் முக்கியத்துவம் உயர்வடைந்து செல்கின்றது. சந்தைப்படுத்தல் மூலம் வணிக நபர் நுகர்வோர் ஆகிய இருசாராருக்கும் கிடைக்கும் நன்மைகள் எவையென தனித்தனியே விளக்குக. (4 புள்ளி)

3. இலக்குச் சந்தையை நோக்கி முன்னேறுவதற்கு சந்தைப்டுத்துவோர் பின்பற்றும் வழிமுறைகளைக் கூறுக. (4 புள்ளி)

4. அ) வியாபாரக்குறிகளைத் தந்து வியாபாரக்குறியின் பக்கச் சார்பின் 3 கட்டங்களையும் காட்டுக. (2 புள்ளி)

ஆ) ஒரு பொருளின் வாழ்க்கை வட்டம் 5 கட்டங்களாக அமைந்திருக்கும் அவற்றைத் தருக? (2 புள்ளி)

5. பல்வேறு விற்பனை மேம்படுத்தல் கருவிகளைத் தருக? (4 புள்ளி)

7)

1. பின்வரும் தகவல்கள் மதன் கம்பனிக்குரியதாகும்.

| | |
|---|---|
| சாதாரண பங்குகள் | 500000 |
| திபெஞ்சர்கள் | 200000 |
| கடன்கொடுத்தோர் | 150000 |
| வங்கிக்கடன் | 100000 |
| ஒதுக்கம் | 150000 |

அ) மேற்படி தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மூலதன இணைப்பினை கணிக்குக.

ஆ) மேற்படி மூலதன இணைப்பு தொடர்பாக உமது கருத்துரை யாது? (2 புள்ளி)

2. அ) கொழும்பு பங்குச் சந்தையில் காணப்படும் பிரதான பெயர் பலகையினை பெயரிட்டு அவற்றில் பொதுக்கம்பனி ஒன்றினை நிரற்படுத்த கொண்டிருக்க வேண்டிய நியதிகளைத் தருக. (2 புள்ளி)

ஆ) கொழும்பு பங்குச் சந்தையின் அபிவிருத்திக்காக அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பட்டியல்படுத்துக. (2 புள்ளி)

3. அ) ஊழியர் நகர்வு செய்தல் என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு ஊழியர் நகர்வு மேற்கொள்ளப்படும் முறைகளைக் குறிப்பிடுக? (2 புள்ளி)

ஆ) பயிற்சி அபிவிருத்தியின் ஊடாக தொழில்தருநர், பணியாளர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக? (2 புள்ளி)

4. அ) வேலை விபரணம், வேலைக்குறித்துரைத்தல் என்பவற்றை தனித்தனியாக விளக்குக? (2 புள்ளி)

ஆ) குறித்த ஒரு கம்பனியின் மனிதவள முகாமையாளர் என உம்மைக் கருதிக் கொள்க. கணக்கு உதவியாளராக நபர் ஒருவரை தெரிவு செய்வதற்கு முடிவு செய்துள்ளார். அதற்கான வேலை விபரணம் ஒன்றை தயார் செய்க. (2 புள்ளி)

5. அ) ஊழியர் நலன் என்பதால் கருதப்படுவது யாது? இதற்காக எவ்வாறான முறைகள் பயன்படுத்தப்படுகிறது? (2 புள்ளி)

ஆ) ஒரு நிறுவனம் ஊழியர் நலன் மூலம் எத்தகைய நன்மைகளைப் பெறலாம்? (2 புள்ளி)

8)

1. தகவல் முறைமையினை வகைப்படுத்துவதற்கான நியதிகளை குறிப்பிட்டு பயன்பாட்டிற்கேற்ப வகைப்படுத்தக்கூடிய தகவல் முறைமையின் வகைகளைக் குறிப்பிடுக? (4 புள்ளி)

2. முகாமைத்துவச் செயற்பாட்டின் அடிப்படையிலான தகவல் முறைகள் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சந்தை ஆராய்ச்சி | கொள்கைத்திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் |
| விற்பனை எதிர்வு கூறல் | கணனியுடன் இணைந்த உற்பத்தி |
| உற்பத்தி ஆய்வு | நிதி எதிர்வு கூறல் |
| உற்பத்தி அபிவிருத்தி | மூலதனப்பாதிடல் |

மேலே கூறப்பட்ட முகாமைச் செயற்பாட்டின் அடிப்படையிலான தகவல் முறைமையினை சந்தைப்படுத்தல் தகவல் முறை, நிதிக்கணக்கீட்டுத் தகவல் முறைமை, செயற்பாட்டுத் தகவல் முறைமை, ஆராய்ச்சி அபிவிருத்தித் தகவல்முறை எனும் அடிப்படையில் அட்டவணைப்படுத்திக் காட்டுக.

| | சந்தைப்படுத்தல் | நிதி கணக்கீடு | செயற்பாட்டுத் தகவல் முறை | ஆராய்ச்சி அபிவிருத்தி |
|---|---|---|---|---|
| 1.<br>2. | | | | |

(8x1/2=4 புள்ளி)

3. நிறைவேற்றுச் சுருக்கம் என்பது யாது? இவ் நிறைவேற்றுச் சுருக்கத்தின் முக்கியத்துவத்தினை குறிப்பிடுக? (4 புள்ளி)

4. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு தருக
அ) சந்தைப்படுத்தல் திட்டம் - Marketing Plan
ஆ) செய்திக் குழு - News group (4 புள்ளி)

5. வணிகம் ஒன்று வணிகத்திட்டம் ஒன்றை கொண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் சில வணிகங்கள் தோல்வி அடைகின்றன. நியாயப்படுத்துக? (4 புள்ளி)

## வணிகக்கல்வி- மாதிரி வினாத்தாள் 4
## புள்ளித்திட்டம்
# பகுதி I,II
### பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 2 | 02) | 4 | 03) | 4 | 04) | 2 |
| 05) | 5 | 06) | 4 | 07) | 2 | 08) | 1 |
| 09) | 1 | 10) | 2 | 11) | 2 | 12) | 1 |
| 13) | 5 | 14) | 3 | 15) | 1 | 16) | 1 |
| 17) | 5 | 18) | 3 | 19) | 1 | 20) | 1 |
| 21) | 1 | 22) | 4 | 23) | 1 | 24) | 3 |
| 25) | 1 | 26) | 4 | 27) | 3 | 28) | 5 |
| 29) | 1 | 30) | 3 | | | | |

31) சந்தை இடம், சந்தை இடைவெளி

32) அ) கோளமயமாதல் ஆ) அண்மிய சூழல்

33) வாய்ப்பும் அச்சுறுத்தலும்

34) அ) அமைப்பு / நிறுவனம் ஆ) கூறப்பட்ட முலதனம்

35) அ) அங்கீகார வணிகம் ஆ) பண்பு சார காரணிகள்

36) அ) ஆலோசனைசபை
ஆ) பட்டயக்கணக்கறிஞர் அங்கத்தவர் பதிவுசெய்யபட்டகணக்காய்வாளர்

37) அ) அண்மிய பணம்
ஆ) காப்புறுதி உரிமைத்துவம் மிக்குயர் நம்பிக்கை இழப்பிடு

38) அ) வர்த்தக கப்பல் தகவல் சேவை ஆ) பிரித்தனியா டென்மார்க் சுவீடன்

39) அ) நிர்வாக நோக்கம் அபிவிருத்தி நோக்கம் ஆ) நேர்காணல்

40) 1. உரிய தரங் கொண்ட பொருளை வழங்க முடியுமாயிருத்தல்
2. வீண் விரயங்களை குறைக்க முடிதல்
3. நுகர்வோரின் திருப்தியினை உச்சப்படுத்தக்கூடியதாக இருத்தல்
4. சட்டத்திற்கேற்ப செயற்படமுடிதல்

41) அ) பூகோள மயமாதல் ஆ) ஹோவன் ஹார்வன் மாநாடு

42) வயது, பால், குடிவரவு, குடியகல்வு, பிறப்புவீதம், இறப்புவீதம்.

43) அ) பரஸ்பர முகவராண்மை ஆ) இலங்கை தேசிய கூட்டுறவுப் பேரவை

44) அ) சந்தைத் தள்ளல் ஆ) வேலையின்மை. வறுமை

45) 1. கட்டளையிடுபவர் / பிறப்பிப்பவர் 2. வங்கி
3 சாட்டுதல் செய்பவர் 4. சாட்டப்படுபவர்
5. பெறுபவர் 6. கட்டளையை ஏற்பவர் / கொடுணி

46) I) புகையிரத வார்நாமம் II) ஒப்படைப்புச்சீட்டு

47) அ) அதிகாரம் ஆ) பரந்து, ஒடுங்கிய

48) அ). ஆரம்ப பொதியிடல் ஆ) இரண்டாம்நிலை பொதியிடல்
இ) போக்குவரத்து பொதியிடல்

49) i) மிலங்கா விலைச்சுட்டெண்
ii) மொத்த வருவாய் விலைசுட்டெண். / மொத்ததிரும்பல் விலைச்சுட்டெண்
iii) மொத்த பங்கு விலைசுட்டெண் / அனைத்து பங்குவிலைச் சுட்டெண்

50) 1) கணித்தல தொழில்நுட்பம்
2) தொடர்பாடல் தொழில்நுட்பம்
3) தகவல்முகாமைத்துவத் தொழில்நுட்பம்

பகுதி -1

1. 1) உற்பத்தியின் தன்மையடிபடையில்
உற்பத்தித்துறையின் அடிப்படையில்
உரிமையின் அடிப்படையில்
நோக்கத்தின் அடிப்படையில்
அளவின் அடிப்படையில்

(4x1=4 புள்ளி)

2) அ) ஒரு குறித்த வேலையினை பல்வேறு பகுதிகளைப் பிரித்து ஒவ்வொரு தனிநபரிடம் அல்லது குழுவிடம் ஒப்படைத்து உற்பத்தியை மேற்கொள்ளுதல் தொழிற்பிரிப்பு அல்லது தொழிற்பிரிப்பு முறையிலான உற்பத்தி எனப்படும்

(01 புள்ளி)

ஆ) அனுகூலம்

உற்பத்தியின் வேகம் அதிகரித்து உற்பத்தி அதிகரிக்கும்
உற்பத்திப் பொருட்களின் தரம் உயரும்
விண்விரயங்கள் தவிர்க்கப்படும்
வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும் (01 புள்ளி)

பிரதிகூலம்

ஒரு பகுதியில் ஏற்படும் தாமதம் முரு உற்பத்தியையும் தாமதமடையச்செய்யும்
தொடர்ச்சியாக ஒரே பகுதியில் வேலை செய்வதால் சலிப்பும் மனச்சோர்வும் ஏற்படும்
ஒருவர் வேலையில் இருந்துவிலகும் போது வேறு வேலையைத் தேடுவது சிரமம்

இ) ஒரு தொழிலை ஒருவர் திரும்பத் திரும்ப ஆற்றுவதனால் அத்தொழில் தொடர்பாக அவர் அடைந்து கொள்ளும் அனுபவம் ஆற்றல். திறமைகள் நிபுணத்துவம் என்பன சிறப்புத் தேர்ச்சியாகும.

(3) அ) 

| அக்கறை செலுத்தும் தரப்பினர் | காரணம் |
|---|---|
| உரிமையாளர் | இலாபம். அபிவிருத்தி,சந்தைப்பங்கு |
| முகாமையாளா | இலாபம். அபிவிருத்தி, தீர்மானங்களின்வெற்றி, தொழில் விருத்தி |
| ஊழியர்கள் | சம்பளம். தொழில்திருப்தி. பதவிஉயர்வு |
| வழங்குனர்கள் | கட்டளையை தொடர்ந்தும் பெறுதல் பணத்தை மீளப்பெறுதல் |
| அரசு | வரி. வேலை வாய்ப்பு,.பொருளதாரஅபிவிருத்தி |
| சமூகம் | சூழலைப் பாதுகாத்தல். வேலை வாய்ப்பு |

(4x1/2=2 புள்ளி)

ஆ) உரிமையாளர் - வாழ்தன்மையினை உறுதிப்படுத்த
ஊழியர்கள் - வினைத்திறனை உயர்த்துதல்,.திருப்தி ஏற்படுத்தல்
கடன் வழங்குநர்கள்- தேவைப்படும் நிதியை திரட்டல்
அரசு - சலுகைகளைப்பெற. உட்கட்டமைப்பு வசதிகளைப்பெற
வாடிக்கையாளர் - பொருட்கள் சேவைகளுக்கான சந்தையினைப் பாதுகாத்துக்கொள்ள

4) பல்வேறு துறைகளிலும் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை வணிகங்களுக்கு சந்தர்ப்பங்களை உருவாக்கி உள்ளது. இது சாதகமானதன்மையாகும். அதே வேளை சில வணிகங்களுக்கு சவாலாகி அமைந்துள்ளன. இது பாதகமான தன்மையாகும்.

விளக்கம் - சந்தர்ப்பங்களை உருவாக்குதல் - 2 புள்ளி
சவாலாக அமைதல் - 2 புள்ளி

5) ♦ உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
மின்சாரம், காப்புறுதி, போக்குவரத்து, தொடர்பாடல் வசதிகளை வழங்கல்.

♦ போட்டியாளரொருவராதல்
தனியார் நிறுவனங்களுக்கு போட்டியாக அரச நிறுவனங்களை உருவாக்குதல்

♦ கொள்கைகளை உருவாக்குதல்.
கொள்கை, விதிகள் என்பவற்றை உருவாக்கி கட்டுப்படுத்துதல்.

♦ சட்டங்களை விதித்தல்
வணிக நிறுவனங்களை சட்டங்களால் கட்டுப்படுத்துதல்

♦ ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்
வரிச்சலுகைகள், ஏனைய நிறுவன ரீதியான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

♦ வரி அறவீட்டாளரொருவராதல்
தனிநபர் வணிகங்களின் வருமானத்திற்கு வரி விதித்தல்.

குறிப்பிடல் - 4 x 1/2 = 2 புள்ளி
விளக்கம் - 4 x 1/2 = 2 புள்ளி

02) 1. ♦ சுயேட்சையாக
♦ முழுமையான ஏற்றுமதி பரிசோதனை மூலம்
♦ இறக்குமதி பரிசோதனை மூலம்
♦ SLS சான்றுபடுத்தப்பட்ட இலட்சினை முறை மூலம்
♦ ஏற்றுமதிக்காக தயாரிக்கப்பட்ட கடலுணவுப் பொருட்கள் பரிசோதனை மூலம்
(4 விடயத்திற்கு 04)

2. அ) இலங்கை மத்திய வங்கி (1 புள்ளி)
ஆ) i. தொகைக்கடன் கட்டுப்பாடு
ii. தெரிவுக்கடன் கட்டுப்பாடு (1 புள்ளி)

♦ தொகைக்கடன் கட்டுப்பாட்டுகருவி
வங்கி வீதம்
ஒதுக்கு வீதம்
பகீரங்க சந்தை நடவடிக்கை

♦ தெரிவுக் கடன் கட்டுப்பாட்டுக்கருவி
1. வணிக வங்கிகளால் வழங்கப்படுகின்ற கடன்களுக்கு உச்ச முதிர்வுக் காலத்தை நிர்ணயித்தல்
2. புதிதாக வழங்கப்படும் கடன்களுக்கு உச்ச வரையறைகளை நிர்ணயித்தல்.
3. வணிக வங்கிகளின் மூலதனத்திற்கும் சொத்துக்களுக்குமிடையில் ஆகக் குறைந்த விகிதத்தினை நிர்ணயித்தல்
4. நாணயக் கடிதங்களை வழங்கும் போது வைப்புச் செய்யவேண்டிய ஆகக் குறைந்த பண அளவை நிச்சயித்தல். (2 புள்ளி)

3. அ) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி (1 புள்ளி)
ஆ) அமைப்பு அகவிதி
இயக்குனர் சம்மதக் கடிதம்
செயலாளர் சம்மதக்கடிதம்
கம்பனியின் பெயர் ஏற்கனவே கம்பனிகளுக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்தும் கூற்று (2 புள்ளி)

இ) வேலை வாய்ப்பு
அந்நிய செலாவணி
பங்குச் சந்தை வளர்ச்சி
பொருளாதார வளர்ச்சி (2x 1/2=1 புள்ளி)

4. **அனுகூலம்**
பங்கு வழங்கி மூலதனம் திரட்டலாம்
இயக்குனர் சபை நிர்வாகம்
நீடிய வாழ்வுத் தன்மை
வரையறுக்கப்பட்ட பொறுப்பு
சட்ட ஆளுமை (1/2 x 4 = 2 புள்ளி)

**பிரதிகூலம்**
இரட்டை வரிவிதிப்பு (பங்கு இலாப வரி, கம்பனி இலாப வரி)
உருவாக்கும் நடைமுறை கடினம்
அரச தலையீடுகள் இருத்தல்
சட்டக்கட்டுப்பாடுகள் அதிகம். (1/2 x 4 = 2 புள்ளி)

5. அ) குறித்த பொருள் / சேவையை வழங்கும் ஒரு வணிக நிறுவனம் அப்பொருளை அல்லது சேவையை குறித்த ஒரு சந்தையில் விற்பனை செய்வதற்கு மற்றொரு வணிக நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் அளிப்பதற்காக பயன்படும் வணிக அமைப்பு முறை ஆகும். (1 புள்ளி)

ஆ) 1. உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம்
(உ+ம்) பெற்றோல் நிரப்பு நிலையம்
2. உற்பத்தி அங்கீகார வணிகம்
(உ+ம்) செலிங்கோ
3. வணிக முறைக்கான அங்கீகார வணிகம்
(உ+ம்) KFC, பீஷா

03)
1. அ) * சுய ஆக்கத்தில் ஈடுபடவுள்ள ஆர்வம்
* பொழுது போக்காகச் செய்கின்ற கருமம் வணிகமாக மாறியமை
* புதுமைகள் செய்ய வேண்டும் என்ற உந்துதல் (2x1/2 = 1 புள்ளி)

ஆ) * சந்தர்ப்பங்களை இனங்காணலும் செயற்படுத்தவுமுள்ள தேர்ச்சி
* வேலையில் உயர்ந்த பண்பினைப் பேணுவதில் கவனம் செலுத்துதல்.
* அர்ப்பணிப்புடன் வேலையில் ஈடுபடுதல்
* செல்வாக்குச் செலுத்தும் திறன்
(மகிழ்ச்சி, புன்முறுவல், அன்பான பேச்சு)
* செல்வாக்கு உத்திகளைப் பயன்படுத்துதல் (4x 1/2 =2 புள்ளி)

இ) * வேலைவாய்ப்பு
* பிரதேச வளங்கள் பயன்படுத்தப்படல்
* புதிய சேவைகளை நுகரும் சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைத்தல்
(2x1/2 = 1 புள்ளி)

2.)

| அளவு ரீதியான அளவீடு | பண்பு ரீதியான அளவீடு |
|---|---|
| செய்யப்பட்ட மூலதன முதலீடு<br>ஊழியர் எண்ணிக்கை<br>வருடாந்தப் புரள்வு<br>உற்பத்தி இயலுமை<br>பயன்படுத்தும் வலு<br>நிலையான சொத்துப் பெறுமதி | பயன்படுத்தும் தொழில் நுட்பம்<br>வணிகத்தின் தன்மை<br>சந்தையின் தன்மை<br>வணிக அமைப்பு முறைமை<br>பயன்படுத்தும் முகாமைத் தொழிநுட்பம் |

(4 புள்ளி)

3) அ) Visa கடன் அட்டை
Master கடன் அட்டை
வரவு அட்டை (Debit card)
Smart அட்டை

(4x 1/2 =2 புள்ளி)

ஆ) தன்னியக்க ரெலர் இயந்திரம்
இலத்திரனியல் நிதி மாற்று விற்பனை
தொலைபேசி வங்கி வசதிகள்
இணைய வங்கி வசதிகள்

(4x 1/2 =2 புள்ளி)

4)
அ)

| வங்கிப் பணம் | அண்மிய பணம் |
|---|---|
| நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளருக்குரியது. | சேமிப்பு, நிலையான வைப்புக்கள், வணிகத் தாள்கள், திறைசேரி உண்டியல், முறிக்குரியது. |
| வட்டி இல்லை | வட்டி உண்டு |
| அண்மிய பணத்தை விட திரவத்தன்மை கூடியது | வங்கிப்பணத்தை விட திரவத்தன்மை குறைந்தது. |
| காசோலைகள் மூலமே கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம் | பணக்கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம் |
| வைப்புப் புத்தகம் இல்லை | சேமிப்பு வைப்புக்கு வைப்புப் புத்தகம் உண்டு. |

(4x 1/2 =2 புள்ளி)

ஆ)
- பொதுவாக ஏற்றுக்கொள்ளும் தன்மை
- நீண்டகாலத்திற்குப் பயன்படுத்தும் தன்மை
- அருமைத் தன்மை
- இலகுவாகக் கொண்டு செல்லக்கூடிய தன்மை
- இனங்காணக் கூடிய தன்மை
- சிறிய அலகாகப் பிரிபடும் தன்மை

(4x 1/2 =2 புள்ளி)

5)
அ)
- திகதி
- வங்கி கிளை அமைந்துள்ள இடம்
- பெறுபவரின் பெயர்/ கொண்டுவருபவரிடம் எனும் பதம்
- தொகை எழுத்திலும் இலக்கத்திலும்
- செலுத்துக எனும் பதம்
- கட்டளை இடுபவரின் பெயர்
- காசோலை இலக்கம், வங்கியின் இலக்கம், கிளையின் இலக்கம்
- கணக்கிலக்கம்
- மின்காந்த மையப்பகுதி

(8x 1/4 =2 புள்ளி)

ஆ) • பெறுபவர் மூலம் காசோலையை வங்கியில் வைப்புச் செய்யும் போது
• கட்டளை / உத்தரவுக் காசோலை ஒன்றாயின் வேறொரு நபருக்கு வழங்கும் சந்தர்ப்பத்தின் போது
• குறுக்குக் கோடிடப்படாத காசோலையொன்றை வங்கிக் கரும பீடத்தில் சமர்ப்பிக்கும் போது

(2x 1 =2 புள்ளி)

04)

1. அ) • தீயும் ஆதனமும் காப்புறுதி
• செயல் விளைவுக் காப்புறுதி
• பொதுமக்கள் பொறுப்புக் காப்புறுதி
• களவு அபாயக் காப்புறுதி
• மோட்டார் வாகனக் காப்புறுதி
• ஊழியர் சுகாதாரக் காப்புறுதி

(வேறு பொருத்தமானவற்றையும் கவனிக்குக.) (6x 1/2 =3 புள்ளி)

ஆ) மிகப்பெரிய பெறுமதி கொண்ட சொத்து தொடர்பான நட்ட அச்சத்தினை பல காப்புறுதி நிறுவனங்களில் ஒன்று சேர்ந்து பொறுப்பேற்றல் (1 புள்ளி)

2. அ) அனுப்புபவர்
செய்தி
ஊடகம்
பெறுபவர்
துலங்கல்
பின்னூட்டல் (3x 1/2 =11/2 புள்ளி)

ஆ) செய்தியின் தன்மை
முழுமை
சரியான தன்மை
செய்தியைப் பெறுபவருக்கு விளங்கக் கூடிய தன்மை
சுருக்கமான தன்மை
உறுதியான தன்மை (5x 1/2 =21/2 புள்ளி)

3. A. திரவம், வாயு போன்ற திரவியங்களை போக்குவரத்து செய்வதற்காக பயன்படுத்தும் முறை.
B. உயர்வான இடம் ஒன்றிலிருந்து தாழ்வான இடம் ஒன்றுக்கு கம்பியை பயன்படுத்தி வாகனங்களை நகர்த்தும் முறை
C. அண்டவெளியை நோக்கி பயணிகளையும் பொருட்களையும் இடம் நகர்த்துதல் (உ+ம்) விண்வெளி ஓடம்
D. நபர்கள் மற்றும் பொருட்களை மிருகங்களைக் கொண்டு நகர்த்தும் முறை

(4x 1 =4 புள்ளி)

4. அ) 1. விளையாட்டு நுழைவுச் சீட்டுக்கள்
2. வீடியோ
3. ஓடியோ
4. விமான பயணச் சீட்டு
5. மற்றும் பொருத்தமான விடைகள் (2 புள்ளிகள்)

ஆ) 1. இணைய அறிவுள்ளவர்கள்
2. படித்த இளைஞர்கள்
3. தொழிலில் ஈடுபடுவோர்
4. நிதி வசதி படைத்தோர் (2புள்ளி)

5. அ) எந்தவொரு தடையும் இன்றி பல்வேறு பிரிவினர்களும் சுதந்திரமாக பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதான ஒரு நிலையாகும். (2 புள்ளிகள்)

ஆ) 1. இறக்குமதிகளை மட்டுப்படுத்தல்
2. ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தல்
3. ஏற்றுமதி இறக்குமதிகளைத் தடை செய்தல்
4. வர்த்தக ஒப்பந்தங்கள்
5. இறுக்கமான செலாவணிக் கொள்கைகள்

( 4 விடயத்திற்கு 2 புள்ளிகள்)

## பகுதி II

5.

1. ஆளிடைத் தொடர்புறும் வகிபாகம்
தகவலளிப்பு வகிபாகம்
தீர்மான வகிபாகம்

2. அ) 1. அமைப்பின் தூரநோக்கினையும் இலக்கினையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக அனைவரினதும் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு
2. உயர்ந்த சாதனைகளைப் பெறுவதற்காக ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு.
3. பல்வேறு பிரிவுகளில் கருமமாற்றும் ஊழியர்களுடைய வெவ்வேறு கருமங்களை ஒன்றிணைத்து வழிநடத்துவதற்கு.
4. அமைப்பின் பல்வேறு உப பிரிவுகளில் தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கு
5. அமைப்பின் கருமங்களைக் கட்டுப்படுத்துவதற்கு
6. உதவியாளர்களின் தன்னம்பிக்கையினையும் மனோபலத்தையும் உறுதிப்படுத்துவதற்கு.

ஆ) 1. மையப்படுத்தப்பட்டிருத்தல்
2. பன்முகப்படுத்தல்
3. திணைக்களப்படுத்துதல்
4. கட்டளைச் சங்கிலி
5. விசால அளவு
6. சட்டதிட்டங்களும் செயற்பாட்டு விதிமுறைகளும்
7. பதவிகள்

3. அ) 1. ஊழியர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்த முடியுமாயிருத்தல்
2. சிறந்த தொழிலாளர்-தொழில் கொள்வோர் உறவு
3. ஊழியர்களின் சிறப்புத் திறமைகளினால் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
4. வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெற முடிதல்
5. நிறுவன குறிக்கோளையும் இலக்கினையும் அடைந்து கொள்ள முடிதல்
6. திருப்திகரமான ஊழியர் குழுவினரை உருவாக்க முடிதல்

ஆ) நிதிசார் ஊக்குவித்தல் முறை
(உ+ம்) கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்
ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுத்தல்
நிறுவன உற்பத்திப் பொருளை மலிவு விலையில் வழங்கல்

நிதிசாராத ஊக்குவிப்பு முறைகள்

(உ+ம்) 1. பதவியுயர்வு வழங்கல்

2. பயிற்றுவித்தல்

3. சுகாதார வசதிகளுடனான விடுதி, உணவு குடிபானங்கள், சீருடைகள் என்பவற்றை பெற்றுக் கொடுத்தல்.

4. தொழிற்பாதுகாப்பை உருவாக்கிக் கொடுத்தல்

5. பொருத்தமான வேலைச் சூழலை உருவாக்கிக் கொடுத்தல்

6. முகாமையுடன் ஊழியர்களைத் தொடர்புபடுத்தல்.

7. சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல்

4. அ) 5 வாரம்

ஆ) 06 வாரம்

இ) 600 அலகுகள்

5. 1. முகாமைத்துவத்தினை வினைத்திறனாக பயன்படுத்திக் கொள்ளல்

2. நவீன தொழில்நுட்பவியல்களைப் பயன்படுத்திக் கொள்ளல்

3. நிதிசார்ந்த, நிதிசாராத ஊழியர் ஊக்குவிப்புக்களை வழங்கல்

4. தீர்மானம் எடுத்தலுக்கு ஊழியரது பங்களிப்பை பெற்றுக் கொள்ளல்

5. தர வட்டத்தைப் பயன்படுத்துதல்

6. பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்காக மீள்சுற்றுவட்டச் செயற்பாட்டினை மேற்கொள்ளல.

7. பல்லினத் தன்மை கொண்ட உற்பத்தியை மேற்கொள்ளல்

6.

1.அ) நிறுவனம் இலாபமும் நட்டமும் இன்றி இயங்குவதற்கு உற்பத்தி செய்யவேண்டிய ஆகக் குறைந்த வெளியீட்டின் அளவு இலாப நட்டமற்ற புள்ளி / சமப்பாட்டுப் புள்ளி ஆகும்.

$$BEP = \frac{\text{Total Fixed cost}}{\text{Contribution}} = \frac{\text{மொ. நி. செலவு}}{\text{ஒரு அலகிற்கான பங்களிப்பு}}$$

(வாய்ப்பாடு இருப்பினும் 1 புள்ளி கொடுக்கவும்)

ஆ) தரவட்டம் :- தரத்தினை பேணுவதற்காக ஒரே தொழிலில் ஈடுபடும் ஊழியர்கள் குறித்த கால இடைவெளியில் சந்தித்து கலந்துரையாடுவதன் மூலம் உற்பத்தியின் போது தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அதற்கான திர்வுகளை மேற்கொள்வதன் மூலம் தரத்தினை பேணும் முறையாகும்.

முழுதர முகாமை :- நிறுவனத்தின் உற்பத்தி தொடர்பான தரக்கட்டுப்பாட்டுக்காக பணிகளில் ஈடுபட்டுள்ள எல்லா ஊழியர்களது ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படும். எல்லா ஊழியர்களும் சரியானவற்றைச் சரியான முறைப்படி எப்போதும் செய்தல் வேண்டும்.

JIT:- வாடிக்கையாளர்களின் கட்டளைகளைப் பெற்ற பின் உடன் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் தந்திரோபாயம் இதுவாகும். சரியான நேரத்தில் சரியான அளவுகளில் பயன்படுத்துவதன் மூலம் தரத்தினை பேண உதவுகின்றன. இருப்பு வைத்தல், களஞ்சிய வசதி, இருப்புக்கள் மீதான நிதிமுடக்கம், இருப்புக்கள் பழமையாதல் போன்றவற்றினைக் குறைத்துக் கொள்ளலாம்.

EOQ :- களஞ்சியத்தில் பேணலுக்கும் கட்டளைக்கும் ஆகும். கிரயத்தை இழிவுபடுத்திக் கொள்வதற்காக கணிக்கப்படுவது பொருளாதார கட்டளையிடும் அளவு ஆகும். இதனை பின்வருமாறு கணித்துக் கொள்ள முடியும்.

$$EOQ = \sqrt{\frac{2\,Od}{h}}$$

Q- உருப்படிக்கான கட்டளைக் கிரயம் - Ordering Cost
d- உருப்படிக்கான கேள்வி - Demand
h- அலகுக்கான பேணல் கிரயம் - Holding Cost

(3 புள்ளி)
(1+3 = 4 புள்ளி)

2. வணிகருக்கு

1. வாடிக்கையாளர்களை உருவாக்குவதற்கும் அவர்களைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு
2. நிறுவனத்தின் வெற்றியினைத் தொடர்ந்து பேணுதல்
3. இலாபம் பெறுதலை தொடர்ச்சியாகப் பேணிச் செல்வதற்கு
4. உரிமையாளர்கள் ஊழியர்களின் திருப்தி மேம்படுவதற்கு
5. போட்டி நிலமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள
6. சந்தைப்பங்கின் அளவினை விரிவாக்கிக் கொள்ள (4x 1/2 =2 புள்ளி)

நுகர்வோருக்கு

1. தான் செலவிடுகின்ற பணத்திற்கு உச்சதிருப்தியை பெற்றுக் கொள்வதற்கு
2. சந்தை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதனூடாக நுகர்வோர் விளக்கத்தைப் பெறல்
3. சந்தையில் பொருட்களும் சேவைகளும் தாராளமாகக் கிடைக்கப் பெறுதல்
4. மிகவும் இலகுவாக பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு
5. பல்வேறு பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்வதற்கு.

3. 1. தொடர்பாடல் வழி
(உ+ம்) செய்திப் பத்திரிகை, தொலைபேசி, வானொலி, இன்ரநெட் போன்ற ஊடகங்களைப் பயன்படுத்துதல்.

2. விநியோக வழி
(உ+ம்) மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி, முகவர்

3. சேவை வழி
(உ+ம்) களஞ்சியம், போக்குவரத்து, வங்கி, காப்புறுதி போன்ற துணைச் சேவைகள்

வழிகள் 1 புள்ளி
(உ+ம்) க்கும் 1 புள்ளி வீதம் 3 புள்ளி)
(1+3=4 புள்ளிகள்)

4. வியாபாரக் குறி

அ) 1. தேசிய சின்னம் : உற்பத்தியாளரொருவர் தனது உற்பத்தியினை தனிச் சின்னத்தின் கீழ் வியாபாரச் சந்தைக்கு முன் வைக்குமானால் அது தேசிய சின்னம் எனப்படும்
உ-ம்: IBM, Cococala

2. குடும்பச்சின்னம் : குறித்த ஒரு நிறுவனம் தனது சகல உற்பத்திகளுக்கும் (பொருட்தொகுதிக்கு) ஒரே வியாபாரப் பெயரை பயன்படுத்துமானால் அதுவே குடும்பக் குறியாகும்.

3. பொருள் சின்னம் : ஒவ்வொரு பொருள்வகைக்கும் வேறு வேறான வியாபாரக் குறிகள் பயன்படுத்தப்படுமானால் அது பொருள் சின்னம் எனப்படும். ஒரு பொருள் வகைக்கு மட்டும் உரிய குறியாகும்.
உ-ம் : யுனிலிவரின் உற்பத்திகளான சன்லைட், சிக்னல், லக்ஸ்

4. தனிப்பட்ட சின்னம் : உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்து வியாபாரி அவ் உற்பத்திப் பொருட்களுக்கு உருவாக்கும் குறியீடு.

உ-ம்: அரலிய சீனி, K.S.R. அரிசி ( 1புள்ளி)

பக்கச் சார்பு :- வியாபாரக் குறி சொல்லிப் பொருளை கோருதல்
வியாபாரக் குறி முன்னுரிமை
வியாபாரக்குறிநிலை இனம்காணல் (1 புள்ளி)

ஆ) பொருள் அபிவிருத்திக் கட்டம்
அறிமுகக் கட்டம்
அபிவிருத்திக் கட்டம்
முதிர்ச்சிக் கட்டம்
வீழ்ச்சிக்கட்டம் (முழுமையாக எழுதியிருப்பின் 2 புள்ளி)
(1+1+2 = 4 புள்ளி)

5.
1. விலைக்குறைப்பு
2. மாதிரி
3. கூப்பன்
4. விலைக்கோவை
5. பணத்தை மீளளித்தல்
6. பரிசு
7. அதிஸ்டலாபச் சீட்டு
8. பயன்படுத்தி பார்க்க வாய்ப்பளித்தல்
9. உத்தரவாதம்
10. இணைந்த மேம்படுத்தல்
11. கொள்வனவுக்கான இடத்தில் காட்சிப்படுத்தல்
12. கொடை
13. வியாபாரக் காட்சிகளும் மாநாடுகளும்
14. விற்பனைப் போட்டி
15. விசேட விளம்பரம்

(ஏதாவது 8 விடை கூறுதல் (8x 1/2 =4 புள்ளி)

07)

1. அ)

$$\frac{\text{கடன் மூலதனம்}}{\text{உரிமை மூலதனம்}}$$

$$\frac{450000}{650000}$$

= 0.89

ஆ) கடன் மூலதனத்துடன் ஒப்பிடும் போது உரிமை மூலதனத்தின் பங்கு உயர்வாக இருப்பதனால் தாழ் மூலதன இணைப்பினை நிறுவனம் கொண்டுள்ளது.

2.

அ) பிரதான பலகை (Main Board)
திரசவி பலகை (Derasavi Board)

- வழங்கிய மூலதனம் 75m ரூபா விரிவுத்தொகையாக காணப்படல் வேண்டும்
- குறைந்தது 3 வருடம் தொடர்ச்சியாக இயங்கி இருத்தல்
- வழங்கிய மூலதனத்தில் 25% பொதுமக்களிற்கு விநியோகிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

ஆ)

- பங்குச் சந்தை நடவடிக்கைகள் யாவும் கணனி மயப்படுத்தப்பட்டமை
- Dex சந்தை முறைமை உருவாக்கம்
- தன்னியக்க கணனித்திரை முறை அறிமுகம்
- சர்வதேச நிதியியல் நிபுணர்களின் ஆலோசனை பெறப்படுதல்.

3. அ) ஊழியர் தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் அது பின்வரும் வழிகளில் இடம்பெறும்.
1. பதவி உயர்வு
2. பதவி நீக்கம்
3. பதவி இறக்கம்

4. வேலையை முடிவுறுத்தல் ( 2 புள்ளி)

ஆ) A- தொழில்தருநர்களுக்கான அனுகூலம்

1. முடிவுப் பொருளில் தரரீதியான பண்பு உயர்வடையும்
2. பணியாளர்களினால் ஏற்படும் தவறுகள் குறைவடையலாம்.
3. பணியாளர்களின் செயற்பாட்டு அடைவு மேம்பாடடைதல்.

(1/2x2 =1 புள்ளி)

B- பணியாளரிருக்காக அனுகூலம்

1. செயற்பாட்டு அடைவு உயர்வடையும்
2. ஊழியரின் வாண்மைப் பெறுமதி உயர்வடையும்
3. தொழிலில் திருப்தி அதிகரிக்கும்
4. பதவி உயர்வுகளை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் அதிகரித்தல்

(1/2x2 =1 புள்ளி)

4. வேலை விபரணம்

வேலை ஒன்றுடன் தொடர்பான வேலை விபரங்களை வெளிப்படுத்துவதாகும். (1 புள்ளி)

வேலை குறித்துரைத்தல்

வேலையை மேற்கொள்ள வேண்டிய நபர் ஒருவருக்கு தேவைப்படும் தொழில் தகமையைக் குறிப்பிடுவது. ( 1புள்ளி)

ஆ) வேலை விபரணம்

1. பதவியின் பெயர் :- உதவிக் கணக்காளர்
2. நியமனத்தின் தன்மை :- நிரந்தரம்
3. தரமும் சம்பள அளவுத்திட்டமும் :- தரம் II வருட சம்பளம் 25000 x 12
4. வேலை நேரம் :- 8.30 am - 4.15 pm
5. கடமையாற்ற வேண்டிய பகுதி :- நிதிப்பகுதி
6. வகை கூற வேண்டிய அலுவலர் :- பிரதம கணக்காளர்
7. கடமைகளும் பொறுப்புக்களும் :- வவுச்சர்களைப் பரிசீலித்தல்
   காசேடு, சில்லறைக் காசேடுகளைப் பராமரித்தல்
   வங்கிக் கணக்கு, வங்கிக்கணக்கிணக்கக் கூற்று தயாரித்தல்
   சம்பளப் பட்டியல் தயாரித்தல்
8. மேற்பார்வை செய்யும் அலுவலர் :- பிரதம கணக்காளர்
9. தகுதிகாண் காலம் :- 01 வருடம்

(பூரண விடைக்கு - 2 புள்ளி)

08)

1. பயன்படுத்தப்படும் அளவு (ஊழியர் குழு)
பாவனை / செயற்பாட்டிற்கேற்ப
தொழிற்பாடுகளின் அடிப்படையில் (2x 1/2 =1 புள்ளி)

TPS DSS
KWS ESS
OAS
MIS (6x 1/2 =3 புள்ளி)

2.

| | சந்தைப்படுத்தல் | நிதி கணக்கீடு | செயற்பாடு | ஆராய்ச்சி அபிவிருத்தி |
|---|---|---|---|---|
| 1. | சந்தை ஆராய்ச்சி | நிதி எதிர்வு கூறல் | கொள்கைத் திட்டமிடல் | உற்பத்தி ஆய்வு |
| 2. | விற்பனை எதிர்வுகூறல் | மூலதன பாதிடல் | கணனியுடனான இணைந்த உற்பத்தி | உற்பத்தி அபிவிருத்தி |

3. வணிகத் திட்டமொன்றில் உள்ளடங்கியுள்ள அடிப்படை விடயங்களை பொழிப்பாக்கிக் காட்டுக.
பகுதி நிறைவேற்றுச் சுருக்கமாகும். (1 புள்ளி)

முழு வணிகத்திட்டம் தொடர்பாகவும் முன்னுணர் நோக்கினை உருவாக்குதல்
வணிகத்திட்டம் தொடர்பான வழிகாட்டல்
வணிகத்திட்டம் தொடர்பான நம்பிக்கையொன்றினை உருவாக்கல் (3x 1 =3 புள்ளி)

4. அ) சந்தை போட்டித்தன்மை, விநியோக சந்தைப்படுத்தல் வழிமுறைகள், விற்பனை போன்றவை தொடர்பான தகவல்களை விரிவாக முன்வைத்தல் சந்தைப்படுத்தல் திட்டமாகும்.

தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்வதற்கும்
வழங்கப்படுகின்ற வசதியாகும். (2 புள்ளி)

5. வணிகத்திட்டம் வினைத்திறன் அற்றிருத்தல்
காலவரையறை இல்லாமை
சூழல் காரணிகளைக் கருத்தில் கொள்ளாமை
ஊழியர்களின் ஒத்துழைப்பின்மை.
நெகிழும் தன்மை கொண்டிராமை (4x1 =4 புள்ளி)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

**கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011**

## கணக்கீடு

| 33 | T | I |
|---|---|---|

**மாதிரி வினாத்தாள் - 1**

தரம் -13     பகுதி I     இரண்டு மணித்தியாலம்

**கவனிக்க**

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக
இலக்கம் 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளில் சரியான விடையைத் தெரவு செய்து அதற்குரிய இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.

01. கணக்கீட்டின் அடிப்படை நோக்கமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
 1. கொடுக்கல் வாங்கல்களை கணக்குகளில் பதிவு செய்தல்
 2. தீர்மானமெடுத்தலுக்கான தகவல்களை பாவனையாளர்களுக்கு வழங்குதல்
 3. இலாபநட்ட நிலைமை, நிதி நிலைமைகளை அறிந்து கொள்ளல்
 4. உட்கட்சியினருக்கு தேவையான தகவல்களை வழங்குதல்
 5. பதிவு செய்த கொடுக்கல் வாங்கல்களை வகைப்படுத்தல்

( 2 )

02. நிறுவனமொன்றில் 01.04.2009 இல் மொத்த சொத்துக்கள் ரூபா 140,000 ஆகவும் பொறுப்புக்கள் ரூபா 60,000 அகவும் காணப்பட்டது. 31.03.2010இல் தேறிய சொத்துக்கள் ரூபா 120,000 ஆகவும் காணப்பட்ட வேளையில் நிதியாண்டுக்கான பற்றுக்கள் ரூபா 20,000 ஆகவும் மேலதிக மூலதனம் ரூபா 30,000 ஆகவும் காணப்பட்டது. இன் நிறுவனத்தின் 31.03.2010இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் / நட்டம் யாது?
 1. நட்டம் ரூபா 10,000
 2. இலாபம் ரூபா 10,000
 3. இலாபம் ரூபா 30,000
 4. நட்டம் ரூபா 40,000
 5. நட்டம் ரூபா 30,000

( 3 )

03. சுலைமான் நிறுவனம் சிமித் என்பவருக்கு விற்பனைவிலையில் 20% இலாபம் வைத்து ரூபா 12000 பட்டியலிடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பொருளில் 40% மானவை மாதிரிக்கு ஒவ்வாமையால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. மேற்படி நடவடிக்கை கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம்
 1. இருப்பு ரூபா 3840 ஆல் குறைவடையும், கடன்பட்டோர் ரூபா 4800 ஆல் அதிகரிக்கும் உரிமை ரூபா 960 ஆல் அதிகரிக்கும்
 2. இருப்பு ரூபா 4000 ஆல் அதிகரிக்கும் கடன்பட்டோர் ரூபா 4800ஆல் அதிகரிக்கும் உரிமை ரூபா 800ஆல் குறைவடையும்
 3. இருப்பு ரூபா 4800ஆல் அதிகரிக்கும் கடன்பட்டோர் ரூபா 4800 ஆல் குறைவடையும்
 4. இருப்பு ரூபா 3840 ஆல் அதிகரிக்கும் கடன்பட்டோர் ரூபா 4800ஆல் குறைவடையும் உரிமை ரூபா 960ஆல் குறைவடையும்
 5. இருப்பு ரூபா 4000 ஆல் குறைவடையும், கடன்பட்டோர் ரூபா 4800 ஆல் அதிகரிக்கும் உரிமை ரூபா 800ஆல் அதிகரிக்கும்

( )

04. ராதை நிறுவனம் 01.05.2010இல் ராதா நிறுவனத்திடமிருந்து ரூபா 12000பொறுமானங் கொண்ட தளபாடங்களை கொள்வனவு செய்தது தீர்ப்பவினை இரு மாதங்களுள் 10% கழிவுடன் காசோலை மூலம் மேற்கொண்டது. இவற்றுக்கான மூல ஆவணங்கள் கொண்ட தொகுதி எது
 1. கைச்சாத்து, அடிஇதழ்
 2. பட்டியல், கைச்சாத்து
 3. பட்டியல், அடிஇதழ்
 4. பட்டியல், பற்றுச்சீட்டு
 5. நாட்குறிப்புகச்சாத்து, அடிஇதழ்

( )

05. கடன்பட்டோர் கணக்கிலும் கடன்கொடுத்தோர் கணக்கிலும் சிலவேளைகளில் எதிர் மீதிகள் ஏற்படுகின்றன அவ்வாறான சந்தர்ப்பம் அல்லாத தகவலினைத் தெரிவு செய்க.

1. கடன்கொடுத்தோர் கணக்கின் வரவுப் பக்கத்தில் பெற்ற கழிவினையும் கடன்பட்டோர் கணக்கின் செலவுப்பக்கத்தில் கொடுத்த கழிவையும் பதிதல்
2. பணக்கொடுப்பனவு, பெறுவனவுகளின்பின் திரும்பல்கள் ஏற்படல்
3. தவறுதலாக காசுப்பெறுவனவு தீர்ப்பனவு அதிகரித்தல்
4. முற்கொடுப்பனவு பெறுவனவுகளை அவதானித்காதுவிடல்
5. பட்டியல்கள் தவறுதலாக விடுபடல்

( )

06. சுரேஸ் நிறுவனமானது 31.03.2010இல் முடிவடைந்த ஆண்டின் போது மேற்கொடிருந்த ரூபா 9500க்கான கடன்விற்பனையொன்று தவறுதலாக கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 5900 என செலவு வைக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய காரணங்களினால் இப் பரீட்சை மீதியில்

1. செலவுப்பக்க கூட்டுத்தொகை 15400 ரூபாவினால் குறைவாக காணப்படும்
2. வரவுப்பக்க கூட்டுத்தொகை 15400 ரூபாவினால் குறைவாக காணப்படும்
3. செலவுப்பக்க கூட்டுத்தொகை 5900 ரூபாவினால் குறைவாக காணப்படும்
4. செலவுப் பக்க கூட்டுத்தொகை 3600 ரூபாவினால் குறைவாக காணப்படும்
5. வரவுப் பக்க கூட்டுத்தொகை 3600 ரூபாவினால் குவைாக காணப்படும்

( )

07. சமன் நிறுவனத்தினால் வைப்புச்செய்யப்பட்டு மறுக்கப்பட்ட காசோலை ரூபா 4500 ஆகவும் கொடுப்பனவிற்காக வழங்கப்பட்டு மறுக்கப்பட்ட காசோலை ரூபா 3400 ஆகவும் காணப்பட்டது. மறுக்கப்பட்ட காசோலைகள் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கணக்குகளுக்கு மாற்றப்படாத சந்தர்ப்பத்தில் அக் கணக்கு காட்டும் மீதி யாது?

1. ரூபா 1100 வரவு மீதி காணப்படும்
2. ரூபா 1100 செலவு மீதி காணப்படும்
3. ரூபா 7900 வரவு மீதி காணப்படும்
4. ரூபா 7900 செலவு மீதி காணப்படும்
5. ரூபா 4500 வரவுமீதி காணப்படும்

( )

08. குறித்த ஒரு நிறுவனம் மீள்விற்பனைக்காக கொள்வனவு செய்தபொருட்களில் 75%த்தினை விற்று முடித்துள்ளது. விற்பனை கிரயத்தினை செலவாகவும் மிகுதி 25%த்தினை இறுதி இருப்பாகவும் (சொத்தாகவும்) இனங்காணப்பதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கரு பின்வருவனவற்றுள் எது?

1. முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
2. பொருண்மை எண்ணக்கரு
3. தேறல் எண்ணக்கரு
4. வரலாற்க்குரிய எண்ணக்கரு
5. தொடர்ந்து செல் எண்ணக்கரு

( )

09. குத்தகையாளனிடமிருந்து பெறப்பட்ட குத்தகையாதனம் நிறுவனத்தின் ஐந்தொகையில் சொத்தாக காட்டுவதற்கு அடிப்படையாக அமைந்த எண்ணக்கரு

1. பாதுகாப்பு எண்ணக்கரு
2. பொருண்மை எண்ணக்கரு
3. வரலாற்று கிரய எண்ணக்கரு
4. தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
5. தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

( )

10. இறுதி இருப்பினை குறைவாக காட்டும்போது வருமானக் கூற்றின் உருப்படிகளில் ஏற்படும் தாக்கமாக அமைவது

1. விற்பனைக்கிரயம் கூடுதலாகவும் தேறிய இலாபம் குறைவாகவும் காணப்படும்
2. விற்பனைக்கிரயம் குறைவாகவும் தேறிய இலாபம் குவைாகவும் காணப்படும்
3. விற்பனைக்கிரயம் குறைவாகவும் தேறிய இலாபம் கூடுதலாகவும் காணப்படும்
4. விற்பனைக்கிரயம் கூடுதலாகவும் தேறியஇலாபம் கூடுதலாகவும் காணப்படும்
5. வருமானக் கூற்றின் என்ற உருப்படிகளிலும் தாக்கமெதனையும் ஏற்படுத்தாது

( )

11. சாது வியாபார நிறுவனமானது 01.01.2003 இல் ரூபா 430,000க்கு இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்தது. இதனை கொண்டுவருவதற்கு ரூபா 20,000 பொருத்துவதற்கு ரூபா 25,000 பழைய இயந்திரத்தை அகற்றுவதற்கு ரூபா 5000வும் செலவு ஏற்பட்டது. இதன் பயன்தரு ஆய்ட்காலம் 05 வருடங்களாகவும் இழிவுப் பெறுமதி ரூபா25,000 ஆகவும் காணப்பட்டது. இரண்டு வருடங்களின் பின்னர் மேலும் 05 வருடங்கள் பயன்படுத்தலாம் என தீர்மானித்தனர். இழிவுப் பெறுமதியில் மாற்றம் எதுவும் இல்லை. இத் தீர்மானத்தின் இரு வருடங்களின் பின்னர் குறித்த இயந்திரம் 200,000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்படின் அதனால் எழும் இலாபம் / நட்டம் யாது?

1. ரூபா 25,000 இலாபம்
2. ரூபா 38,000 நட்டம்
3. ரூபா 38,000 இலாபம்
4. ரூபா 13,000 நட்டம்
5. ரூபா 13,000 இலாபம்

( )

12. 2009 மார்ச் 31இல் கொடுக்கவேண்டிய மின்கட்டணம் 12,000 ஆக இருந்தது. 2010 மார்ச் 31இல் முடிவுற்ற வருடத்தில் செலுத்தப்பட்ட மின்கட்டணம் ரூபா 160,000 இதில் 2010 ஏப்ரல் 30இல் முடிவுற்ற காலாண்டுக்கான ரூபா 48000க்கான ஓர் பட்டியலை உள்ளடக்கியிருந்தது 2010மார்ச் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான மின்கட்டணமாக இலபநட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட வேண்டிய தொகை

1. ரூபா 132000
2. ரூபா 156000
3. ரூபா 164000
4. ரூபா 184000
5. ரூபா 172000

( )

13. வரையறுத்த தீபன் நிறுவனத்தின் 31.03.2009 அறவிடமுடியாக்கடனாக ரூபா 20,000 ஆகவும் 31.03.2010இல் ரூபா 23000 ஆகவும் காணப்பட்டது. ஐயக்கடன் ஏற்பாடானது 01.04.2009இல் ரூபா 10000 ஆகவும் 31.03.2010இல் ரூபா 12000 ஆகவும் காணப்பட்டது
31.03.2010இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக் கணக்கில் அறவிடமுயாக்கடன் ஐயக்கடன் என்பவற்றின் பெறுமதி யாது

1. ரூபா 5000
2. ரூபா 25000
3. ரூபா 30000
4. ரூபா 35000
5. ரூபா 45000

( )

14. மிதுலா கம்பனியானது மதன் நிறுவனத்திடமிருந்து ரூபா 250,000க்கு பண்டங்களை கொள்வனவு செய்தது, சுதன் நிறுவனத்திற்கு ரூபா 350,000க்கு பண்டங்களை விற்பனை செய்தது. மிதுலா நிறுவனம் 15% பெறுமதி சேர்வரிக்கு பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாகும். பெறுமதி சேர்வரிக்கு செலுத்திய தொகை ரூபா 10000 ஆகும். மேற்படி நடவடிக்கைகள் கடன்பட்டோர். கடன் கொடுத்தோர், பெறுமதி சேர்வரி ஏற்பாடு என்பவற்றில் காட்டும் தொகைகள்

1. ரூபா 287500. ரூபா 402500, ரூபா 5000
2. ரூபா 250000 ரூபா 350000 ரூபா 5000
3. ரூபா 250,000 ரூபா 350,000 ரூபா 15000
4. ரூபா 287500 ரூபா 402500 ரூபா 10000
5. ரூபா 287500 ரூபா 402500 ரூபா 15000

( )

15. ஊழியர் ஒருவருக்கு அறவீடுகள் நீங்கியபின் காசாக செலுத்திய சம்பளம் ரூபா 9000 ஆகும். ஊழியர் சேமலாபத்திற்கு ஊழியரிடமிருந்து 10%மும் வேலை செய்வோரிடமிருந்து 15%மும் பங்களிப்பு செய்யப்பட்டது. இலாபநட்டக் கணக்கிற்கும், ஊழியர் சேமலாபகணக்கிற்கும் செல்லவேண்டிய தொகைகள் யாவை

1. ரூபா 9000 ரூபா 1500
2. ரூபா 10000 ரூபா 1000
3. ரூபா 11500 ரூபா 2500
4. ரூபா 10000 ரூபா 2500
5. ரூபா 11500 ரூபா 1500

( )

16. கழகம் ஒன்றில் 100 அங்கத்தவர்கள் உள்ளனர். இவர்கள் 10 அங்கத்தவர்கள் ஆயுள்சந்தா உறுப்பினர்களாவர். ஒரு அங்கத்தவருக்கான மாதாந்த சந்தா ரூபா 10 ஆகும். ஒரு அங்கத்தவருக்கான ஆயுள் சந்தா ரூபா 3000 ஆகும். இது 10 வருடங்களுக்கு சமதொகைகளாக பதிவழிக்கப்படல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கை தொடர்பாக வருமானச் செலவுக் கணக்கிற்கு செல்லவேண்டிய சந்தாதொகையானது

1. ரூபா 11100
2. ரூபா 13800
3. ரூபா 15000
4. ரூபா 12000
5. ரூபா 12300

( )

17. அல்பேட், லில்பேட், லம்பேட், பங்குடமையின் 31.12.2010இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்ட பங்கு கணக்கு வருமாறு

| | | | |
|---|---|---|---|
| வருடாந்த இலாபம் | | | 165000 |
| மூலதனவட்டி | அல்பேட் | 15000 | |
| | வில்பேட் | 10000 | |
| | லம்பேட் | 5000 | (30000) |
| சம்பளம் | அல்பேட் | 15000 | |
| | வில்பேட் | 15000 | |
| | லம்பேட் | 15000 | (45000) |
| இலாபம் | அல்பேட் | 45000 | |
| | வில்பேட் | 30000 | |
| | லம்பேட் | 15000 | (90000) |

லம்பேட்டின் ஆகக் குறைந்த வருமானம் ரூபா 40000 ஐ சீராக்கச் செய்த பின்னர் அல்பேட், வில்பேட் ஆகியோரின் இறுதி இலாபப்பங்கு முறையே

1. 48000, 32000
2. 45000, 30000
3. 40000, 30000
4. 42000, 28000
5. 45000, 25000

( )

18. நிதிவருடம் 31.12.2010இல் முடிவடையும் ABC பங்குடமையின் முதன்நிலை பங்காளர் Aயும், Bயும் ஆவர். இப்பங்குடமையில் C என்பவர் 30.06.2010இல் பங்காளராக இணைந்துகொண்டார். இவர்களுள் A மட்டும் ஒவ்வொருமாத நடுப்பகுதியிலும் ரூபா 1000தினை 10% வருடாந்த வட்டியில் பற்றுவதை வழமையாக்கியுள்ளார். கால அடிப்படையில் முதல் ஆறுமாத இறுதி ஆறுமாத என்ற வகையில் இலாபநட்ட பகிர்கணக்கக் காணப்படவேண்டிய பற்றுவட்டி.

1. ரூபா 150, ரூபா 450
2. ரூபா 150, ரூபா 150
3. ரூபா 300, ரூபா 600
4. ரூபா 200, ரூபா 600
5. ரூபா 300, ரூபா 450

( )

19. மல்லிகை, முல்லை, ரோஜா பங்குடமையின் இலாபநட்டவிகிதம் 3:2:1 ஆகும். இப் பங்குடமையில் இருந்துரோஜா இளைப்பாறுகின்றார். அவ்வேளையில் பங்குடமை நிறுவனத்தில் ரூபா 30,000 நன்மதிப்பு தொகை காணப்பட்டது. இதனை ரூபா 60,000ஆக மதிப்பிட்டு பதிவழிக்கப்படுவதன தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் மூலதனக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. மல்லிகை,முல்லையினது மூலதனங்கள் முறையே பின்வருமாறு மாற்றமடையும்

1. மல்லிகையின் மூலதனம் 11000 தால் அதிகரிக்கும், முல்லையின் மூலதனம் 14000 தால் அதிகரிக்கும்
2. மல்லிகையின் மூலதனம் 11000 தால் குறைவடையும், முல்லையின் மூலதனம் 14000 தால் குறைவடையும்
3. மல்லிகையின் மூலதனம் 36000 தால் குறைவடையும், முல்லையின்மூலதனம் 24000 தால் குறைவடையும்
4. மல்லிகையின் மூலதனம் 36000தால் அதிகரிக்கும், முல்லையின் மூலதனம் 24000 தால் அதிகரிக்கும்
5. மல்லிகையின் மூலதனம் 15000 தால் அதிகரிக்கும் முல்லையின்மூலதனம் 10000தால் அதிகரிக்கும்

( — )

20. இலங்கை கணக்கீட்டு நியமம் 29 குறிப்பிடுவது

☐ 1. குத்தகை
☐ 2. கணக்கீட்டு கொள்கைகள்
☐ 3. ஏற்பாடுகள்
☐ 4. வருமானம்
☐ 5. அடிப்படை வழுக்கள்

( )

21. 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச்சட்டத்திற்கேற்ப வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி, பொதுக்கம்பனி என்னும் இரு கம்பனிகளிலும் ஆகக்குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை

☐ 1. தனியார்கம்பனி 01 பெதுக்கம்பனி 01
☐ 2. தனியார்கம்பனி 02 பெதுக்கம்பனி 07
☐ 3. தனியார்கம்பனி 07 பொதுக்கம்பனி 50
☐ 4. தனியார்கம்பனி 02 பொதுக்கம்பனி 10
☐ 5. தனியார்கம்பனி 02 பொதுக்கம்பனி 20

( )

22. கம்பனியொன்று 5000 பங்குகளை பங்கொன்று 30/= வீதம் வழங்கத் தீர்மானித்து இப்பங்குகளுக்கு விண்ணப்பத்தின்போது முழுப்பணமும் செலுத்தப்படல் வேண்டும் இப்பங்குகளில் A நிறுவனமானது 80% பங்குகளை 10% ஒப்புறுதித் தரகுடன் கொள்வனவு செய்ய உடன்பட்டது. பொதுமக்களால் 3000 பங்குகள் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டது. ஒப்புறுதித்தரகு யாது

☐ 1. 7200 ரூபா
☐ 2. 4000 ரூபா
☐ 3. 9000 ரூபா
☐ 4. 12000 ரூபா
☐ 5. 15000 ரூபா

( )

23. உற்பத்தி நிறுவனமொன்றில் பொருட்களை உருவாக்குவதற்கான கிரயங்கள் உற்பத்திக் கிரயங்கள் என அழைக்கப்படுகின்றன. உற்பத்திக் கிரயத்தின் கூறுகளாவன.

☐ 1. நேர்மூலப் பொருட்கள், நேர்கூலி, தொழிற்சாலைமேந்தலை
☐ 2.. நேர்மூலப்பொருள், மூலச்செலவு, தொழிற்சாலைமேந்தலை
☐ 3. நேர்மூலப்பொருள், நேர்கூலி, மொத்தமேந்தலை
☐ 4. நேர்மூலப்பொருள், நேர்ச்செலவு, நேரில்கூலி
☐ 5. உற்பத்திக்கிரயம், உற்பத்தி அல்லாக் கிரயம்

( )

24. வரையறுத்த டொலஸ் கம்பனியின் நிதி கூற்றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில நிதித்தவல்கள் வருமாறு

| | 01.04.2010 | 31.03.2011 |
|---|---|---|
| நிறுத்தி வைத்த இலாபம் | 200000 | 300000 |
| பொதுஒதுக்கம் | 100000 | 150000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 75000 | 125000 |

2010 / 2011 ம் ஆண்டுக்கான செலுத்திய பங்கு இலாபம் ரூபா 80000 ஆகும். மேற்படி தகவல்களின் அடிப்படையில் 31.03.2011இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரிக்கு பின்னரான இலாபம்

☐ 1. ரூபா 100000
☐ 2. ரூபா 150000
☐ 3. ரூபா 230000
☐ 4. ரூபா 200000
☐ 5. ரூபா 500000

( )

25. எல்லைக் கிரயவியலில் நுட்பத்தில் பங்களிப்பு நிலையான கிரயத்திற்கு சமனாக காணப்படும் சந்தர்ப்பம் யாது

☐ 1. மொத்த வருமானம் மொத்த செலவிற்கு சமனாகக் காணப்படும்போது
☐ 2. எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானத்திற்கும் சமப்பாட்டு புள்ளி விற்பனை வருமானத்திற்கும் இடைப்பட்ட வித்தியாசத்தில்
☐ 3. இலாபநட்ட மற்ற புள்ளிக்கும் ஆரம்பப்புள்ளிக்கும் இடைப்பட்ட இடத்தில்
☐ 4. மொத்த வருமானத்திலும் பார்க்க மொத்த செலவு உயர்வாக காணப்படுகையில்
☐ 5. மொத்த வருமானத்திலும் மொத்த செலவு குறைவாகக் காணப்படுகையில்

( )

26. காசுப்பாய்ச்சல் விகிதத்தில் காசுப்பாய்ச்சல் தேவைப்பட்டு விகிதமானது பின்வருமாறு கணிக்கப்படுகிறது

☐ 1. மொத்தக்கடன் / செயற்பாட்டுக் கருமங்களின் ஊடாக இடம்பெற்ற நிகர காசுப்பாய்ச்சல்
☐ 2. நீண்டகாலக் கடன்கொடுப்பனவு + நிலையான சொத்துக்களுக்கான கொடுப்பனவு + இலாபபகிர்வு / செயற்பாட்டு கருமங்களின் ஊடாக இடம்பெற்ற நிகர காசுப்பாய்ச்சல்
☐ 3. ஆதனம் உபகரணங்களின் புத்தகப்பெறுமதி / செயற்பாட்டு கருமங்களின் ஊடாக இடம்பெற்ற நிர்வாகக் காசுப்பாய்ச்சல்
☐ 4. செயற்பாட்டின் மூலம் உருவாகிய நிகரக்காசுப்பாய்ச்சல் / மொத்த வருமானம்
☐ 5. செயற்பாட்டின்மூலம் உருவாகிய நிகரக்காசுப்பாய்ச்சல் / வரிக்குப்பின் இலாபம்

( )

பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி 27, 28ஆம் வினாக்களுக்கு விடை தருக

கம்பனியொன்றின் கையளிப்பு விடயம் தொடர்பான தரவுகள் வருமாறு
ஆகக்குறைந்த பாவனை 120 அலகுகள் நாள் ஒன்றுக்கு
முதன்மைக்காலம்20 - 26 நாட்கள்
மறுகட்டளையிடும் மட்டம் 6760 அலகுகள்
ஆகக்கூடிய இருப்பு மட்டம் 12360 அலகுகள்

27. இக்கம்பனியின் ஆகக் கூடிய பாவனை

☐ 1. 120 அலகுகள்
☐ 2. 240 அலகுகள்
☐ 3, 260 அலகுகள்
☐ 4. 190 அலகுகள்
☐ 5. 180 அலகுகள்

( )

28. இக்கம்பனியின் கையிருப்புக்குரிய சிக்கன கட்டளைத்தொகை

- [ ] 1. 9560 அலகுகள்
- [ ] 2. 8000 அலகுகள்
- [ ] 3. 5700 அலகுகள்
- [ ] 4. 13700 அலகுகள்
- [ ] 5. 7160 அலகுகள்

( )

29. ஒரு முதலீட்டுத் தீர்மானத்தில் இருந்து எழும் பின்வரும் காசுப்பாய்ச்சல்களில்எது தேறிய நிகழ்காலப் பெறுமதி முறையின் அடிப்படையில் மதிப்பிடப்படும் தேறிய காசுப்பாய்ச்சல்களை கணிப்பதுடன் தொடர்பற்றதாக இருக்கும்

- [ ] 1. வருமானம்
- [ ] 2. வட்டிச்செலவு
- [ ] 3. செயற்பாட்டுச்செலவு
- [ ] 4. தொழிற்படு மூலதனம்
- [ ] 5. ஆரம்பமுதலீடு

( )

30. நடைமுறையல்லா சொத்துகளுக்கு பெறுமானத்தேய்விடுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள எண்ணக்கரு யாது

- [ ] 1. மாறாத்தன்மை எண்ணக்கரு
- [ ] 2. முக்கியத்துவத்தன்மை எண்ணக்கரு
- [ ] 3. வரலாற்றுக் கிரய எண்ணக்கரு
- [ ] 4. முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
- [ ] 5. தொடர்ந்தசெல்ல எண்ணக்கரு

( )

31. கணக்கீட்டின் புறச்சூழல் காரணிகளின் சட்டசூழலில் இடம்பெறும் பொருத்தமான சட்டங்களைக் குறிப்பிடுக

1.................................................. 2..................................................

3.................................................. 4..................................................

32. கணக்கீட்டு செயன்முறையின் படிமுறைகள் யாவை

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

33. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் பொருத்தமான மூலப்பதிவேடு, மூல ஆவணத்தைக் குறிப்பிடுக

| | மூலப்பதிவேடு | மூலஆவணம் |
|---|---|---|
| 1. கடன்பட்டோர் ஒருவர் முறிவடைந்தமையால் பெறவேண்டிய தொகையை அறவிடமுடியாத கடனானப் பதிவளித்தல் | .................... | .................... |
| 2. வங்கி அறவீடு | .................... | .................... |
| 3. கடன் பட்டோரில் பெற்ற காசு | .................... | .................... |
| 4. பீரிஸ் கம்பனியிடம்இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் | .................... | .................... |

34. சொத்துக்கள் பொறுப்புக்கள் ஆகியவற்றின் குண இயல்புகள் இவ்விரண்டு இருக.

| சொத்து | பொறுப்பு |
|---|---|
| 1.................................................. | 1.................................................. |
| 2.................................................. | 2.................................................. |

35. இலங்கை கணக்கீட்டு நியமம் 18இன்படி பின்வருவனவற்றை விளக்குக

1. சாதாரண பெறுமதி ..........................................................................
2. முன்கொண்டு செல்லும் பெறுமதி ..........................................................................
3. அழிவுறு நட்டம் ..........................................................................
4. பெறுவனவுத் தேய்விடக்கூடிய பெறுமதி ..........................................................................

36. நிறைவில் பதிவு முறையில் இலாபம் கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் இரண்டு முறைகளை தருக
1.......................................................................................................................
2.......................................................................................................................

37. கழகமொன்றின் கட்டிட நிதியத்திற்காக பெறப்பட்ட நன்கொடை ரூபா 125000 ஆகும். இதில் 50% குறித்த நிதிவருடம் கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்குமாயின் இவற்றுக்கான நாட்குறிப்பு பதிவு யாது?
.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................

38. Aயும், Bயும் இலாபநட்டங்களை 3:2 என்னும் விகிதத்தில் பகிரும் பங்காளராவர் C என்பவர் 25% பங்கு பெறும் நோக்குடன் இணைந்து கொண்டார் புதிய பங்குடமையாயின் புதிய இலாபநட்ட விகிதம் யாது?
.......................................................................................................................
.......................................................................................................................

39. இலங்கை கணக்கீட்டு நியமம் 36இற்கு அமைய ஏற்பாடு தொடர்பான கடப்பாடுகள் இரண்டு தருக
1.......................................................................................................................
2.......................................................................................................................

40. இலங்கை கணக்கீட்டு நியமம் 37இன்படி ஆராட்சி செலவு மூலதனச் செலவாக முடியாது. அபிவிருத்தி செலவுகள் சில நிபந்தனைகளை நிறைவேற்றிய பின் மூலதனச் செலவாக மாறலாம். இங்கு நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் யாவை?
1.......................................................................................................................
2.......................................................................................................................
3.......................................................................................................................
4.......................................................................................................................

41. இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் நிறுவனமொன்று தனது கணக்கீட்டு கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த கூடிய சந்தர்ப்பங்கள் 2 தருக
.......................................................................................................................
.......................................................................................................................

42. நடைமுறை, நடைமுறையல்லாத சொத்துக்கள் என வகைப்படுத்துவதற்கான அடிப்படையை வழங்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் யாது
.......................................................................................................................
.......................................................................................................................


43. இலங்கை கணக்கீட்டு நியமம் 29இற்கமைய வருமானத்தினை இனங்காண்பதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய நியதிகள் இரண்டு தருக
.......................................................................................................................
.......................................................................................................................

44. வரையறுத்த கம்பனியின் கடன் தீர் தகமைப்பரிசோதனை அவசியமாகும் சந்தர்ப்பங்கள் 2 தருக
.......................................................................................................................
.......................................................................................................................

45. இருப்பு கட்டுப்பாடு தொடர்பாக பயன்படுத்தப்படும் பல்வேறு நுட்பங்களில் ABC பகுப்பாய்வு முறையினை சுருக்கமாக விளக்குக
.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................

46. கூலிக் கிரயத்தை கணிப்பிடுகையில் பயன்படுத்தப்படும் தொழிற்பாட்டுக்காலத்தை பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் ஆவணங்கள் யாவை
1............................................ 2............................................
3............................................ 4............................................

47. பின்வரும் வரைபடமானது ஒரு கம்பனியின் விற்பனை வருமானம், உதவுதொகை, நிலையான கிரயம் என்பவற்றை காட்டுகிறது




இவ் வரைபடத்தில் ABCD குறித்துக் காட்டுவது

1. A............................................................................
2. B............................................................................
3. C............................................................................
4. D............................................................................

48. பரதன் வியாபாரம் ரூபா 50000ஐ 15% வட்டி வீதத்தில் முதலீடு செய்ய எதிர்பார்க்கின்றது. இது தொடர்பாக கருத்தில் கொள்ளவேண்டிய இரண்டு மாற்று வழிகளின் காசுப்பாச்சல் 15% கழிவுக் காரணியின் அடிப்படையில் நிகழ்காலப் பெறுமதியும் கணிப்பிட்டு தரப்பட்டுள்ளது

| | மாற்றுவழி A | | மாற்றுவழி B | |
|---|---|---|---|---|
| வருடம் | காசுப்பாய்ச்சல் | நிகழ்காலப் பெறுமதி | காசுப்பாய்ச்சல் | நிகழ்காலப் பெறுமதி |
| O | (50000) | (50000) | (50000) | (50000) |
| 1 | 20000 | 17400 | 25000 | 21750 |
| 2 | 25000 | 18900 | 25000 | 18900 |
| 3 | 25000 | 16460 | 25250 | 18095 |

1. திரும்பல் பெறும் காலத்தின் அடிப்படையில் முதலீடு செய்வதாயின் எவ்மாற்றுவழியை தெரிவுசெய்யலாம்

..............................................................................................................

..............................................................................................................

2. தேறிய நிகழ்காலப் பெறுமதி அடிப்படையில் முதலீடு செய்வதாயின் எவ் மாற்று வழியைத் தெரிவு செய்வீர்

..............................................................................................................

..............................................................................................................

49. கணக்கீட்டுத் தகவல்களின் நான்கு பிரதான அளவுசாராப் பண்புகளைத் தருக

1.............................................. 2..............................................

3.............................................. 4..............................................

50. ஆழ்ந்த கிரயம் என்றால் என்ன

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# கணக்கீடு

33 T II

மாதிரி வினாத்தாள் - 1

தரம் -13

பகுதி II

மூன்று மணித்தியாலம்

**கவனிக்க**

முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க

01. வரையறுக்கப்பட்ட தரங்கா பொதுக்கம்பனியின் 31.03.2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

"000"

| | | |
|---|---|---|
| விற்பனைகள் | | 7500 |
| (-) விற்பனை கிரயம் | | (4825) |
| மொத்த இலாபம் | | 2675 |
| + ஏனைய வருமானங்கள் | | 20 |
| | | 2695 |
| (-) விநியோகச் செலவுகள் | 200 | |
| அறவிடமுடியா கடன் | 70 | |
| இயக்குனர் கட்டணம் | 250 | |
| மின்சாரம் வரி காப்புறுதி | 300 | |
| கணக்காய்வு கட்டணம் | 234 | |
| ஏனைய செலவுகள் | 400 | |
| நிதிசார் வட்டி | 6 | (1460) |
| வரிக்கு முன் இலாபம் | | 1235 |
| செலுத்திய வருமானவரி 2009/2010 | 300 | |
| செலுத்திய வருமானவரி 2010/2011 | 500 | |
| | 800 | |
| (-) 1.4.2010இல் வரி ஏற்பாடு | (250) | (550) |
| வரிக்கு பின் இலாபம் | | 685 |
| (-) செலுத்திய பங்குலாபம் | | (90) |
| இவ் ஆண்டுக்கான இலாபம் | | 595 |

வரையறுக்கப்பட்ட தரங்கா கம்பனியின் 31 மார்ச் 2011இல் உள்ளபடியான ஐந்தொகை
"000"

| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | கிரயம் | 1.4.2010 இல் பெ.தே.ஏற் | தேறிய |
|---|---|---|---|
| ஆதனம் (காணி) | 2000 | - | 2000 |
| கட்டிடம் | 2100 | 400 | 1700 |
| மோட்டார் வாகனம் | 250 | 80 | 170 |
| அலுவலக சாதனம் | 150 | 20 | 130 |
| | 4500 | 500 | 4000 |
| 12% நிலையான வைப்புகள் | | | 300 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| இறுதி இருப்பு 31.03.2011இல் | | 520 | |
| கடன்பட்டோர் | 600 | | |
| (-) 1.4.2010ல் ஐயக்கடன் ஏற்பாடு | (40) | 560 | |
| காலாண்டு திறைசேரி உண்டியல் | | 120 | |
| காசும் வங்கியும் | | 795 | 1995 |
| மொத்த சொத்துக்கள் | | | 6295 |
| **கூறப்பட்ட மூலதனம்** | | | |
| சாராணபங்கு மூலதனம் | | | 3900 |
| **ஒதுக்கங்கள்** | | | |
| சொத்து மீள் மதிப்பீடு ஒதுக்கம் | | 100 | |
| பொது ஒதுக்கம் | | 300 | |
| 1.4.2010இல் இலாபநட்ட க/கு மீதி | | 700 | |
| இவ்வாண்டுக்கான இலாபம் | | 595 | 1695 |
| **நடைமுறை அல்லாத பொறுப்பு** | | | |
| 15% திபென்சர் | | 400 | 400 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வியாபார கடன் கொடுத்தோர் | | 300 | 300 |
| மொத்த பொறுப்புகள் | | | 6295 |

# மேலதிக தகவல்கள்

01) 01.04.2009 இல் ரூபா 50000க்கு கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் குறித்த நிதி வருட தொடக்கத்தில் ரூபா 30000க்கு விற்பனை செய்யப்பட்டது விற்பனையால் பெற்றகாசு காசு கணக்கில் வரவு வைக்கப்பட்டு விற்பனை கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தமை தவிர வேறு பதிவுகள் எவையும் இடம் பெறவில்லை. மேலும் 01.10.2010இல் ரூபா 100 000 க்கு புதிய தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவை கொள்வனவு கணக்கில் பதியப்பட்டுள்ளன. தளபாடங்களுக்கு 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடுவது வழமையாகும்.

02) 01.04.2010இல் கம்பனிக்கு சொந்தமான காணி தொழில்சார் ரீதியான மதிப்பீட்டு நிறுவனமொன்றினால் ரூபா 2500000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. புதிய பெறுமதி ஐந்தொகையில் காண்பிக்க வேண்டுமென தீர்மானித்துள்ளர். அத்துடன் கட்டிடங்களுக்கு 2% பெறுமானத் தேய்வு செய்தல் வேண்டும்

03) ரூபா 100 000 நியாயப் பெறுமதி கொண்ட மோட்டார் வாகனங்கள் 01.04.2010ம் திகதியில் நிதி குத்தகையில் கையேற்கப்பட்ட அதேவேளையில் வருட காலத்தில் செலுத்தப்பட்ட குத்தகை தவணைக் கட்டணம் ரூபா 25000 விநியோகச் செலவில் இனங்காணப்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்களுக்கு அவற்றின் கிரயத்தில் 10% பெறுமானத்தேய்விடப்படும். செலுத்தப்பட்ட குத்தகை கட்டணத்தில் வட்டி 5000 ரூபா ஆகும் அடுத்து வரும் தவணைக்கான குத்தகை கட்டணம் ரூபா 25000 ஆக காணப்படும். அதே வேளையில் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டி ரூபா 4000 ஆகும்.

04) ஆராட்சியொன்றின் முடிவின் அடிப்படையில் 01.04.2010 முதல் புதிய பொருள் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டன. வருடத்துக்கான அபிவிருத்திச் செலவுகள் ரூபா 40000 ஆக இருந்த போதும் வருடத்தில் ரூபா 30000 மட்டுமே செலுத்தப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட காசு ஏனைய செலவுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இப் பொருளானது இரு வருடங்களின் பின் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டு இலாபத்தை உழைக்க முடியுமென்ற முகாமையின் உறுதிப்பாடு தொடர்பாக தெளிவான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

05) விற்பனையின்றேல் திருப்புக அடிப்படையில் 10% இலாபம் வைத்து ரூபா 400 000 கிரயம் கொண்ட பொருட்கள் முகவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவை கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டு விற்பனை கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளன. 31.03.2011 இல் ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகளை ஆராய்ந்த போது மேற்படி பொருட்களில் 50% மானவை விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் 25% மானவை திருப்பி அனுப்பத்தரும் காலம் முடிவடைந்துள்ளமை வெளிப்பட்டது

06) வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட ஊழியர் ஒருவர் ரூபா 60000 இழப்பீடு கேட்டு தொழில் நீதிமன்றில் வழக்கு தாக்கல்செய்துள்ளார். 31.03.2011ம் திகதி கம்பனிவழக்கறிஞரிடம் இது தொடர்பாக கேட்டபோது ஊழியரின் கோரிக்கை நியாயமானதாகவும் உறுதிப்படுத்தக் கூடியதா கவும் இருப்பதனால் நட்டஈட்டை செலுத்த வேண்டிய தேவை உருவாகக்கூடும் எனத் தெளிவாகியு ள்ளது

07) 01.04.2010 தொடக்கம் இரண்டு வருடங்களுக்கான விற்பனை உத்தரவாதத்தின் கீழ் விற்பனைகள் நடைபெற்றிருந்தன. இவ் உத்தரவாதத்துக்கான ரூபா 50 000க்கு ஓர் ஏற்பாடு செய்வதற்கு ஆலோசிக்கப்பட்ட போதும் இது தொடர்பான மதிப்பீடு நம்பகரமாக அமையாதென முகாமை கருதுகிறது.

08) 2009/2010ம் ஆண்டுக்கான வருமானவரி செலுத்தப்பட்டன 2010/2011ம் ஆண்டுக்கான வருமானவரி ரூபா 600 000 என மதிப்பிடப்பட்டுள்ளது

09) கணக்காய்வு கட்டணத்துக்கு ரூபா 36000 ஏற்பாடு செய்தல் வேண்டும். நிலையான வைப்பு வட்டி பெறப்படல் வேண்டும். திபென்சர் நிலுவை வட்டி கொடுபடல் வேண்டும். கடன்பட்டோரில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்தல் வேண்டும்

10) இயக்குநர்சபை பின்வரும் நிர்மானங்களை எடுத்துள்ளனர்
நிறுத்தி வைத்த இலாபத்தைப் பயன்படுத்தி 2500உபகாரப்குகள் பங்கொண்டு 40/= விலையில் வழங்கப்படல் வேண்டும்.
பொது ஓதுக்கத்திற்கு ரூபா 50000 மாற்றுதல் வேண்டும்
சாதாரண பங்கொன்றுக்கு 1 ரூபா பங்கு இலாப ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். 01.04.2010 இல் காணப்பட்ட சாதரண பங்குகளின் வழங்கற் பெறுமதி ரூபா 39 ஆகும்.

வேண்டப்படுவன (பிரசுரிக்கத்தக்க)

1. 31.03.2011இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று
2. 31.03.2011இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றல் கூற்று
3. 31.03.2011இல் உள்ளவாறான ஐந்தொகை
4. 3103.2011இல் முடிவடைந்த வருடங்களுக்கான கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்பகளும்

(20புள்ளி)

02. (அ) சிசில் கம்பனியானது குளிர்சாதனப் பெட்டி சலவை இயந்திரம் என்பவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது ஒவ்வோர் உற்பத்திப்பொருளும் இரு உற்பத்தி செயன்முறைகளான பொருத்துதல், முடிவுறுதல் ஊடாக உற்பத்தி செய்யப்படுகின்றன மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த மேந்தலைக் கிரயங்கள் வருமாறு

தொழிற்சாலை வாடகை ரூபா 60,000 பொறி இயந்திரபெறுமானத்தேய்வு ரூபா400,000
வேலையாட்களுக்கான காப்புறுதி ரூபா 16,000 மின்சாரம் ரூபா 160,000

| நேரில் கூலிகள் | | | நேரில் செலவுகள் | | |
|---|---|---|---|---|---|
| பொருத்துதல் | ரூபா | 1152,000 | பொருத்துதல் | ரூபா | 60 000 |
| முடிவுறுதல் | ரூபா | 416,000 | முடிவுறுத்தல் | ரூபா | 50 000 |
| பராமரிப்பு | ரூபா | 88,000 | பராமரிப்பு | ரூபா | 20 000 |
| களஞ்சியம் | ரூபா | 138,000 | களஞ்சியம் | ரூபா | 40 000 |

குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் ஒன்றுக்கான நேர்மூலப்பொருள் நேர்செலவு தொடர்பான விபரங்கள் வருமாறு

| விபரம் | நேர்மூலப்பொருள் செலவு | நேர்செலவு |
|---|---|---|
| குளிர்சானப்பெட்டி | ரூபா 6000 | ரூபா 8800 |
| சலவை இயந்திரம் | ரூபா 2400 | ரூபா 4000 |

ஏனைய தகவல்கள் வருமாறு

| விபரம் | பொருந்துதல் | முடிவுறுதல் | பராமரிப்பு | களஞ்சியம் |
|---|---|---|---|---|
| பரப்பளவு (சதுர மீற்றர்) | 400 | 200 | 200 | 400 |
| பொறி இயந்திர புத்தகப் பெறுமதி | 400,000 | 20,0000 | 80,000 | 120,000 |
| கிலோவாற் | 1200 | 800 | 800 | 400 |
| வேலையாட்களின் எண்ணிக்கை | 160 | 80 | 40 | 40 |
| பராமரிப்பு வேலைகளுக்கான வேலையாட்களின் எண்ணிக்கை | 200 | 160 | - | 40 |
| களஞ்சிய வேண்டுதல் குறிப்புக்களின் எண்ணிக்கை | 4000 | 2000 | - | - |
| நேர் ஊழிய மணித்தியாலயங்களின் எண்ணிக்கை | 24000 | 16000 | - | - |

குளிர்சாதனப் பெட்டியொன்றிற்கு 8 மணித்தியாலங்களும் சலவை இயந்திரம் ஒன்றுக்கு 16 மணித்தியாலங்களும் பொருத்துதல் பிரிவுகளுக்குத் தேவைப்படுகின்றன

முடிவுறுத்தல் பகுதியில் குளிர்சாதனப் பெட்டி ஒன்று 4 மணித்தியாலத்தையும் சலவை இயந்திரம் 12 மணித்தியாலத்தையும் எடுக்கின்றன.

வேண்டப்படுவன

01. முதலாம் கட்ட, இரண்டாம் கட்டப் பகிர்வுகளுக்கான அட்டவணை

02. பொருத்துதல் முடிவுறுத்தல் பிரிவுகளுக்கான மேந்தலை உறுஞ்சல் வீதங்களை நேர் ஊழிய மணித்தியாலங்கள் அடிப்படையில் கணிப்பிட்டு குளிர்சாதனப்பெட்டி சலவை இயந்திரம் ஒவ்வொன்றினதும் உறிஞ்சப்பட்ட மேந்தலைகளின் பெறுமதியைத் தனித்தனியாக கணிக்குக

03. குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் ஒவ்வொன்றினதும் உற்பத்திக் கிரயத்தினையும் அவை 10% இலாபத்துடன் மாற்றப்படுமாயின் வழங்கல் விலையினையும் கணிக்குக

(10புள்ளிகள்)

ஆ. 2011 மார்ச்31ல் முடிவுற்ற ஆண்டின் "சிம்மணி" உற்பத்தி நிறுவனத்தின் முடிவுற்ற பொருளுக்கான உற்பத்திக் கிரயம், ரூபா 200, 000 ஆகும். உற்பத்தி கிரயத்தில் 75% மூலக்கிரயமாகும். மூலக்கிரயத்தில் 16% நேர் உற்பத்தி கிரயமாகும். உற்பத்தி கிரயத்தில் 65% நுகர் மூலப்பொருள் செலவாகும்.

மேலதிக தகவல்கள்

01. 1.04.2010இல் இருப்பு 12500 ரூபா

02. மூலப்பொருள் கொள்வனவு 112700 ரூபா தீர்வும், கேளவும் 26700 ரூபா நேரில் கூலி 6000 ரூபா, நேரில் பொருள் 3400 ரூபா, சக்தி 2800 ரூபா

03. குறைவேலை (மூலச் செலவில்) 01.04.2010 - 6000 ரூபா
31.03.2011 10000 ரூபா

வேண்டப்படுவது

01. "சிம்மனி" நிறுவனத்தின் 31.03.2011இல் முடிவடைந்த வருடத்திற்கான உற்பத்திக்கணக்கு

(5புள்ளிகள்)

இ. வரையறுக்கப்பட்ட கலைமகள் கம்பனியின் கூலி தொடர்பான தரவுகள் வருமாறு 2011 ஏப்ரல் மாதத்திற்கு

| இல | ஊழியர்கள் | அடிப்படை சம்பளம் | மேலதிக நேரம் | படிகள் | சிற்றூண்டிச் சாலை | தொழிலாளர் சந்தா |
|---|---|---|---|---|---|---|
| 01. | ஜீவன் | 9600 | 40hours | 1200 | 300 | 15 |
| 02 | யோகன் | 9600 | 40hours | 1200 | 200 | 15 |
| 03. | ராணி | 7200 | 20hours | 700 | 100 | 15 |

மேலதிகதகவல்கள்

01. நாளொன்றிற்கு 10 மணித்தியாலயங்கள் என்ற அடிப்படையில் மாதத்திற்கு நான்கு வாரங்கள் வேலைநடைபெறும். ஞாயிறு விடுமுறையாகும்.

02. தொழிலாளரும் தொழில் கொள்வோரும் முறையே 8% 12% என்ற அடிப்படையில் EPF இற்கும், தொழில்கொள்வோன் 3% ETF இற்கும் செலுத்துதல் வேண்டும்

வேண்டப்படுவது

சம்பளப் பட்டியலை தயார் செய்க.

(05 புள்ளிகள்)

03. சரத், திஸ்ஸ, பண்டார பங்குடமையின் ஒப்பந்தம் வருமாறு

01. பங்காளர் மூலதனத்தின் மீது 10% வட்டி கொடுபடல் வேண்டும்

02. பங்காளர் மாதாந்தசம்பளம் முறையே சரத் 200ரூபா
திஸ்ஸ 150 ரூபா
பண்டார 150 ரூபா

பெற உரித்துடையவர்கள்

03. இலாபநட்ட விகிதம் முறையே 3:2:1 ஆகும் பண்டாராவின் குறைந்த பட்ச இலாபம் வருடம் 8000ரூபா ஆகும்

04. பங்காளர் கடனின் மீது 8% வட்டி கொடுபடல் வேண்டும்

இச் சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு முன்னர் 31.03.2011இல் எடுக்கப்பட்ட ஐந்தொகை வருமாறு

| | | | |
|---|---|---|---|
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | கொள்விலை | தி.பெ.த | தே.நிலுவை |
| காணி | 70000 | - | 70000 |
| கட்டிடம் | 50000 | 10000 | 40000 |
| மோட்டார் வாகனம் | 30000 | 8000 | 22000 |
| தளபாடம் | 20000 | 4000 | 16000 |
| | 170000 | 22000 | 148000 |

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு | | | 6000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| சரக்கிருப்பு | | 16000 | |
| கடன்பட்டோர் | | 20000 | |
| காசும் வங்கியும் | | 40000 | 76000 |
| | | | 230,0000 |
| மூலதனம் - | சரத் | 60000 | |
| | திஸ்ஸ | 50000 | |
| | பண்டார | 30000 | 140,000 |
| நடைமுறைக் க/கு | சரத் | 10000 | |
| | திஸ்ஸ | (2000) | |
| | பண்டார | 1500 | 9500 |
| பொது ஒதுக்கம் | | | 6000 |
| பகிர்வுக்குரிய இலாபம் (சீராக்கமுன்) | | | 60,000 |
| நடைமுறை அல்லாத பொறுப்பு | | | |
| பங்காளர் கடன் :- | திஸ்ஸ | 10000 | 10000 |
| நடைமுறை பொறுப்பு | | | |
| கடன்கொடுத்தோர் | | | 4500 |
| | | | 230 000 |

மேலதிக தகவல்கள்

01. 01.04.2011 இல் பண்டார பங்குடமையல் இருந்து இளைப்பாறினார். அவர் மோட்டார் வாகனத்தை மறுமதிப்பீட்டு பெறுமதியில் ஏற்றுக்கொண்டார். அவருக்கான மிகுதி கொடுப்பனவு காசு மூலம் கொடுத்து தீர்க்கப்படல் வேண்டும்

02. பண்டார விலகும்போது பங்குடமையின் நன்மதிப்பு 15000 ரூபாவாக மதிப்பிடப்பட்டு பதிவளிக்கப்பட்டது.

03. சொத்துக்கள் பின்வருமாறு மறுமதிப்பீடு செய்யப்பட்டது

| | |
|---|---|
| கட்டிடம் | 45000 ரூபா |
| மோட்டார் வாகனம் | 20,000 ரூபா |
| தளபாடம் | 15000 ரூபா |
| இருப்பு | 15000 ரூபா |
| கடன்பட்டோர் | 17000 ரூபா |

04. மறுமதிப்பீட்டுச் செலவு 900 ரூபாவாகும்

05. குறித்தநிதியாண்டில் சரத்தும், திஸ்ஸவும் முதல் ஆறுமாத சம்பளங்களினை எடுத்துள்ளனர். இவை இலாபநட்டக்கணக்கிலும் காசுக்கணக்கிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பதிவளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் 500ரூபா தொடர்பாக கணக்குகளில் எப்பதிவும் இடம்பெற்றிருக்கவில்லை.

06 பண்டார் விலகலின் பின்னர் பங்குடமையின் மொத்த மூலதனத்தில் புதியபங்காளர் தமது இலாப நட்ட விகிதத்தில் மாற்றியமைமக்க தீர்மானித்தனர். இவைதொடர்பான சீராக்கங்கள் நடைமுறைக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

வேண்டப்படுபவை

01 31.03.2011இன் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக்கணக்கு

02. நிரல் வடிவில் அமைந்த பங்களாளர் மூலதன கணக்கு, நடைமுறை கணக்கு

03. 31.03.2011இன் உள்ளபடியான புதிய ஐந்தொகை

(15புள்ளிகள்)

04. அ. வரையறுத்த சுனேத்த பொதுக்கம்பனியானது 50000 சாதாரண பங்குகளை பின்வருமாறு கட்டணம் அறவிடும் வகையில் வழங்கியது

| | |
|---|---|
| மனு | 10ரூபா |
| ஒதுக்கல் | 15ரூபா |
| அழைப்பு | 5ரூபா |
| வழங்கல்விலை | 30ரூபா |

65000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. 5000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு மனுப்பணம் திருப்பி அனுப்பப்பட்டது. எஞ்சிய விண்ணப்பங்கள் விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

பங்குகளுக்கான ஒதுக்கல் கட்டணத்தை இரு மாதங்களுக்குள் செலுத்துமாறு அழைப்புவிடப்பட்டது. 3000 பங்குகளுக்கு விண்ணப்பித்த பங்குதாரர் ஒருவரைத்தவிர ஏனையோர் அனைவரும் ஒதுக்கல் கட்டணத்தை கால எல்லைக்குள் செலுத்தியிருந்தனர். ஒரு மாதத்தின் பின்னர் இரு மாதங்களுக்குள் அழைப்பு பணத்தை செலுத்துமாறு அழைப்பு விடப்பட்டிருந்தது. ஒதுக்கல் பணத்தை செலுத்தாத நபரும் 1000 பங்குகள் பெற்றுக்கொண்ட இன்னுமோர் நபரும் அழைப்பு கட்டணத்தை செலுத்தவில்லை ஏனையோரிடம் இருந்து அழைப்பு கட்டணம் கால எல்லைக்குள் பெறப்பட்டுள்ளது.

ஒதுக்கல் கட்டணம், அழைப்பு கட்டணம் ஆகிய இரு கட்டணங்களும் நிலுவையாக உள்ள நபரது பங்குகள் பங்கென்று 35ரூபா விலையில் மறுவிற்பனை செய்யப்பட்டது. மறுவிற்பனைசெலவாக 5000ரூபா ஏற்பட்டது. ஒதுக்கல் நிலுவை அழைப்பு நிலுவைவட்டிகள் 3000ரூபா காணப்பட்டது. மூலப் பங்குதாரருக்குநிலுவை வட்டி நீங்கலாக அவர்களிடமிருந்து பெற்றதொகை மீளளிப்பச் செய்யப்பட்டது.

வேண்டப்படுவது

01 தேவையான நாட்குறிப்புகள்

02. மறுவிற்பனை கணக்கு

(10புள்ளிகள்)

(ஆ) கட்டுப்பாட்டு கணக்கினை இரட்டைப்பதிவின் அங்கமாக பேணிவரும் வரையறுத்த ரகுமான் கம்பனியினது பரீட்சை மீதியில் தொங்கல் கணக்கு மீதியொன்று காணப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கொண்ட கணக்காய்வின் போது பின்வரும் வழுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

01. கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 2000 ஆல் மிகையாக கூட்டப்பட்டிருந்தது

02. விற்பனை கணக்கின் கூட்டுத்தொகை ரூபா 1500 ஆல் குறைவாக கூட்டப்பட்டிருத்தல்

03. சுரேசிடம் கொள்வனவு ரூபா 800 கொள்வனவுப் பேரேட்டில் உள்ள சுரேசின் கணக்கிற்கு கொண்டு செல்லப்படவில்லை. எனினும் நாளேட்டில் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டிருந்தது

04. செலுத்திய சம்பளம் ரூபா 3500 சம்பள கணக்கில் செலவுப்பக்கத்தில் ரூபா 5300 எனப் பதியப்பட்டிருந்தது

வேண்டப்படுவன

நாட்குறிப்புப் பதிவு

தொங்கல் க/கு

(05புள்ளிகள்)

05. அ) சியாம் நிறுவனத்தின் 31.03.2011 இல் முடிவடைந்த வருடத்துக்கான வங்கி கூற்றின் சுருக்கம்

| | |
|---|---|
| 31.03.2010 இல் இருந்தபடி செலவு மீதி | 65000 |
| + 2011 நிதியாண்டில் செலவுவைக்கப்பட்ட தொகை | 175000 |
| | 240000 |
| (-) 2011 நிதியாண்டில் வரவுவைக்கப்பட்டதொகை | (140000) |
| 31.03.2011 இல் வங்கி கூற்றின் செலவு மீதி | 100000 |

2010, 2011 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் வருமாறு

| | 31.03.2010 | 31.03.2011 |
|---|---|---|
| வங்கிக்கூற்றின்படி வங்கி மீதி | 65000 | 100000 |
| +வைப்பிலிட்டும் தோறாத காசோலைகள் | 8000 | 10000 |
| வங்கிக்கட்டணம் | - | 2200 |
| நிலையியற் கட்டளை கொடுப்பனவுகள் | | 3000 |
| | 73000 | 115200 |
| (-) வழங்கப்பட்டு சமர்ப்பிக்கபடாத காசோலை | (12000) | (20000) |
| வசூலித்த பங்கு இலாபம் | - | (2500) |
| காசேட்டின் படிவங்கி மீதி | 61000 | 92700 |

வேண்டப்படுவன

1. 31.03.2011 இல் காணப்பட்டவாறான காசேட்டின் சுருக்கம்
2. செம்மையாக்கிய காசேடு

(5புள்ளிகள்)

ஆ. பின்வரும் தகவல்கள் உபேந்திரா வணிகத்தின் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும்

1 சில சொத்துக்கள் பொறுப்புகள்

| | 31.03.2011 | 31.03.2010 |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 180000 | 165000 |
| முற்பண செயற்பாட்டுச் செலவுகள் | 10000 | 6000 |
| சென்மதி வாடகை | 20000 | 25000 |
| இருப்பு | 110000 | 140000 |
| கடன் கொடுத்தோர் | 490000 | 320000 |

2 31.03.2011இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசு பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும்

| | |
|---|---|
| கடன்பட்டோரிடமிருந்து பெற்றது (2% கழிவு நீங்கலாக) | 980 000 |
| நிலையான சொத்து கொள்வனவு | 40 000 |
| வாடகை | 80 000 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 50 000 |
| கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு (3% கழிவு நீங்கலாக) | 582 000 |

3. மொத்த இலாபம் விற்பனையில் 20% ஆகும்

4. எல்லா விற்பனை கொள்வனவுகளும் கடனுக்கே நடைபெற்றது

31.03.2011இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றினைத் தயாரிக்குக.

(05புள்ளிகள்)

இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இனை பின்பற்றும் பொருட்டு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு ராஜா கம்பனி தனது உற்பத்தி தொடர்பான மீள் குறியீட்டு பெயரினையுடைய பொருளினை சந்தையில் அறிமுகம் செய்தது. இது தொடர்பில் பின்வரும் செலவுகள் கருத்துரைக்கப்பட்டன

சந்தை ஆராட்சி செலவு ரூபா 4 மில்லியன்

ஊடாக மேம்படுத்தல் செலவுகள் ரூபா 8மில்லியன்

விளம்பர முகவர் நிறுவன கட்டணம் ரூபா 3 மில்லியன்
புதிய குறியீட்டு விருத்தி செலவுகள் ரூபா 4 மில்லியன்

இயக்குனர்கள் இத்தகைய செலவுகள் மூலதனமாக்க விரும்புகின்றனர் இது தொடர்பில் நிதி கூற்றின் தாக்கத்தை குறிப்பிடுக

(5புள்ளிகள்)

வினா 06 வரையறுக்கப்பட்ட நந்தா கம்பனியின் இருவருடங்களுக்கான ஐந்தொகை பின்வருமாறு

| விபரம் | 31.03.2010 | 31.03.2011 |
|---|---|---|
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | |
| காணிகட்டிடம் | 100,000 | 100,000 |
| பொறியும் பொறித்தொகுதியும் | 80,000 | 110,000 |
| மோட்டார் வாகவனங்கள் | 60,000 | 52,000 |
| முதலீடுகள் | 50,000 | 100,000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | |
| கையிருப்புக்கள் | 8000 | 24000 |
| கடன்பட்டோர் | 21000 | 32000 |
| காசும் வங்கியும் | 16000 | 8000 |
| | 335000 | 426000 |

| | | |
|---|---|---|
| கூட்டப்பட்ட சாதாரணமுதல் | 200,000 | 310,000 |
| பொது ஒதுக்கம் | 20,000 | 30,000 |
| இலாபநட்டக் கணக்குகள் | 10,000 | 15,000 |
| நடைமுறை அல்லாத பொறுப்பு | | |
| 20% தொகுதிக்கடன் | 80,000 | 25,000 |
| நடைமுறைப்பொறுப்பு | | |
| வரி ஏற்பாடு | 10,000 | 20,000 |
| கடன்கொடுத்தோர் | 5,000 | 21,000 |
| அட்டுறு செயற்பாட்டு செலவு | 10,000 | 5,000 |
| | 335000 | 426000 |

**வரையறுக்கப்பட்ட நந்தா கம்பனியின்**
**3103.2011 இல் முடிவடைந்த வருடத்தின் வருமானக் கூற்று**

| விபரம் | தொகை | |
|---|---|---|
| விற்பனை | | 300.000 |
| விற்பனைக் கிரயம் | | (180,000) |
| | | 120,000 |
| செயற்பாட்டுச் செலவு | 27,000 | |
| பொறிபெறுமானத்தேய்வு | 10,000 | |
| கட்டிட பெறுமானத்தேய்வு | 8,000 | |
| வட்டி | 5,000 | |
| வருமானவரி | 20,000 | (70,000) |
| வரிக்குப்பின் இலாபம் | | 50,000 |
| பொது ஒதுக்கம் | | (10,000) |
| பங்கிலாபம் | | (35,000) |
| | | 5000 |

பின்வருவனவற்றை தயாரிக்குமாறு நீர் வேண்டப்படுகின்றீர்

01. நேரில் முறையில் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு
02. நேர்முறையில் காசுப்பாய்ச்சல் கூற்று
03. 31.03.2011இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் விகிதங்கள்
    அ) காசுப்பாய்ச்சல் தேவைப்பாட்டு விகிதம்
    ஆ) கடன் பாதுகாப்பு விகிதம்
    இ) காசு மீள் முதலீடு
    ஈ) வருமானத்திற்கு காசுப்பாய்ச்சல் சுட்டெண்
    உ) செயற்பாட்டுச் சுட்டென்

(15 புள்ளிகள்)

07. அ) வரையறுத்த காமினி கம்பனி புதிய இயந்திரமொன்றை வாங்குவதற்கான பிரேரணை ஒன்றினை மதிப்பிடுகிறது. இது தொடர்பாக பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இயந்திரத்தின் கொள்விலை | 350 000 |
| இயந்திரத்தை நிர்மானிக்கும்போது<br>- அதனை வழமையான நிலைக்கு<br>- மாற்றுவதற்கான கிரயம் | 25 000 |
| மூன்றாம் வருட இறுதியில் இயந்திரத்தின்<br>- எஞ்சிய பெறுமதி | 50,000 |
| விற்பனை வருமானத்தின் வருடாந்த<br>- அதிகரிப்பு | 325,000 |
| செயற்பாட்டுகிரயத்தின் வருடாந்த<br>- அதிகரிப்பு | 75,000 |

இவ் இயந்திரம் மூன்று வருடங்கள் பயன்படுத்த எதிர்பாக்கப்படுகிறது. வருடாந்தம் 10%த்தில் மூன்று வருடங்களுக்கான கழிவீட்டு காரணிகள்

| வருடம் | கழிவீட்டுக்காரணி |
|---|---|
| 0 | 1.00 |
| 1 | 0.91 |
| 2 | 0.83 |
| 3 | 0.75 |

வேண்டப்படுவன

01. 10% கழிவீட்டு வீதத்தில் ஆரம்பமுதலீடின் நிகழ்காலப் பெறுமதி
02. முதலாம் வருடத்தில் ஏற்படும் தேறிய செயற்பாட்டுக் காசுப் பாய்ச்சல்
03. மூன்றாம் வருடத்தில் காசு உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்
04. 10% கழிவீட்டு வீதத்தில் முதலீட்டின் தேறிய நிகழ்காலப்பெறுமதி
05. வருடாந்தம் 10% கழிவீட்டு வீதத்தில் இம் முதலீடுநிதி சார்ந்த வகையில் சாத்தியமானதா என்பது குறித்தான சிபார்சு

(7புள்ளிகள்)

ஆ) சூரியா உற்பத்தி நிறுவனத்தினது A பண்ட உற்பத்தி தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட தரவுகள் வருமாறு

| | |
|---|---|
| அலகுக்கான நேர் மூலப்பொருள் | 30 ரூபா |
| அலகுக்கான நேர் கூலி | 20 ரூபா |
| அலகுக்கான நேர் செலவு | 10 ரூபா |
| நிலையான செலவுகள் | 50000 ரூபா |
| அலகுக்கான விற்பனை விலை | 80 ரூபா |
| எதிர்பார்க்கப்பட்ட விற்பனை | 6000 அலகுகள் |

பின்வருவனவற்றை கணிப்பீடு செய்க

01. அலகுக்கான பங்களிப்பு
02. எதிர்பார்க்கப்பட்ட விற்பனையில் இலாபம்
03. இலாபநட்ட மற்ற புள்ளி அலகுகளில்
04. பாதுகாப்பு எலலை அலகுகளில்
05. பாரம்பரிய சமன்பாட்டு புள்ளி வரைபில் சமப்பாட்டு புள்ளி, பாதுகாப்பு எல்லை இலாபநட்டப் பகுதிகள் என்பவற்றை காட்டுக.
06. பங்களிப்பு சமன்பாட்டு புள்ளி வரைவில் இலாபநட்ட மற்ற புள்ளி, பங்களிப்பு என்பவற்றை காட்டுக.

(8புள்ளிகள்)

## கணக்கீடு – மாதிரி வினாத்தாள் - I
## புள்ளித்திட்டம்
## பகுதி –I, II

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01- | 2 | 11- | 5 | 21- | 1 |
| 02- | 3 | 12- | 1 | 22- | 4 |
| 03- | 4 | 13- | 2 | 23- | 1 |
| 04- | 5 | 14- | 1 | 24- | 3 |
| 05- | 1 | 15- | 3 | 25- | 1 |
| 06- | 2 | 16- | 2 | 26- | 2 |
| 07- | 1 | 17- | 4 | 27- | 3 |
| 08- | 3 | 18- | 1 | 28- | 2 |
| 09- | 4 | 19- | 2 | 29- | 2 |
| 10- | 1 | 20- | 4 | 30- | 5 |

*31)*

1. பங்குடமைச் சட்டம்
2. கம்பனிச் சட்டம்
3. கணக்கீட்டு கணக்காய்வு நியமச்சட்டம்
4. நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரச் சட்டம்
5. வியாபாரப் பெயர் பதிவுச் சட்டம்

*32)*

1. கொடுக்கல் வாங்கல்களுக்கான மூல ஆவணங்களை கோவை செய்தல்
2. மூல ஆவணங்களின் துணையுடன் முதன்மை ஏடுகளில் பதிவு செய்தல்
3. முதன்மை ஏடுகளில் பதிவு செய்தவற்றை பூரண இரட்டைப் பதிவு தத்துவத்துக்கமைய பேரேடுகளில் பதிதல்.
4. கணக்குகளை சமப்படுத்தி பரீட்சை மீதி தயாரித்தல்

*33)*

| மூலப்பதிவேடு | மூல ஆவணம் |
|---|---|
| 1. முகாமைத் தீர்மானம் | பொதுத்தினசேரி நாட்குறிப்பு கைச்சாத்து |
| 2. | காசேடு வங்கிக் கூற்று |
| 3. | காசேடு பற்றுச்சீட்டு |
| 4. | பொதுத்தினசேரி நாட்குறிப்பு கைச்சாத்து |

*34)*

| சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
|---|---|
| 1. எதிர்கால பொருளாதார நலன்களை பெறத்தக்கது | வியாபார நிறுவனத்தில் இருந்து பொருளாதார வளம் வெளிப்பாய்ச்சப்படுவதாக எதிர்பார்த்தல் |
| 2. கடந்த கால நிகழ்வுகளினால் உருவானது | கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாகும் |
| 3. நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்டது | நடப்பு ஆண்டில் செலுத்துகை ஒன்றாக அமைதல் |

*35)* சாதாரண பெறுமதி :- சொத்தினது இன்றைய சந்தைப் பெறுமதி ஆகும்

முன்கொண்டு செல்லும் பெறுமதி :- சொத்தின் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாட்டினை நீக்க வரும் பெறுமதியாகும்

அழிவுறு நட்டம் :- சொத்தின் தேறிய பெறுமானத்திலிருந்து மீளப்பெறத்தக்க பெறுமானத்தை நீக்க வரும் பெறுமதியாகும்.

பெறுமானத் தேய்விடதக்க பெறுமதி:- சொத்தின் கிரயத்திலிருந்து எஞ்சிய பெறுமதியை கழித்து வரும் பெறுமதியாகும்.

36)

1. தேறிய சொத்துக்களின் அடிப்படை
2. நிறைவில் பதிவினை நிறைவான பதிவுக்கு உட்படுத்தல்

37) கட்டிட கணக்கு வரவு 62500
கொள்ளல் கொடுத்தல் கணக்கு செலவு 62500
(கட்டிட ஆக்கத்திற்கு பணம் பயன்படுத்தப்பட்டமை)

கட்டிட நிதிய கணக்கு வரவு 62500
திரண்ட நிதிய கணக்கு செலவு 62500
(கட்டிட நிதியத்தில் பயன்படுத்தப்பட்ட பெறுமதி திரண்ட நிதிக்கு மாற்றப்பட்டமை)

38) 9: 6: 5

39) 1. சட்டரீதியான கடப்பாடு 2. கட்டுருவாக்க கடப்பாடு

40)

1. செயற்றிட்டத்துக்கு தெளிவான சிறந்த எதிர்காலச் சந்தையொன்றிருத்தல்.
2. வணிக உற்பத்திக்கு கருத்தொன்றிருத்தல்
3. உற்பத்தியை முடிவுறுத்துவதற்கான தேவையொன்றிருத்தல்
4. மேலதிக உற்பத்தி செய்வதற்கு தேவையான பொருளாதார வளங்கள் இருத்தல்
5. ஏற்படக்கூடிய கிரயம் நம்பகத் தன்மையுடையதாக மதிப்பிடக் கூடியதாக இருத்தல்

41)

1. கணக்கீட்டு நியமத்தின் தேவைப்பாட்டு அடிப்படையில
2. நிறுவனத்தின் நிதி நிலைமைகள், செயற்பாட்டுத்திறன் மற்றும் காசுப்பாய்ச்சல்களில் முன்னரை விட நம்பகத்தன்மை கொண்ட தகவல்களை வழங்க கூடியதாக இருத்தல்.

42) இலங்கை கணக்கீட்டு நியமம் - 03

43)

1. எதிர்கால பொருளாதார நலன்கள் வணிகத்தினுள் உள்வருவது நிச்சயமானதாக இருத்தல்
2. இன் நலன்கள் நம்பகத்தன்மையுடையதாகவும் அளவிடக் கூடியதாகவும் இருத்தல்.

44)

1. பங்கு இலாபம் பகிர்வின் போது
2. பங்குகளினது மீள் கொள்வனவின் போது
3. மூலதன குறைப்பின் போது
4. உபகாரப் பங்கு வழங்களின் போது

45) அதிக பெறுமதியுடைய பொருள் A தொகுதியிலும்
மத்திம பெறுமதியுடைய பொருள் B தொகுதியிலும்
குறைந்த பெறுமதியுடைய பொருள் C தொகுதியிலும் ஆக வகைப்படுத்தப்படும்

46)

1. நேர அட்டை
2. வேலை அனுமதிப்பத்திரம்
3. வேலைக்கிரய அட்டை
4. துண்டு வேலை அனுமதிப்பத்திரம்
5. வேலை செய்யாத வீணான நேர அட்டை

47)

A- அலகுகளுக்கான இலாப நட்டமற்ற புள்ளி
B- ரூபாவுக்கான இலாப நட்டமற்ற புள்ளி
C- பாதுகாப்பு எல்லை ரூபாவில்
D- பாதுகாப்பு எல்லை அலகுகளில்

48)

1. B 2) B

49)

1. பொருத்தமான தன்மை 2) நம்பகத்தன்மை 3) ஒப்பிடக்கூடிய தன்மை
4) விளங்கக் கூடிய தன்மை 5) காலம் தவறாமை 6) நிறைவுடமை
6) நடுநிலைமை 7) எதிர்வுகூறக்கூடிய தன்மை

50) கடந்த காலத்தில் எடுத்த தீர்மானத்தின் பெறுபேறாக நிகழ்காலத்தில் ஏற்றுக் கொண்ட முறைமைத் தீர்மானம் தொடர்பாக முக்கியமற்ற கிரயமாகும்.

(50x4 = 200 புள்ளிகள்)

## பகுதி - II

**01) வரையறுக்கப்பட்ட தரங்கா கம்பனியின் 31.03.2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான**

| வருமானக் கூற்று | | | "000" |
|---|---|---|---|
| விற்பனை | | | 7360 |
| (-) விற்பனைக் கிரயம் | | | <u>(4625)</u> |
| மொத்த லாபம் | | | 2735 |
| + ஏனைய வருமானம் | குறிப்பு 1 | | <u>56</u> |
| | | | 2791 |
| (-) விற்பனை விநியோகச் செலவு | | 289 | |
| நிலைய நிர்வாகச் செலவு | | 877 | |
| ஏனைய செலவு | | 445 | |
| நிதிச்செலவு | | <u>65</u> | <u>(1676)</u> |
| வரிக்கு முன் இலாபம் | குறிப்பு 2 | | 1115 |
| (-) வருமான வரி | குறிப்பு 3 | | <u>(650)</u> |
| வரிக்கு பின் இலாபம் | | | <u>465</u> |

**வரையறுக்கப்பட்ட தரங்கா கம்பனியின் 31.03.2011இல் உள்ளபடியான ஐந்தொகை "000"**

| | | | |
|---|---|---|---|
| <u>நடைமுறை அல்லாத சொத்துக்கள்</u> | | | |
| ஆதனம் சாதனம் வாகனம் | குறிப்பு 4 | 4563 | |
| அபிவிருத்தி செலவு | | 40 | |
| 12% நிலையான வைப்புக்கள் | | <u>300</u> | 4903 |
| <u>நடைமுறை சொத்துக்கள்</u> | | | |
| கடன்பட்டோர் | | 441 | |
| பெறவேண்டிய நிலையான வைப்பு வருமானம் | | 36 | |
| இறுதி இருப்பு | | 620 | |
| திறைசேரி உண்டியல் | | 120 | |
| காசும் வங்கியும் | | <u>795</u> | <u>2012</u> |
| மொத்த சொத்துக்கள் | | | <u>6915</u> |
| கூறப்பட்ட மூலதனம் | | | |
| சாதாரண பங்கு மூலதனம் | | <u>4000</u> | 4000 |
| <u>ஒதுக்கங்கள்</u> | | | |
| சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 600 | |
| பொது ஒதுக்கம் | | 350 | |
| இலாப நட்டக் கணக்கு மீதி | | <u>925</u> | 1875 |
| நடைமுறை அல்லாத பொறுப்பு | | | |
| 15% திபென்சர் | | 400 | |
| குத்தகையாளன் | | <u>59</u> | 459 |
| <u>நடைமுறை பொறுப்பு</u> | | | |
| குத்தகையாளன் | | 21 | |
| அபிவிருத்தி செலவுக்கான ஏற்பாடு | | 10 | |
| ஊழியர் வழக்குக்கான ஏற்பாடு | | 60 | |
| 2010/2011 ஏற்பாடு | | 100 | |
| அட்டுறு கணக்காய்வுக் கட்டணம் | | 36 | |
| வியாபார கடன் கொடுத்தோர் | | 300 | |
| அட்டுறு திபென்சர் வட்டி | | <u>54</u> | <u>581</u> |
| மொத்த பொறுப்புக்கள் | | | <u>6915</u> |

**வரையறுக்கப்பட்ட தரங்கா கம்பனியின்31.03.2011 ல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை அசைவுக்கூற்று "000"**

| | சா.ப | மீ.மதி.ஒது | பொது ஒதுக்கம் | இலாபநட்ட மதி |
|---|---|---|---|---|
| 01.04.2010 இல் மீதி | 3900 | 100 | 300 | 700 |
| காணி | - | 500 | - | - |
| உபகாரப்பங்கு வழங்கள் | 100 | - | - | (100) |
| பொது ஒதுக்கத்துக்கு மாற்றம் | - | - | 50 | (50) |
| செலுத்திய பங்கு இலாபம் | - | - | - | (90) |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | 465 |
| 31.03.2011ல் மீதி | 4000 | 600 | 350 | 925 |

**கணக்கீட்டு கொள்கைகள்**

- 31.03.2011இல் நிதி வருடம் முடிவடைகின்றது.
- நிதியறிக்கைகள் "000" ரூபாக்களில் தயாரிக்கப்பட்டுள்ளன
- நிதியறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமத்தை பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன.

**குறிப்புக்கள் "000"**

குறிப்பு 01 ஏனைய வருமானம்

| | |
|---|---|
| ஏனைய வருமானம் | 20 |
| நிலையான வைப்பு வட்டி | 36 |
| | 56 |

**குறிப்பு 02 வரிக்கு முன் இலாபம்**

**பின்வரும் செலவுகள் உட்பட சகல செலவுகளும் கழிந்த பின் இலாபம் கணிக்கப்பட்டுள்ளது**

| | |
|---|---|
| பெறுமானத் தேய்வு (35+15+42) | 92 |
| அறவிடமுடியாத கடன் | 79 |
| கணக்காய்வு கட்டணம் | 270 |
| இயக்குநர் கட்டணம் | 250 |
| தளபாட விற்பனை நட்டம் | 15 |
| ஊழியர்களுக்கான இழப்பீடு | 60 |
| வட்டி | 65 |

குறிப்பு 03 வருமானவரி

| | |
|---|---|
| 2010/2011 வரி | 600 |
| சென்ற வருட குறை ஏற்பாடு | 50 |
| | 650 |

**குறிப்பு 04 ஆதனம், சாதனம், வாகனம்**

| விபரம் | கொள்விலை | | | | திரண்டபெறுமானத் தேய்வு ஏற்பாடு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம்பம் | சேர்த்தல் | அகற்று | இறுதி | ஆரம்பம் | சேர்த்தல் | அகற்றல் | இறுதி | தேறியது |
| காணி | 2000 | 500 | - | 2500 | - | - | - | - | 2500 |
| கட்டிடம் | 2100 | - | - | 2100 | 400 | 42 | - | 442 | 1658 |
| மோட்டார் | 250 | 100 | - | 350 | 80 | 35 | - | 115 | 235 |
| தளபாடம் | 150 | 100 | 50 | 200 | 20 | 15 | 5 | 30 | 170 |
| | 4500 | 700 | 50 | 5150 | 500 | 92 | 5 | 587 | 4563 |

**விசேட குறிப்பு**

- நம்பகரமற்ற விற்பனை ஒப்பந்தம் 50
- இறுதி பங்குலாப ஏற்பாடு பங்குகொள்வதற்கு ஒரு ரூபா ஆகும்

**செய்கை "000"**

**விற்பனை விநியோகச் செலவு**

| | | |
|---|---|---|
| விநியோகச் செலவு | 200 | |
| (-)குத்தகை கட்டணம் | (25) | 175 |
| மோட்டார் பெறு.தேய்வு | | 35 |
| அ.மு.க ஐயக்கடன்(70+9) | | 79 |
| | | 289 |

**விற்பனைக் கிரயம்**

| | |
|---|---|
| விற்பனைக் கிரயம் | 4825 |
| (-)தளபாடகொள்வனவு | (100) |
| | 4725 |
| (-) விற்பனை இற்றேல் நிரப்புதலின் கிரயம் | (100) |
| | 4625 |

**நிலையநிர்வாகச் செலவு**

| | |
|---|---|
| தளபாட பெ.தேய்வு | 15 |
| கட்டட பெ.தேய்வு | 42 |
| கணக்காய்வு கட்டணம் | 270 |
| இயக்குனர் கட்டணம் | 250 |
| மீள்சாரம் வரி காப்புறுதி | 300 |
| | 877 |

**இறுதி இருப்பு**

| | |
|---|---|
| இறுதி இருப்பு | 520 |
| விற்.இன்றோர் திருப்புதல் | 100 |
| | 620 |

கடன்பட்டோர்

| | |
|---|---|
| கடன்பட்டோர் | 600 |
| (-)விற்.இன்றோர் திருப்புதல் | (110) |
| | 490 |
| (-) ஐ.க.ஏற்பாடு | (49) |
| | 441 |

**ஏனைய செலவுகள்**

| | |
|---|---|
| தளபாட விற்பனை நட்டம் | 15 |
| தொழிலாளர் இழப்பீடு | 60 |
| ஏனைய செலவு(400-30) | 370 |
| | 445 |

**நிதிச்செலவு**

| | |
|---|---|
| குத்தகை வட்டி | 5 |
| திபென்சர் வட்டி | 60 |
| | 65 |

விற்பனை

| | |
|---|---|
| விற்பனை | 7500 |
| (-) தளபாட விற்பனை | (30) |
| (-)விற்.இன்றோர் திருப்புதல் | (110) |
| | 7360 |

**தளபாட விற்பனைக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| தளபாடம் | 50 | விற்பனை | 30 |
| | | பெ.தே.ஏற் | 5 |
| | | நட்டம் | 15 |
| | 50 | | 50 |

**குத்தகையாளன் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| விநியோகச் செலவு | 25 | மோட்டார் | 100 |
| மீ/சென் | 80 | வட்டி | 5 |
| | | | 105 |
| | 105 | மீ/வ | 59 |
| | | | 21 |

02) அ)

01) முதலாம் கட்ட, இரண்டாம் கட்ட பகிர்வு அட்டவணை

| | பகிர்வு அடிப்படை | உற்பத்தி பகுதி | | சேவைப் பகுதி | |
|---|---|---|---|---|---|
| | | பொருத்துநர் | முடிவுறுத்தல் | பராமரிப்பு | களஞ்சியம் |
| தொழிற்சாலை வாடகை | பரப்பளவு | 20000 | 10000 | 10000 | 20000 |
| பொறி இயந்திர பெறுமானத்தேய்வு | பொறி இயந்திர புத்தக பெறுமதி | 200000 | 100000 | 40000 | 60000 |
| மின்சாரம் | கிலோவாற் | 60000 | 40000 | 40000 | 20000 |
| வேலையாட்களுக்கான காப்புறுதி | வேலையாட்களின் எண்ணிக்கை | 8000 | 4000 | 2000 | 2000 |
| நேரில் கூலி | நேர் ஒதுக்கீடு | 1152000 | 416000 | 88000 | 138000 |
| நேரில் செலவுகள் | நேர் ஒதுக்கீடு | 60000 | 50000 | 20000 | 40000 |
| | | **1500000** | **620000** | **200000** | **280000** |
| பராமரிப்பு மேந்தலை | பராமரிப்பு வேலைகளுக்கான வேலையாட்களின் எண்ணிக்கை | 100000 | 80000 | (200000) | 20000 |
| களஞ்சிய மேந்தலை | களஞ்சிய வேண்டுதல் குறிப்புக்களின் எண்ணிக்கை | 200000 | 100000 | | (300000) |
| | **1800000** | **1800000** | **800000** | | |

02) பொருத்துதல் பகுதியின் மேந்தலை உறிஞ்சுதல் $= \frac{1800000}{24000} = 75$ ரூபா

முடிவுறுத்தல் பகுதியின் மேந்தலை உறிஞ்சுதல் $= \frac{800000}{16000} = 50$ ரூபா

குளிர்சாதனப் பெட்டிக்கான உறிஞ்சுதல் மேந்தலை $= 8x75 = 600$

$4x50 = 200$

$800$

சலவை இயந்திரத்துக்கான உறிஞ்சுதல் மேந்தலை $= 16x75 = 1200$

$12x50 = 600$

$1800$

03) குளிர்சாதனப்பெட்டியின் வழங்கல் விலை

| | |
|---|---|
| நேர்மூலப்பொருள் | 6000 |
| நேர் செலவு | 8800 |
| உற்பத்தி மேந்தலை | 800 |
| | 15600 |
| 10% இலாபம் | 1560 |
| | 17160 |
| சலவை இயந்திரத்தின் வழங்கல் விலை | |
| நேர் மூலப்பொருள் | 2400 |
| நேர் செலவு | 4000 |
| உற்பத்தி மேந்தலை | 1800 |
| | 8200 |
| 10% இலாபம் | 820 |
| | 9020 |

ஆ) சிம்மணி உற்பத்திநிறுவனத்தின் 31.03.2011ல் முடிவடைந்தஆண்டுக்கான உற்பத்தி கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்ப மூலப்பொருள் இருப்பு | | 12500 | உற்பத்தி கிரயம் வியாபார/கணக்கு மாற்றம் | 200000 |
| கொள்வனவு | | 112700 | | |
| தீர்வும் கேழ்வும் | | 26700 | | |
| | | 151900 | | |
| (-)இறுதி மூலப்பொருள் இருப்பு | | (21900) | | |
| பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் | | 130000 | | |
| நேர் கூலி | | 24000 | | |
| | | 154000 | | |
| (+)ஆரம்ப குறைவேலை இருப்பு | | 6000 | | |
| | | 160000 | | |
| (-) இறுதி குறைவேலை இருப்பு | | (10000) | | |
| மூலச்செலவு | | 150000 | | |
| உற்பத்தி மேந்தலை | | | | |
| நேரில் கூலி | 6000 | | | |
| சக்தி | 2800 | | | |
| நேரில் பொருள் | 3400 | | | |
| ஏனைய தொழிற்சாலைச் செலவுகள் | 37800 | 50000 | | |
| உற்பத்தி கிரயம் | | 200000 | | 200000 |

| இல | ஊழியர் பெயர் | அடிப்படை சம்பளம் | மேலதிக நேரம் | படிகள் | மொத்தச் சம்பளம் | சிற்றுண்டிச்செலவு | தொழிலாளர் சந்தா | EPF | மொத்த அறவீடு | தேறிய சம்பளம் | EPF | ETE | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஜீவன் | 9600 | 1600 | 1200 | 12400 | 300 | 15 | 768 | 1083 | 11317 | 1152 | 288 | |
| 2 | யோகன் | 9600 | 1600 | 1200 | 12400 | 200 | 15 | 768 | 983 | 11417 | 1152 | 288 | |
| 3 | ராணி | 7200 | 600 | 700 | 8500 | 100 | 15 | 576 | 691 | 8809 | 864 | 216 | |

.......................... ................................ ..................................

தயாரித்தவர் கணக்காளர் சரிபார்த்தவர்

03)

### திருத்திய இலாபம்

| | | | |
|---|---|---|---|
| அ.வி.மு.கடன் | 500 | இலாபம் | 60000 |
| கடன்வட்டி | 800 | சம்பளம் சரத் 1200<br>திஸ்ஸ 900 | 2100 |
| திருத்திய இலாபம் | 60800 | | |
| | 62100 | | 62100 |

### பகிர் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மூலதன வட்டி சரத் 6000<br>திஸ்ஸ 5000<br>பண்டார 3000 | 14000 | இலாபம் | 60800 |
| சம்பளம் சரத் 2400<br>திஸ்ஸ 1800<br>பண்டார 1800 | 6000 | | |
| இலாப பகிர்வு சரத் 20400<br>திஸ்ஸ 13600<br>பண்டார 6800 | 40800 | | |
| | 60800 | | 60800 |

. பங்காளர் மூலதனக் கணக்கு

| விபரம் | சரத் | தில்லை | பண்டாரா | விபரம் | சரத் | தில்லை | பண்டாரா |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 9000 | 6000 | - | மீ.வ | 60000 | 50000 | 30000 |
| மோட்டார் | - | - | 20000 | பொது ஒதுக்கம் | 3000 | 2000 | 1000 |
| ம. நட்டம் | 1200 | 800 | 400 | நடப்பு ககு | - | - | 14300 |
| காசு | - | - | 26400 | நன்மதிப்பு | 4500 | 3000 | 1500 |
| நடப்பு க/கு | - | 6000 | - | நடப்பு ககு | 6000 | - | - |
| மீ/செ | 63300 | 42200 | - | | | | |
| | 73500 | 55000 | 46800 | | 73500 | 55000 | 46800 |

### பங்காளர் நடப்புக் கணக்கு

| விபரம் | சரத் | தில்லை | பண்டாரா | விபரம் | சரத் | தில்லை | பண்டாரா |
|---|---|---|---|---|---|---|---|
| மீ/வ | - | 2000 | - | மிவ | 10000 | - | 1500 |
| சம்பளம் | 1200 | 900 | - | மூ.வட்டி | 6000 | 5000 | 3000 |
| ந.ககு | - | 6000 | - | சம்பளம் | 2400 | 1800 | 1800 |
| மூ. ககு | - | - | 14300 | கடன்வட்டி | - | 800 | - |
| மீ.செ | 36880 | 17820 | - | இலாபம் | 19680 | 13120 | 8000 |
| | | | | மூ. ககு | - | 6000 | - |
| | 38080 | 26720 | 14300 | | 38080 | 26720 | 14300 |

விலைமதித்தல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் | 2000 | கட்டடம் | 5000 |
| தளபாடம் | 1000 | நட்டம் | |
| ம.ப.வி.செலவு | 900 | சரத் | 1200 |
| இருப்பு | 1000 | தில்லை | 800 |
| கடன்பட்டோர் | 2500 | பண்டார | 400 |
| | 7400 | | 7400 |

சரத், திஸ்ஸ பங்குடமையின் 31.03.2011 இல் உள்ளபடியான ஐந்தொகை

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| நடைமுறையான சொத்து | | |
| காணி | 70000 | |
| கட்டிடம் | 45000 | |
| தளபாடம் | 15000 | 130000 |
| நடைமுறைச் சொத்து | | |
| இருப்பு | 15000 | |
| கடன்பட்டோர் | 17000 | |
| காசு | 12700 | 44700 |
| | | 174700 |
| மூலதனம் | | |
| சரத் | 63300 | |
| திஸ்ஸ | 42200 | 105500 |
| நடப்பு கணக்கு | | |
| சரத் | 36880 | |
| திஸ்ஸ | 17820 | 54700 |
| கடன் திஸ்ஸ | | 10000 |
| கடன் கொடுத்தோர் | | 4500 |
| | | 174700 |

காசுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 40000 | ம.ப.வி. | 900 |
| | | C | 26400 |
| | | மீ/செ | 12700 |
| | 40000 | | 40000 |

நன்மதிப்பு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 6000 | | 9000 |
| சரத் | 4500 | | 6000 |
| தில்லை | 3000 | | |
| பண்டாரா | 1500 | | |
| | 15000 | | 15000 |

04) அ) நாட்குறிப்பு

| விபரம் | | தொகை | தொகை |
|---|---|---|---|
| வங்கி கணக்கு | வரவு | 650000 | |
| மனு ஒதுக்கல் கணக்கு<br>(65000 பங்குகளுக்கு 10/- படி மனுப்பணம் பெறப்பட்டமை | செலவு | | 650000 |
| மனு ஒதுக்கல் கணக்கு | வரவு | 50000 | |
| வங்கி கணக்கு<br>(5000 பங்குகளுக்கு 10 படி மனுப்பணம்<br>(திருப்பி அனுப்பபப்பட்டமை) | செலவு | | 50000 |
| மறு ஒதுக்கல் கணக்கு | வரவு | 1250000 | |
| கூறப்பட்ட சாதனபங்கு மூலதன கணக்கு<br>(50000 பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன) | செலவு | | 1250000 |
| வங்கி கணக்கு | வரவு | 617500 | |
| ஒதுக்கல் நிலுவை கணக்கு | வரவு | 32500 | |
| மனு ஒருக்கல் கணக்கு<br>(47500 பங்களுக்குரிய ஒதுக்கல் பணம் பெறப்பட்டமை) | செலவு | | 650000 |
| அழைப்பு கணக்கு | வரவு | 250000 | |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்<br>(50000 பங்குகளுக்கு 5% படி அளவிடப்பட்டமை) | செலவு | | 250000 |
| வங்கி கணக்கு | வரவு | 232500 | |
| அழைப்பு நிலுவை கணக்கு | வரவு | 17500 | |
| அழைப்பு கணக்கு<br>(46500 பங்குகளுக்கு அழைப்பு பணம் பெறப்பட்டமை) | செலவு | | 250000 |
| வங்கி கணக்கு | வரவு | 87500 | |
| மறுவிற்பனை கணக்கு<br>(2500 பங்குகள் பங்கொள்வ 35 படி மறுவிற்பனை<br>செய்யப்பட்டமை | செலவு | | 87500 |
| மறு விற்பனை கணக்கு | வரவு | 45000 | |
| ஒதுக்கல் நிலுவை கணக்கு | செலவு | | 32500 |
| அழைப்பு நிலுவை கணக்கு | செலவு | | 12500 |
| (ஒதுக்கல் நிலுவை, அழைப்பு நிலுவை, மறு விற்பனை கணக்கு<br>மாற்றப்பட்டமை. | | | |
| மறு விற்பனை கணக்கு | வரவு | 3000 | |
| பெற்றவட்டி கணக்கு<br>(ஒதுக்கல் நிலுவை அழைப்பு நிலுவை வட்டிகளுக்கு | செலவு | | 3000 |
| மறு விற்பனை கணக்கு | வரவு | 5000 | |
| வங்கி கணக்கு<br>(மறு விற்பனை செலவுக்கான கணக்குப்பதிவு | செலவு | | 5000 |
| மறுவிற்பனை கணக்கு | வரவு | 27000 | |
| வங்கி கணக்கு<br>(மூலப்பங்கு தாரரிடமிருந்து பெற்ற தொகையில் வட்டி நீங்கிய<br>தொகை மீளளிக்கப்பட்டது) | செலவு | | 27000 |
| மறு விற்பனை கணக்கு | வரவு | 7500 | |
| கூறப்பட்ட சாதாரணபங்கு மூலதனம்<br>(மறுவிற்பனை இலாபம் கூறப்பட்ட பங்கு மூலதனம்<br>மாற்றப்பட்டமை) | செலவு | | 7500 |

மறு விற்பனை கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ஒதுக்கல் நிலுவை | 32500 | வங்கி | 87500 |
| அழைப்பு நிலுவை | 12500 | | |
| வட்டி | 3000 | | |
| மறுவிற்பசைன் செலவு | 5000 | | |
| வங்கி | 27000 | | |
| கூறப்பட்ட மூலதனம் | 7500 | | |
| | 87500 | | 87500 |

ஆ)

| விபரம் | | தொகை | தொகை |
|---|---|---|---|
| 1. கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | வரவு | 2000 | |
| கொள்வனவு கணக்கு | செலவு | | 2000 |
| (கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 2000 ஆல் மிகையாக கூட்டம் பட்டிருந்தமை திருத்தப்பட்டது | | | |
| 2. தொங்கல் கணக்கு | வரவு | 1500 | |
| விற்பனை கணக்கு (விற்பனை கணக்கின் கூட்டுத்தொகை ரூபா 1500 இல் குறைவாக கூட்டப்பட்டிருந்தமை திருத்தப்பட்டது) | செலவு | | 1500 |
| 3. பதிய வேண்டிய அவசியம் இல்லை | | | |
| 4. சம்பள கணக்கு | வரவு | 8800 | |
| தொங்கல் கணக்கு (செலுத்திய சம்பளம் 3500/- சம்பள கணக்கில் 5300/- எனப் பதியப்பட்டிருந்தமை திருத்தப்பட்டது) | செலவு | | 8800 |

தொங்கல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 7300 | சம்பளம் | 8800 |
| விற்பனை | 1500 | | |
| | 8800 | | 8800 |

**05) அ) 31.03.2011 இல் இருந்தபடி காசேடு**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 61000 | எடுத்தல்கள் | 142800 |
| வைப்புக்கள் | 174500 | மீதி செலவு | 92700 |
| | 235500 | | 235500 |
| மீ/வ | 92700 | | |

**செய்கை வைப்புகள்**

| | |
|---|---|
| செலவு வைக்கப்பட்ட தொகை | 175000 |
| (-) சென்ற வருட தேறாத காசோலை | (8000) |
| வசூழித்த பங்கு இலாபம் | (2500) |
| (+) இவ் ஆண்டுக்கான தேறாத காசோலை | 10000 |
| | 174500 |

**எடுத்தல்கள்**

| | |
|---|---|
| வரவு வைக்கப்பட்ட தொகை | 140000 |
| (-) சென்றவருடம் சமர்ப்பிக்கப்படாத காசோலை | (12000) |
| வங்கி கட்டணம் | (2200) |
| நிலையியற் கட்டணம் | (3000) |
| (+) இவ் ஆண்டுக்கான வரவு வைக்கப்படாத காசோலை | 20000 |
| | 142800 |

திருத்திய காசேடு

| | | | |
|---|---|---|---|
| மீதி/வந் | 92700 | வங்கிக்கட்டணம் | 2200 |
| பங்கு இலாபம் | 2500 | நிலையியற் கட்டணம் | 3000 |
| | | கொடுப்பனவு | |
| | | மீ/செ | 90000 |
| | 95200 | | 95200 |
| மீ/வ | 90000 | | |

ஆ. உபேந்திரா வணிகத்தின் 31.03.2011இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

| விபரம் | தொகை | தொகை | தொகை |
|---|---|---|---|
| விற்பனை | | | 10,00,000 |
| விற்பனைக்கிரயம் | | | |
| ஆரம்ப இருப்பு | 140,000 | | |
| கொள்வனவு | 770000 | 910000 | |
| (-) இறுதி இருப்பு | | (110000) | (800000) |
| மொத்த இலாபம் | | | 200000 |
| பெற்ற கழிவு | | | 18000 |
| | | | 218000 |
| வாடகை | | 75000 | |
| செயற்பாட்டுச் செலவு | | 46000 | |
| பெறுமானத் தேய்வு | | 25000 | |
| கொடுத்த கழிவு | | 20000 | (166000) |
| தேறிய இலாபம் | | | 52000 |

<u>செய்கைகள்</u>

க. கொடுத்தோர் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 582000 | மீதி | 320000 |
| கழிவு | 18000 | கொள்வனவு | 770000 |
| | 1090000 | | 1090000 |

வாடகைக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 80000 | மீதி | 25000 |
| மீ.வ | 20000 | இ/த | 75000 |
| | 100000 | | 100000 |

நி.சொத்து கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 165000 | பெ. தேய்வு | 25000 |
| வரவு | 40000 | மீ/செ | 180000 |
| | 205000 | | 205000 |

செயற்பாட்டுச் செலவு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீவ | 6000 | இ/ந | 46000 |
| காசு | 50000 | மீ/செ | 10000 |
| | 56000 | | 56000 |

05) இ. இலாபநட்ட கணக்கின் ஆராட்சி செயலின் உருப்படிகள்

| | | |
|---|---|---|
| சந்தை ஆராட்சி | 4 | மில்லியன் |
| ஊடக மேம்படுத்தல் செலவு | 8 | மில்லியன் |
| விளம்பர முகவர் நிறுவன கட்டணம் | 3 | மில்லியன் |
| | <u>15</u> | மில்லியன் |

ஐந்தொகையில் அபிவிருத்தி செயலின் உருப்படிகள் புதிய குறியீட்டு விருத்தி செலவு 4 மில்லியன்

***06) அ. நேரில் முறையில் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு***

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| வரி, வட்டி கழிக்க முன் இலாபம் | 75000 | |
| சீராக்கம் | | |
| பெறுமானத் தேய்வு | 18000 | |
| தொழிற்படு முதலுக்கு முன் செயற்பாட்டு இலாபம் | | 93000 |
| தொழிற்படு முதல் மாற்றம் | | |
| இருப்பு அதிகரிப்பு | (16000) | |
| கடன்பட்டோர் அதிகரிப்பு | (11000) | |
| கடன் கொடுத்தோர் அதிகரிப்பு | 16000 | |
| அட்டுறு செலவு குறைவு | (5000) | (16000) |
| செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான காசு | | 77000 |
| செலுத்திய வட்டி | 5000 | |
| வரி | 10000 | (15000) |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு | | 62000 |

ஆ. நந்தா கம்பனியின்
நேர்முறையிலான காசுப் பாச்சல் கூற்று

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 289000 | |
| கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு | (180000) | |
| செயற்பாட்டு செலவு | (32000) | |
| செயற்பாட்டு நடவடிக்கையில் உருவான காசு | 77000 | |
| வட்டி | (5000) | |
| வரி | (10000) | |
| செயற்பாட்டு நடவடிக்கையில் உருவான தேறிய காசு | | 62000 |
| முதலீட்டு நடவடிக்கை | | |
| பொறி கொள்வனவு | (40000) | |
| முதலீடு | (50000) | |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு | | (90000) |
| நிதியிட்ட நடவடிக்கை | | |
| பங்குமுதல் | 110000 | |
| தொகுதிக் கடன் | (55000) | |
| பங்குலாபம் | (35000) | |
| நிதியீட்ட நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு | | 20000 |
| காசும் காசிற்கு சமனாயும் | | (8000) |
| ஆரம்ப காசு மீதி | | (16000) |
| இறுதி காசு மீதி | | 80000 |

**கடன்கொடுத்தோர் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 180000 | மீதி | 5000 |
| மீ/செ | 21000 | கொள்வனவு | 196000 |
| | 201000 | | 201000 |

**பொறி கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 80000 | பெ.தே | 10000 |
| காசு | 40000 | மீ/செ | 110000 |
| | 120000 | | 120000 |

**கடன்பட்டோர் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 21000 | காசு | 289000 |
| விற்பனை | 300000 | மீ/செ | 32000 |
| | 321000 | | 321000 |

**மோட்டார் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 60000 | பெ.தே | 8000 |
| | | மீ/செ | 52000 |
| | 60000 | | 60000 |

இ.

1. காசுப் பாச்சல் தேவைப்பாட்டு விகிதம்

(நீண்டகால கடன் கொடுப்பனவு + நிலையான சொத்துக்கான கொடுப்பனவு + இலாபப் பகிர்வு) / செயற்பாட்டு கருமங்களினூடாக இடம்பெற்ற நிகர காசுப் பாச்சல்

$= \frac{55000+40000+35000}{62000} = \frac{130000}{62000} = 2.1$ தடவை

2. கடன் பாதுகாப்பு விகிதம் = மொத்தக் கடன் / செயற்பாட்டு நடவடிக்கைகளினால் இடம்பெற்ற நிகர காசுப் பாச்சல்

$= \frac{25000}{62000}$ 0.4 தடவை

03. காசு மீள் முதலீடு ஆதனங்களினதும் உபகரணங்களினதும் புத்தக பெறுமதி / செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாகிய நிகர காசுப் பாச்சல்

$= \frac{262000}{62000} = 4.2$ தடவை

04. வருமானத்துக்கு காசுப்பாச்சல் கட்டுடன் = செயற்பாட்டினால் ஏற்பட்ட நிகர காசுப் பாச்சல் / மொத்த வருமானம்

$= \frac{62000}{300000} = 0.2$

05. செயற்பாட்டுச் சுட்டெண் = செயற்பாட்டினால் ஏற்பட்ட நிகர காசுப் பாச்சல் / வரிக்குப்பின் இலாபம்

$= \frac{62000}{50000}$ 1.24

07) அ) 1. ஆரம்ப முதலீட்டின் நிகழ்காலப் பெறுமதி

| | |
|---|---|
| இயந்திரத்தின் கொள்விலை | 350000 |
| நிர்மானித்தல் கிரயம் | 25000 |
| | 375000 |

2. முதலாம் வருடத்தில் ஏற்படும் தேறிய செயற்பாட்டு காசுப்பாய்ச்சல்

| | |
|---|---|
| விற்பனை வருமானத்தின் வருடாந்த அதிகரிப்பு | 325000 |
| (-) செயற்பாட்டு கிரயத்தின் வருடாந்த அதிகரிப்பு | (75000) |
| | 250000 |

3. மூன்றாம் வருடத்தில் காசு உட்பாய்ச்சல்

| | |
|---|---|
| விற்பனை வருமானத்தின் வருடாந்த அதிகரிப்பு | 325000 |
| மூன்றாம் வருட இறுதியில் எஞ்சிய பெறுமதி | 50000 |
| | 375000 |

மூன்றாம் வருடத்தில் காசு வெளிப்பாய்ச்சல்
செயற்பாட்டு கிரயத்தின் வருடாந்த அதிகரிப்பு 75000

*4. 10% கழிவீட்டு வீதத்தில் முதலீட்டின் தேறிய நிகழ்காலப் பெறுமதி*

| வருடம் | காசுப்பாய்ச்சல் | கழிவு காரணி 10% | நிகழ்காலப்பெறுமதி |
|---|---|---|---|
| 0 | (375000) | 1.00 | (375000) |
| 1 | 250000 | 0.91 | 227500 |
| 2 | 250000 | 0.83 | 207500 |
| 3 | 300000 | 0.75 | 225000 |
| | | | 285000 |

5. நேர்கணிய மிகை 285000 ரூபா காணப்படுவதால் இம் முதலீடு நிதி சார்ந்த வகையில் சாத்திய மானதாகும்.

ஆ.


1. அலகுக்கான பங்களிப்பு = விற்பனைவிலை - மாறும் கிரயம்
   = 80-60
   = 20 ரூபா

2. எதிர்பார்க்கப்பட்ட விற்பனையில் இலாபம் = மொத்த பங்களிப்பு – நிலையான செலவு
   = (20x6000) – 50000
   = 120000-50000
   = 70000 ரூபா

3. இலாபநட்டமற்ற புள்ளி அலகுகளில் = $\frac{\text{நிலையான செலவு}}{\text{அலகுக்கான பங்களிப்பு}}$
   = $\frac{50000}{20}$
   = 2500 அலகுகள்


4. பாதுகாப்பு எல்லை அலகுகளில் = எதிர்பார்க்கப்பட்ட விற்பனை அலகுகள் - சமன்பாட்டு புள்ளி விற்பனை அலகுகள்
   = 6000-2500
   = 3500 அலகுகள்

5.




A = இலாபநட்ட மற்றபுள்ளி
B = இலாபம்
C = நட்டம்
D = பாதுகாப்பு எல்லை அலகுகள்
E = பாதுகாப்பு எல்லை ரூபாவி

6.




A= இலாப நட்டமற்ற புள்ளி

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2011

# கணக்கீடு

33 T I

## மாதிரி வினாத்தாள்-II

தரம் - 13 பகுதி – I இரண்டுமணித்தியாலம்

வினாத்தாள் கட்டமைப்பு

**வினாத்தாள் - I நேரம் 2 மணித்தியாலம்**
5 தெரிவுகளைக் கொண்ட 30 பல்தேர்வு வினாக்களையும் 20 குறுவிடை வழங்கும் வினாக்களையும் உள்ளடக்கியதாகும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும் ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**வினாத்தாள் - II நேரம் 3 மணித்தியாலம்**
இவ்வினத்தாள் 7 வினாக்களைக் கொண்டது முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் கட்டாய வினாக்கள் ஆகும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் இவ்விரு வினாக்களுக்கும் மொத்தம் 40 புள்ளிகளாகும். ஏனைய 5 வினாக்களில் ஏதாவத 4 வினாக்களைத் தெரிவு செய்வதுடன் ஒரு வினாவுக்கு 15 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகளாகும்.

**அறுதிப்புள்ளிக் கணிப்பீடு** :- வினாத்தாள் - 01 100
வினாத்தாள் - 02 100
இறுதிப்பள்ளி 100 ÷ 2 = 100

விக்னேஸ் 2011 ஜனவரி 1ம் திகதி 250000 ரூபா மூலதனத்துடன் ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தார் இம்மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஜனவரி 05 காசுக்கு கொள்வனவு 70 000 ரூபா
ஜவைா் 07 வங்கியில் பெற்ற கடன் 60 000 ரூபா
ஜனவரி 10 கடனுக்கு பண்டங்களின் கொள்வனவு 10 000 ரூபா
ஜனவரி 20 சம்பளமாக செலுத்திய தொகை 5000 ரூபா
ஜனவரி 30 20000 ரூபா பண்டங்கள் 27500 ரூபாவுக்கு விற்கப்பட்டது.
ஜனவரி 31 உரிமையாளர் தனது சொந்தப் பணத்திலிருந்து 10000 ரூபா செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோருக்கு 9000 ரூபா செலுத்தி கணக்கு தீர்த்துள்ளனர்.

பின்வரும் கனக்கீட்டுச் சமன்பாடுகளில் ஜனவரி 31ம் திகதியன்று விக்னேஷ் வியாபாரத்தின் சொத்துக்கள் பொறுப்புக்கள் உரிமையாண்மை என்பவற்றை சரியாக காட்டும் கணப்பீட்டுச் சமன்பாடு யாது?

01) சொத்தக்கள் = பொறுப்புக்கள் + உரிமையாண்மை
1) 322500 = 60000 + 262500
2) 322500 = 50 000 + 272500
3) 317500 = 60000 + 257500
4) 360 000 = 60000 + 30 0000
5) 375500 = 75500 + 300000 (........)

02) பின்வரும் முதன்மை ஏடுகளில் இரு நோக்கங்களை நிறைவேற்றுகின்ற முதன்மை ஏடு என கருதப்படக்கூடியது எதுவாகும்.
1) உட்திரும்பல் நாளேடு
2) கொள்வனவு நாளேடு
3) பொதுநாட்குறிப்பு
4) விற்பனை நாளேடு
5) காசேடு (........)

03) கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்யும் போது பண்டத்தின் குறித்த விலையிலிருந்து குறிப்பிட்ட வீதமொன்று குறைக்கப்படும் அவ்வாறு கழிக்கப்படும் தொகை பின்வரும் எந்த கணக்கீட்டுப் பதத்தினால் அழைக்கப்படும்.
1) பெற்ற கழிவு 2) கொடுத்த கழிவு 3) காசுக்கழிவு
4) வியாபாரக்கழிவு 5) பருவகாலக்கழிவு (……..)

04) கொடுக்கல் வாங்கல் ஒன்றின் சட்டத் தன்மையை விட அதன் பொருளாதார ரீதியான கருத்து (இயல்புநிலை) முக்கியமானது என்பதனை வலியுறுத்திக் கூறும் எண்ணக்கரு
1) பாதுகாப்பு எண்ணக்கரு
2) வியாபார அலகு சார் எண்ணக்கரு
3) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு
4) அட்டுறு எண்ணக்கரு
5) தேறல் எண்ணக்கரு (……..)

05) உற்பத்திக் கிரயத்தை மதிப்பீடு செய்வதில் உற்பத்தி மாற்றத்தின் விகிதாசாரத்துக்கு ஏற்ப மாற்றமடைந்து செல்லாத இயல்பினைக் கொண்ட செலவு எவ்வாறு அழைக்கப்படும்
1) நேர்ச்செலவு 2) நேரில் செலவு 3) பிற்போட்ட வருமானச் செலவு
4) வருமானச் செலவு 5) ஏனைய செலவு
(……..)

06) "விற்க அல்லது திருப்புக" என்ற அடிபட்படையில் 50000 ரூபா கொள்விலையான பண்டங்கள் 60000 ரூபாவுக்கு பட்டியலிடப்பட்டு வாடிக்கையாளன் ஒருவனுக்கு அனுப்பப்பட்டு விற்பனைகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இப்பண்டங்கள் திருப்பி வரும் நிலையில் உள்ளன. இச்சீராக்கத்தினை மேற்கொள்ளும் போது விற்பனைக் கிரயத்தில் ஏற்படும் விளைவு எதுவாகும்.
1) விற்பனைக் கிரயத்தில் 60000 ரூபா கூட்டுதல் வேண்டும்
2) விற்பனைக் கிரயத்தில் 50000 ரூபா கழித்தல் வேண்டும்
3) விற்பனைக் கிரயத்தில் 60000 ரூபா கழித்தல் வேண்டும்.
4) விற்பனைக் கிரயத்தில் 50000 ரூபா கூட்டுதல் வேண்டும்
5) மாற்றம் எதுவும் நடைபெற மாட்டாது.

07) பங்குடமை வணிகம் ஒன்றில், முகாமைக்கு பங்களிப்பு செய்தல் மூலதனமிடல் இடர்களை ஏற்றல் ஆகிய மூன்று விடயங்களும் உள்ளடங்கியிருப்பது.
1) பங்காளர் பங்களிப்புக்கள் ஆகும்.
2) பங்காளர் விதிகள் ஆகும்.
3) பங்காளர் மரபுகளாகும்.
4) பங்காளர் நடவடிக்கைகளாகும்.
5) பங்காளர் சிந்தனைகளாகும்.
(……..)

08) "சுமனில்" வணிகத்தின் நிதியாண்டு 30.6.2011ல் முடிவடைகின்றது. இந்தியாண்டின் ஆரம்ப தினமான 01.07.2010 மின் கட்டணமாக 6000 ரூபா செலுத்த வேண்டி உள்ளது நிதியாண்டு காலத்தில் காசாக கொடுப்பனவு செய்யப்பட்ட மின் கட்டணம் 27000 ரூபாவாகும். 30.06.2011ல் முற் செலுத்திய மின் கட்டணம் ஏதுமில்லை. ஆனால் இத்திகதியில் கொடுபடாத மின்கட்டணம் 1500 ரூபா ஆகும். 30.6.2011ல் முடிவடைந்த வருமானக் கூற்றில் காட்டப்பட வேண்டிய மின் கட்டணத்தொகை
2) 27000 ரூபா 2) 28500 ரூபா 3) 33000ரூபா
4) 34500 ரூபா 5) 22500 ரூபா
(……..)

09) வாணி வணிகம் பொறித் தொகுதி ஒன்றை 74000 ரூபாவுக்கு விற்றிருந்தது இப் பொறிக்கு விற்பனைத் திகதி வரை பொறித்தொகுதிக்கான பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கில் 14500 ரூபா மீதி காணப்பட்டது. இப் பொறி விற்பனை மூலம் 16000 ரூபா நட்டம் ஏற்பட்டது. இப் பொறியின் கொள்விலைப் பெறுமதி யாது?
1) 72500 ரூபா 2) 104500 ரூபா 3) 90000 ரூபா
4) 88500 ரூபா 5) 60000 ரூபா
(……..)

10) பின்வரும் சமன்பாடுகளில் எது உற்பத்திக் கிரயத்தை தீர்மானிக்கப் பயன்படுவதாக அமையும்.
   1) நுகரப்பட்ட மூலப்பொருட்கிரயம் + நேர்க்கிரயம்
   2) மூலக்கிரயம் + மேந்தலைக்கிரயங்கள்
   3) முலக்கிரயம் + மேந்தலைக்கிரயங்கள் - உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயங்கள்
   4) நேர்க்கிரயங்கள் + மாறும் மேந்தலைக் கிரயங்கள்
   5) மேற்கூறிய எவையுமில்லை

(........)

11) நிறுவனம் ஒன்றில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் முன்வைக்கும் போதும் பின்பற்றப்படும் குறித்த தத்துவங்களும் மரபு ரீதியான அடிப்படை விதிமுறைகளும் விதப்புரைகளும் எவ்வாறு கணக்கீட்டில் பெயரிடப்படுகின்றது.
   1) கணக்கீட்டுச் சமன்பாடுகள்
   2) கணக்கீட்டு விதிகள்
   3) கணக்கீட்டு அனுபவங்கள்
   4) கணக்கீட்டுச் சட்டங்கள்
   5) கணக்கீட்டுக் கொள்கைகள்

(........)

12) 31.12.2010ல் முடிவடைந்த நிதியாண்டுக்காக
சுபா, யசா, வசபா பங்குடமை நிறுவனம் நிதிக் கூற்றுக்களை தயாரித்துள்ளது. இலாபநட்டங்களை முறையே 2:2:1 என்ற அடிப்படையில் பங்கீடு செய்வதன் மூலம் 84500, 84500,42250 ஆகிய தொகைகள் நடமுறைகளுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளன.

பங்குடமையின் மொத்த மூலதனம் 1075000 ரூபா ஆகும். வட்டி 10% கணிக்கப்படும் பங்காளர் ஒவ்வொருவரும் மாதாந்தம் 5000 ரூபா சம்பளம் பெறுவர். ஆண்டு தொடக்கத்திலிருந்து நடைமுறைக் கணக்கின் வரவு மீதிகளுக்கு கணிக்கப்பட்ட மொத்த வட்டி 7500 ரூபாவாகும்.

இப்பங்குடமை வணிகத்தினால் 31.12.2010ல் உழைக்கப்பட்ட தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டம் யாது?
   1) தேறிய இலாபம் 83 350 ரூபா
   2) தேறிய இலாகம் 491 250 ரூபா
   3) தேறிய இலாபம் 68750 ரூபா
   4) தேறிய நட்டம் 82250ரூபா
   5) தேறிய நட்டம் 68750 ரூபா

(........)

13) வணிகமொன்றின் குறித்த நிதியாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரகு வருமானம் 35000 ரூபாவாகும். இத்தொகையில் 10% மான தொகை எதிர்வரும் நிதியாண்டு தொடர்பாக கிடைக்கப்ப பெற்றதாகும். எஞ்சிய தொகையில் 20% மான தொகை கடந்த நிதியாண்டில் கிடைக்கவேண்டிய தொகை தொடர்பாக பெறப்பட்டதாகும் உரிமையாளரின் உரிமைத்துவம் எத்தொகையால் மாற்றமடையும்.
   1) 35,000 ரூபாவால் அதிகரிக்கும்
   2) 31500 ரூபாவால் அதிகரிக்கும்
   3) 35,000 ரூபாவால் குறையும்
   4) 25200 ரூபாவால் அதிகரிக்கும்
   5) 9800 ரூபாவால் அதிகரிக்கும்

(........)

14) காசுப் புத்தகத்திலுள்ள காசு நிரலில்மீதியை குறைக்ககூடிய நடவடிக்கையாக அமைவது
   1) வங்கியிடப்பட்ட பணம்
   2) உரிமையாளர் மேலதிக மூலதனத்தை வங்கியிலிடுதல்
   3) வங்கியிலிருந்து உரிமையாளர் சொந்த தேவைக்கு எடுத்த பணம்
   4) வருமானம் ஒன்று நிலுவையாக இருத்தல்
   5) வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட பணம்

(........)

15) சில்லறைக் காசேட்டு பகுப்பாய்வு நிரல்களின் கூட்டுத்தொகையினைக் குறிப்பிட்ட செலவுக் கணக்குகளுக்கு மாற்றும் போது ஏற்படும் இரட்டைப் பதிவு பின்வருவனவற்றுள் எதுவாக அமையும்.
   1) குறிப்பிட்ட செலவுக் கணக்கு வரவு
      சில்லறைக்காசேடு செலவு
   2) குறிப்பிட்ட செலவுக் கணக்கு வரவு
      காசேடு செலவு
   3) சில்லறைக் காசேடு வரவு
      குறிப்பிட்ட செலவுக் கணக்கு செலவு
   4) காசேடு வரவு

குறிப்பிட்ட செலவுக் கணக்கு செலவு

5) மேற் கூறிய யாவும் பிழை (........)

16) குத்தகைக் கணக்கீடு தொடர்பான விடயங்களை வரைவிலக்கணப்படுத்திக் காட்டும் இலங்கைப் கணக்கீட்டு நியமம் பின்வருவனவற்றுள் எதுவகாக இருக்கும்

1) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 03
2) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 05
3) இலங்கைக் கண்க்கீட்டு நியமம் 18
4) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 36
5) இலங்கைக் கண்க்கீட்டு நியமம் 19

(........)

17) யாதேனும் மூலதன வகையொன்றுக்கு அதன் உரிமையாளர்களுக்கு உரிமைத்தவ விகிதத்தினடிப படையில் இலாபத்திலிருந்து மேற்கொள்ளப்படும் பகிர்வு எவ்வாறு அழைக்கப்படும்.

1) இறைகள்
2) வட்டி
3) பங்கிலாபங்கள்
4) தரகு
5) மேற்கூறிய யாவும் சரி

(........)

18) இலங்கை கணக்கீட்டுக் நியமம் 37க்கு அமைய பௌதீக நிலைப்பாடற்ற பணரீதியற்ற சொத்துக்கள் என இனங்காணக் கூடியவை எவ்வாறு அழைக்கப்படும்

1) கட்புலனாகாத சொத்துக்கள்
2) 2) நடமுறையல்லாச் சொத்துக்கள்
3) நடைமுறைச் சொத்துக்கள்
4) உருவகச் சொத்துக்கள்
5) நிலையான சொத்தக்கள்

(........)

19) வழங்கிய பங்குகள் மீது கம்பனிக்கு கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய மொத்தப் பணத்தின் கூட்டுத் தொகை

1) கூறப்பட்ட மூலதனமாகும்.
2) அழைத்த மூலதனமாகும்.
3) பதிவு செய்த மூலதனமாகும்.
4) பங்கு மூலதனமாகும்
5) செலுத்திய மூலதனமாகும்.

(........)

20) ஒரு செயற்றிட்டத்திலிருந்து எழும் பின்வரும் காசுப் பாய்ச்சல்களில் எது தேறிய நிகழ் கால பெறுமதி முறையின் அடிப்படையில் மதிப்பிடப்படும் தேறிய காசுப் பாய்ச்சலினை கணிப்பதுடன் பொருத்தமற்றதாக இருக்கும்.

1) ஆரம்ப முதலீடு
2) செயற்பாட்டுச் செலவுகள்
3) வட்டிச் செலவுகள்
4) வருமானம்
5) தொழிற்படு மூலதனம்

(........)

தொழிற்சாலை ஒன்றில் பயன்படுத்தும் மூலப்பொருள் உருப்படிகளுக்குரிய தரவுகள் பின்வருமாறு

ஆகக்குறைந்த நுகர்வு நாளொன்றுக்கு 160 அலகுகள் சராசரி நுகர்வு நாளொன்றுக்கு 200 அலகுகள் மறுகட்டளைத் தொகை 4800 அலகுகள் மறு கட்டணையிடும் காலம் குறைந்தது 15 நாட்கள் மறுகட்டளையிடும் காலம் சராசரி 20 நாட்கள்

*மேற்கூறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி 21 – 24 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.*

21) மறு கட்டளையிடும் மட்டம்

1) 6000 அலகுகள்
2) 7500 அலகுகள்
3) 7000 அலகுகள்
4) 12000 அலககள்
5) 9000 அலகுகள்

(........)

22) உச்ச இருப்பு மட்டம்

1) 10800 அலகுகள்
2) 6400 அலகுகள்
3) 9400 அலகுகள்
4) 7400 அலகுகள்
5) 8400 அலகுகள்

(........)

23) இழிவு இருப்பு மட்டம்

1) 6000 அலகுகள்
2) 2000 அலகுகள்
3) 3000 அலகுகள்
4) 4500 அலககள்
5) 5000 அலகுகள்

(........)

24) சராசரி இருப்பு மட்டம்
1) 5200 அலகுகள் 2) 3600 அலகுகள் 3) 4700 அலகுகள்
4) 5300 அலககள் 5) 4400 அலகுகள்

(........)

25) விளையாட்டுப் பொம்மை ஒன்றின் விற்பனை விலை 100 ரூபாவாக உள்ளது பொம்மை ஒன்றின் மாறும் கிரயம் 60 ரூபா விற்பனை செய்யப்பட்ட விளையாட்டுப் பொம்மைகளின் எண்ணிக்கை 500 ஆகும் பொம்மை ஒன்றுக்கான பங்களிப்பு யாது?
1) 900 ரூபா 2) 40 ரூபா 3) 940ரூபா
4) 840 ரூபா 5) மேற்கூறிய யாவும் பிழை

(........)

26) பின்வரும் கருதுகோள்களில் சமப்பாட்டு புள்ளி தொடர்பான சரியான கருதுகோளாக அமைவது
1) கிரயங்கள் ஒருபோதும் வகைப்படுத்தப்பட மாட்டாது
2) மொத்த நிலையான கிரயம் மாற்றமடையாது
3) மொத்த மாறும் கிரயம் செயற்பாட்டு மட்டத்துக்கு ஏற்பசமனான விகிதத்தில் மாற்றமடையமாட்டாது.
4) கிரய அலகு மாற்றமடைய மாட்டாது.
5) மேற்கூறிய யாவம் சரி

(........)

27) குறித்த ஒரு வகைப் பொருள் தொடர்பாக களஞ்சிய சாலைக்கு கிடைத்த அளவு விநியோகித்த அளவு எஞ்சிய அளவு ஆகிய விபரங்களை உள்ளடக்கிய ஆவணம் எதுவாக அமையும்.
1) களஞ்சியப் பேரேடு 2) இருப்பேடு 3) கொள்கல அட்டை
4) விநியோகப்பத்திரம் 5) வரவுப்பதிவேடு

(........)

28) பின்வருவனவற்றுள் காசும் காசுக்குச் சமமான விடயங்களும் என்ற வகுதிகள் உள்ளடங்க கூடியது.
1) காலாண்டு திறைசேரி உண்டியல்கள்
2) இருப்பு
3) நீண்டகால நிலையான வைப்பக்கள்
4) நீண்டகால சேமிப்பு சான்றிதழ்கள்
5) மத்திய வங்கி பிணைகள்

(........)

29) சம்பளப் பட்டியலில் குறிக்கப்படும் உழியரின் சேமலாப நிதியம் நம்பிக்கை நிதியம் என்ற தகவலை பெற்றுக் கொள்ளக் கூடிய மூலகம் யாது?
1) நியமனக் கடிதம் 2) அமுலாக்கச் சட்ட மூலம்
3) வேலைப்பத்திரம் 4) கையொப்பபுத்தகம் 5) முகாமையின் தீர்மானம்

(........)

30) பின்வருவனவற்றுள் முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல் என்பதனுள் எது உள்ளடங்கும்
1) செலுத்திய பங்குலாபம் 2) செலுத்திய வருமானவரி
3) கணனி விற்பனை 4) சாதாரண பங்கு வழங்கல்
5) தொகுதிக்கடன் மீட்பு

(........)

31) பொது நாட்குறிப்பில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு பொருத்தமான இரண்டு மூல ஆவணங்களில் பெயரிடுக.

..........................................................................................................................

..........................................................................................................................

32) உற்பத்திக் கிரயத்தினை வருமானக் கூற்றுக்கு மாற்றுவதற்குரிய இரட்டைப்பதிவினை எழுதுக?

..........................................................................................................................

..........................................................................................................................

33) பங்காளர்களது உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் தாக்கத்தை செலுத்தும் காரணிகளை குறிப்பிடுக.

..................................................................................................................

..................................................................................................................

34) உரிமை மாற்றல் கூற்றினை தயாரிப்பதன் பிரதான நோக்கத்தினைக் குறிப்பிடுக.

..................................................................................................................

..................................................................................................................

35) செயற்றிட்டத்தினை மதிப்பிடும் நுட்பங்களில் ஒன்றான தேறிய நிகழ்கால பெறுமதியின் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

..................................................................................................................

..................................................................................................................

36) விளையாட்டுக் கழகம் ஒன்றுக்கு கிடைக்கப்பெற்ற விசேட நன்கொடைத் தொகை யிலிருந்து கட்டிடம் ஒன்று புதிதாக 50 0000 ரூபாவுக்கு அமைக்கப்பட்டது. இதற்குரிய இரட்டைப் பதிவுகளை எழுதுக.

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

37) இலாப நோக்கற்ற நிறுவனங்களில் அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது பிரவேசக்கட்டணம் அறவிடப்படும். இப் பிரவேசக் கட்டணம் தொடர்பாக பின்பற்றப்படும் இரு கணக்கீட்டு முறைகளைப் பெயரிடுக.

..................................................................................................................

..................................................................................................................

38) பொதுக்கம்பனியானது பங்குகளை மீள் விற்பனை செய்யும் மீள் விற்பனை தொடர்பால் 5000 ரூபா செலவு ஏற்பட்டது. அத்துடன் பழையபங்குதார்களுக்கு செலுத்த வேண்டிய தொகை 58000 ரூபா எனவும் கணிக்கப்பட்டது. இந்த இரண்டு நடவடிக்கைகள் தொடர்பான இரட்டை பதிவுகளை எழுதுக.

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

39) பங்குடமை வணிகத்தில் பங்காளர்களின் பற்றுக்கள் மீது கணிக்கப்படும் பற்று வட்டி இலாபநட்டக் கணக்கில் பதிவு செய்யப்படாமைக்குரிய காரணம் யாது?

..................................................................................................................

..................................................................................................................

40) பங்காளர்களின் நிலையான மூலதனக் கணக்கு மீதிகள் மாற்றமடைவதற்கு ஏதுவாக அமையக் கூடிய இரு கொடுக்கல் வாங்கல்களைப் பெயரிடுக.

..................................................................................................................

..................................................................................................................

41) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 10க்கு அமைய மதிப்பீட்டு மாற்றங்கள் என்பதனை வரையறுத்துக் கூறுக.

..................................................................................................................

..................................................................................................................

42) வரையறுத்த சாயிரா கம்பனி தனது ஊழியர்களுக்கு உபகாரணப்பணத்தை வழங்குவதற்கு றோவான் முறைமுறையைப் பயன்படுத்துகின்றது. சாயினால் முடிக்கப்பட்ட வேலை இலக்கம் 555தொடர்பான விபரங்கள் பின்வருமாறு தரப்படுகின்றது.

வேலைக்கு அனுமதித்த கால 5 மணித்தியாலயம்

எடுக்கப்பட்ட காலம் 4 மணித்தியாலம்
மணித்தியாலத்துக்கு கூலி 100 ரூபா

நீா சாயிக்கு செலுத்த வேண்டிய உபகரணப்பணம், மொத்தக் கூலி ஆகியவற்றைக் கணிக்க.

..............................................................................................................

..............................................................................................................

43) பங்காளர் மூலதன கணக்கும் பங்காளர் நடைமுறைக் கணக்குக்கும் இடையேயான வேறுபாடு இரண்டு தருக?

..............................................................................................................

..............................................................................................................

44) கழகமொன்றின் ஆயுட்கால அங்கத்துவக் கட்டணத்துக்கான கணக்கீட்டு முறைகள் இரண்டினை குறிப்பிடுக.

..............................................................................................................

..............................................................................................................

45) சிக்கன கட்டளைத் தொகை (EOQ) மாதிரியின் இரண்டு எடுகோள்களை எழுதுக.

..............................................................................................................

..............................................................................................................

46) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 3ற்கு அமைய நிதிக் கூற்று தொகுதியில் உள்ளடக்கப்படும் நான்கு பிரதான கூற்றுக்கள் எவை?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

47) வரையறுத்த பொதுக்கம்பனியானது பொது மக்களிற்கு மேற்கொள்ளும் பங்கு வழங்கலிற்கு மேலதிகமாக வழங்கப்படும் இரண்டு வகையான பங்கு வழங்கல்களைக் குறிப்பிடுக.

..............................................................................................................

..............................................................................................................

48) முதலீட்டு செயற்திட்டமொன்றில் தேறிய நிகழ்காலப் பெறுமதி பின்வருவனவற்றினால் அதிகரிக்குமா அல்லது குறைவடையுமா என்பதை ஏனைய காரணிகளில் மாற்றமில்லை எனக் கருத்திற் கொண்டு குறிப்பிடுக.

1) கழிவீட்டு வீதத்தில் அதிகரிப்பு ..............................................................

2) ஆரம்ப முதலீட்டுத் தொகையில் குறைவு ......................................................

49) சொத்தொன்றின் பெறுமானத்தேய்வுத் தொகையை தீர்மானிப்பதில் கருத்திற் கொள்ளப்படவேண்டிய இரண்டு காரணிகளை குறிப்பிடுக.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

50) வணிகம் ஒன்றில் காணப்படும் பொறுப்பு ஒன்றுக்கான இரு பண்புகளை எழுதுக.

..............................................................................................................

..............................................................................................................

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2011

# கணக்கீடு

**33 | T | I**

## மாதிரி வினாத்தாள்-II

தரம் - 13 பகுதி – II மூன்று மணித்தியாலம்

கவனிக்குக.

- ***முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.***

***01) வரையறுக்கப்பட்ட ஜோன்ஸ்ரன் கம்பனியின் ஏடுகளிலிருந்து 31.03.2011 இல் எடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு***

| | ரூபா000 | ரூபா000 |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் | | |
| 50/= வீதம், சாதாரண பங்கு | | 6,500 |
| 20/= வீதம் முன்னுரிமைப்பங்கு | | 3,000 |
| பொது ஒதுக்கம் | | 750 |
| இலாப நட்டக்கணக்கு மீதி | | 1,200 |
| இடைக்கால பங்கிலாபம் - சாதாரண பங்கு | 180 | |
| முன்னுரிமை பங்கு | 150 | |
| விற்பனைக்கிரயம் | 2,150 | |
| காணி கட்டிடம் (கிரயம்) காணி 1000 | 3,500 | |
| இயந்திரம் பொறி (கிரயம்) | 2,500 | |
| மோட்டார் வாகனம் | 2,100 | |
| நிர்வாக கிரயம் | 900 | |
| விநியோக கிரயம் | 750 | |
| சம்பளம் (தேறியது) | 360 | |
| விற்பனை | | 6,950 |
| வருமானவரி ஏற்பாடு (2009 / 2010) | | 105 |
| பெற்றதரகு | | 240 |
| பங்கு வழங்கல் கணக்கு | | 175 |
| தொடக்க செலவு | 25 | |
| செலுத்திய வருமானவரி | 890 | |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | |
| - கட்டிடம் | | 950 |
| - இயந்திரம் பொறி | | 625 |
| - மோட்டார் வாகனம் | | 580 |
| 12% தொகுதிக்கடன் | | 1,200 |
| குத்தகை விற்பனையாளர்கணக்கு | | 250 |
| வருமதியாளரும் சென்மதியாளரும் | 1,400 | 575 |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 52 |
| சரக்கிருப்பு | 645 | |
| வங்கி | 7,602 | |
| | 23152 | 23152 |

மேலதிக தகவல்கள்

1) விற்பனையின்றேல் திரும்பல் நிபந்தனையில் 800 000 ரூபா விற்பனை விலை குறித்த (கிரயத்தில் 25% இலாபம் சேர்த்து) பண்டங்கள் வெளியனுப்பப்பட்டு ஏடுகளில்

விற்பனையாக பதிவு இடம் பெற்றிருந்தது. ஆனால் நிதியாண்டு இறுதியில் 50% மான பண்டங்களே விற்பனையாகியிருந்ததுடன் ஏனையவை இன்னமும் திரும்ப வேண்டிய கால எல்லை முடிவுறாமல் இருந்தது. இதற்கான சீராக்கங்கள் எவையும் இடம் பெறவில்லை

2) கடன்படுநரில் ரூபா 100,000 அறவிட முடியாக்கடனாக பதிவளிக்கப்பட்டதுடன் 5% க்கு ஐயக்கடன் ஏற்பாடு சீராக்கம் செய்யப்படும்.

3) நிர்வாகக் கிரயம் என்பதனுள் இயக்குனர் வேதனம் ரூபா 75000/= காப்புறுதி ரூபா 67000/= கணக்காய்வு கட்டணம் ரூபா 92 000/= என்பனவும் உள்ளடங்கும் காப்புறுதிக் கட்டணத்தில் ரூபா 12000/= முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ரூபா 15000/= நிர்வாக செலவு சென்மதியாகவுள்ளது.

4) சென்றாண்டு வரி ரூபா 115000/= ஆக ஒப்புக் கொண்டு செலுத்தப்பட்டதுடன் நடப்பாண்டு வரி (2010 / 2011) ரூபா 860 000/= ஆக மதிப்பிடப்பட்டது.

5) ஒவ்வொன்றும் 50/= ரூபா வீதம் உரித்து வழங்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பெற்றுக் கொண்ட தொகை பங்கு வழங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது

6) நடைமுறையல்லா சொத்துக்களுக்கு கிரயத்தில் பின்வருமாறுதேய்விடப்படும். கட்டிடம் 8% இயந்திரம் 10% மோட்டார் 20%

7) சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு ரூபா 200,000/= பெறுமதியான காணித்துண்டொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதுடன். மீதி காணியானது ரூபா 950 000/= ஆக மீளப் பெறுமானம் இடப்பட்டது.

8) 01.04.2008 இல் ரூபா 600,000/= கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஒன்று 01.01.2011 இல் ரூபா 400,000 விற்கு விற்கப்பட்டிருந்தது விற்பனையால் பெறப்பட்ட காசு இயந்திரக் கணக்கில் செலவு வைத்தமை தவிர வேறு எந்தப்பதிவும் இடம் பெற வில்லை

9) ரூபா 400,000/= கிரயமான மோட்டார் வாகனம் ஒன்று (01.10.2007 இல் கொள்வனவு செய்யப்பட்டது) 30.06.2010 இல் பகுதி மாற்றம் செய்யப்பட்டு ரூபா 350,000/= பெறுமதியில் புதிய மோட்டார் பெறுவனவு செய்யப்பட்டது. இதற்காக மேலதிக தொகை ரூபா 100,000 காசோலை செலுத்தப்பட்டது. செலுத்திய காசோலை மோட்டார் கணக்கில் வரவு வைத்தமை தவிர வேறு எந்தப் பதிவுகளும் இடம்பெறவில்லை.

10) ஊழியர் சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதிக்கு (E.P.F) தொழிலாளர் 10% ம் தொழில் கொள்வோர் 15%ம் பங்களிப்பு செய்கின்றனர். ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு நிறுவனம் 3% பங்களிப்பு செய்கின்றது.

11) 31.03.2011 இல் செலுத்த வேண்டிய வருடாந்த குத்தகை தவணைக் கட்டணம் குத்தகை வட்டி ரூபா 15000/= உள்ளடங்கலாக ரூபா 75000/= ஆகும்.

12) இயக்குனர் சபை தீர்மானம் வருமாறு
   a) வருட ஆரம்பத்தில் உள்ள சாதாரண பங்குகளுக்கு 10:1 என்ற விகிதாசாரத்தில் உபகார பங்கு வழங்குவது, பங்கொன்றின் விலை ரூபா 50/= ஆகும்.
   b) பொது ஒதுக்கத்திற்கு ரூபா 250,000/= ஐ மாற்றுதல்
   c) தொடக்க செலவை முழுமையாக பதிவளிப்பது.
   d) முன்னுரிமைப் பங்கு தாரருக்கு பங்கொன்றுக்கு ரூபா 2/= வீதம் பங்கிலாபம் வழங்கப்படுகின்றது.
   e) இறுதிப் பங்கிலாபத்திற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

***வேண்டப்படுவது***

பிரசுரிப்பதற்கு பொருத்தமான பின்வரும் கணக்குகளை 31.03.2011இல் முடிவுற்ற ஆண்டுக்கு தயாரிக்குக.

1) வருமானக் கூற்று (தேவையான குறிப்புக்கள், செய்கைகள் உட்பட)
2) உரிமை மாற்றல் கூற்று
3) ஆதனம் பொறி மற்றும் உபகரணத்திற்கான அசைவுக் கூற்று (20புள்ளிகள்)

02) கரன், பரன் ஆகியோர் பங்குடமையொன்றின் பங்காளர்கள் ஆவார்கள் இவர்களது பங்குடமை உடன்படிக்கை பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்கின்றது.

- மூலதனக் கணக்கின் ஆரம்ப மீதியின் மீது வருடாந்தம் 10% வட்டி வழங்குதல்
- பரன் முகாமைப் பங்காளராக தொழிற்படுவதனால் மாதாந்தம் 10 000/= சம்பளம் பெறுவார்.
- இலாப நட்டம் சமமாகப் பகிரப்படும்

**2011.03.31 இல் வருமான கூற்று தயாரிக்கப்பட்ட பின்னரான மீதிகள் வருமாறு**

| விபரம் | ரூபா 000 | ரூபா 000 |
|---|---|---|
| காணிகட்டிடம் (கிரயம்) | 1000 | |
| மோட்டார் வாகனம் (கிரயம்) | 1500 | |
| தளபாட உபகரணம் (கிரயம்) | 600 | |
| | | |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு 31.3.2011 | | 400 |
| - மோட்டார் வாகனம் | | 150 |
| - தளபாட உபகரணம் | | |
| தேறிய இலாபம் (2011.03.31 இல் முடிவடைந்த ஆண்டுவரை) | | 800 |
| | | |
| மூலதனக்கணக்கு 1.4.2010 இல் | | |
| கரன் | | 700 |
| பரன் | | 500 |
| தரன் கொண்டுவந்த காசு (1.10.2010) | | 500 |
| நடைமுறைக்கணக்கு மீதிகள் (1.4.2010) | | |
| கரன் | | 100 |
| பரன் | | 80 |
| | 80 | |
| இருப்பு | 40 | |
| கடன்பட்டோர் | 160 | |
| வங்கியும் காசும் | | |
| | | |
| வங்கிக்கடன் | | 50 |
| கடன்கொடுத்தோர். | | 100 |
| | 3380 | 3380 |

இப்பங்குடமையில் 01.10.2010 இல் தரன் என்பவர் புதிய பங்காளராக சேர்ந்து கொண்டனர் இதன்போது பின்வரும் உடன்பாட்டிற்கு பங்காளர்கள் வந்தனர்

- பங்குடமையின் நன்மதிப்பு 100 000/= ஆக மதிப்பீடு செய்யப்படும். இது பங்காளரது மூலதனக் கணக்கினுடாக சீராக்கப்படும்
- காணிக்கட்டிடம் 15,00,000 ஆகவும் மோட்டார் வாகனம் 10,00,000/= ஆகவும் தளபாட உபகரணம் 500,000/= ஆகவும் மீள் மதிப்பீடு செய்யப்படும். இப்பெறுமதிகள் கணக்குகளில் காட்டப்படும்.
- தரன் இலாப நட்டத்தில் 1/5 பங்கினை பெறுவார் மூலதனவட்டி முன்னைய ஒப்பந்தப்படி வழங்கப்படும்
- பரனுக்கு மாதாந்த சம்பளமாக 15000/= ரூபாவும் மற்றைய பங்காளருக்கு மாத சம்பளமாக 5000/= ரூபாவும் வழங்கப்படும்.
- சகல சீராக்கங்களுக்கும் பின் பங்குடமையின் மொத்த மூலதனம் 15,00,000/= ஆகும். என்ற அடிப்படையில் பங்காளரது இலாபநட்ட விகிதத்திற்கு அமைய பங்காளர் மூலதனக் கணக்கு மீதிகள் பங்காளர் நடைமுறைக் கணப்பினூடாக சீராக்கப்படும்.

மேலதிக தகவல்கள்

1) புதிய பங்காளர் சேரல் தொடர்பாக கணக்குகளில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை(தரன் கொண்டு வந்தகாசுமட்டும் பதியப்பட்டிருந்தது)

2) வருமானக் கூற்று தயாரிக்கப்படும் போது மோட்டார் வாகனத்திற்கு 20% உம் தளபாட உபகரணத்திற்கு 10% உம் கிரயத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீள் மதிப்பீட்டின் அதே வீதத்தில் தெய்விடுவதற்கு பங்காளர்கள் உடன்பட்டனர்.

3) ஆண்டுக் காலத்தில் பங்காளர்கள் பின்வருமாறு பொருட் பற்றுக்கள் செய்துள்ளனர் இது வருமானக் கூற்று தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படவில்லை

| | |
|---|---|
| கரன் | 20,000/= |
| பரன் | 20,000/= |
| தரன் | 10,000/= |

4) ஆண்டுக் காலத்தில் செலுத்த வேண்டியிருந்த சம்பளம் 6000/= வருமானக் கூற்று தயாரிப்பில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை

5) ஆண்டிறுதிக் கடன்பட்டோரில்10% ஐயக்கடன் ஏற்பாடு செய்ய தீர்மானிக்கப்படட்டது. இது வருமானக் கூற்று தயாரிப்பின் போது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை

வேண்டப்படுவது

1) இலாப சீராக்கல் கூற்று
2) 2011.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்ட பகிர்கணக்கு
3) பங்காளர் மூலதனக் கணக்கு
4) பங்காளர் நடைமுறைக்கணக்கு
5) 2011.03.31. இல் உள்ளவாறான ஐந்தொகை

(20புள்ளிகள்)

03) ஆ) அபி விளையாட்டு கழகத்தின் மீதிகள் வருமாறு

| | 1.1.2010 | 31.12.2010 |
|---|---|---|
| கட்டிடம் | 100 000 | 98 000 |
| காசு | 80 000 | ? |
| தளபாடம் | 50 000 | 70 000 |
| பெறவேண்டிய சந்தா | 20 000 | 25 000 |
| முற்பண சந்தா | 10 000 | ? |
| அட்டுறு மின்சாரம் | 5 000 | 4 000 |

அபி விளையாட்டுக் கழகத்தின் காசுக் கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| பெற்ற பொது நன்கொடை | | 15 000/= |
| பெற்ற சந்தா | 2009 | 20 000/= |
| | 2010 | 120 000/= |
| | 2011 | 15 000/= |
| | 2012 | 5 000/= |
| ஆயுள் சந்தா | | 80 000/= |
| பழைய பத்திரிகை விற்பனை | | 2 000/= |
| விளையாட்டு விழா செலவு | | 15 000/= |
| விளையாட்டு விழா வருமானம் | | 20 000/= |
| மைதான துப்பரவாக்கல் செலவு | | 3 000/= |
| தேநீர் செலவு | | 1 000/= |
| கட்டிட நன்கொடை | | 150 000/= |
| மின்சார கொடுப்பனவு | | 10 000/= |
| தொலைபேசி | | 5 000/= |
| தளபாடக் கொள்வனவு | | 25 000/= |

- ஆயுள் சந்தா 20 வருடங்களில் பதிவளிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டது. 31.12.2010 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றினையும் உள்ளவாறான நிலவரக் கூற்றையும் தயாரிக்குக.

(8புள்ளிகள்)

ஆ) சரணிகா வியாபார நிறுவனத்தின் கணக்காண்டு 31.12.2010 இல் முடிவடைகின்றது. பௌதீக ரீதியான இருப்பு கணக்கெடுப்பானது 15.1.2011 இல் 3,95,000/= ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

31.12.2010 இலிருந்து 15.01.2011 வரையிலான கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

1) 3.1.2011 கொள்வனவு 45000/=
2) 5.1.2011 வெளித்திரும்பல் 8000/= (இதில் 3000/= ரூபா 2010ம் ஆண்டு காலத்தில் ஏற்பட்ட கொள்வனவு தொடர்பானதாகும்.)
3) 7.1.2011 விற்பனை 65 000/=
4) 10.1.2011 உட்திரும்பல் 20 000/= (இதில் 5000/= ரூபா 2010ம் ஆண்டு காலத்தில் ஏற்பட்ட விற்பனை தொடர்பானதாகும்.
5) 12.1.2011 தீயால் அழிவடைந்த சரக்கின் கிரயம் 20 000/= ரூபா இதில் 50% த்தினை காப்புறுதி நிறுவனம் தருவதாக இணங்கியது.
6) 14.1.2011 விற்பனை இன்றேல் திரும்பல் என்ற அடிப்படையில் அனுப்பிய சரக்கின் விற்பனை விலை 40,000/= (நிறுவனம் விற்பனை விலையில் 25% இலாபம் வைப்பது வழமையாகும்.

வினா இருப்பு மதிப்பீட்டு கூற்றை தயார் செய்க. (04புள்ளிகள்)

இ) வரையறுத்த சில்வா கம்பனி 1.4.2009 இல் வரையறுக்கப்பட்ட விஸ்வா கம்பனியிடமிருந்து குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இயந்திரமொன்றைப் பெற்றுக் கொண்டது ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் வருமாறு

குத்தகை ஒப்பந்த காலம் 10 வருடங்கள்
இயந்திரத்தின் உடன்காசு விலை 800 000/= ரூபா
ஆரம்ப வைப்பு பணம் 100 000/= ரூபா
31.3.2010 இல் இருந்து செலுத்தப்பட வேண்டிய

தவணைக்கட்டணம் வட்டி நீங்கலாக 70 000/= ரூபா வருடாந்த வட்டி வீதம் 15%
சொத்துக்களுக்கான வருடாந்த பெறுமானத் தேய்வு வீதம் 10% 31.3.2010 ஆம் ஆண்டிற்கான குத்தகையாளன் ஏட்டில் நாட்குறிப்பு பதிவுகளை தருக?

(03புள்ளிகள்)

(மொத்தம் 15புள்ளிகள்)

04) "கோபாலன் உற்பத்திக்கம்பனியில் மூன்று உற்பத்தித் துறைகளும் இரண்டு சேவைத்துறைகளும் காணப்படுகின்றன. இத்துறைகளுக்கிடையில் 1ம் கட்ட பகிர்வு மேற் கொண்ட பின்பு எடுக்கப்பட்ட மேந்தலை விபரம் வருமாறு

| உற்பத்தித்தறை | | | சேவைத்துறை | |
|---|---|---|---|---|
| திணைக்களம் I | திணைக்களம் II | திணைக்களம் III | களஞ்சியம் | பராமரிப்பு |
| 42500 | 36000 | 21000 | 7500 | 9000 |

சேவைத்தறை மேந்தலைகள் உற்பத்தித் திணைக்களங்களுக்கிடையில் பின்வருமாறு பகிர்வு செய்யப்படும்

| | திணைக்களம் I | திணைக்களம் II | திணைக்களம் III | களஞ்சியம் | பராமரிப்பு |
|---|---|---|---|---|---|
| களஞ்சியம் | 30% | 50% | 10% | - | 10% |
| பராமரிப்பு | 40% | 10% | 30% | 20% | - |

**தேவைப்படுவது**

தொடர்பங்கீட்டு அடிப்படையில் சேவைத்துறை மேந்தலைகளை உற்பத்திணைக்களங்க ளுக்கிடையில் பகிர்வு செய்க?

(4புள்ளிகள்)

ஆ) செந்தாளன் உற்பத்தி வியாபாரத்தின் X 262 பொருள் தொடர்பான விபரம் 2011 ஜனவரி மாதத்திற்கு வருமாறு

| திகதி | விபரம் | அளவு | அலகுவிலை |
|---|---|---|---|
| 01.01.2010 | மீதி | 250 | 6 |
| 05.01.2010 | பெறுவனவு | 250 | 7 |
| 10.1.2010 | வழங்கல் | 350 | - |
| 15.01.2010 | கொள்வனவு | 150 | 8 |
| 21.01.2010 | வழங்கல் | 100 | - |
| 25.1.2010 | பெறுவனவு | 300 | 9 |
| 30.01.2010 | வழங்கல் | 450 | - |

**வேண்டப்படுவது**

நிறையளித்த சராசரிமுறையில் களஞ்சியப் பேரேட்டை தயாரிக்குக? (3புள்ளிகள்)

இ) *வரையறுக்கப்பட்ட கபில் கம்பனியின் ஏடுகளிலிருந்து இரு வருடங்களுக்காகப் பெறப்பட்ட ஐந்தொகைச் சுருக்கம் வருமாறு*

| விபரம் | 31.03.2011<br>ரூபா 0000 | 3103.2010<br>ரூபா 0000 |
|---|---|---|
| <u>நடைமுறையல்லாச் சொத்து</u> | | |
| கட்டடம் | 7150 | 7500 |
| மோட்டார் | 5400 | 6250 |
| இயந்திரம் பொறி | 5200 | 4600 |
| முதலீடுகள் | 1850 | - |
| <u>நடைமுறைச் சொத்துக்கள்</u> | | |
| சரக்கிருப்பு | 2420 | 1750 |
| கடன்பட்டோர் | 1960 | 1680 |
| காசு | 1050 | 875 |
| வங்கி | 840 | - |
| | 25870 | 22655 |
| <u>உரிமையாண்மையும் பொறுப்பும்</u> | | |
| கூறப்பட்ட சாதாரணப்பங்கு முதல் | 18510 | 15500 |
| பொது ஒதுக்கம் | 400 | 250 |
| நிறுத்திவைத்த உழைப்பு | 1810 | 940 |
| <u>நடைமுறையல்லா பொறுப்பு</u> | | |
| தொகுதிக்கடன் | 2800 | 3200 |
| <u>நடைமுறைப் பொறுப்பு</u> | | |
| கடன் கொடுத்தோர் | 1940 | 1600 |
| வரி ஏற்பாடு | 340 | 270 |
| சென்மதி வட்டி | 70 | 95 |
| வங்கி | - | 800 |
| | 25870 | 22655 |

கம்பனியின் 31 மார்ச் 2011 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று

| | ரூபா 000 | ரூபா 000 |
|---|---|---|
| புரள்வு | | 6950 |
| (-) விற்பனைக் கிரயம் | | (3100) |
| மொத்த இலாபம் | | 3850 |
| + ஏனைய வருமானம் | | 300 |
| | | 4150 |
| (-) விநியோகச் செலவு | 900 | |
| நிர்வாகச் செலவு | 1050 | |
| நிதி ஏனைய செலவு | 420 | (2370) |
| வரிக்கு முன் இலாபம் | | 1780 |
| (-) ஆண்டுக்கான வருமானவரி | | (760) |
| | | 1020 |
| பொது ஒதுக்கிற்கு மாற்றம் | | (150) |
| பகிரப்படாத இலாபம் | | 870 |

**மேலதிக தகவல்கள்**

1) ரூபா 7,00,000 ஏட்டுப் பெறுமானம் கொண்ட மோட்டார் ஒன்று ரூபா 150,000 நட்டத்தில் விற்பனை செய்யப்பட்டது. மோட்டார் வாகனத்திற்கான வருடப் பெறுமானனத் தேய்வு ரூபா 150 000 ஆகும்.
2) ரூபா 14,50,000 பெறுமதியில் புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதுடன் ரூபா 600,000 புத்தகப் பெறமதியுடடைய இயந்திரம் ஒன்று ரூபா 200000 இலாபத்தில் விற்பனை செய்யப்பட்டது
3) ஏனைய வருமானம் என்பதினுள் இயந்திரம் அகற்றல் இலாபம், முதலீட்டு வருமானம் என்பன உள்ளடங்கும்
4) தொகுதிக்கடன் என்பது 10% வட்டியில் பெறப்பட்டுள்ளது.

**தேவைப்படுவது**

1) நேரில் முறைக்கமைய 31 மார்ச் 2011 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்குக. (5புள்ளி)
2) நேர்முறையில் செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சலை வெளிப்படுத்துக. (புள்ளி 3)

(மொத்தம் 15 புள்ளிகள்)

***05) ஆ) அர்ச்சயன் வியாபார நிறுவனத்தின் சம்பளக் கொடுப்பனவு தொடர்பான 2010ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் வருமாறு***

| இல | ஊழியர்கள் பெயர்கள் | அடிப்பசைட் சம்பளம் | வுாழ்க்கை செலவுப்படி | கடன் தவணைப் பணம் | சேமித்த நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆபிசன் | 24,000/= | 2,500/= | 35,00/= | 20 hrs |
| 02 | சாயீரன் | 18,000/= | 2,500/= | - | 30hrs |
| 03 | அபிநாஸ் | 20,000/= | 2,500/= | 2,000 | 10hrs |

- கல்சி முறையின்படி மிகையூதியம் வழங்கப்படுகின்றது.
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அடிப்படைக் சம்பளத்தில் தொழிலாளர் 10% ஐயும் தொழில் கொள்வோன் 15% யும் பங்களிப்பு செய்ய வேண்டும்.
- மணத்தியாலத்திற்கான கூலி 300/= ரூபாவாகும். வேண்டப்படுவது

i) சம்பளப் பட்டியல்

ii) சம்பளப் பட்டியல் தொடர்பான நாட்குறிப்புப் பதிவுகள் (6புள்ளிகள்)

ஆ) *MC' Donald* வியாபார நிறுவனத்தின் முறையான கணக்கு பதிவுகள் இடம் பெற்றிருக்கவில்லை. பின்வரும் தகவல்கள் எடுக்க கூடியதாக இருந்தது.

| | 1.1.2010 | 31.12.2010 |
|---|---|---|
| காணி | 100,000/= | 100,000 |
| கட்டிடம் | 200,000/= | 285,000 |
| மோட்டார் வாகனம் | 80,000/= | 125 000/= |
| இருப்பு | — | 50 000/= |
| அட்டுறு செயற்பாட்டு செலவு | 5 000/= | 10 000/= |
| எழுது கருவி தொக்கு | 3 000/= | 2 000/= |
| காசு மீதி | 80 000/= | ? |
| கடன் பட்டோர் | 50 000/= | 40 000/= |
| கடன் கொடுத்தோர் | 80 000/= | 60 000/= |

*2010ம் ஆண்டு காலத்தில் நடைபெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு*

- அறவிட முடியாக்கடன் 2000/=
- கொடுத்த கழிவு 3000/=
- பெற்ற கழிவு 1000/=
- மோட்டார் வாகனம் கொள்வனவு 50000/=
- கட்டிட விரிவாக்கல் செலவு 80 000/= ரூபா இதற்கான சட்ட வகைக் கொடுப்பனவு 20 000/= ரூபா
- செயற்பாட்டு செலவு கொடுப்பனவு 30 000/= ரூபா
- கடன்பட்டோரிடம் பெற்ற காசு 320 000/= ரூபா
- எழுது கருவி கொள்வனவு 1000/=
- காசு விற்பனை 30 000/=
- கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு 230 000/= ரூபா

**வேண்டப்படுவது**

1) 31.12.2010 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று
2) 31.12.2010 இல் உள்ளவாறான ஐந்தொகை (5புள்ளிகள்)

இ) யாதவன் தனிவியாபாரத்தின் 2010 ஜனவரி மாதத்திற்கான வங்கி மீதி 128000/= ரூபாவாக இருந்தது. ஆனால் அவருக்கு கிடைத்த வங்கி கூற்று வேறு ஓர் மீதியை காட்டியது பின்வரும் காரணங்கள் கண்டறியப்பட்டன.

1) கொடுப்பனவுக்கு சமர்ப்பக்கப்படாத காசோலை 14000/=
2) தேறாத வைப்புக்கள் 33000/=
3) காசு மூலம் சம்பளம் கொடுப்பனவு 4000/= ரூபா வங்கி நிரலில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
4) காசேட்டின் வங்கி மீதியை கீழ் கொண்டு வரும் போது 10,000/= ரூபா அதிகரித்து கூட்டப்பட்டிருந்தது.
5) நிலையியல் கட்டளைக் கிணங்க வங்கி செலுத்திய தொலைபேசிக் கட்டணம் 3000/= ரூபா காசேட்டில் இடம் பெற்றிருக்க வில்லை
6) வங்கி திரட்டிய பங்கிலாபம் 14000/= ரூபா காசேட்டில் இடம் பெற்றிருக்க வில்லை.
7) வங்கி தவறுதலாக யாதவன் கணக்கில் 2500/= ரூபாவான தொகையை வரவு வைத்துள்ளது.
8) கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்ட 4000/= ரூபா காசோலையொன்று வங்கியால் மறுக்கப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது

1) திருத்திய காசேடு
2) வங்கி கணக்கிணக் கூற்று (4புள்ளி)

(மொத்தம் 15 புள்ளிகள்)

06) அ) சாந்தன் நிறுவனத்தின் ஏடுகளில் வியாபார கடன்பட்டோர். கட்டுப்பாட்டுக் கணக்கில் 31.3.2011 இல் 160 000/= வை மீதியாக காட்டியது. ஆனால் இம்மீதி கடன்பட்டோர் பட்டியல் மீதியுடன் இணங்கவில்லை இதற்கான காரணங்கள் வருமாறு

1) குமரனுக்கு விற்பனை 30,000/=விற்பனை நாளேட்டில்3000/= ரூபா என பதியப்பட்டது.
2) விற்பனைத் திரும்பல் நாளேடு 10000/= ரூபா குறைவாக கூட்டப்பட்டிருந்தது.
3) கடன்பட்டோர் பட்டியலில் சுதனது 8000/= மீதி தவறவிடப்பட்டிருந்தது.
4) கடன்பட்டோர் பேரேட்டில் உள்ள குமணன் நிறுவனத்தின் 7000/= மீதி கடன் கொடுத்தோர் பேரேட்டில் உள்ள அதே நிறுவனக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.
5) கடன்பட்டோரான செந்தில் கணக்கில் வரவு மீதி 15000/= ரூபா கடன்பட்டோர் பட்டியலில் செலவு மீதியாக பட்டியலிடப்பட்டிருந்தது.
6) கடன்பட்டோரான கணேசனிடமிருந்து பெறப்பட்ட 14000/= ரூபா காசோலை பொதுப் பேரேட்டில் பதியப்பட்டிருந்த போதும் கணேசனின் தனிப்பட்ட பேரேட்டு கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை
7) சுகுமார் என்ற கடன்பட்டோனின் மீதியான 6000/= அறவிடமுடியாக் கடனாக பதிவளிக்கப்பட்டது. இது அவரது கணக்கில் பதியப்பட்ட போதிலும் பொதுப் பேரேட்டில் பதியப்பட வில்லை

**வேண்டப்படுவது**

1) மேற்படி வழுக்கைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் (பதிவுகள் தேவையற்றது எனின் காரணம் தருக)
2) திருத்தப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
3) கடன்பட்டோர் பட்டியல் மீதியுடன் சீராக்கல் கூற்று (7புள்ளிகள்)

ஆ) ஒரு உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தி தொடர்பான தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| ஆண்டுக்கான மொத்த நிலையான கிரயம் | 9000/= |
| விற்பனை விலை (அலகிற்கு) | 12/= |
| மாறும் கிரயம் (அலகிற்கு) | 9/= |

**வேண்டப்படுவது**

1) பங்களிப்பு விற்பனை வீதம்
2) இலாப நட்டமற்ற புள்ளி (அலகுகளில்)
3) 15000/= இலாபத்தினை உழைப்பதற்கு விற்பனை பெறுமதி யாதாக இருக்க வேண்டும். (4புள்ளிகள்)

**இ) கோகுலன் நிறுவனத்தின் 3103.2011 இல்**

பரீட்சை மீதி சமப்படவில்லை இதனால் வேறுபாட்டுத் தொகை தொங்கல் கணக்கில் இடப்பட்டு சமப்படுத்தப்பட்டது. பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

1) காசேட்டின் வரவுப்பக்க கழிவு நிரலின் கூட்டுத்தொகையான 4000/= ரூபா பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.
2) கொடுத்த சம்பளம் 7800/= சம்பளக் கணக்கில் 8700/= ஆக பதியப்பட்டிருந்தது.
3) குமரனால் திருப்பி அனுப்பப்பட்ட 3000/= பொருட்களுக்கான பதிவுகள் ஏடுகளிலிருந்து முற்றாக விடுபட்டிருந்தது.
4) சிறிஸ் இற்கு விற்பனை 10000/= விற்பனை நாளேட்டில் இருமுறை பதியப் பட்டிருந்தது.
5) நிறுவனத்தின் கட்டிட உரிமையாளரான நிகேதனுக்கு கொடுக்கப்பட்ட வாடகை 12000/= நிகேதன் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது**

1) மேற்படி வழக்குகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டு பதிவுகள்
2) தொங்கல் கணக்கு (ஆரம்ப மீதியை அணியும் வகையல்) (4புள்ளி)

(மொத்தம் 15புள்ளிகள்)

07) ஆ) ஒரு தொழில்முயற்சியில் கருத்தில்கொள்ளப்படும் X,Yஆகிய இரு செயற்திட்டங்களின் காசுப் பாய்ச்சல்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு X,Y ஆகிய இரு செயற்திட்டங்களிலும் ஆரம்ப முதலீடு 300 000/= ரூபா

காசுப்பாய்ச்சல்

| வருடம் | செற்திட்டம் X | செயற்திட்டம் Y |
|---|---|---|
| 1 | 90 000 | 100 000 |
| 2 | 80 000 | 40 000 |
| 3 | 60 000 | 40 000 |
| 4 | 70 000 | 50 000 |
| 5 | 60 000 | 70 000 |
| 6 | 40 000 | 50 000 |

**வேண்டப்படுவது**

முதலீட்டின் திரும்பி வரும் கால முறையின் அடிப்படையில் பொருத்தமான செயற்றிட்டத்தை தெரிவு செய்க. (6புள்ளிகள்)

ஆ) ஆகாஸ் உற்பத்தி வியாபாரத்தின் ஏடுகளிலிருந்து 31.03.2011 இல் முடிவுற்றஆண்டுக்கான எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

01 ஏப்பிரல் 2010 இல் இருப்பு

மூலப் பொருள் ரூபா 24600

முடிவுப் பொருள் ரூபா 29250

பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் ரூபா 150 000

நேர்க்கூலி ரூபா 21000

இயந்திரப் பெறுமதி ரூபா 150 000

மூலப் பொருள் வெளித்திரும்பல் ரூபா 6400

விற்பனை ரூபா 316500

31.மார்ச் 2011 இல் இருப்பு

மூலப் பொருள் ரூபா 32800

முடிவுப்பொருள் ரூபா 36450

**மேலதிக தகவல்கள்**

1) ரூபா 7500 கிரயமான மூலம் பொருட்கள் தீயினால் அழிவடைந்தன. இது தொடர்பில் எப்பதிவும் இடம்பெறவில்லை
2) இயந்திரத்திற்கு 10% பெறுமானத் தேய்விடப்படும்
3) 31.மார்ச் 2011 இல் சென்மதியாகவுள்ள நேர்க்கூலி ரூபா 6500 ஆகும்.
4) பயன்படுத்திய மூலக்கிரயத்தில் $33^1/_3$% வீதம் நேர்ச்செலவாகும். இதில் தனியுரிமைக் கட்டணமும் உள்ளடங்கும்
5) மூலக் கிரயத்தில் ¼ பங்கு மொத்த மேந்தலைச் செலவாகும்.

**வேண்டப்படுவது**

1) 31.03.2011 இல் முடிவடைந்த வருடத்திற்கான உற்பத்திக்கணக்கைத் தயாரிக்குக.
2) ஆண்டுக்கான வியாபார இலாபத்தை கணிக்குக. (5புள்ளிகள்)

**இ) *"சைமன் திருத்தல் சேவை" நிறுவனத்தின் 2011 ஜனவரி 01 இல் உள்ளபடி மீதிகள் வருமாறு***

உரிமை + பொறுப்பு = இயந்திரம் + இருப்பு + கடன்பட்டோர் + காசு

75000 + 32500 = 50000 + 5000 + 16000 + 36500

**ஜனவரி மாத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு**

1) திருத்துதல் பொருட்கள் ரூபா 12500 கடனுக்கும் ரூபா10000காசுக்கும் கொள்வனவு செய்யப்பட்டது.
2) ஜனவரி மாத மின்பட்டியல் ரூபா 2150 பெப்ரவரி மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.
3) பொறுப்பொன்று உரிமையாளர் தனது சொந்தப் பணத்தில் செலுத்தினார் ரூபா 13500 இதில் ரூபா 1500 வட்டித் தொகையாகும்.
4) சேவை வருமனம் ரூபா 11500 வருமதியான வருமானம் ரூபா 9000
5) இயந்திரத்திற்கு 12% வருடத்தேய்வு மேற்கொள்ளப்படும்
6) கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு 8200 பெற்ற கழிவு ரூபா 800
7) கடன்பட்டோரிடம் பெற்றகாசு ரூபா 7500 அனுமதித்த கழிவு ரூப 500
8) 31 ஜனவரி 2011 இல் பயன்படுத்தப்படாதிருந்த திருத்தல் பொருட்கள் ரூபா 11800

**வேண்டப்படுவது**

1) மேற்தரப்பட்ட சமன்பாட்டில் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையம் பதிவு செய்க.
2) 31.ஜனவரி 2011 இல் உள்ளபடியான ஐந்தொகை

(4புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

# மாதிரி வினாதத்தாள் - II
## புள்ளித்திட்டம்
## பகுதி I,II

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 1 | 2) 5 | 3) 4 | 4) 3 | 5) 2 | 6) 2 |
| 7) 1 | 8)5 | 9) 2 | 10) 3 | 11) 5 | 12) 3 |
| 13) 4 | 14) 1 | 15) 1 | 16) 5 | 17) 3 | 18) 1 |
| 19) 1 | 20) 3 | 21) 1 | 22) 5 | 23) 2 | 24) 1,5 |
| 25) 2 | 26) 2 | 27) 3 | 28) 1 | 29) 2 | 30) 3 |

31) 1) நாட்குறிப்புச் கைச்சாத்து
2) முகாமைத் தீர்மானங்கள்

32) வருமானக் கூற்று வரவு
உற்பத்திக் கணக்கு செலவு

33) 1) மூலதன வட்டி 2) சம்பளம் 3) பற்று வட்டி

34) உரிமையாளர்களின் உரிமையாண்மையில் அடங்கியுள்ள ஒவ்வொரு விடயத்திலும் ஏற்படக்கூடிய மாற்றங்களை முன்வைத்தல்

35) 1) பணத்தின் காலப் பெறுமதி கணக்கில் கொள்ளல்
2) காசுப் பாய்ச்சலைக் கருத்திற் கொள்ளல்
3) செற்திட்டத்தின் முடிவு வரை கருத்திற் கொள்ளல்

36) 1) கட்டிடக்கணக்கு வரவு 50,0000
கொள்ளல் கொடுத்தல் கணக்கு செலவு 500000

2) விசேட நன்கொடைக் கணக்கு வரவு 500000
திரண்டநிதிக் கணக்கு செலவு 500000

37) 1) பெற்றுக் கொண்டநிதியாண்டில் வருமானமாக கருதி வருமானச் கணக்கில் செலவு வைத்தல்
2) திரண்டநிதியின் அதிகரிப்பாக கருதி திரண்டநிதியுடன் சேர்த்தல்

38) 1) மீள் விற்பனை செலவு தொடர்பாக
மீள் விற்பனைக் கணக்கு வரவு
வங்கிக் கணக்கு செலவு

2) பழைய பங்குதாரர்களுக்கு செலுத்திய தொகை தொடர்பாக
மீள் விற்பனைக் கணக்கு வரவு
வங்கிக் கணக்கு செலவு

39) வருமான இலாபமில்லை என்பதனால் இலாப நட்டப்பகிர் கணக்கில் பதிவு செய்யப்படுகிறது.

40) 1) பங்காளர்கள் வழங்குகின்ற மேலதிக மூலதனம்
2) விசேட இணக்கத்துக்கு அமைய மூலதனம் குறைக்கப்படல்
3) மறுபடி விலை மதிப்பு இலாப நட்டம்

41) சொத்து அல்லது பொறுப்புகளின் ஆரம்பத்தில் கீழ் கொண்டு வரப்பட்ட மீதிகளில் ஏற்படுத்தப்படும் ஒரு சீராக்கம் அல்லது அச் சொத்தை பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் அல்லது வெளியீட்டு கணிப்பீட்டில் ஏற்பட்ட சீராக்கம் கணக்கீட்டு மதிப்பீட்டில் மாற்றம் எனப்படும்.

42) 1) உபகாரப்பணம் = $\frac{(\text{சேமித்த காலம் x எடுத்தகாலம்}) \text{ x மணித்தியாலம் கூலி}}{\text{அனுமதித்த காலம்}}$

= $(\frac{1}{5} \times 2)\ 100$

= $\frac{4}{5} \times 100 = 80$ ரூபா

2) மொத்தக்கூலி = (எடுத்த காலம் X மணித்தியாலக்கூலி) + உபகாரப்பணம்

= (4x100) +80

= 480 ரூபா

43)

| பங்காளர் மூலதனக் கணக்கு | பங்காளர் நடைமுறைக்கணக்கு |
|---|---|
| பங்காளரின்ன நிலையான உரிமையை புலப்படுத்தும் | பங்காளரது மாற்றமடையும் உரிமையை புலப்படுத்தும் |
| எப்பொழுதும் செலவு மீதியாக இருக்கும் | செலவுமீதியாகவோ அல்லது வரவு மீதியாகவோ மீதி இல்லாமலோ காணப்பட முடியும் |
| மற்றைய பங்காளரின் அனுமதியுடன் பங்காளர் மூலதனம் கணக்குகளின் தொகையை எடுக்க முடியும். | மற்றைய பங்காளர்களின் அனுமதி இன்றி தமது தேவைக்கு ஏற்றவாறு தொகையை மீளப் பெற முடியும். |

44) 1) பெறப்பட்ட ஆயுட்கால சந்தா முழுவதையும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய வருமானமாக கொள்ளல்
2) ஆயுட்கால சந்தாவின் ஒருபகுதியை வருமானமாகவும் மிகுதியை ஐந்தொகையில் பொறுப்பாக காட்டுதல்

45) 1) வருடாந்த கேள்வி முன்னரே அறிந்திருத்தல்
2) இருப்பின் களங்சியப்படுத்தற் கிரயம் நிலையானது
3) இருப்பின்மைக் கிரயம் இல்லை
4) அலகொன்றின் கொள்விலை நிலையானது.

46) 1) வருமானக் கூற்று
2) உரிமை மாற்றற் கூற்ற
3) ஐந்தொகை
4) காசுப்பாய்ச்சல் கூற்று
5) கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும்

46) 1) உபகாரப் பங்கு வழங்கல்
2) உரிமைப் பங்கு வழங்கல்

48) 1) குறைவு
2) அதிகரிப்பு

49) 1) கிரயம்
2) பயன்பாடு
3) இழிவுப் பெறுமதி

50) 1) கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாகும்
2) நட்பு ஆண்டில் செலுத்துகை ஒன்றாக அமைதல்
3) வியாபார நிறுவனத்திலிருந்து பொருளாதார வளம் வெளிப்பாய்ச்சப்படுவதாக எதிர்பார்த்தல்.

# பகுதி II

**01) ஜோன்ஸ்ரன் கம்பனியின் 31.03.2011 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று**

| விபரம் | குறி இல | தொகை ரூபா 000 | தொகை ரூபா000 |
|---|---|---|---|
| விற்பனை | | | 6550 |
| (-) விற்பனைக்கிரயம் | | | (1830) |
| மொத்த இலாபம் | | | 4720 |
| + ஏனைய வருமானம் | | | 310 |
| | 01 | | 5030 |
| (-) விநியோகக் கிரயம் | | 1235.5 | |
| நிர்வாகக்கிரயம் | | 1850 | |
| ஏனைய கிரயம் | | 260 | |
| நிதிக்கிரயம் | | 159 | (3504.5) |
| வரிக்கு முன் இலாபம் | | | (1525.5 |
| வருமான வரி | | | (870) |
| வரிக்குப் பின் இலாபம் | | | 655.5 |

**உரிமைமாற்றக் கூற்று**

| விபரம் | கூறப்பட்ட மூலதனம் | | பொது ஒதுக்கம் | மறுமதிப்பு இலாபம் | இலாப நட்டக் க/கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | சாதரணபங்கு | முன்பங்கு | | | | |
| மீ/வ | 6500 | 3000 | 750 | - | 1200 | 11450 |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | - | 655.5 | 655..5 |
| காணி மீள் மதிப்பு | - | - | - | 150 | - | - |
| உபகார வழங்கல் | 650 | - | (500) | (-150) | - | - |
| பொது ஒதுக்கீடு | - | - | 250 | - | (250) | - |
| இடைக்கால பங்கு இலாபம் | - | - | - | - | | |
| சாதாரணபங்கு | - | - | - | - | (180) | |
| முன்னுரிமைபங்கு | - | - | - | - | (150) | (330) |
| இறுதிமுன்னுரிமைப்பங்குஇலாபம் | - | - | - | - | (150) | (150) |
| உரித்து வழங்கல் | 175 | | | | | 175 |
| | 7325 | 3000 | 500 | 0 | 1125.5 | 11800.50 |

குறிப்பு - 04
நடைமுறையல்லாச் சொத்து அசைக்கூற்று
கிரயம் :-

| உருப்படி | ஆரம்ப மீதி | சேர்ப்பு | அகற்றல் | மறுமதிப்பீடு | இறுதி மீதி |
|---|---|---|---|---|---|
| காணி | 1000 | - | (200) | 150 | 950 |
| கட்டடம் | 2500 | - | - | - | 2500 |
| இயந்திரம் | 2900 | - | (600) | - | 2300 |
| மோட்டர் | 2000 | 350 | (400) | - | 1950 |
| | 8400 | 350 | (1200) | 150 | 7700 |

பெறுமானத்தேய்வு ஏற்பாடு

| உருப்படி | ஆரம்பமீதி | நடப்புவருட தேய்வு | அகற்றிய தேய்வு | இறுதி மீதி |
|---|---|---|---|---|
| கட்டடம் | 950 | 200 | - | 1150 |
| இயந்திபொறி | 625 | 275 | (165) | 735 |
| மோட்டார் | 580 | 392.5 | (220) | 752.5 |
| | 2155 | 869.5 | (385) | 2637.5 |

**குறிப்பு 01 ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மோட்டார் அகற்றல் இலாபம் | = | 70 |
| பெற்ற தரகு | - | 240 |
| | | 310 |

**குறிப்பு 02 வருமானவரி**

| | |
|---|---|
| ஆண்டுக்கான வரி | 860 |
| + பற்றாக்குறை | 10 |
| | 870 |

**குறிப்பு :- 03** வரிக்கு முன் இலாபம் பின்வரும் செலவுகளைத் தாக்கல் செய்த பின் பெறப்பட்டதாகும்.

| | | |
|---|---|---|
| இயக்குனர் வேதனம் | - | 75 |
| கணக்காய்வுக் கட்டணம் | - | 92 |
| இயந்திர அகற்றல் நட்டம் | - | 35 |
| அறவிடமுடியாக்கடன் | - | 93 |
| பெறுமானத்தேய்வு | - | 867.5 |
| EPF செலவு | - | 60 |
| ETF செலவு | - | 12 |
| குத்தகை வட்டி | - | 15 |
| தொட்டக்கச் செலவு பதிவு | - | 25 |
| தொகுதிக்கடன் வட்டி | - | 144 |

**செய்கை 01 விற்பனைக்கிரய சீராக்கம்**

| | |
|---|---|
| விற்பனைக்கிரயம் - | 2150 |
| (-) விற்பனை இன்றேல் - | 320 |
| | 1830 |

| | |
|---|---|
| விற்பனை | 6950 |
| (-) விற்பனை இன்றேல் | (400) |
| | 6550 |

**செய்கை 02 விநியோகக் கிரயம்**

| | |
|---|---|
| அறவிடமுடியாக்கடன் (100-7) | 93 |
| மோட்டார் தேய்வு | 392.50 |
| விநியோகக் கிரயம் | 750 |
| | 1235.50 |

**செய்கை 03 நீர்வாகக் கிரயம்**

| | |
|---|---|
| இயக்குனர் வேதனதம் | 75 |
| கணக்காய்வுக் கட்டணம் | 92 |
| காப்புறுதி (67 – 12) | 55 |
| நிர்வாகச் செலவு | 681 |
| கட்டடத் தேய்வு | 200 |
| இயந்திரதேய்வு | 275 |
| சம்பளம் | 400 |
| EPF செலவு | 60 |
| ETF செலவு | 12 |
| | 1850 |

**செய்கை 04 ஏனைய பிரயம்**

| | |
|---|---|
| இயந்திர அகற்றல் நட்டம் | 35 |
| தொடக்கச் செலவு பதிவு | 25 |
| காணி அன்பளிப்பு | 200 |
| | 260 |

**செய்கை 05 நிதிக்கிரயம்**

| | |
|---|---|
| குத்தகை வட்டி | 15 |
| தொகுதிக் கடன் வட்டி | 144 |
| | 159 |

கடன்பட்டோர்

(1400 – 400) 1000
அ.மு.கடன் 100
900 x 5
ஐ.கடன் 45

**மோட்டார் பகுதி மாற்றம்**

| | | | |
|---|---|---|---|
| மேட்டர் | 400 | மேட்டர் | 250 |
| இலாபம் | 70 | பெ.தே.ஏ | 220 |
| | 470 | | 470 |

**இயந்திர ஏற்பாடு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 2900 | அகற் | 600 |
| | | மீதி | 2300 |
| | 2900 | | 2900 |

4. 90,000 வரவு மீதி 5. 120,000 செலவுமீதி

(.............)

18) மது நிறுவனத்தின் நிதிக்கூற்று 31.03.2011 இல் முடிவடைகின்றது. கம்பனி 20.03.2011 இல் மூலப்பொருளுக்காக ரூபா 400,000ற்கு கட்டளையை பிறப்பித்தது. பொருட்கள் 31.03.2011 இல் பெற்றுக்கொள்ளப்பட்டது. பட்டியலானது வழங்குனரிடமிருந்து 04.04.2011 இல் பெற்றுக்கொள்ளப் பட்டது. 31.03.2011 இல் இருப்பினுள் இப்பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது இதனுடன் தொடர்பு படும் எண்ணக்கரு

1. பாதுகாப்பு எண்ணக்கரு
2. இணைத்தல் எண்ணக்கரு
3. அட்டுறு எண்ணக்கரு
4. பொருண்மை எண்ணக்கரு
5. தொழில் முழுமை எண்ணக்கரு

(.............)

19) சல்லி, மல்லி ஆகிய இருவரும் இலாபநட்டங்களை 3:2 எனப் பகிரும் பங்காளர்களளாவர். அவர்கள் இருவரும் நெல்லி என்பவரை இலாபத்தில் பங்கு ¼ பங்கு பெறும் வகையில் புதிய பங்காளனாக இணைத்துக்கொண்டனர். ஆரம்பத்தில் நிறுவனத்தின் நன்மதிப்பு ரூபா 30,000 ஆகக் காணப்பட்டது. நெல்லி சேர்ந்த அன்று நன்மதிப்பு ரூபா 70,000 என மதிப்பிடப்பட்டது. பங்குடமை நன்மதிப்புக் கணக்கை பேணுவதில்லையென தீர்மானித்துள்ளது. மேற்கூறிய நிகழ்வினால் பங்குடமையின் மூலதனக் கணக்கில் ஏற்படும் தாக்கம் யாது?

| | சல்லி | மல்லி | நெல்லி |
|---|---|---|---|
| 1. | 24,000 செலவு | 16,000 செலவு | தாக்கம் இல்லை |
| 2. | 31,500 செலவு | 21,000 செலவு | 17,500 செலவு |
| 3. | 24,000 செலவு | 31,500 செலவு | 16,000 செலவு |
| 4. | 7,500 வரவு | 5,000 வரவு | 17,500 வரவு |
| 5. | 17,500 வரவு | 5,000 செலவு | 7,500 செலவு |

20) சமி, றொமி, ஆகிய இருவரும் இலாபநட்டங்களை 2:1 எனப்பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர் ஆவார். அப் பங்குடமையில் பற்றுவட்டி 24% ஆகும். ஆண்டின் போதான பற்று. சமி 24,000/= றொமி 20,000/=, சமி ஒவ்வொருமாத ஆரம்பத்திலும் சமதொகையைப் பற்றினார். றொமி நிதியாண்டு ஆரம்பத்திலிருந்து காலாண்டிற்கு ஒரு தடவை சம தொகையைப் பற்றினார். இவர்களுடைய பற்றுவட்டி முறையே

| | சமி | றொமி |
|---|---|---|
| 1. | 600 | 480 |
| 2. | 3760 | 4800 |
| 3. | 3120 | 4800 |
| 4. | 4800 | 3760 |
| 5. | 3120 | 3000 |

(.............)

21) வரைவுள்ள ரஜீவ் கம்பனி ஊழியன் சாந்தனின் குறைந்தபட்ச உத்தரவாத கூலியாக மாதம் ரூ.20,000 உம் நாளொன்றுக்கான உற்பத்தி இலக்கிற்கு மேலதிகமாக உற்பத்திசெய்யப்படும். ஒவ்வொரு அலகிற்கும் 20/= வீதம் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்படும். மாதம் ஒன்றின் வேலை நாட்களின் எண்ணிக்கை 20 ஆகும். உற்பத்தி தரவுகள் கீழ்வருமாறு

| பொருள் | நாளொன்றுக்கு உற்பத்தி இலக்கு | மாதமொன்றுக்கு உண்மையான உற்பத்தி |
|---|---|---|
| A | 20 அலகு | 600 அலகு |
| B | 16 அலகு | 560 அலகு |

சாந்தனின் இம்மாத மொத்த வேதனம்

1. ரூ.27,000 2. ரூ.28,000 3. ரூ.23,200
4. ரூ.24,800 5. ரூ.28,800

(.............)

22) பின்வரும் தரவுகள் ABC நிறுவனத்தின் P என்ற மூலப்பொருள் தொடர்பாக எடுக்கப்பட்டது.

வருடாந்தக் கேள்வி 54,000 அலகுகள்

கட்டளைக்கிரயம் கட்டளை ஒன்றுக்கு ரூ 720

பராமரிப்புக் கிரயம் அலகிற்கு வருடம் 6/=

சிக்கன கட்டளைத் தொகை யாது?

1. 3600 அலகு 2. 23760 அலகு 3. 6300 அலகு

4. 6000 அலகு 5. 21600 அலகு

(..............)

23) கீழே தரப்பட்ட தரவுகள் பிரியா உற்பத்தி கம்பனியின் 2 உற்பத்தி செயற்பாட்டு மட்டங்களுடன் தொடர்புடையவை.

| விபரம் | உற்பத்தி மட்டம் 1 | உற்பத்தி மட்டம் 2 |
|---|---|---|
| உற்பத்திஅலகு | 4000 | 5,500 |
| மொத்த உற்பத்தி கிரயம் | 84000 | 120,000 |

நிலையான கிரயம் மாறாததாகக் கொண்டால் உற்பத்தி செய்யப்படும் அலகொன்றுக்கான மாறிக்கிரயம்

1. ரூ. 48 2. ரூ.24 3. ரூ. 36 4. ரூ.30 5. ரூ.32

(..............)

24) ஒரு பொருளின் தரவுகள் கீழே தரப்படுகின்றது.

| | |
|---|---|
| அலகொன்றின் மாறும் கிராயம் ரூ. | 80 |
| சமப்பாட்டுப்புள்ளி (அலகு) | 2,000 |
| நிலையான கிரயம் | 40,000 |

இப்பொருளின் அலகு விற்பனை விலை யாது?

1. ரூ. 60 2. ரூ. 20 3. ரூ. 80 4. ரூ. 100 5. ரூ. 120

(..............)

25) வருமானச் செலவீட்டினை மட்டும் உள்ளடக்கும் தொகுதி யாது?

1. கூலிகள், பொறிகொள்வனவு, விளம்பரப்படுத்தல், மின்சாரம்.
2. காப்புறுதிக் கொடுப்பனவு, கட்டடக்கொள்வனவு, சம்பளக் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு
3. பொறியொன்றை கொள்வனவு செய்தல், மோட்டார் கொள்வனவு செய்தல், கட்டடத்திற்கு புதிய பகுதியை சேர்த்தல், வங்கிக்கடன் செலுத்துதல்.
4. இறை செலுத்துதல், வருமானவரிசெலுத்துதல், இருப்பு கொள்வனவு, பெறுமானத் தேய்வை பதிவழித்தல்.
5. நீண்டகால விளம்பரச் செலவை மேற்கொள்ளல்.

(..............)

26) நிறுவனம் ஒன்றின் ஆதனம் பொறி உபகரணம் தொடர்பான அசைவுக்கூற்று வருமாறு

| விபரம் | காணி (000) | கட்டடம் (000) | மோட்டார் (000) |
|---|---|---|---|
| 01.04.2010 மீதி/வ | 600 | 3400 | 7000 |
| சேர்த்தல் | 200 | - | - |
| மறுமதிப்பீடு | 100 | - | - |
| அகற்றல் | - | - | (500) |
| | 900 | 3400 | 6500 |
| 01.04.2010 | | | |
| பெ.தேய்வு ஏற்பாடு | - | 1000 | 900 |
| நிகழாண்டு பெறுமான தேய்வு | - | 170 | 1625 |
| அகற்றல் பெறுமான தேய்வு | - | - | (250) |
| | - | 1170 | 2275 |
| | | | |

ஆண்டு காலத்தில் காணி மட்டும் கொள்வனவு செய்யப்பட்டது. காணி ஆண்டு காலத்தில் மீள்மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது. மோட்டார் விற்பனையால் எழுந்த இலாபமும் ரூ.400,000 ஆகும்.

ஆதனம் பொறி உபகரணம் தொடர்பாக 31.03.2011 இல் ஏற்பட்ட காசு உட்பாய்ச்சல் காசு வெளிப்பாய்ச்சல் முறையே

1. 300,650 2. 200,650 3. 650,200

4. 500,250 5. 250,500

(..............)

27) நிறுவனம் ஒன்றின் 31.03.201 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவல்கள் தரப்படுகின்றது.

| | |
|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கையால் உருவான தேறிய காசு | ரூ.80,000 |
| நிதியீட்ட நடவடிக்கையால் உருவான தேறிய காசு | ரூ.50,000 |
| 01.04.2010 இல் ஆரம்ப காசுமீதி | ரூ.20,000 |
| 31.03.2011 இல் இறுதிக்காசு மீதி | ரூ. 65,000 |

31.03.2011 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முதலீட்டு நடவடிக்கையால் எழுந்த காசுப்பாய்ச்சல் எவ்வளவு?

1. 13,000 2. (45000) 3. 85,000
4. (175,000) 5. (85,000) (.............)

28) 2011 மார்ச் இல் கமிஸ் நிறுவனத்தின் சம்பளம் கூலி அறிக்கையின் பெயர்த்தெடுப்பு.

| | |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 100,000 |
| நிலையான படி | 30,000 |
| உணவுப்படி | 10,000 |
| போக்குவரத்துப்படி | 5,000 |
| | 145,000 |
| தவணைப்பணம் | 8,000 |
| பண்டிகை முற்பணம் | 1,000 |
| E.P.F 8% | 10,400 |
| உழைக்கும்போது செலுத்தும்வரி 1360 | |
| EPF 12% | 15,600 |
| ETF 3% | 3900 |

குறித்த மாதத்திற்கான நிறுவனத்தால் செலுத்தப்படவேண்டிய ஊழியர்களின் தேறிய சம்பளம், மொத்த ஊழியர் சேமலாபநிதி முறையே

1. 20,700, 40,260 2. 145,000, 24,660 3. 120,440, 29,900
4. 26,000 124,240 5. 124,240, 26,000

(.............)

29) பின்வரும் கணக்கீட்டுத் தகவல்கள் ஒரு உற்பத்தி நிறுவனத்தின் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

| விபரம் | கிரயம் | ஒதுக்கங்களுக்கான அடிப்படை (Basic of Allocation) |
|---|---|---|
| மின்சாரம் | 81000 | இயந்திர மணித்தியால அடிப்படை |
| பாதுகாப்புச்செலவு | 25000 | உற்பத்தி செய்யப்பட்ட அலகு அடிப்படை |
| பெறுமானத் தேய்வு | 35000 | இயந்திர மணித்தியால அடிப்படை |

உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 10,000 ஆகவும் மொத்த இயந்திர மணித்தியாலம் 50 000 ஆகவும் உள்ளது. ஒரு அலகினை உற்பத்தி செய்ய 6 இயந்திர மணித்தியாலம் நுகரப்பட்டது. மேற்கூறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒரு அலகின் மேந்தலைக் கிரயம்

1. 16.42 2. 8.32 3. 15.40 4. 20.00 5. 6.70
(.............)

30) தனு உற்பத்தி மூலப்பொருள் M தொடர்பான தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| முதன்மைக்காலம் | 2-4 வாரம் |
| நுகர்வு (kg) | 60-80 |

இந் நிறுவனத்தின் இழிவு இருப்புமட்டம் யாது?

1. 320 2. 210 3. 90 4. 265 5. 230
(.............)

31) நாதனும் மோகனும் இலாபநட்டத்தை முறையே 3:2 என்னும் விகிதத்தில் பகிரும் பங்காளர்களாவர். இவ்வியாபாரம் நாதனிடமிருந்து கடனாக ரூ.150,000ஐப் பெற்றுக்கொண்டது. பங்குடமை ஒப்பந்தத்தில் கடன் வட்டி கொடுப்பது சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய சந்தர்ப்பத்தில் கடன் வட்டி எந்த அடிப்படையில் செலுத்தப்படமுடியும் என்பதையும் பொருத்தமான கடன்வட்டி வீதத்தையும் குறிப்பிடுக.

1. அடிப்படை:..........................................................................................

2. வட்டிவீதம்:..........................................................................................

32) அமலும் கமலும் இலாபநட்டங்களை 3:2 எனும் விகிதத்தில் பங்கிடும் பங்காளர்களாவர். இவர்கள் நிமல் என்பவரை புதிய பங்காளராக இலாபநட்டத்தில் 1/3 பங்கு பெறும் வகையில் சேர்த்துக் கொண்டனர். இப்பங்குடமையில் புதிய இலாபநட்ட விகிதம் என்ன?

..........................................................................................

33) ஞான கம்பனி 01.01.2010 இல் ரூ.10,000 கிரயமான பொறியை கொள்வனவு செய்தது. இதன் பயன்பாடு ஆயுட்காலம் 4 ஆண்டுகள் இதன் எறிபெறுமதி ரூ.256 இந்நிறுவனம் ஒடுங்குபாக முறையில் பெறுமானத் தேய்விட விரும்புகின்றது. இங்கு

a) பெறுமானத் தேய்வு வீதம்:.................................................................................................

b) 2010ம் ஆண்டுக்கான தேய்வு:..........................................................................................

34) 31.03.2010 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இருப்பு மதிப்பீடு செய்யமுடியாது போனதால் 10.04.2010 அன்று இருப்பு ரூ.59, 000 என மதிப்பிடப்பட்டது. 01..04.2010 - 10.04.2010 வரை இடம்பெற்ற கொள்வனவுகள் ரூ.20,500, விற்பனைகள் ரூ.30,000 கொள்வனவு திருப்பம் ரூ. 3000, விற்பனைத் திருப்பம் ரூ.5000 விற்பனைகள் யாவும் விற்பனை விலையில் 10% இலாபம் சேர்த்து விற்பனை செய்யப்பட்டுள்ளன. 31.03.2010 இல் இருந்த இருப்பின் பெறுமானம் என்ன?

..........................................................................................................................................

35) சிவம் நிறுவனம் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் ரூ.175,000 கிரயமான பொறி ஒன்றை உடனடி வைப்பாக ரூ. 2500 செலுத்தி 01.04.2011 இல் கொள்வனவு செய்தது. இதனை 8 வருட குத்தகைப் பணமாக ரூ. 39,000 ஒவ்வொருவருட முடிவிலும் கட்ட தீர்மானித்தது. மொத்த வட்டித்தொகை யாது?

..........................................................................................................................................

36) பின்வரும் தகவல்கள் மது மல்ரிவிசன் நிறுவனத்திலிருந்து பெறப்பட்டதாகும்.

| | 31.03. 2010 | 31.03.2011 |
|---|---|---|
| | 000 | 000 |
| இருப்பு | 500 | 550 |
| கடன்பட்டோர் | 200 | 125 |
| காசு | 100 | 135 |
| அட்டுறுவட்டி | 30 | 40 |
| ஆதனம் பொறி உபகரணம் | 4000 | 4200 |
| கடன்கொடுத்தோர் | 100 | 90 |
| வரிவட்டிக்கு முன் இலாபம் | 500,000/= | |
| ஆண்டிற்கான வரி | 25,000/= | |
| ஆண்டிற்கான வட்டி | 50,000/= | |

நிகழாண்டு ரூ.45000ற்கு ஆதனம் பொறி உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. வேறு சொத்து கொள்வனவு செய்யப்படவும் இல்லை. விற்பனை செய்யப்படவும்மில்லை.
செயற்பாட்டிலான காசுப்பாய்ச்சல் எவ்வளவு?

..........................................................................................................................................

37) இலாப நோக்கற்ற நிறுவனமொன்றில் கிடைக்கப்பெறுகின்ற பிரவேசக்கட்டணத்தை பதிவு செய்கின்ற முறைகள் 3 குறிப்பிடுக?

..........................................................................................................................................

38) 31.03.2011 இல் முடிவுற்ற ஆண்டு தொடர்பாக வரையறுத்த நாதன் கம்பனியின் உரிமையாண்மை மாற்றுக்கூற்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | சாதாரண பங்குமூலதனம் | மூலதன மீட்பு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | மீள்மதிப்பு இலாபம் | நிறுத்தி வைத்த இலாபம் |
|---|---|---|---|---|---|
| 01.04.2010 மீ/வ | 400 | 200 | 50 | 70 | 100 |
| சாதாரண பங்கு வழங்கல் | 200 | | | | |
| உபகர பங்கு வழங்கல் | 170 | | (50) | (70) | (50) |
| ஆண்டிற்கான இலாபம் | | | | | 420 |
| பொது ஒதுக்க மாற்றம் | | | 40 | | (40) |
| செலுத்திய பங்கிலாபம் | | | | | (10) |

இந்நிறுவனத்தில் 31.03.2011 இல் மொத்த உரிமை மூலதனம் யாது?

..........................................................................................................................................

39) வரையறுத்த Multi Spot Company ஒவ்வொன்றும் 40/= படி 60,000 சாதாரண பங்குகளை வழங்கத் தீர்மானித்தது. 62,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. 2000 விண்ணப்பங்களை நிராகரிக்கப்பட்டு விகிதசமமாக ஒதுக்கப்பட்டது. இதற்கான நாட்குறிப்பை தருக?

..........................................................................................................................................

40) உரிமை வழங்கலுக்கான இரட்டைப்பதிவை தருக?

..........................................................................................................................................

41) SLAS 5 இன் பிராகரம் இருப்பு என்பதனால் கருதப்படுவது யாது?

..........................................................................................................................................

42) வரையறுத்த றேமியா கம்பனி மூலப்பொருள் N தொடர்பாக கொண்டுள்ள தகவல்கள் வருமாறு

01.01.2011 மீதி 50/= படி பெறுமதி ரூ.50,000
10.01.2011 கொள்வனவு 60/= படி அலகு 500
10.02.2011 விநியோகம் 1200 அலகு
10.03.2011 கொள்வனவு 70/= படி 400 அலகு
20.03.2011விநியோகம் 500 அலகு

பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க

இருப்பின் பெறுமதி

முதல் வந்தது முதல் வெளியே முறை ..........................................................................................

நிறையளித்த சராசரி முறை..........................................................................................................

43) SLAS 19 இன் படி குத்தகையினை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

..........................................................................................................................................

44) குறிப்பிட்ட மாதத்தில் M எனும் பொருளின் தகவல்கள் வருமாறு

அலகிற்கான மூலப்பொருள் கிரயம் 5/=
மணி நேர்க்கூலி 20/=
மாறும் மேந்தலை (2 அலகிற்கு) 8/=

இப்பொருளை உருவாக்க 3 ஊழிய மணித்தியாலம் தேவை. மாதத்தின் மொத்த உற்பத்தி அலகு 40,000 அலகொன்று 80 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது. மொத்த விற்பனைச் செலவு ரூ.120 000 M பொருளின் அலகு விற்பனை இலாபம் எவ்வளவு?

..........................................................................................................................................

45) ரமணி வியாபார நிறுவனம் ரூ.400 000ஐ 18% வட்டியில் முதலிட எதிர்பார்க்கிறது. இக்கம்பனி 4 வருடங்களில் தேறிய காசு உட்பாய்ச்சலாக ரூ.150,000 ஐ சீராகப் பெற எதிர்பார்க்கின்றது. திரும்ப அளித்தல் காலத்திற்கான சமன்பாடு யாது?

..........................................................................................................................................

46) பவீசன் கம்பனியின் 2010 யூன் தகவல்கள் வருமாறு

| | பாதீடு | உண்மை |
|---|---|---|
| உற்பத்திப் பகுதி மேந்தலை | 100 000 | 110 000 |
| பொதியிடல் பகுதி மேந்தலை | 40 000 | 35 000 |
| உற்பத்தி அலகு | 10 000 | 9000 |

உற்பத்தி அலகும் விற்பனை அலகும் சமமானது எனக்கொண்டு குறை உறிஞ்சலா? மிகை உறிஞ்சலா? எவ்வளவு?

உற்பத்தி பகுதி:..........................................................................................................

பொதியிடல் பகுதி:.......................................................................................................

47) தனுஷ் கம்பனி 5000 சப்பாத்துக்களை உற்பத்தி செய்யக்கூடிய இயலுமையைக்கொண்ட ஒரு பொறியுடன் இயங்குகின்றது. தற்போது உற்பத்தி செய்திறன் மட்டும் 90% ஆகவுள்ளது. ஒரு சோடி சப்பாத்தின் விற்பனைவிலை ரூ.1200 மாறும் செலவு ரூ. 900 கம்பனியின் நிலையான செலவு ரூ.500,000 ஆகும் இலாபம் யாது?

..............................................................................................................................

48) இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இற்கமைய சேத இழப்பு (impairment loss) எனப்படுவது?

..............................................................................................................................

49) இலாப நோக்கமற்ற நிறுவனமான பாடுமீன் விளையாட்டுக்கழகம் கட்டட நன்கொடையா ரூ.300,000 ஐ பெற்றுக்கொண்டது. அதில் 40% ஐ நிகழாண்டில் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தியது. மேற்கூறிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான நாட்குறிப்பு பதிவுகள்?

..............................................................................................................................

50) கைலாஸ் நிறுவனத்தின் 2010 இற்கான ரூ.240,000 கொள்விலையில் மொத்த இலாபம் 20% ஆண்டிற்கான செலவுகள் ரூ.320,000 ஈடுபடுத்திய முதல் மீதானதிருப்பம் 10% எனின்

அ. தேறிய இலாப வீதம் :..............................................................................................

ஆ. சராசரி மூலதனம் :..............................................................................................

இ. விற்பனை கிராயம் :..............................................................................................

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# கணக்கீடு 33 T II

## மாதிரி வினாத்தாள் - 4

தரம் -13 | பகுதி II | மூன்று மணித்தியாலம்

கவனிக்குக:

முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக

1. வரைவுள்ள கார்மீஸ் கம்பனியின் 31.03.2011 இல் உள்ளபடியான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு(ரூ000) | செலவு(ரூ000) |
|---|---|---|
| சாதாரணபங்குமூலதனம் (600 000 பங்குகள்) | | 6000 |
| 15% முன்னுரிமைப் பங்கு மூலதனம் (300 000 பங்குகள்) | | 3000 |
| மறுமதிப்பீட்டு இலாபம் | | 1000 |
| பகிரப்படாத இலாபம் 01.04.2010 | | 500 |
| பொது ஒதுக்கம் | | 800 |
| காணிகட்டடம் | 25 000 | 700 |
| தளபாடம் | 900 | 200 |
| மோட்டார் வாகனம் | 3000 | 900 |
| முதலீடுகள் | 2000 | |
| இருப்புக்கள் 01.04.2010 | 1000 | |
| கொள்வனவு, விற்பனை | 15 000 | 48000 |
| வாடகை | 210 | |
| உரித்துடன் பங்குவழங்கல் | | 1500 |
| 15% வங்கிக்கடன் | | 900 |
| ஐயக்கடன் ஏற்பாடு 01.04.2010 | | 100 |
| இடைக்கால பங்கு இலாபம் - முன்னுரிமை பங்கு | 300 | |
| சாதாரன பங்கு | 200 | |
| வருமதியாளன் சென்மதியாளன் | 1500 | 1200 |
| உட்சுமைகூலி | 40 | |
| திருப்பங்கள் | 120 | 160 |
| வருமானவரி | 300 | |
| வரி ஏற்பாடு 2009/2010 | | 25 |
| வங்கிவட்டி | 100 | |
| விற்பனை விநியோக செலவு | 900 | |
| நிலைய நிர்வாக செலவு | 1000 | |
| ஏனைய செலவுகள் | 80 | |
| ஏனைய வருமானம் | | 15 |
| நன்மதிப்பு | 200 | |
| வங்கி | 13000 | |
| காசு | 150 | |
| | 65000 | 65000 |

பின்வரும் சீராக்கங்களை கவனிக்குக

i. இறுதி இருப்பு 31.03.2011 ல் கிரயம் 82,0000/= சந்தை விலை 800 000/=

ii. கம்பனி 01.10.2008ல் காட்சியறை ஒன்றை 4 வருட ஒப்பந்தத்தில் பெற்றுக்கொண்டது. வருடாந்த வாடகை, வாடகை வைப்புக்கு எதிராக சீராக்கம் செய்யப்படும்.

iii. கம்பனி நிதியாண்டில் 4 பங்குகளுக்கு 1 பங்கை உரித்து வழங்கலாக வழங்கியது. பெற்ற பணம் உரித்து வழங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டமை தவிர வேறு பதிவுகள் இடம்பெறவில்லை.

iv. ரூ. 60 000 கிரயமான இருப்பு 31.03.2011 இருப்பு கணிப்பீட்டில் இடம்பெறவில்லை.

v. முதலீடுகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு

| | கிரயம் ரூபா | சந்தைவிலை ரூபா |
|---|---|---|
| 10% குறுங்கால முதலீடு | 800 000 | 750 000 |
| 20% நீண்டகால முதலீடு | 1200 000 | 1100 000 |
| | 2000 000 | 1850 000 |

vi. 15% வங்கிகடன் 3 சம வருட கட்டங்களாக ஏப்ரல் 1இல் இருந்து செலுத்தப்படும் 1 வது தவணைக் கட்டணம் 01 ஏப்ரல் 2011 ல் செலுத்தப்படும்.

vii. ஐயக்கடன் ஏற்பாடு 01.04.2010 வருமாறு

| | |
|---|---|
| விசேட ஏற்பாடு - ரவி | 60 000 |
| பொது ஏற்பாடு | 40,000 |
| | 100,000 |

ரவியின் தொகையை அறவிடமுடியாக்கடனாக பதிவளிக்க மேலும் ரூ. 50 000 அறவிடமுடியாக் கடனாகும். 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்க

viii. நிறுவனக் காணியின் கிரயம் ரூ.10000 000 ஆகும்.

ix. 01.07.2010ல் 2000 000/= கிரயமான மோட்டார் வாகனம் ரூ.1500 000 காசு கொடுத்ததுடன் இதற்கு 01.04.2006 ல் 750 000 ரூபாவிற்கு கொள்வனவு செய்த மோட்டார் வாகனம் பகுதி மாற்றாக மாற்றிக் கொடுக்கப்பட்டது, கொடுத்த காசு மோட்டார் வாகனக் கணக்கில் பதியப்பட்டதை தவிர வேறு பதிவுகள் இடம்பெறவில்லை.

x. சொத்துக்கள் கிரயத்தில் தேய்வுசெய்யப்படும்.

| | |
|---|---|
| கட்டிடம் | 5% |
| தளபாடம் | 20% |
| மோட்டார் வாகனம் | 20% |

xi. வரியாண்டு 09/10 ரூ.20000 செலுத்தப்பட்டதுடன் நிகழாண்டு 10/11ல் 650 000 ரூபாவென மதிப்பிடப்பட்டது.

xii. கம்பனி ஏப்ரல் 2011 புதுவருடப்பிறப்பிற்காக கட்டடத்தை புதுப்பிக்க உள்ளது. இதற்காக ரூ.150 000 கட்டிட ஒப்பத்தகாரருக்கு செலுத்தப்பட்டது. இது நிலைய நிர்வாக செலவில் உள்ளடங்கியுள்ளது.

xiii. முன்னுரிமைப் பங்கிற்கு உரிய பங்கிலாபம் செலுத்துவதுடன் சாதாரண பங்கிற்கு பங்கு ஒன்றிற்கு 50 சதம் பங்குலாபம் பிரேரிக்கப்பட்டது. (புதிய பங்குகள் பங்குலாபம் பெற தகுதியற்றவை)

xiv. நன்மதிப்பில் 10% ஐ பதிவழிப்பதுடன் பொது ஒதுக்கத்திற்கு ரூ.250 000 ஐ மாற்றுக.

xv. ஆரம்பத்திலிருந்த பங்குகளிற்கு 20:1 சாதாரண பங்குகள் அப்போதைய கிரயத்தில் உபகார வழங்கல் மேற்கொள்ளப்பட்டது.

தாயாரிக்க

அ) 31.03.2011 ல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று
ஆ) 31.03.2011ல் உள்ளபடியான ஐந்தொகை
இ) 31.03.2011ல் உரிமை அசைவுக் கூற்று
ஈ) 31.03.2011ல் சொத்து அசைவுக் கூற்று (20 புள்ளி)

## 2)

அ) மொத்த விற்பனை சந்தைக்கென கைவேலை செய்யப்பட்ட சாறிகளை உற்பத்தி செய்யும் வியாபாரத்தில் சுகந்தி ஈடுபட்டுள்ளார். அவர் சாதாரண சாறிகளை சந்தையில் கொள்வனவு செய்து சீக்குன்சால் அல்லது திரவமணிகளால் வேலைப்பாடுகள் மேற்கொண்டு முடிவுப் பொருளாக மாற்றுகின்றார்

சாறிகள் பின்வருமாறு விற்பனை செய்யப்படுகின்றன

a) சீக்குன்சால் ஆக்கப்பட்ட சாறிகள்

b) திரவ மணிகளால் அலங்கரிக்கப்பட்ட சாறிகள்

2011 மே மாதத்திற்கான தகவல்கள் வருமாறு

i. மூலப்பொருள் கொள்வனவு

* 2400 சாதாரண சாறிகள் ஒவ்வொன்றும் ரூ.420 வீதம்
* ஒரு லீற்றர் ரூ.6000 வீதம் ஒவ்வொன்றும் 40 லீற்றர்களான சிவப்பு, நீலம், மஞ்சள் நிற வர்ணப்பூச்சுக்கள்
* 1kg ரூ.3000 வீதம் 8kg தங்க நிறமுடைய சீக்குன்ஸ்
  13kg வெள்ளி நிற சீக்குன்ஸ்
* 1kg ரூ.18000 வீதம் 12kg வெள்ளை திரவ மணிகள்
* 1kgரூ. 16000 வீதம் 12kg கறுப்பு திரவ மணிகள்
* 1kg ரூ.14 000 வீதம் 7kg சிவப்பு திரவ மணிகள்

ii. கடந்த கால அனுபவத்தின்படி பின்வருமாறு மூலப்பொருட்கள் சாறி தயாரிக்க தேவைப்படுமென சுகந்தி தெரிவிக்கின்றார்

| | சீக்குன்ஸ் | திரவமணி |
|---|---|---|
| வர்ணம் சிவப்பு<br>நீலம்<br>மஞ்சள் | 40மில்லி மீற்றர்<br>24 மில்லி மீற்றர்<br>30 மில்லி மீற்றர் | 24 மில்லி மீற்றர்<br>24 மில்லி மீற்றர்<br>16மில்லி மீற்றர் |
| பட்டின்கள் தங்க நிறம்<br>வெள்ளி நிறம் | 8 கிராம்<br>16 கிராம் | |
| திரவ மணிகள் வெள்ளை<br>கறுப்பு<br>சிவப்பு | | 30 கிராம்<br>28 கிராம்<br>16 கிராம் |

iii. வர்ணம் பூச ஒவ்வொரு சீக்குன்ஸ் சாறிகளுக்கு 1.6 மனித மணித்தியாலங்களும் ஒவ்வொரு திரவ மணிகளை கொண்ட சாறிகளுக்கு 1.0 மனித மணித்தியாலங்களும் தேவைப்படும்.

iv. ஒரு சாறிக்கு சீக்குன்ஸ் பொருத்த 2:4 மனித மணித்தியாலமும் திரவ மணிகளை பொருத்துவதற்கு 1.6 மனித மணித்தியாலமும் தேவைப்படும்.

v. சுகந்தி வர்ணம் பூசுவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு ரூ. 150உம் சீக்குன்ஸ் பொருத்த 0r திரவமணிகளை சேர்க்க ஒரு மனித மணித்தியாலத்திற்கு ரூ.180 உம் கொடுக்கிறார்.

vi. பிரதான மூலப்பொருளுக்கு மேலதிகமாக பின்வரும் இதர மூலப்பொருட்களும் தேவைப்படுவதகாவும் அதற்கான கிரயத்தினையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

| | சீக்குன்ஸ் பொருத்துவதற்கு | திரவமணி சேர்ப்பதற்கு |
|---|---|---|
| 1 சாறிக்கான இதர மூலப்பொருட்களுக்கு | ரூ.82 | ரூ. 98 |

vii. ஒரு மனித மணித்தியாலத்திற்கு ரூ. 120 உம் மாறும் உற்பத்திக்கிரயம், நிலையான உற்பத்தி மேந்தலைக் கிரயம் ஒரு அலகிற்கு ரூ. 50

வேண்டப்படுவது

பின்வரும் சாறிகளின் ஒரு அலகிற்கான உற்பத்திக் கிரயத்தை கணிக்குக

a) சீக்குன்ஸ்களால் அலங்கரிக்கப்பட்ட சாறி

b) திரவமணிகளால் அலங்கரிக்கப்பட்ட சாறி

ஆ) வரைவுள்ள தாரகா கம்பனி பிஸ்கற்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது.

- பொருட்கிராயம் உற்பத்தி கிரயத்தில் 60%
- தொழிற்சாலை மேந்தலை கிரயத்தில் 20%
- விற்பனைப்பிரிவு உற்பத்திக் கிரயத்தில் 20% இலாபம் வைத்து விற்பனை செய்கின்றது. ஒரு அலகிற்கான விற்பனை விலை ரூபா 528.

பொருளின் அலகிற்கான கீழ்வருவனவற்றை கணிக்கு

(i) பொருட்கிரயம்
(ii) கூலிக்கிரயம்
(iii) தொழிற்சாலை மேந்தலை
(iv) உற்பத்தி கிரயம்
(v) மொத்த இலாபம்

(மொத்தம் 15 புள்ளி)

3) "அறிவொளி விளையாட்டுக்கழகம் 01.04.2009 இல் உருவாக்கப்பட்டது. 31.03.2010 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு வருமாறு:

கொள்ளல் கொடுத்தல் க/கு

| | | | |
|---|---|---|---|
| சந்தா கட்டணம் | 150 000 | விளையாட்டு உபகரண கொள்வனவு | 75000 |
| இசை நிகழ்ச்சி நுழைவுச் சீட்டு விற்பனை | 25 000 | கூலிகள் | 25 000 |
| வட்டி வருமானம் | 4500 | வாடகை இறை | 12 000 |
| ஆயுள் சந்தா கட்டணம் | 50,000 | மின்சாரம் | 20 000 |
| | | இசை நிழச்சி செலவு | 20 000 |
| | | காகிதாகி, தாபல் | 15,000 |
| | | 31.03.2010 மீ/செ | 62 500 |
| | 229 500 | | 229 500 |

மேலதிக தகவல்களும் சீராக்கங்களும்: -

i. ஒரு அங்கத்தவருக்கான வருடாந்த சந்தாக் கட்டணம் ரூ. 3000 ஆகும். 31.03.2010 வரை 10 அங்கத்தவர்கள் தமது சந்தாக் கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை. 5 அங்கத்தவர்கள் அடுத்த ஆண்டுக்கான சந்தாவையும் சேர்த்து செலுத்தியிருந்தனர்.

ii. ஐந்து அங்கத்தவர்கள் ரூ.10,000 படி ஆயள் சந்தாக் கட்டணத்தினை செலுத்தி இருந்தனர். இக்கட்டணம் 5 ஆண்டுகளில் சமனாகப் பதிந்து வருமானமாக காட்டப்படுதல் வேண்டும்.

iii. விளையாட்டு உபகரணங்களில் ஆயுள் காலம் 7 ஆண்டுகளாகும். அதன் பின்னர் இவ் உபகரணங்கள் ரூ.5000ற்கு தேறக்கூடிய பெறுமதியை கொண்டிருக்குமென மதிப்பிடப்பட்டது.

iv. 30.09.2010 இல் பின்வரும் செலவுகள் செலுத்தப்படவேண்டி இருந்தன.

கூலி - ரூ. 2000
மின்சாரம் - ரூ. 1500

வேண்டப்படுவது

(i) சந்தாக் கட்டணக் கணக்கு
(ii) வருமானச் செலவுக் கணக்கில் தாக்கல் செய்ய வேண்டிய ஆயுள்சந்தா கணிப்பீடு
(iii) இசை நிகழ்ச்சி வருமான மிகை/ குறை
(iv) 31.03.2010 ல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவு கணக்கு
(v) 31.03.2010ல் உள்ளவாறான ஐந்தொகை (15 புள்ளிகள்)

4)

அ) (i) கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுவதனால் நிறுவனம் ஒன்றிற்கு ஏற்படக்கூடிய அனுகூலங்கள் மூன்றினைக் குறிப்பிடுக

(ii) கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகளில் இடம்பெறும் விடயங்கள் ஐந்தினை முறையே குறிபிட்டு அவ் அம்சங்களுக்குரிய மூலப்பதிவேடுகளையும் மூல ஆவணங்களையும் குறிப்பிடுக.

(iii) கந்தசாமி கம்பனியின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்க/குமீதியானது 1.1.2010இல் 40000/= ஆகக் காணப்பட்டது.

1.01.2010 இல் விற்பனைபேரேட்டில் இருந்து எடுக்கப்பட்ட கடன்பட்டோர்பட்டியல் வருமாறு

| | |
|---|---|
| மதி | 9000 |
| கருணை | 7200 |
| கைலை | 2400 |
| சக்தி | 13000 |
| ஞானம் | 8400 |
| | 40 000 |

நிதியாண்டு காலத்தில் இடம்பெற்ற கடன்பட்டோர் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் தொகுப்பு பின்வருமாறு

| கடன்பட்டோர் | விற்பனை | திரும்பல் | கழிவு | காசு/வங்கி | அற/கடன் | மறுக்கப்பட்டது. |
|---|---|---|---|---|---|---|
| பத்பன் | 12000 | 8000 | - | 3000 | - | - |
| முகுந்தன் | 14400 | 2200 | 100 | 7000 | - | 1000 |
| மதி | 14000 | 8400 | 200 | 9000 | 400 | - |
| கருணை | 22000 | 2200 | 500 | 12500 | 200 | - |
| கைலை | 7200 | - | 600 | 7200 | - | 2000 |
| சக்தி | - | - | 1000 | 12000 | - | - |
| ஞானம் | 3600 | 1800 | - | - | - | - |
| | 73200 | 22600 | 2400 | 50700 | 600 | 3000 |

பொதுத்தின சேரியில் இடம்பெற்ற கடன்பட்டோர் சம்பந்தமான பதிவு வருமாறு

ஐயக்கடன் க/கு வரவு 750

ஐயக்கடன் ஏற்பாட்டுக்க/கு செலவு 750

விளம்பல் (முகுந்தனின் மீதிக்கு எதிராக ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டது)

வேண்டப்படுவது (i) கடன்பட்டோர் பேரேட்டில் வேண்டிய பேரேட்டுக் கணக்குகள்

(ii) கடன்பட்டோர் கட்டுபாட்டு கணக்கைதயாரித்து கடன்பட்டோர் பேரேட்டு பட்டியல் மீதியுடன் இணங்கச் செய்க

ஆ) சங்கரா என்பவர் ஒரு ஆடை வியாபாரியாவர் வருட இறுதியில் (31.03.2011) அவரின் நிலுவைக்கூற்று சமப்படாமல் போகவே வித்தியாசமானது தற்காலிகமாக தொங்கல் கணக்கிற்கு இடப்பட்டு முடிவுக்கணககுளில் தயாரிக்கப்பட்டன.

31.03.2011 இல் உள்ளவாறான அவரின் ஐந்தொகை கணக்கு பின்வருமாறு காணப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| மூலதனம் | | 8000 00 |
| ஆண்டிற்கான இலாபம் | | 250000 |
| | | 1050000 |
| (-) பற்றுக்கள் | (150000) | 900000 |
| நடைமுறையியல் பொறுப்பு | | |
| வங்கிக்கடன் | | 300000 |
| நடைமுறைப்பொறுப்பு | | |
| கடன்கொடுத்தோர் | 84000 | |
| அட்டுறு செலவுகள் | 8400 | |
| வங்கிமேலதிகப்பற்று | 31600 | |
| தொங்கல் கணக்கு | 31000 | |
| | | 1355000 |

| நி/அல்லா சொத்து | கிரயம் | திரண்ட தேய்வு | தேறியது |
|---|---|---|---|
| காணியும் கட்டடமும் | 900 000 | 270 000 | 630 000 |
| டெலிவரி வாகனம் | 250 000 | 75000 | 175000 |
| தளபாடம் பொருத்தி | 150 000 | 50 000 | 100000 |
| | 1300 000 | 395000 | 905000 |
| நடைமுறைச்சொத்து | | | |
| தொக்கு | | 90000 | |
| கடன்பட்டோர்184000 | | | |
| (-)ஐயஏற்பாடு (3000) | | 181000 | |
| காலவதியாகாத சம்பளம் | | 4000 | |
| காசு | | 175000 | 450 000 |
| | | | 1355000 |

சங்கரா நிறுவனத்தின் கணக்கேடுகளை கணக்காய்வாளர் பரிசீலனை செய்தபோது பின் தவறுகள் நிகழந்திருப்பது கண்டு கொள்ளப்பட்டது.

i. 850 ரூபாவான வருமானம் ஒன்று செலவினமாகக் கருதப்பட்டு பரீட்சை மீதியின் வரவுப் புத்தகத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

ii. கடன் கொடுத்தோரிடம் இருந்து பட்டியல் பெறப்பட்டபோது ஒரு பட்டியல் தொகையான 29700/=, 92070/= என நாளேட்டில் பதியப்பட்டிருந்தது.

iii. வருமதியாளர் ஒருவருக்கு கழிவாக அனுமதிக்கப்பட்டிருந்த 1050/= தொகையானது அவரது கணக்கில் சரியாக பதியப் பட்டிருந்த போதிலும் கழிவுகள் கணக்கில் 1510 எனப் பெற்ற கழிவாகப் பதியப்பட்டிருந்தது.

iv. கடன்பட்டோர் ஒருவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற 11050/= பெறுமதியான காசோலை ஒன்று வங்கியினால் மறுக்கப்பட்டது. இதுதொடர்பாக ஏடுகளில் பதிவேதும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

v. நிதியாண்டின் ஆரம்பத்தில் 10000/= பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப் பட்டிருந்தனஎனினும் இவை ஒரு வருமானச்செலவாக கருதப்பட்டு இலாபநட்டக்கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. நிறுவனம் தளபாடம் பொருத்துக்கள் என்பவற்றிற்கு கிரயத்தில் 20% தேய்மானம்இடுவது வழமையாகும்.

vi. விற்பனைகள் தினசேரி 32860/= ஆல் குறைவாகக் கூட்டப்பட்டிருந்தது.

vii. கடந்த ஆண்டில் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த சம்பளத்தொகையான 1000/= இவ்வருட சம்பளக்கணக்கிற்கு மீதியாக முன்கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை.

உம்மிடம் வேண்டப்படுவது

(i) தொங்கல் கணக்கு

(ii) இலாபச்சீராக்ககூற்று

(மொத்தம் 15 புள்ளி)

## 5)

அ) பிரியா நிறுவனத்தின் X எனும் மூலப்பொருள் பயன்படுத்தப்படுகின்றது.
அவைபற்றிய தகவல் வருமாறு

| | |
|---|---|
| சாதாரண பயன்பாடு (வாரம்) | 40 அலகுகள் |
| இழிவுப்பயன்பாடு (வாரம்) | 20 அலகுகள் |
| மறுகட்டளைக் கணியம் | 240 அலகுகள் |
| மறுகட்டளைக் காலம் | 3-5 வாரங்கள் |

வேண்டப்படுவது

1. மறுகட்டளை மட்டம்
2. உயர் இருப்பு மட்டம்
3. இழிவு இருப்பு மட்டம்

(6 புள்ளிகள்)

ஆ) பின்வரும் தரவுகள் துவாரகா Ltd இல் இருந்து 31.03.2011 இல் பெறப்பட்டது.

| ஆதனம் பொறி உபகரணம் | கிரயம் (000) 01.04.2010 | பெறுமான தேய்வு ஏற்பாடு (000) 01.04.2010 | பெறுமான தேய்வு (000) 31.03.2011 |
|---|---|---|---|
| காணி | 3,000 | - | - |
| கட்டிடம் | 5,000 | 1500 | 260 |
| மோட்டார் வாகனம் | 3,600 | 1700 | 800 |
| அலுவலக உபகரணம் | 500 | 240 | 160 |
| தளபாடம் | 320 | 140 | 60 |
| பொறிகருவி | 4200 | 2100 | 1100 |

மேலதிக தகவல்கள்

i) நிகழாண்டில் புதிய கட்டிடம் ஒன்று 1640 000 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டது.

ii) 500 000 கிரயமான மோட்டார் வாகனம் ஆண்டு காலத்தில் ரூ.600 000 ற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்கும்போது இதன் பெறுமானத் தேய்வு ஏற்பாடு ரூ.340 000 ஆகும்.

iii) மோட்டார் வாகனம் ரூ.9000 000அலுவலக உபகரணம் ரூ.120 000

பொறிகருவி ரூ. 2800 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது. மேற்கூறிய தகவல்களினடிப்படையில் 31.03.2011 இல்

i) சொத்து அசைவுக் கூற்று

ii) மோட்டார் வாகன விற்பனைக் கணக்கு தயாரிக்குக.

(9 புள்ளிகள்)

(மொத்தம் 15புள்ளி)

## 6)

வெள்ளி, சனி, ஞாயிறு ஆகியோர் இலாபநட்டங்களை முறையே 3:2:1 எனினும் விகிதத்தில் பகிரும் பங்களார்கள் 2010.03.31 ஆம் திகதி இருந்தவாறான இவர்களது பங்குடமையின் ஐந்தொகை வருமாறு.

| | கிரயம் ரூபா000 | தேய்வு ரூபா000 | தேறியது ரூபா000 |
|---|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | |
| பொறித் தொகுதி | 350 | 100 | 250 |
| மோட்டார் வாகனம் | 270 | 170 | 100 |
| | 620 | 270 | 350 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| சரக்கிருப்பு | | 200 | |
| கடன்பட்டோர் | | 180 | |
| காசு | | 60 | 440 |
| | | | 790 |
| உரிமையாண்மையும் பொறுப்புக்களும் | | | |
| பங்காளம் மூலதனக்க/கு வெள்ளி | | 250 | |
| சனி | | 250 | |
| ஞாயிறு | | 125 | 625 |
| பங்காளர் நடைமுறைக்க/கு வெள்ளி | | 10 | |
| சனி | | 24 | |
| ஞாயிறு | | 16 | 50 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| கடன்கொடுத்தோர் | | 100 | |
| அட்டுறு தொலைபேசி | | 5 | |
| மனி கட்டணம் | | 10 | 115 |
| | | | 790 |

மேலதிக தவல்கள்: -

i. 2010.04.01 இல் சனி பங்குடமையிலிருந்து இளைப்பாற ஏனைய பங்காளர்களால் திங்கள் புதிய பங்காளராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவர் ரூபா. 200 000 ஐச் செலுத்தியதுடன் இத் திகதியிலிருந்து பங்காளர்கள் இலாப நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்ளத் தீர்மானித்தனர். ஞாயிறு மேலதிக மூலதனமாக ரூபா 50,000 ஐ பங்குடமைக்குச் செலுத்த இணங்கினார்.

ii. பங்குடமையின் சொத்துக்கள் கீழ்வரும் புதிய பெறுமதிகளில் மீள் மதிப்புச் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| பொறித் தொகுதி | ரூபா | 300 000 |
| மோட்டார் வாகனங்கள் | | 150 000 |
| கடன்பட்டோர் | | 158 000 |

iii. 2010 04.01 இல் நன்மதிப்பு ரூபா 120000 என மதிப்பிடப்பட்டது நன்மதிப்புக் கணக்கு புத்தகங்களில் பேணப்படமாட்டாது. சீராக்கங்கள் பங்காளர் மூலதனம் கணக்குகளில் செய்யப்படும்.

iv. இளைப்பாறும் சனிக்கு ரூபா 150000 காசு கொடுக்கப்பட்டதோடு ரூபா 100 000 என மீள் மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகன மொன்றும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. சனி தனக்குச் சேர வேண்டிய மிகுதித் தொகையை ஆண்டொன்றுக்கு 10% வட்டியைத் தரும் நீண்டகாலக் கடனாக பங்குடமையில் விட சம்மதித்தார்.

2011.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கீடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

(i) 2011 03.2011 முடிவுற்ற ஆண்டுக்கான பெறுபனவுகள் கொடுப்பனவுகள் பற்றிய விபரம் வருமாறு.

| | ரூபா |
|---|---|
| மூலதமனாக திங்கள் வழங்கிய காசு | 200 000 |
| மூலதனமாக ஞாயிறு வழங்கிய காசு | 50 000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 900 000 |
| வியாபாரக் கடன் கொடுத்தோருக்குக் கொடுத்த காசு | 480 000 |
| ஏனைய செலவுகளுக்காகக் கொடுத்த காசு | 111 000 |
| மின்கட்டணம் செலுத்தியது | 40000 |
| தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது | 15 000 |
| பங்காளர் பற்று வெள்ளி | 10 000 |
| ஞாயிறு | 8000 |
| திங்கள் | 5000 |
| 2010.10.01 இல் புதிய கணனி வாங்கியது | 100 000 |
| சனிக்குக் கொடுத்த காசு | 150 000 |

(ii) **2011.03.31** இல் இருந்தபடி கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் முறையே ரூபா 58000, ரூபா 20000
(iii) **2011. 03.31** இல் இருந்தபடி அட்டுறு தொலைபேசி ரூபா 15 000, மின்சாரம் கட்டணம் ரூபா 5000
(iv) **2011.03.31** இல் உள்ளவாறான கையிருப்பு ரூபா 150 000
(v) பொறித்தொகுதி, மோட்டார் வாகனம் ஆகியவற்றின் மீள்பதிவு தொகைமீது ஆண்டுகளுக்கு 20% உம், கணனி உபகரணத்திற்கு கொள்விலைமீது ஆண்டுகளுக்கு 20% உம் பெறுமானத்தேய்வு கணிப்பிடல் வேண்டும்.

தேவைப்படுவன: -

(i) **2011.03.31** இல் முடிவடைந்த கணக்காண்டிற்கான பங்குடமையின் இலாப நட்டத்தைக் காட்டும் வருமானக்கூற்று
(ii) பங்காளர் மூலதனக் கணக்கும், நடைமுறைக் கணக்கும்,
(iii) **2011.03.31** இல் உள்ளவாறான ஐந்தொகை
(iv) **2011.03.31** இல் முடிவடைந்த ஆண்டுக்கான சாசுப்பாய்ச்சல் கூற்று

*(15 புள்ளிகள்)*

**7)** அ) ஜெயசிறி கம்பனியின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் வருமாறு **31.03.2011** வருமானக்கூற்று வருமாறு

| | ரூபா (000) | ரூபா (000) |
|---|---|---|
| விற்பனை | | 10,000 |
| விற்பனை கிரயம் | | (5000) |
| | | 5000 |
| நிர்வாக செலவு | 1500 | |
| விநியோக செலவு | 2000 | (3500) |
| | | 1500 |
| வட்டி | | (200) |
| | | 1300 |
| வரி | | (700) |
| | | 600 |
| சென்ற ஆண்டு இலாபம் | | 1000 |
| | | 1600 |
| பங்குலாபம் | | (500) |
| | | 1100 |

*31.03.2011* இல் ஐந்தொகை வருமாறு

| | | 2010 (000) | | 2011 (000) |
|---|---|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம | | 3800 | | 5000 |
| பெ.தே.ஏற்பாடு | | 1300 | | (2000) |
| | | 2500 | | 3000 |
| நடைமுறைசொத்து | | | | |
| இறுதிஇருப்பு | 800 | | 1000 | |
| கடன்பட்டோர் | 200 | | 800 | |
| காசு | 100 | 1100 | 200 | 2000 |
| | | 3600 | | 5000 |
| சாதரண பங்கு மூலதனம் | | 2000 | | 2500 |
| ஒதுக்கம் | | 1000 | | 1100 |
| | | 3000 | | 3600 |
| நடைமுறை அல்லா பரிப்பு | | | | |
| 20% கடன் | | | | 1000 |
| நடைமுறை பரிப்பு | | | | |
| கடன்கொடுநர் | 400 | | 120 | |
| அட்டுறு நிர்வாகம் | 100 | | 150 | |
| அட்டுறு வரி | 100 | | 80 | |
| அட்டுறு வட்டி | | 600 | 50 | 400 |
| | | 3600 | | 5000 |

மேலதிக தகவல்கள்

*விற்பனைகள் அனைத்தும் கடனாகும்

* நிகழாண்டு சொத்துக்கள் எவையும் விற்பனை செய்யப்படவில்லை

பெறுமானத் தேய்வானது நிலைய நிர்வாகச் செலவினுள் அடங்கியுள்ளது.

வேண்டப்படுவது.

(i) *31.03.2011* இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றை நேர்முறையில் தயாரிக்க

(ii) *31.03.2011*ல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் கணக்கீட்டு விகிதங்களை கணிப்பிடுக

அ. மொத்த இலாபவீதம்

ஆ. நடைமுறை வீதம்

இ. வட்டிக் காப்பு

(09 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த குகன் கம்பனி புதிய உற்பத்தி முயற்சியில் இறங்கியுள்ளது. அது தொடர்பான தகவல்கள் வருமாறு

செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் பின்வரும் செலவுகள் நடைபெற்றது.

* பொறி கொள்வனவு கிரயம் 80 மில்லியன் ரூபா

* பொருத்துதல் செலவு 10 மில்லியன் ரூபா

2) இச் செயற்றிட்டம் 3 வருடங்காலங்களைக் கொண்டது 3ம் வருடமுடிவில் எறி பெறுமதி 4 மில்லியன் ரூபாவாகும். இச் செயற்றிடத்திலிருந்து பெற எதிர்பார்க்கும் தேறிய காசுப்பாய்ச்சல் 44 மில்லியன் ரூபா, 40 மில்லியன் ரூபா 30 மில்லியன் ரூபா 1ம், 2ம், 3ம் வருடங்களில் முறையே பெறப்படும்.

3) கம்பனியின் மூலதனக் கிரயம் 12%

4) கழிவுக் காரணிகள் வருமாறு

| வருடம் | % | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|
| கழிவுக் காரணி | 12% | 1.0000 | 0.8929 | 0.7972 | 0.7118 |
| கழிவுக் காரணி | 18% | 1.0000 | 0.84 75 | 0.7182 | 0.6086 |

வேண்டப்படுவது:

1) செயற்றிட்டத்தின் திரும்பல் அறித்தல் காலம்

2) செயற்றிட்டத்தின் தேறிய இன்றைய பெறுமதி

3) உள்ளக வருவாய் வீதம்

(06 புள்ளி)

மொத்தம் (15 புள்ளி)

# கணக்கீடு மாதிரி வினாத்தாள் - 4
# புள்ளித்திட்டம்
# பகுதி I,II

## பகுதி I

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 3 | 2) 2 | 3) 3 | 4) 5 | 5) 1 | 6) 1 |
| 7) 3 | 8) 2 | 9) 2 | 10) 3 | 11) 3 | 12) 4 |
| 13) 5 | 14) 3 | 15) 1 | 16) 5 | 17) 2 | 18) 3 |
| 19) 4 | 20) 5 | 21) 5 | 22) 1 | 23) 2 | 24) 4 |
| 25) 4 | 26) 3 | 27) 5 | 28) 5 | 29) 1 | 30) 3 |

31) 1. 1890ம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவு
   2. 5%

32) 6:4:5

33) 60%, 6000/=

34) ரூ 64000

35) ரூ 162,000

36) ரூ. 700,000

37) 1) முழுமையாக குறித்த ஆண்டு வருமானமாக காட்டுதல்
   2) ஒரு பகுதியை நிதியாண்டில் வருமானமாகக் காட்டி மிகுதியை பொறுப்பாக காட்டுதல்
   3) முழுமையாக பொறுப்பாக காட்டுதல்

38) 1230/=

39) 1) வங்கி வரவு 2480 000 விண்ணப்ப ஒதுக்கு க/கு செலவு 2480,000
   2) விண்ணப்ப ஒதுக்கு க/கு வரவு 80,000, வங்கி க/கு செலவு 80,000
   3) விண்ப்ப ஒதுக்கு க/கு வரவு 2400,000, கூறப்பட்ட மூலதன க/கு செலவு 2400 000

40) வங்கி / காசு கணக்கு வரவு
   உரிமை வழங்கல் கணக்கு செலவு

   உரிமை வழங்கல் கணக்கு வரவு
   சாதரணபங்கு மூலதன க/கு செலவு

41) உற்பத்தி செயன்முறைக்கு வைத்திலுக்கப்படும் மூலப்பொருள்
   உற்பததி செயன் முறையிலுள்ள குறைவேலை
   முடிவுப் பொருள்

42) 14000/=, 12571.43

43) நிதிக் குத்தகை, செயற்பாட்டுக் குத்தகை

44) 8/=

45) ஆரம்ப முதலீடு
   ஆண்டிற்கான சீரான காசுப் பாய்ச்சல்

46) குறை உறிஞ்சல் 30,000
   மிகை உறிஞ்சல் 1000

47) ரூ 850 000

48) ஒரு சொத்திலிருந்து அறிவிடக்கூடிய தொகையிலும் பார்க்க அச் சொத்தின் முன் கொண்டு வரும் தொகை அதிகமாயின் இரண்டு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு சேத இழப்பு ஆகும்.

49) கொள்ளல், கொடுத்தல் க/கு வரவு 300,000, கட்டட நன்கொடை க/கு செலவு 300,000
   கட்டடக் க/கு வரவு 120,000, கொள்ளல் கொடுத்தல் க/கு செலவு 120,000/=
   கட்டிட நன்கொடை க/கு வரவு 120,000, திரண்ட நிதிக் க/கு செலவு 120,000

50) $33\frac{1}{3}$%, 80,000/=, 2,00,000/=

# பகுதி II

1) கார்மீஸ் கம்பனியின் 31.01.2011 முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

| விபரம் | குறிப்பு இல | தொகை | தொகை |
|---|---|---|---|
| விற்பனை | | | 48000 |
| விற்பனை கிரயம் | | | (15000) |
| மொத்த இலாபம் | | | 32880 |
| ஏனைய வருமானம்............................... | 1 | | 835 |
| | | | 33715 |
| விற்பனை விநியோக செலவு | | 1499 | |
| நிலைய நிர்வாக செலவு | | 1864 | |
| ஏனைய செலவு | | 170 | |
| நிதிச் செலவு | | 135 | 3668 |
| வரிக்கு முன் இலாபம்.............................. | 2 | | 30047 |
| வரி ............................................ | 3 | | (645) |
| வரிக்கு பின் இலாபம் | | | 29402 |

1) கார்மீஸ் கம்பனியின் 31.01.2011 முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

| | தொகை | தொகை |
|---|---|---|
| <u>நடைமுறையில்லா சொத்து</u> | | |
| ஆதனம் பொறி உபகரணம் ...................... 4 | | 26220 |
| முதலீடு | | 1200 |
| நன்மதிப்பு | | 180 |
| | | 27600 |
| நடைமுறைச் சொத்து | | |
| இறுதி இருப்பு | 860 | |
| கடன்பட்டோர் | 1251 | |
| முற்பண செலவு | 276 | |
| பெறவேண்டிய வருமானம் | 320 | |
| காசும் வங்கியும் | 13150 | |
| குறுங்கால முதலீடு | 750 | 16607 |
| | | 44207 |
| <u>உரிமையாண்மையும் பரிப்புக்களும்</u> | | |
| <u>கூறப்பட்ட மூலதனம்</u> | | |
| சாதாரண பங்கு | 7800 | |
| முன்னுரிமைப் பங்கு | 3000 | 10800 |
| <u>சொத்துக்கள்</u> | | |
| பொது ஒதுக்கம் | 1050 | |
| மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | 700 | |
| பகிரப்படாத இலாபம் | 29002 | 30752 |
| நடைமுறையல்லாப் பரிப்பு | | |
| நடைமுறை பரிப்பு | | |
| கடன் கொடுத்தோர் | 1200 | |
| அட்டுறு வட்டி | 35 | |
| அட்டுறு வரி | 370 | |
| பிரேரித்த முன்னுரிமை பங்கு இலாபம் | 150 | |
| 15% வங்கிக் கடன் | 300 | 2055 |
| | | 44207 |

(8 புள்ளிகள்)

உரிமை அசைவுக் கூற்று

| விபரம் | சாதாரண பங்கு மூலதனம் | முன்னுரிமை பங்கு மூலதனம் | மறுமதிப்பீடு இலாபம் | பொது ஒதுக்கம் | இலாப நட்டமீதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மீதி | 6000 | 3000 | 1000 | 800 | 500 | 11300 |
| ஆண்டுகால இலாபம் | | | | | 29402 | 29402 |
| பொது ஒதுக்கம் | | | | 250 | (250) | |
| இடைக்கால சா/ப இலா | | | | | (200) | (200) |
| இடைக்கால மு/ப இலா | | | | | (300) | (300) |
| உரிமை பங்கு வழங்கல் | 1500 | | | | | 1500 |
| உபகார வழங்கல் | 300 | (300) | | | | |
| பிரேரித்த முன்னுரிமை பங்கு இலாபம் | | | | | (150) | (150) |
| | 7800 | 3000 | 700 | 1050 | 29002 | 41552 |

(3 புள்ளிகள்)

சொத்து அசைவுக் கூற்று

| விபரம் | காணி | கட்டடம் | மோட்டார் | தளபாடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கிரயம் (01.01.2010) | 10000 | 15000 | 1500 | 900 | 27400 |
| சேர்த்தல் | | | 2000 | | 2000 |
| அகற்றல் | | | (750) | | (750) |
| கிரயம் (31.03.2011) | 10000 | 15000 | 2750 | 900 | 28650 |
| கிரயம் (31.03.2011) | | | | | |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு 31.04.2010 | | 700 | 900 | 200 | 1800 |
| நிகழாண்டுத் தேய்வு | | 750 | 450 | 180 | 1380 |
| அகற்றல் தேய்வு | | | (750) | | (750) |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு (31.03.2011) | | 1450 | 600 | 380 | 2430 |
| புத்தகப் பெறுமதி | 10000 | 13550 | 2150 | 520 | 26220 |

(3 புள்ளிகள்)

குறிப்புகள் :

1) ஏனைய வருமானம்

| | |
|---|---|
| பெற்ற முதலீட்டு வருமானம் | 80 |
| பெற்ற முதலீட்டு வருமானம் | 240 |
| ஏனைய வருமானம் | 15 |
| மோட்டார் விற்பனை இலாபம் | 500 |
| | 835 |

2) வரி

| | |
|---|---|
| வரி | 650 |
| வரி மிகை | (5) |
| | 645 |

3) முதலீடு

| | |
|---|---|
| கிரயம் | 2000 |
| குறுங்கால முதலீடு | (800) |
| நீண்டகால முதலீடு | 1200 |

4) இறுதியிருப்பு

| | |
|---|---|
| கிரயம் | 880 |
| இருப்பு கட்டம் | (20) |
| | 860 |

(1 புள்ளிகள்)

5) முற்பண செலவு

| | |
|---|---|
| வாடகை | 126 |
| கட்டடத் திருத்தம் | 150 |
| | 276 |

6) காசும் வங்கியும்

| | |
|---|---|
| காசு | 150 |
| வங்கி | 13000 |
| | 13150 |

7) 15% வங்கிக் கடன்

| | |
|---|---|
| வங்கிக் கடன் | 900 |
| குறுங்கால வங்கிக் கடன் | (300) |
| | 600 |

8) நன்மதிப்பு

| | |
|---|---|
| மீதி | 200 |
| பதிவளிப்பு | (20) |
| | 180 |

9) கடன்பட்டோர்

| | |
|---|---|
| மீதி | 1500 |
| அறமுடியா கடன் | (60) |
| | 1440 |
| அறவிடமுடியாக் கடன் | (50) |
| | 1390 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 139 |
| | 1251 |

10) பெறவேண்டிய வருமானம்

| | |
|---|---|
| பெற்ற முதலீட்டு வருமானம் | 80 |
| முதலீட்டு வருமானம் | 240 |
| | 320 |

11) குறுங்கால முதலீடு

| | |
|---|---|
| மீதி | 800 |
| நட்டம் | (50) |
| | 750 |

Working

1. விற்பனை

| | |
|---|---|
| விற்பனை | 48000 |
| உட்திருப்பம் | (120) |
| | 47880 |

2. விற்பனை கிரயம்

| | | |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | 1000 |
| கொ/வு | 15000 | |
| உட்சுமை கூலி | 40 | |
| | 15040 | |
| (-) வெளித்திருப்பம் | (160) | |
| | | 14880 |
| | | 15800 |
| இறுதி இருப்பு | | (880) |
| | | 15000 |

3) விற்பனை விநியோக செலவு

| | |
|---|---|
| மோட்டார் தேய்வு | 450 |
| விற்பனை விநியோக செலவு | 900 |
| அறவிடமுடியா கடன் | 50 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 99 |
| | 1499 |

4) ஏனைய செலவு

| | |
|---|---|
| நன்மதிப்பு | 20 |
| இருப்பு நட்டம் | 20 |
| முதலீட்டு நட்டம் | 50 |
| ஏனைய செலவு | 80 |
| | 170 |

5) நிலைய நிர்வாக செலவு

| | |
|---|---|
| வாடகை | 84 |
| நிலைய நிர்வாக செலவு | 850 |
| கட்டட தேய்வு | 750 |
| தளபாட தேய்வு | 180 |
| | 1864 |

6) நிதிச்செலவு

| | |
|---|---|
| வங்கிக்கடன் | 135 |

(மொத்தம் 20 புள்ளி)

2) அ) உற்பத்திக் கிரயம்

| | சீக்குன்ஸ் சாறி | | வர்ண மணிகள் | |
|---|---|---|---|---|
| சாதாரண சாறி கொ/வு | | 420 | சா.சாறி | 420 |
| வர்ண பூச்சு | சிவப்பு $\frac{6000}{1000}$ x 40 | 280 | சிவப்பு $\frac{6000}{1000}$ x24 | 144 |
| | நீலம் $\frac{6000}{1000}$ x 24 | 144 | நீலம் $\frac{6000}{1000}$ x24 | 144 |
| | மஞ்சள் $\frac{6000}{1000}$ x 30 | 180 | மஞ்சள் $\frac{6000}{1000}$ x16 | 96 |
| சீக்குன்ஸ் | | | | |
| தங்கநிறம் | $\frac{6000}{1000}$ x 8 | 24 | | |
| வெள்ளி நிறம் | $\frac{6000}{1000}$ x16 | 48 | | |
| | | | திரவ மணிகள் | |
| | | | வெள்ளை $\frac{18000}{1000}$ x 30 | 540 |
| | | | கறுப்பு $\frac{16000}{1000}$ x 28 | 448 |
| | | | சிவப்பு $\frac{14000}{1000}$ x 16 | 224 |
| வர்ணம் பூசுவதற்கான கூலி | | | | |
| 150 x 1.6 | | 240 | கூலி 150 x 1.0 | 150 |
| சீக்குன்ஸ் பொருந்த கூலி | 180 x 2.4 | 432 | 180 x 1.6 | 288 |
| இதர மூலப் பொருள் | | 82 | இதர மூலப் பொருள் | 98 |
| மாறும் கிரயம் | 120 x (1.6 + 2.4) | 480 | மாறும் கிரயம் 120 x (10 + 1.6) | 312 |
| மேந்தலை கிரயம் | | 50 | மேற்தலை | 50 |
| | | 2380 | | 2924 |
| | | (7 புள்ளிகள்) | | (7 புள்ளிகள்) |

2) உற்பத்தி கிரயம் $\frac{528}{120}$ x1000 ரூ 440

பொருட்கிரயம் 440 x $\frac{60}{100}$ ரூ 264

கூலிக் கிரயம் 440 - (264 + 88) ரூ 88

தொழிற்சாலை மேந்தலை 440 x $\frac{20}{100}$ ரூ 88

மொத்த இலாபம் 440 x $\frac{20}{100}$ ரூ 88

3)

1) சந்தா க / கு

| | | | |
|---|---|---|---|
| வ / செ / க / | 165 000 | காசு | 150 000 |
| 31/3 மீ / செ | 15000 | 31/3 மீ செ | 30 000 |
| | 180 000 | | 180000 |
| 1/4 மீ /வ | 30000 | மீ / வ | 15000 |

(2 புள்ளிகள்)

2) ஆயள் சந்தா

வ. செ. க / கில் $\frac{50000}{5}$ = 10000/=

<u>இசை நிகழ்ச்சி</u>

| | |
|---|---|
| இசை நிகழ்ச்சி வருமானம் | 25000 |
| (-) இசை நிகழ்ச்சி செலவு | (20000) |
| வருமான மிகை | 5000 |

(1 புள்ளி)

4)

வருமானச் செலவு க/ கு

| | | | |
|---|---|---|---|
| கூலிகள் | 27000 | சந்தாக் கட்டணம் | 165000 |
| வாடகை | 12000 | வட்டி வருமானம் | 4500 |
| மின்சாரம் | 21500 | இசை நிகழ்ச்சி மிகை | 5000 |
| காகித தபால் | 15000 | ஆயள் சந்தா | 10000 |
| வி. உ. தேய்வு | 10000 | | |
| வருமான மிகை | 99000 | | |
| | 184000 | | 184000 |

(6புள்ளி)

5) 31.3.2010இல் ஐந்தொகை

| | | |
|---|---|---|
| நடைமுறையல்லா சொத்து | | ரூபா |
| விளையாட்டு உபகரணம் | | 65000 |
| நடைமுறை சொத்து | | |
| வருமதி சந்தா | 30000 | |
| காசு | 62500 | 92500 |
| | | 157500 |
| வருமான மிகை | | 99000 |
| ஆயள் சந்தா | 40000 | 40000 |
| நடை முறை பொறுப்பு | | |
| முற்பண சந்தா | 15000 | |
| அட்டுறு மின்சாரம் | 1500 | |
| அட்டுறு கூலி | 2000 | 18500 |
| | | 157500 |

(5 புள்ளிகள்)

மொத்தம் 15 புள்ளிகள்

## 4)

I. i. பிரதான கணக்காளனின் வேலைச்சுமை குறையும்

*ii.* கணக்குகளை பிழைகள் தவறின்றி தயாரிக்கமுடியும்

iii. மோசடிகள் ஏற்படுவதனை தடுக்க முடியும்

iv. பிழைகள் ஏற்பட்டால் அவற்றை இலகுவாக செம்மைப்படுத்த முடியும்.

*(03 புள்ளி)*

II

| விடயம் | மூலஆவணம் | மூலப்பதிவேடு |
|---|---|---|
| i. கொள்வனவு | கொள்வனவுப்பட்டியல் | கொள்வனவு நாளேடு |
| ii. வெளித்திரும்பல் | வரவுத்தாள் | வெளித்திரும்பல் நாளேடு |
| iii. கொடுத்தகாசு | கைச்சாத்து / உறுதிச்சீட்டு | காசேடு |
| iv. கொடுத்தகாசோலை | உறுதிச்சீட்டு/ அடிஇதழ் | காசேடு |
| v. பெற்றகழிவு | உறுதிச்சீட்டு | காசேடு (செலவுப் பக்க கழிவு நிரல்) |
| i. விற்பனை | விற்பனைப்பட்டியல் | விற்பனை நாளேடு |
| ii. உட்திரும்பல் | செலவுத்தாள் | உட்திரும்பல் நாளேடு |
| iii. பெற்றகாசு | பற்றுச்சீட்டு | காசேடு |
| iv. பெற்றகாசோலை | பற்றுச்சீட்டு /உரியகாசோலை | காசேடு |
| v. கொடுத்தகழிவு | பற்றுச்சீட்டு | காசேடு ( வரவுப்பகக் கழிவுநிரல்) |

*(02புள்ளி)*

iii. *1* கடன்பட்டோர் பேரேடு

**மதி க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 9000 | உட்திரும்பல் | 8400 |
| விற்பனை | 14000 | கொ.க | 200 |
| | | காசு | 9000 |
| | | அரகடன் | 400 |
| | | மீ/செ | 5000 |
| | 23000 | | 23000 |

**கருணை க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 7200 | உட்திரும்பல் | 2200 |
| விற்பனை | 22000 | கொ.க | 500 |
| | | காசு | 12500 |
| | | அற.கடன் | 200 |
| | | மீ./செ | 13800 |
| | 29200 | | 29200 |

**கைலைக/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 2400 | கொ.க | 600 |
| விற்பனை | 7200 | காசோலை | 7200 |
| மறு.காசோலை | 2000 | | |
| | | மீ.செ | 3800 |
| | 11600 | | 11600 |

**சக்தி க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 13000 | கொ.க | 1000 |
| | | காசு | 12000 |
| | 13000 | | 13000 |

**ஞானம் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 8400 | உட்திரும்பல் | 1800 |
| விற்பனை | 3600 | | |
| | | மீ/செ | 10200 |
| | 12000 | | 12000 |

**பத்மன் க/கு**

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 12000 | உட்திரும்பல் | 8000 |
| | | காசு | 3000 |
| | | மீ/ச | 1000 |
| | 12000 | | 12000 |

**முகுந்தன் க/கு**

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 14400 | உட்திரும்பல் | 2200 |
| மறு.காசோலை | 1000 | கொ.க | 100 |
| | | காசோலை | 7000 |
| | | மீ/செ | 6100 |
| | 15400 | | 15400 |

கடன்பட்டோர் பட்டியல்

| பெயர் | தொகை |
|---|---|
| மதி | 5000 |
| கருணை | 13800 |
| கைலை | 3800 |
| ஞானம் | 10200 |
| பத்மான் | 1000 |
| முகுந்தன் | 6100 |
| | 39900 |

*(03 புள்ளிகள்)*

iii கடன் பட்டோர் கட்டுப்பாட்டுக்க/கு

| | | | |
|---|---|---|---|
| 1.1.2010 மீ/வ | 40000 | உட்திரும்பல் | 22600 |
| விற்பனை | 73200 | கொடுத்தகழிவு | 2400 |
| மறுக்கப்பட்ட காசோலை | 3000 | காசு, வங்கி | 50700 |
| | | அறவிட முடியாக்கடன் | 600 |
| | | மீ/செ(31.12.2010) | 39900 |
| | 116200 | | 116200 |
| மீ/வ | 39900 | | |

(2 புள்ளி)

இணக்கக்கூற்று

| விபரம் | தொகை |
|---|---|
| க/பட்டோர் நிகரமீதி | 39900 |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/குமீதி | 39900 |
| இருமீதிகளும் இணங்குகின்றன. | |

(1புள்ளி)

4)

ஆ.

i. தொங்கல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வருமானம் | 1700 | மீ/வ | 31000 |
| விற்பனை | 32860 | பெற்றிகழிவு | 1510 |
| | | கொ/கழிவு | 1050 |
| | | சம்பளம் | 1000 |
| | 34560 | | 34560 |

(02 புள்ளி)

இலாபச்சீராக்கக்கூற்று

| விபரம் தொகை | | |
|---|---|---|
| திருத்தமுன் ஆண்டிற்கான இலாம | | 250 000 |
| (+) மாறிப்பதிந்த வருமானம் | 1700 | |
| தலைகொ/வு | 10000 | |
| விற்பனை | 32860 | |
| கூட்டியகொ/வு | 62370 | 106930 |
| | | 356930 |
| (-) தாளபாட பெதே | 2000 | |
| கழிவுகள் | 2560 | |
| சம்பளம் | 1000 | (5560) |
| சரியான தேறிய இலாபம் | | 351370 |

( 02 புள்ளிகள்)
மொத்தம் 15 புள்ளிகள்

5) அ)

i. மறுகட்டளை மட்டம் (அலகு) = உயர்பயன்பாடு × உயர்காலம் 60 × 5 = 300 அலகுகள்

ii. உயர்இருப்பு மட்டம் = மறுகட்டளைகனியம் + மறுகட்டளை மட்டம் - இழிவு பயன்பாடு × இழிவு காலம்

= 480 அலகுகள்

iii. இழிவு இருப்பு மட்டம் = மறுகட்டளை மட்டம் - சராசரி நுகர்வு × சராசரி காலம்

= 300 - (40 × 4)

140 அலகுகள்

(6புள்ளி)

ஆ) ஆதனம் பொறி உபகரணம்

| | மீதி | சேர்த்தல் | அகற்றல் | மீதி 31.03.2011 |
|---|---|---|---|---|
| காணி | 3000 | | | 3000 |
| கட்டடம் | 5000 | 1640 | - | 6640 |
| அ.உபகரணம் | 500 | 120 | | 620 |
| மோ.வாகனம் | 3600 | 900 | (500) | 4000 |
| தளபாடம் | 320 | - | - | 320 |
| பொறிகருவி | 4200 | 2800 | - | 7000 |
| | 16620 | 5460 | (500) | 21580 |

பெறுமானத் தேய்வுஏற்பாடு

| | | | | |
|---|---|---|---|---|
| கட்டடம் | 1500 | 260 | - | 1760 |
| மோ.வாகனம் | 1700 | 800 | (340) | 2160 |
| அலுவலக உபகரணம் | 240 | 160 | - | 400 |
| தளவாடம் | 140 | 60 | - | 200 |
| பொறிகருவி | 2100 | 1100 | - | 3200 |
| | 5680 | 2380 | (340) | 7720 |
| | புத்தகப்பெறுமதி | | | 13860 |

(07புள்ளி)

மோட்டர் வி/னை/க/கு

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் | 500 | காசு | 600 |
| இலாபம் | 440 | தே.ஏற்படு | 340 |
| | 940 | | 940 |

(02 புள்ளி)
மொத்தம் 15 புள்ளி

## 6)

வெள்ளி ஞாயிறு திங்கள் பங்குடமை
2011 03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று

i.

| | ரூபா 000 | ரூபா 000 |
|---|---|---|
| விற்பனை | | 800 |
| கழி: - விற்பனைக்கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 200 | |
| கொள்வனவு | 400 | |
| | 600 | |
| கழிவு: இறுதி இருப்பு | (150) | 450 |
| மொத்த இலாபம் | | 350 |
| பொறி பெ.தேய்வு | 60 | |
| கணனி பெ.தேய்வு | 10 | |
| மோட்டார் பெ.தேய்வு | 10 | |
| தொலைபேசி | 25 | |
| மின்சாரம் | 35 | |
| கடன் வட்டி | 9 | |
| ஏனைய செலவுகள் | 111 | (260) |
| இலாபம் வெள்ளி | 30 | |
| ஞாயிறு | 30 | |
| திங்கள் | 30 | 90 |

(3 புள்ளி)

ii. மூலதனக் கணக்கு

| | வெள்ளி ரூபா 000 | சனி ரூபா 000 | ஞாயிறு ரூபா 000 | திங்கள் ரூபா 000 | | வெள்ளி ரூபா 000 | சனி ரூபா 000 | ஞாயிறு ரூபா 000 | திங்கள் ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 40 | | 40 | 40 | மீதி/வ | 250 | 250 | 125 | |
| காசு | | 150 | | | காசு | | | 50 | 200 |
| மோட்டர் வாகனம் | | 100 | | | நன்மதிப்பு | 60 | 40 | 20 | |
| கடன் க/கு | | 90 | | | மீள்மதிப்பு இலாபம் | 39 | 26 | 13 | |
| மீதி/செ | 309 | | 168 | 160 | நடைமுறைக் க/கு | | 24 | | |
| | 349 | 340 | 208 | 200 | | 349 | 340 | 208 | 200 |

(03 புள்ளிகள்)

நடைமுறைக்கணக்கு

| | வெள்ளி ரூ 000 | ஞாயிறு ரூ 000 | திங்கள் ரூ 000 | | வெள்ளி ரூ 000 | ஞாயிறு ரூ 000 | திங்கள் ரூ 000 |
|---|---|---|---|---|---|---|---|
| பற்று | 10 | 8 | 5 | மீதி/வ | 10 | 16 | |
| மீதி/செ | 30 | 38 | 25 | இலாபம் | 30 | 30 | 30 |
| | 40 | 46 | 30 | | 40 | 46 | 30 |

(01 புள்ளி)

வெள்ளி ஞாயிறு திங்கள் பங்குடமையின்
2011.03.31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | கிரயம் ரூபா 000 | தேய்வு ரூபா 000 | தேறியது ரூபா 000 |
|---|---|---|---|
| நடைமுறையில்லாச் சொத்துக்கள் | | | |
| பொறித்தொகுதி | 300 | 60 | 240 |
| மோட்டார் வாகனம் | 50 | 10 | 40 |
| கணனி | 100 | 10 | 90 |
| | 450 | 80 | 370 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| சரக்கிருப்பு | | 150 | |
| கடன்பட்டோர் | | 58 | |
| காசு | | 291 | 499 |
| | | | 869 |
| உரிமையாண்மையும் பொறுப்புக்களும் | | | |
| பங்காளர் மூலதனம் வெள்ளி | | 309 | |
| ஞாயிறு | | 168 | |
| திங்கள் | | 160 | 637 |
| நடைமுறைக் கணக்கு: வெள்ளி | | 30 | |
| ஞாயிறு | | 38 | |
| திங்கள் | | 25 | 93 |
| நடைமுறையெல்லாம் பொறுப்பு | | | |
| பங்காளர் கடன் சனி | | | 90 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| கடன்கொடுத்தோர் | | 20 | |
| அட்டுறு கடன்வட்டி | | 9 | |
| அட்டுறு தொலைபேசி | | 15 | |
| அட்டுறு மின்சாரம் | | 5 | 49 |
| | | | 869 |

(05 புள்ளி)

4) 2011.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்குரிய காசுப்பாய்ச்சல் கூற்று

| | ரூபா 000 | ரூபா 000 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கை: - | | |
| கடன்பட்டோர் பெற்றகாசு | 900 | |
| கடன்கொடுத்தோருக்கு செலுத்திய காசு | (480) | |
| செயற்பாட்டுச் செலவுகள் | (166) | |
| செயற்பாட்டு நடவடிக்கைமூலம் தேறிய காசு | | 254 |
| முதலீட்டு நடவடிக்கை | | |
| கணனி கொள்வனவு | 100 | |
| முதலீட்டு நடவடிக்கைமூலம் தேறிய காசு | | (100) |
| நிதி நடவடிக்கை: - | | |
| பங்காளர் மூலதனமும் மேலதிக மூலதனமும் | 250 | |
| பங்காளர் பற்றும் செலுத்திய மூலதனமும் | (173) | |
| நிதி நடவடிக்கை மூலம் தேறிய காசு | | 77 |
| காசும் காசுக்கு சமமமானவற்றின் தேறிய அதிகரிப்பு | | 231 |
| 2010.04.01 காசு மீதி | | 60 |
| 2011.03.31 காசுமீதி | | 291 |

3புள்ளி)
(மொத்தம் 15 புள்ளி)

7) i. காசுப்பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கை | | |
| கடன்பட்டோர் | 9400 | |
| நிர்வாக செலவு | (-750) | |
| கடன்கொடுத்தோர் | (5480) | |
| விநியோக செலவு | 2000 | |
| வரி | (-720) | |
| வட்டி | (150) | 300 |
| முதலீட்டு நடவடிக்கை | | |
| ஆதனம் பொறி | (1200) | (1200) |
| நிதியிட்ட நடவடிக்கை | | |
| சாதாரண பங்கு மூலதனம் | 500 | |
| கடன் | 1000 | |
| செலுத்திய பங்குலாபம் | (500) | 1000 |
| தேறிய காசு மீதி | | 100 |
| ஆரம்ப காசு மீதி | | 100 |
| இறுதி காசு மீதி | | 200 |

12×½= 6புள்ளி

காசுக்க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 100 | ஆதனம் பொறி | 1200 |
| சா/பமூலதனம் | 500 | நிர்வாக செலவு | 750 |
| கடன் | 1000 | கடன்கொடுத்தோர் | 5480 |
| க/ப | 9400 | வி.செலவு | 2000 |
| | | வட்டி | 150 |
| | | வரி | 720 |
| | | செ.பங்குலாபம் | 500 |
| | | மீ/செ | 200 |
| | 11000 | | 11000 |

| | |
|---|---|
| ஆ.இருப்பு | 800 |
| கொள்வனவு | 5200 |
| | 6000 |
| இறுதிஇருப்பு | (1000) |
| | 5000 |

கடன்பட்டோர்

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 200 | காசு | 9400 |
| வி/ | 10000 | மீ/செ. | 800 |
| | 10200 | | 10200 |
| மீ/வ | 800 | | |

அ) 2.

i. மொத்த இலாபவீதம் மொத்த இலாபம் $= \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}} \times 100 = \frac{500}{10000} \times 100 = 50\%$

ii. நடைமுறைவீதம் $= \frac{\text{நடைமுறைச்சொத்து}}{\text{நடைமுறைபரிப்பு}} = \frac{2000}{400} = 5:1$

iii. வட்டிக்காப்பு $= \frac{\text{வரிவட்டிக்கு முன் இலாபம்}}{\text{வட்டி}} = \frac{1500}{200} = 7.5$ தடவைகள்

(23 புள்ளிகள்)

ஆ) i. திரும்பல் அளித்தல் காலம்

மில்லியன் ரூபா

| ஆண்டு | தேறிய காசுப்பாய்ச்சல் | திரட்டிய தேறிய காசுப்பாய்ச்சல் |
|---|---|---|
| 0 | (90) | 90 |
| 1 | 44 | (46) |
| 2 | 40 | (6) |
| 3 | 34 | |

திரும்பல் அளத்தல் காலம் $= 2 + \frac{6}{34} = 2.17$ வருடம்

ii. தேறிய இன்றைய பெறுமதி

| ஆண்டு | தேறிய காலப்பாய்ச்சல் | 12% கழிவுக்காரணி | இன்றைய பெறுமதி |
|---|---|---|---|
| 0 | (90) | 1.0000 | (90) |
| 1 | 44 | 0.8929 | 39.29 |
| 2 | 40 | 0.7972 | 31.88 |
| 3 | 34 | 0.7118 | 24.20 |
| | | NPV12% | 5.37 |

iii. உள்ளக வருவாய் வீதம்

| ஆண்டு | தேறிய காசுப்பாய்ச்சல் | 18% கழிவுக்காரணி | இன்றைபெறுமதி |
|---|---|---|---|
| 0 | (90) | 1.0000 | (90.00) |
| 1 | 44 | 0.8475 | 37.29 |
| 2 | 40 | 0.7182 | 28.72 |
| 3 | 34 | 0.6082 | 20.69 |
| | | NPV 18% | (3.3) |

iv. $\text{IRR} = \frac{12 + 5.37}{5.37 - (-3.3)} (18-12)$

$= \frac{12 + 5.37}{8.67} \times 6$

$= 15.72$

(6 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# பொருளியல் 21 T I

## மாதிரி வினாத்தாள்- 1


தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

**கவனிக்க**

* இப்பகுதியில் 50 வினாக்களுள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவிற்கும் 02 புள்ளிகள் வீதம் இப்பகுதியில் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.
* மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
* விடைஎழுதுவதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்.

1) போட்டித்தன்மையைக் கொண்டதும் உற்பத்திச் செலவைக் கொண்டிராதுமான வளங்கள்?
   1) இயற்கை வளங்கள்
   2) பொதுவளங்கள்
   3) மனித வளங்கள்
   4) பொருளாதார வளங்கள்
   5) பொருளாதாரமல்லா வளங்கள்

2) மோட்டார், கணனி ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரத்தின் நேர்கோட்டு உற்பத்தி சாத்திய வளையி பின்வருமாறு காணப்படுகின்றது?




மோட்டாருக்கான அமையச் செலவு 0.2 கணனியாயின் மோட்டாரில் உற்பத்தி செய்யக்கூடிய ஆகக்கூடிய உற்பத்தியின் அளவு யாது?
   1) 200 அலகுகள்
   2) 100 அலகுகள்
   3) 5000 அலகுகள்
   4) 500
   5) 50 அலகுகள்

3) உற்பத்தி விளைதிறன் அதிகரிப்பு என்பது
   1) ஓரலகு உள்ளீட்டுக்கான வெளியீட்டின் அளவு அதிகரித்தல்.
   2) காரணி உள்ளீட்டுக்கான வெளியீட்டின் அளவு அதிகரித்தல்.
   3) ஓரலகு உள்ளீட்டிற்கான வெளியீட்டின் அளவு குறைதல்.
   4) வெளியீட்டின் அளவு அதிகரித்தற் பொருட்டு காரணி உள்ளீடு அதிகரித்தல்.
   5) ஓரலகு வெளியீட்டு அதிகரிப்பிற்கான உள்ளீட்டைஅதிகரித்தல்.

4) பொருளாதார வளர்ச்சி ஒடுங்குதல் நிகழும் போது
   1) உற்பத்தி சாத்தியவளையி இடது புறம் நகரும்
   2) உற்பத்தி சாத்தியவளையி வலது புறம் நகரும்.
   3) வளையின் வழியே நகரும்.
   4) உற்பத்தி புள்ளி உள்நோக்கி நகரும்.
   5) உற்பத்தி புள்ளி உள்ளிருந்து வளைகோட்டை நோக்கி நகரும்.

5) யாருக்காக உற்பத்தி செய்வது என்பது எந்த ஒரு பொருளாதாரமும் தீர்த்துக் கொள்ள வேண்டிய ஒரு பிரச்சனையாகக் கொள்ளப்படுகின்றது இதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

1) உற்பத்தி வளங்கள் மனித தேவையுடன் ஒப்பிடும் போது பற்றாக்குறையாகக் காணப்படுதல்.
2) உற்பத்தித் தொழில் நுட்பமுறைகள் பொருளாதாரத்திற்கு பொருளாதாரம் வேறுபட்டுக் காணப்படல்
3) அனைத்தும் பொருளாதாரத்திலும் வெளியீடுகள் உத்தம மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதைக் குறிக்கின்றது.
4) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் சமூகத்தின் மத்தியில் பங்கீடு செய்வது தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படல்.
5) உற்பத்தி வளங்கள் உற்பத்தியாளர் இடையே பங்கீடு செய்வது தொடர்பான தீர்மானங்களைக் குறிக்கின்றது.

6) பொருட்கள் சேவைகள் சந்தை தொடர்பாக சரியான கூற்றாக அமைவது

1) பொருட்கள் சேவைகள் பரிமாறுவதற்கு இடம் ஒன்று அவசியம்.
2) வீட்டுத்துறையினர் நிரம்பல் செய்வோராவர்.
3) நிறுவனத்துறையினர் கேள்வியை ஏற்படுத்துவோராவார்.
4) நேரில் கேள்வி காணப்படும்
5) அதன் கேள்வி எல்லைப் பயன்பாட்டினால் தீர்மானிக்கப்படும்

7) பின்வருவனவற்றில் வழி வந்த கேள்வியாக அமைவது?

1) பாண்
2) சேட்
3) சீமெந்து
4) பிஸ்கற்
5) தேனீர்

8) பின்வருவனவற்றில் ஒரு பண்டத்தின் நிரம்பல் கோட்டை வலப்புறம் நகர்த்தக் கூடியது எது?

1) பண்டத்தின் விலையில் ஓர் வீழ்ச்சி.
2) பண்டத்திற்கான கேள்வியில் ஓர் அதிகரிப்பு.
3) பண்டத்தின் உற்பத்திச் செலவில் ஓர் வீழ்ச்சி
4) ஒரு குறைந்த பட்ச விலைக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்படல்
5) போட்டி நிரம்பல் பொருளின் விலை கூடுதல்.

9) சமநிலை விலைக்கு மேலாக ஒரு விலை நிலவும் பொழுது அதின் விளைவாக ஏற்படுவது?

1) மிகைக்கேள்வி
2) பண்டத்தில் ஒரு பற்றாக்குறை
3) பண்டத்தில் ஒரு மிகை
4) கேள்வியில் ஓர் அதிகரிப்பு
5) கேள்வியில் ஒரு வீழ்ச்சி


10) உற்பத்தி நிறுவனங்கள் என்பதிலிருந்து விளங்கிக் கொள்வது?

1) இலாபநோக்குடன் செயற்படும் ஒரு அலகு.
2) பொருள் உற்பத்தியை மேற்கொள்ளும் ஒரு அலகு.
3) பொதுமக்களுக்கு சேவையை வழங்கும் ஒரு அலகு
4) பொருளாதார வளங்களை பயன்படுத்தி பொருட்களையும் சேவைகளையும் வழங்கும் ஒரு அலகு
5) தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் ஒரு அலகு

11) குறுங்கால உற்பத்திச் செயற்பாட்டை விளக்கும் விதி?
1) குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி
2) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி
3) குறைந்து செல்லும் எல்லைப் பயன்விதி
4) அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு விதி
5) அதிகரிக்கும் எல்லை விளைவு விதி

12) ஒரே தன்மையான பண்டம் உற்பத்தி செய்யப்படுவதுடன் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் எவ்வித தடையுமற்ற பல நிறுவனங்களை உள்ளடங்கிய சந்தை நிலைமை.
1) தனியுரிமைச் சந்தை.
2) நிறைபோட்டிச் சந்தை
3) சிலருரிமைச் சந்தை
4) தனியுரிமைப் போட்டிச் சந்தை
5) காரணிச்சந்தை

13) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் குறுங்காலச் சமநிலை உமக்குத் தரப்படுகின்றது. இலாபத்தின் அளவு




1) 280/= அசாதாரண இலாபம்
2) 140/= அசாதாரண இலாபம்
3) 420/= அசாதாரண இலாபம்
4) 100/= அசாதாரண இலாபம்
5) 300/= அசாதாரண இலாபம்

14) மிக அதிக போட்டி விளம்பரம் காணப்படும் சந்தை?
1) நிறை போட்டிச் சந்தை
2) தனியுரிமைச் சந்தை
3) சிலருரிமைச் சந்தை
4) காரணிச் சந்தை
5) தனியுரிமைப் போட்டிச் சந்தை

15) காலத்தேர்வு முன்னுரிமை என்பது?
1) குறைந்த வட்டி வீதத்தில் உத்தேச நோக்கக் கேள்வியின் அளவு முடிவிலி
2) காலத்தின் தேவை அறிந்து செயற்படும்.
3) மனிதர்கள் எதிர்காலத்தைப் பார்க்கிலும் இப்போதே நுகர்விற்கு விருப்பம் காட்டல்
4) மனிதனின் இன்றைய தேவைகளை எதிர்காலம் நோக்கி நகர்த்துதல்.
5) மக்கள் தமது பணத்தை முதலீடுகள் நோக்கி நகர்த்தும் செயற்பாடு

16. பொருளாதார வாடகை வேறுபடக் காரணம்?
1) காரணி நிரம்பல் நெகிழ்ச்சி வேறுபடல்
2) காரணிக்கான கேள்வி நெகிழ்ச்சி வேறுபடல்
3) பொருளின் நிரம்பல் நெகிழ்ச்சி வேறுபடல்
4) பொருளின் கேள்வி நெகிழ்ச்சி வேறுபடல்
7) காரணியில் விலை வேறுபடல்

17. பொருளாதார வாடகை உற்பத்திக் காரணிகளுக்குரிய வெகுமதியாக குறிப்பதற்கு காரணம் அது?

1) மாற்றுக் கட்டணத்திற்கு மேலதிகமாக கிடைத்தல்
2) எதிர்பார்க்கப்பட்ட வருமானப் பெறுமதிக்கு சமனாகுதல்.
3) எல்லை வருமான உற்பத்திற்கு சமனாகுதல்.
4) எல்லை உற்பத்திப் பெறுமதிக்கு சமனாகுதல்.
5) நிரம்பல் விலைக்கு சமனாகுதல்.

18. பொருளியல் வாடகை என்பது?

1) எல்லைச் செலவுக் கோட்டிற்கு மேற்பட்ட வருமானத்தைக் குறிக்கும்
2) சராசரி நிலையான செலவிற்கு மேற்பட்ட வருமானமாகும்.
3) சராசரி மாறும் செலவை உள்ளடக்கிய வருமானமாகும்.
4) சராசரி செலவிலும் கூடிய வருமானமாகும்.
5) மொத்த விற்பனை வருமானமாகும்.

19) பின்வருவனவற்றுள் எது பேரினப் பொருளாதார குறிக்கோளாகக் கருதப்பட முடியாதது

1) நிறைதொழில் மட்டம்
2) பொருளாதார உறுதி
3) பொதுப்பண்டங்களை வழங்குதல்.
4) நியாயத்துவம்
5) பொருளாதார வளர்ச்சி

20) பேரினப் பொருளாதார நோக்கங்களில் வெளியக உறுதி என்பது குறிப்பது

1) விலை உறுதி, வேலைமட்ட உறுதி
2) விலை உறுதி, நாணயமாற்று உறுதி
3) சென்மதி நிலுவை உறுதி, நாணயமாற்று உறுதி
4) வேலை உறுதி, சென்மதி நிலுவை உறுதி
5) மேற்கூறியவை எதுவும் இல்லை.

21) நியாயத்துவம் என்பதால் கருதப்படுவது

1) சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படுதல்.
2) சகல வீட்டுத்துறையினரிடையேயும் வருமானப் பங்கீடு சமமாக இருத்தல்
3) வருமானப் பரம்பலில் வேறுபாட்டை குறைந்த மட்டத்தில் பேணுதல்
4) பிரச்சினைகளின் போது சரியான தீர்ப்பை வழங்குதல்.
5) கினிக்குணகத்தின் பெறுமானம் அதிகரித்துச் செல்லுதல்.

22) நிலைத்து நிற்கும் அபிவிருத்தி உள்ளடக்கும் துறைகளாவன

1) பொருளாதாரம், சமூகம், சூழல்
2) கலாச்சாரம், பொருளாதாரம், சூழல்
3) அரசியல், பொருளாதாரம், சூழல்
4) பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம்
5) அரசியல், பண்பாடு, கலாச்சாரம்

23) பேண்தரு அபிவிருத்தியை உறுதிசெய்வதற்கு நால்வகை மூலதனங்களுக்குள் அடங்காதது எது?

1) பௌதீக மூலதனம்
2) நிதி மூலதனம்
3) மனித மூலதனம்
4) இயற்கை மூலதனம்
5) சமூக மூலதனம்

24) பொருளாதாரத்தில் தீர்மானம் மேற்கொள்ளும் பிரதான அலகுகளின் நிதிமுறைமை உள்ளடக்கங்களில் சேர்க்கப்படாதது?

1) நிதிச்சந்தை
2) நிதி நிறுவனங்கள்
3) நிதித் தரகர்
4) நிதிக் கருவிகள்
5) அடிக்கட்டமைப்பு வசதிகள்.


25) மொத்தக் கேள்வியின் கூறு அல்லாதது?

1) தனியார் நுகர்வு
2) அரச நுகர்வு
3) முதலீட்டுச் செலவு
4) சேமிப்பு
5) ஏற்றுமதி

26) MPC = 0.8 சமநிலை வருமானம் 2000, நிறைதொழில் வருமான மட்டம் 3000 எனின் வீக்க அல்லது சுருக்க இடைவெளி?

1) 200 சுருக்க இடைவெளி
2) 200 வீக்க இடைவெளி
3) 1000 வீக்க இடைவெளி
4) 1000 சுருக்க இடைவெளி
5) 500 வீக்க இடைவெளி


27)






வரைபடத்தில் C கோட்டின் சரிவு குறிப்பது யாது?


I. APC
II. APS
III. MPC
IV. MPS
V. பெருக்க (K)


28) சேமிப்பு உள்ள பொருளாதார மொன்றில் தன்னிச்சையான நுகர்வு பூச்சியமாக உள்ள போது நுகர்வுக்கோடு எவ்வாறு காணப்படும்?

(i).



(ii)



(iii)



(iv)



(v)



29) எளிய பொருளாதாரம் ஒன்றின் Yd = 5000 C=0.8Y, I=50 எனின் சமநிலையில் தன்னிச்சையான நுகர்வு யாது? (தரவுகள் மில்லியன் ரூபாவில்)

1) 1050
2) 950
3) 850
4) 750
5) 600

30) வட்டி வருமானம் உழைக்கும் பண உடமையாளர்களின் மெய்வட்டி வருமானம் நேர்கணியமாக இருக்கும் சந்தர்ப்பத்தை இனங்காண்க?

1) பணவீக்க வீதம் வீழ்ச்சியடைதல்.
2) வட்டி வீதம் வீழ்ச்சியடைதல்.
3) பணத்தின் கொடுக்கல் வாங்கலுக்கான கேள்வி வீழ்ச்சியடைதல்.
4) பணத்தின் முதலீட்டுக்கேள்வி வீழ்ச்சியடைதல்.
5) கூலிகள் வீழ்ச்சியடைதல்.

31) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2002 = 100) 2009ம் ஆண்டளவில் எவ்வளவாகக் காணப்பட்டது?

1) 5400
2) 3600
3) 199
4) 206
5) 227

32) இலங்கையில் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணைக் கணிப்பிடும் நிறுவனம் யாது?

1) குடிசன மதிப்புப்புள்ளி திணைக்களம்
2) தொழில் திணைக்களம்
3) ஊழியர் சேமலாப நிதியம்
4) நிதி திட்டமிடல் அமைச்சு
5) இலங்கை மத்திய வங்கி

33) வணிக வங்கியில் உள்ள காசு 240 ஏனையதிரவச் சொத்து 660 முதலீடுகள் 500 முற்பணங்கள் 4600 (மில்லியன்) எனில் திரவச் சொத்து வீதம் யாது?

1) 15%
2) 25%
3) 30%
4) 20%
5) 25%

34) வணிக வங்கிகள் தம்மிடம் மிகை ஒதுக்கினைப் பேணுவதால்?

1) பண ஆக்கப் பெருக்கி கருதுவதைவிட பன்மடங்கு கடனாக்கம் இடம் பெறும்.
2) பணஆக்கப் பெருக்கி கருதுவதைவிட கூடிய கடனாக்கம் இடம்பெறும்.
3) பணஆக்கப் பெருக்கி கருதும் அளவிற்கு கடனாக்கம் இடம்பெறும்.
4) கடனாக்கப் அளவு மாறாது
5) பணஆக்கப் பெருக்கி கருதுவதைவிட குறைந்தளவு கடனாக்கம் இடம்பெறும்.

35) பின்வருவனவற்றுள் சந்தைத் தோல்வியில் செல்வாக்குச் செலுத்தாத காரணி?

1) வெளிவாரிகள்
2) நிறைவில் போட்டி
3) பொதுப்பண்டங்கள் நிரம்பல் செய்யப்படாமை
4) இலாப நோக்கம்
5) சமூக நலப்பண்டங்கள் உத்தமமாக வழங்கப்படாமை.

36) பின்வருவனவற்றுள் நேர்க்கணிய வெளிவாரி விளைவைக் காட்டுவது?

1) எரிபொருளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உற்பத்திகள்.
2) கழிவுப் பொருட்கள் குவிக்கப்படல்.
3) புண்ணியக் கொடைகள்
4) ஓசோன் படலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் உற்பத்தி
5) புகையிலைப் பாவனை

37) 2009ம் ஆண்டு அரசாங்க அரசிறையில் வரி அரசிறை, வரியல்லாத அரசிறையின் பங்கின் சதவீதம்?

1) 88% 12%
2) 86% 14%
3) 81% 19%
4) 90% 10%
5) 80 20%

38) தற்போது வருமான வரிவிலக்கு எல்லையாக அமைவது?

1) 300000/=
2) 400000/=
3) 500000/=
4) 5,50000/=
5) 6,00000/=

39) முதன்மைப் பற்றாக்குறை குறிப்பது?

1) மொத்தப் பற்றாக்குறை - வட்டிக்கொடுப்பனவு
2) மொத்தப்பற்றாக்குறை - நன்கொடை
3) மொத்த வருமானம் - மொத்தசெலவு
4) மொத்த வருமானம் - நடைமுறைசெலவு
5) மொத்த வருமானம் - மூலதனச் செலவு


40) பின்வருவனவற்றுள் எது நாட்டின் இறக்குமதிகளின் அளவில் அதிகரிப்பை ஏற்படுத்தும்?

1) நாணயத்தின் பெறுமதி இறக்கம் செய்தல்.
2) நாட்டின் வருமான வரிவீதத்தில் அதிகரிப்பு ஏற்படுதல்.
3) நாட்டின் பொருளாதாரம் மாற்றமடைதல்.
4) நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படல்
5) சுங்கத்தீர்வைகளில் ஏற்படும் அதிகரிப்புகள்.

41) ஒரு நாட்டின் வட்டி வீதத்தில் ஏற்படும் அதிகரிப்பு எவ்வாறு குறித்த நாட்டின் நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது?

1) வட்டி வீதம் அதிகரிக்க பணத்திற்கான கேள்வியை அதிகரிக்கச் செய்வதனால் முதலீட்டில் வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது.
2) வட்டி வீத அதிகரிப்பு குறுங்கால முதலீட்டின் தேறிய உட்பாச்சலை ஏற்படுத்துகிறது.
3) வட்டிவீத அதிகரிப்பு பணவீக்கத்தை வீழ்ச்சியடைச் செய்வதனால் நாட்டின் போட்டித்தன்மையை அதிகரிக்கச் செய்கின்றது.
4) வட்டி வீத அதிகரிப்பு பொருளாதார நடவடிக்கைகளைக் குறைப்பதால் ஏற்றுமதிகளில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.
5) வட்டி வீத அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களைப் பாதிப்பதனால் முதலீட்டு உட்பாச்சலில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

42) இலங்கை இந்தியா ஆகிய நாடுகள் தரப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடியங கைத்தொலைபேசிகள், பாதணிகள் ஆகிய இருவகைப் பொருட்களின் அளவுகளை வரை படம் காட்டுகின்றது?




பரஸ்பர நன்மைதரக்கூடிய பரிமாற்று வீதத்தை குறிப்பிடுக.

1) ஒரு பாதணிக்காக ஒரு கைத்தொலைபேசி
2) ஒரு பாதணிக்காக இரண்டு கைத்தொலைபேசி
3) ஒரு பாதணிக்காக மூன்று கைத்தொலைபேசி
4) ஒரு பாதணிக்காக நான்கு கைத்தொலைபேசி
5) ஒரு பாதணிக்காக எட்டு கைத்தொலைபேசி

43) பின்வரும் சூழ்நிலைகளினுள் ஒரு நாட்டின் வர்த்தகமாற்று வீதத்தை பாதிக்கக்கூடிய காரணியினை இனம் காண்க?

1) இறக்குமதிகளின் விலைகள் அதிகரிக்கும் விதத்திலும் பார்க்க ஏற்றுமதி விலைகள் அதிகரிக்கும் வீதம் பெரிதாக காணப்படும்.
2) ஏற்றுமதித் தொகை அதிகரிப்பு வீதத்திலும் பார்கக் இறக்குமதி தொகை அதிகரிப்பு வீதம் பெரிதாகக் காணப்படும்.

3) ஏற்றுமதிவிலைகள் அதிகரிக்கும் விதத்தை விட இறக்குமதி விலைகள் அதிகரிக்கும் வீதம் பெரிதாகக் காணப்படும்.

4) ஏற்றுமதிகளின் பெறுமதி அதிகரிக்கும் வீதத்திலும் பார்க்க இறக்குமதிகளின் பெறுமதிகளின் அதிகரிப்பு வீதம் பெரிதாகும்.

5) மொத்த வெளிநாட்டு பெறுகைகளின் பெறுமதியிலும் பார்க்க மொத்த வெளிநாட்டு கொடுப்பனவுகளின் பெறுமதி பெரிதாகும்.

44) பொருளாதார அபிவிருத்தி பற்றிய நவீன வரைவிலக்கணமாக அமைவது?

1) பொருளாதார வளர்ச்சியோடு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வது.

2) பொருளாதார வளச்சியோடு வேலை வாய்ப்புகள் அதிகரித்தல்.

3) பொருளாதார வளச்சியோடு வறுமை குறைவது.

4) கீழ்மட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும் அதே வேளை மேல் மட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை அது பாதிக்கக்கூடாது.

5) பொருளாதாரம் ஒன்றில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வது.

45) பொருளாதார அபிவிருத்தியில் உட்கட்டுமானங்கள் பங்களிப்பைச் செய்கின்றன. பின்வருவனவற்றுள் இதற்குப் பொருந்தக்கூடிய கூற்று?

1) மனித மூலதனத்தின் வளர்ச்சி

2) உற்பத்தியில் சாதகமான வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்தல்.

3) உற்பத்தி நடவடிக்கையில் நானாவீதச் செலவுகளை அதிகரித்தல்.

4) உற்பத்திச் செலவை அதிகரிக்கும்.

5) உற்பத்தியில் வெளிவாரி தீமைகளை அதிகம் ஏற்படுத்தும்.

46) 2008ம் ஆண்டுக்கான மெய்தேசிய உற்பத்தி 2000 மி.ரூ எனவும் 2007ம் ஆண்டுக்கான மெய்தேசிய உற்பத்தி 2200 மி.ரூ எனவும் இருப்பின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை சரியாக காட்டுவது?

1) 10 % 2) 99% 3) -9.09%
4) 9.04 % 5) 9.02 %

47) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அபிவிருத்திக்கான தடையாக அமையாதது?

1) சிறிய ஏற்றுமதி தளத்தில் தாங்கியிருத்தல்.

2) வர்த்தக மாற்றுவீதத்தின் சாதகமற்றநிலை

3) குறைந்த முதலீட்டு மட்டம்

4) நவகாலனித்துவத்தைக் கட்டுப்படுத்தல்

5) சாதகமான பொருளாதாரச் சூழல்.

48) வறுமைக்கான காரணங்களில் பொருளாதாரக் காரணி அல்லாதது?

1) வேலையின்மை 2) வருமான சமனின்மை
3) சனத்தொகை பெருக்கம் 4) தாராள வர்த்தகம்
5) சுகாதாரப் பிரச்சனை.

49) கீழ்வருவனவற்றுள் வளப்பயன்பாட்டைக் குறிப்பிடாத விடயம்?

1) அரச நுகர்வு 2) தனியார் நுகர்வு
3) முதலீடுகள் 4) ஏற்றுமதி
5) காரணி வருமானக் கொடுப்பனவு

50) இலங்கையில் ஒப்பீட்டு ரீதியில் வறுமை கூடிய துறை?

1) கிராமியத்துறை 2) நகரத்துறை
3) உபநகரத்துறை 4) பெருந்தோட்டத்துறை
5) கைத்தொழில் துறை

*வடமாகாணக் கல்வித் திணைக்களம்*

*கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011*

**பொருளியல்** | 21 | T | II |

**மாதிரி வினாத்தாள்- 1**

*தரம் -13* — **பகுதி II** — *மூன்று மணித்தியாலம்*

**கவனிக்க**

** உப பிரிவு "அ" விலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களையும் உப பிரிவு "ஆ" விலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.*

உபபிரிவு "அ"

1) இன்றைய பொருளாதார முறைமைகள் வெவ்வேறு நியமங்களில் அடிப்படையிலேயே பாகுபடுத்துகின்றன?

i. பொருளாதார நியமங்கள் என்பதனுள் எவற்றை உள்ளடக்குவீர்? (புள்ளி 4)

ii. சந்தைப் பொருளாதாரமொன்றின் அடிப்படைப்பண்புகள் 4 தருக? (புள்ளி 4)

iii. சந்தைப் பொருளாதார மொன்றின் அரசு தலையிடுவதற்கான காரணங்கள் எவை? (புள்ளி 4)

iv. கலப்பு பொருளாதாரம் ஒன்றின் அனுகூலங்கள் யாவை? (புள்ளி 4)

v. வெளிவாரிகள் காரணமாக சந்தைமுறைமை தோல்வியடைகின்றது என்று கூறப்படுவதற்கான காரணங்கள் எவை? (புள்ளி 4)

2) i. கோதுமை மாவுக்கான சந்தை ஒன்றில் A, B,C,D என்னும் நுகர்வோர் மாதம் ஒன்றுக்கு வாங்கிய கோதுமை மாவின் அளவு வருமாறு

A. 60kg B.80kg C.100kg D.120kg

சந்தையில் ABCD யைப் போல் தலா 10 நுகர்வோர் போன்று 40 பேர் உள்ளனர்.

அ. ABCD போன்ற நுகர்வோர் வாங்கும் அளவுகளை பொருளியலில் எவ்வாறு அழைப்பீர்

ஆ. அனைவராலும் வாங்கப்பட்ட அளவை எவ்வாறு அழைப்பீர்

இ. அனைவராலும் வாங்கப்பட்ட மொத்த அளவு யாது? (புள்ளி 3)

ஈ. சந்தையில் உள்ள நுகர்வோர் அனைவராலும் வாங்கப்படும் தொகையைத்தீர்மானக்கும் பிரதான காரணிகள் யாவை? (புள்ளி 2)

ii. புள்ளி நெகிழ்ச்சி, வில் நெகிழ்ச்சி என்பவற்றை வேறுபடுத்துக? (புள்ளி 3)

iii. பண்டம் ஒன்றின் மீது வரி விதிக்கப்படும் பொழுது வரிச்சுமை முழுவதும் உற்பத்தியாளன் தாங்கும் சந்தர்ப்பம் இரண்டையும் வரைபடத்தில் விளக்குக? (புள்ளி 4)

iv. போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் சிறியரக கன்டோஸ் இனிப்பு பண்டமொன்றின்

கேள்விச் சமன்பாடு $Qd = 2000 - 100p$

நிரம்பல் சமன்பாடு $Qs= -1000 + 200p$

"கன்டோஸ்" உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலையாக அரசாங்கம் ரூபா 7/= விதிக்கிறது.

அ. அரசு தலையீடற்ற சந்தைச் சமநிலை விலை, தொகையைக் காண்க?

ஆ. உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலையில் நிலவும் மிகைக்கேள்வியின் அளவைக் குறிப்பிடுக?

இ. இப்பண்டத்தின் மிகைக் கேள்வியின் காரணமாக கறுப்புச்சந்தையில் விற்கப்படுமாயின் அது விற்கக்கூடிய உச்சமான கறுப்புச் சந்தை விலை என்ன?

ஈ. கறுப்புச் சந்தையில் இப்பண்டத்தை விற்பதால் உற்பத்தியாளன் பெறும் சட்ட ரீதியான வருமானம், சட்ட ரீதியற்ற வருமானம் என்பவற்றைக் கணிப்பிடுக?

(4x2=8 புள்ளிகள்)

3) i. பொருளாதாரத்தில் எவ்வாறு வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை விளக்குக? (புள்ளி 3)

ii. வட்டி வீதங்கள் வேறுபடுவதற்கான காரணங்கள் யாவை? (புள்ளி 3)

iii. பணவட்டி, மெய்வட்டி வேறுபடுத்துக? (புள்ளி 4)

iv. எல்லை வருமான உற்பத்தி (MRP) எல்லை பொருள் மய உற்பத்தி (MPP) வேறுபடுத்துக? (புள்ளி 4)

v. ஓர் ஊழியச் சந்தையின் தகவல்கள் பின்வருமாறு தரப்படுகின்றது

| உழைப்பு | மொத்த பொருள் மய உற்பத்தி (TPP) | மொத்த வருமானம் வருமானம் (TRP) | மொத்த காரணிச் செலவு (TFC) | எல்லை பொருள் மய உற்பத்தி (MPP) | எல்லைவருமான உற்பத்தி (MRP) |
|---|---|---|---|---|---|
| 0 | 0 | | | | |
| 1 | 50 | | | | |
| 2 | 90 | | | | |
| 3 | 120 | | | | |
| 4 | 140 | | | | |
| 5 | 150 | | | | |

சந்தையொன்றில் ஒரு ஊழியத்திற்கான சந்தை விலை 100/= ஆகும். உற்பத்தியாளன் அலகொன்றினை சந்தையில் 100/= விற்பனை செய்வான் எனக் கருதிக் கொள்க.

அ. மொத்த வருமானம்

ஆ. எல்லை வருமான உற்பத்தி

இ. எல்லை பொருள்மய உற்பத்தி

ஈ. நிறுவனம் எத்தனையாவது காரணியியை இணைக்கும் போது உச்ச இலாபத்தை அடையும். (புள்ளி 6)

4) i. தேசிய கணக்கீடு தயாரிக்கும் பொழுது கையாளப்படும் வரையறைகள் எவை? (புள்ளி 4)

ii. முறைசாரா பொருளாதார நடவடிக்கைகளின் பண்புகளைக் குறிப்பிடுக? (புள்ளி 2)

iii. சந்தைப் படுத்தப்படாத கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள் எவை? (புள்ளி 2)

iv. பின்வரும் கருதுகோள் ரீதியான பொருளாதாரம் ஒன்றிற்கான பேரினப் பொருளியல் தரவுகளின் விபரம் வருமாறு பெறுமதிகள் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளன.

தனியார் நுகர்வு ........................................................ 3100
அரச கொள்வனவு ........................................................ 900
மூலதன நுகர்வு ........................................................ 500
தனியார் உள்நாட்டு முதலீடு .................................... 900
அரச உள்நாட்டு முதலீடு .......................................... 200
பொருட்கள் காரணி அல்லாப்பணிகளின் ஏற்றுமதி .... 1000
பொருட்கள் காரணி அல்லாப் பணிகள் இறக்குமதி 1300
வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் 56
வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றங்கள் 337

தரப்பட்ட தரவுகளைக் கொண்டு பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ. மொத்த உள்நாட்டுக் கேள்வி

ஆ. மொத்த உள்நாட்டு உற்பத்தி

இ. மொத்த தேசிய உற்பத்தி

ஈ. செலவிடக்கூடிய மொத்த தேசிய வருமானம்

உ. தேசிய வருமானம்

ஊ. மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (6x2 = 12 புள்ளி)

5) i. சமநிலைத் தேசிய வருமானத்திற்கான மூன்று நிபந்தனைகளையும் குறியீட்டடிப்படையில் காட்டுக? (புள்ளி 3)

ii. சராசரி சேமிப்பு நாட்டத்தினையும், சராசரி நுகர்வு நாட்டத்தினையும் வேறுபடுத்துக. (புள்ளி 2)

iii. நுகர்வுத் தொழிற்பாட்டைத் தருக. (புள்ளி 2)

iv. நிறுவனத்துறையின் பொருளாதாரச் செயற்பாடுகள் எவை? (புள்ளி 3)

v. எளிய பொருளாதாரம் ஒன்று பற்றிய தரவுகள் வருமாறு (தரவுகள் யாவும் மில்லியனில்)

| | | |
|---|---|---|
| நுகர்வு | 1000 | 1750 |
| வருமானம் | 1000 | 2000 |
| முதலீடு | 500 | 500 |

அ. நுகர்வுச் சார்பை அமைக்குக. (புள்ளி 1)

ஆ. சேமிப்புச் சார்பை அமைக்குக. (புள்ளி 1)

இ. சமநிலை வருமானத்தைக் காண்க (புள்ளி 1)

ஈ. எல்லா வருமான மட்டங்களிலும் நுகர்வு 10 வீதத்தால் அதிகரித்தால் புதிய நுகர்வுச்சார்பு யாது? (புள்ளி 2)

(vi) திறந்த பொருளாதாரம் ஒன்றின் சமநிலையினை வருமான செலவடிப்படையிலும் உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் அடிப்படையிலும் வரைபில் காட்டுக? (புள்ளி 5)

உப பிரிவு "ஆ"

6) i. கேள்வித் தூண்டல் பணவீக்கம் கோட்பாட்டின் இரு அணுகுமுறைகளும் எவை? (புள்ளி 2)

ii. பணவீக்கம் பணவீக்கமின்மை என்பவற்றை வேறுபடுத்துக? (புள்ளி 3)

iii. "வீக்கம்" வளர்ச்சியைத் தூண்டும் கருத்துரைக்குக? (புள்ளி 3)

iv. பணவீக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல் செலவு குறிப்பிட்டு விளக்குக? (புள்ளி 3)

v. இலங்கையில் பணவீக்கத்தினை அளவிடும் குறிகாட்டிகள் 3 தருக? (புள்ளி 3)

vi. பணவீக்கம் பின்வருவனவற்றின் மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என விளக்குக?
அ. சென்மதி நிலுவை
ஆ. நிலையான வருமானம் பெறுவோர்
இ. முதலீட்டாளர்கள் (புள்ளி 6)

7) i. பின்வரும் நிதிக்கருவிகளை
அ. அரசினால் பிறப்பிக்கப்படும் கடன் கருவிகள்
ஆ. கம்பனிகளால் வழங்கப்படும் கடன் பத்திரங்கள்.
இ. வணிக வளங்கள் கடன் பெறுவதற்கு பயன்படுத்தும் கடன் கருவிகள்.
என்ற மூன்று வகைக்குள் உள்ளடக்குக.

1. வணிகப்பத்திரம் 2. அழைப்புக்கடன்
3. திறைசேரி உண்டியல் 4. வணிகப் பங்குகள்
5. தொகுதிக்கடன் 6. வாடகைக் கொள்வனவு வசதி
7. ரூபாய் கடன் பத்திரங்கள் 8. வைப்புச் சான்றிதழ்

(½ வீதம் 4 புள்ளி)

ii. இலங்கையின் நிதி நிறுவனக் கட்டமைப்பின் பிரதான நான்கு வகைகளும் எவை? (4 புள்ளி)

iii. வணிக வங்கிகள் திரவத் தன்மைக்கும் இலாபத் தன்மைக்கும் இடையில் சமனிலை பேணவேண்டும் எனக் கூறப்படுவது ஏன்? (4 புள்ளி)

iv. வணிக வங்களின் வைப்பாக்கற் செயற்பாட்டின் குறைபாடுகள் 4 தருக? (4 புள்ளி)

v. மீள் கொள்வனவு வீதம், நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளி)

8)

i. சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரச தலையீட்டிற்கான நியாயங்கள் எவை?
ii. பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்கள் எவை?
iii. அரச வருமானங்களின் கூறுகளை பாய்ச்சற்படத்தில் காட்டுக?
iv. அண்மைய ஆண்டுகளில் அரசின் மூலதனச் செலவின் பெறுமதி அதிகரிப்புக்கான காரணங்களைத் தருக?
v. உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய நிரம்பல் அதிகரிப்புக் கொள்கை நடவடிக்கைகளை தருக.

(5×4 புள்ளிகள் = 20 புள்ளிகள்)

9) இலங்கையும் இந்தியாவும் துவிச்சக்கரவண்டிகளையும் கணனிகளையும் உற்பத்தி செய்கிறது எனக் கொள்க. இரு நாட்டிலும் தலா 1000 அலகுகள் உள்ளீடுகள் காணப்படுகின்றன. ஒரு அலகு உள்ளீட்டைப் பயன்படுத்தி பெறக்கூடிய வெளியீட்டு மட்டம் பின்வருமாறு,

| | துவிச்சக்கரவண்டி | கணனி |
|---|---|---|
| இலங்கை | 5 | 2 |
| இந்தியா | 6 | 3 |

i. முழு நன்மை அடிப்படையில் இரு நாடுகளும் நன்மை பெறக்கூடிய வியாபாரச்சாத்தியம் உள்ளதா? காரணம் தருக? (2 புள்ளி)
ii. ஒப்பீட்டு நன்மை அடிப்படையில் இரு நாடுகளும் எத்தகைய பொருட்களை உற்பத்தி செய்ய முடியும்? (4புள்ளி)
iii. இரு நாடுகளும் கணனி உற்பத்தியில் 80 மூ வளங்களை ஒதுக்கினால் நாடுகளின் உற்பத்தியையும் உலக உற்பத்தியையும் காட்டுக? (3 புள்ளி)
iv. நாடுகள் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ள பொருட்களை மட்டும் உற்பத்தி செய்தால் நாடுகளின் உற்பத்தியையும் உல உற்பத்தியையும் காட்டுக? (3 புள்ளி)
iv. சர்வதேச வர்த்தகத்தினால் தோற்றம் பெறும் இரு வகை பிரதான நன்மைகளும் யாவை? (2 புள்ளி)
v. இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகள் 4 தருக? (4 புள்ளி)
vi. சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்படும் கடன் வகைகள் 2 குறிப்பிடுக? (2 புள்ளி)

10)

i. முழுவறுமை, சார்புவறுமை என்பவற்றிற்கான வேறுபாட்டைத்தருக? (4 புள்ளி)
ii. இலங்கை வறுமையின் பிரதேச வேறுபாடுகளுக்கான காரணம் யாது? (4 புள்ளி)
iii. குறை தொழில் மட்டம் எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என்பதையும் அதன் பாதகமான பொருளாதார விளைவுகளையும் தருக? (6 புள்ளி)
iv. இலங்கையின் வேலையின்மையைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எவை? (6 புள்ளி)

# பொருளியல்

## *மாதிரிவினாத்தாள் - 1*

## புள்ளித்திட்டம் - பகுதி I, II

### பகுதி I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 2) | 4 | 3) | 1 | 4) | 4 | 5) | 4 |
| 6) | 5 | 7) | 3 | 8) | 3 | 9) | 3 | 10) | 4 |
| 11) | 2 | 12) | 2 | 13) | 1 | 14) | 5 | 15) | 3 |
| 16) | 1 | 17) | 1 | 18) | 1 | 19) | 3 | 20) | 3 |
| 21) | 3 | 22) | 1 | 23) | 2 | 24) | 3 | 25) | 4 |
| 26) | 2 | 27) | 3 | 28) | 1 | 29) | 2 | 30) | 1 |
| 31) | 4 | 32) | 5 | 33) | 1 | 34) | 4 | 35) | 4 |
| 36) | 3 | 37) | 1 | 38) | 3 | 39) | 1 | 40) | 4 |
| 41) | 4 | 42) | 3 | 43) | 3 | 44) | 4 | 45) | 2 |
| 46) | 3 | 47) | 4 | 48) | 3 | 49) | 5 | 50) | 4 |

### பகுதி II

1) (i) காரணிகள் உடமை
அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்க்கும் விதம்
உற்பத்தி, பங்கீட்டு வழிமுறை (புள்ளி 4)

(ii) சாதன உடமை
உற்பத்தி, பங்கீட்டுத் தீர்மானங்கள்
நோக்கம்
விலைப்பொறிமுறையின் செல்வாக்கு
வர்க்க வேறுபாடுகள் (புள்ளி 4)

(iii) தனியார் சுரண்டலைத் தவிர்த்தல்
தனியுரிமையின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தல்
நுகர்வோரது இறைமையைப் பாதுகாத்தல்
வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்தல்
எதிர்கால தலைமுறையினரைப் பாதுகாத்தல்
சமூக நலன் பேணல் (புள்ளி 4)

(iv) தனியாரும், அரசும் இணைந்து பொருளாதாரத்தில் பங்கேற்பதால் உச்ச நலன் பேணப்படும்
தனியுரிமை நிலை தடுக்கப்படும்
வெளிவாரியான செலவுகள் தவிர்க்கப்படும்
சமூக நலன் பேணப்படும். (புள்ளி 4)

(v) சமூக நலன் புறக்கணிக்கப்படல்
தனியுரிமையாளரின் ஆதிக்கம் மேலோங்குதல்
வீண் விரயங்கள்,
அதிகார வர்க்கத்தின் செல்வாக்குகள் மேலோங்குதல்
எதிர்கால தலைமுறையின் மீது தாக்கங்களும் பளுவும் தோன்றுதல் (புள்ளி 4)

2) (i) அ. தனிநபர் கேள்வி (புள்ளி 1)

ஆ. சந்தைக்கேள்வி (புள்ளி 1)


இ. 3600 Kg (புள்ளி 1)

ஈ. 1. குறிப்பிட்ட பண்டத்தின் விலை
2. தொடர்புபட்ட பண்டங்களின் விலை
3. நுகர்வோரின் வருமானம்
4. நுகர்வோன் சுமை
5. எதிர்கால எதிர்பார்ப்பு
6. கொள்வனவாளர் தொகை அதன் உள்ளடன்கம்
7. வருமானப் பங்கீடு (ஏதாவது இரண்டிற்கு 2 புள்ளி)

(ii) வரைவிலக்கண வேறுபாடு (புள்ளி 1)
சமன்பாடு (புள்ளி 1)
சிறிய விலை மாற்றம் (புள்ளி நெகிழ்ச்சி)
பெரிய விளைமாற்றம் (வில் நெகிழ்ச்சி) (புள்ளி 1)

(iii) 1. கேள்வி நெகிழ்ச்சி முடிவிலி (புள்ளி 2)

2. நிரம்பல் நெகிழ்ச்சி பூச்சியம் (புள்ளி 2)




வரிச்சுமை முழுவதும் உற்பத்தியாளன் தாங்கிடுவார்.


(iv) அ. P = 10
Q= 1000

ஆ. 900 (1300 -400)

இ. P = 16

உ. சட்ட ரீதியான வருமானம் 2800 /=
சட்ட ரீதியற்ற வருமானம் 3600/= (4x2=8 புள்ளி)

3) (i) கடன் நிதிக்கான நிரம்பல், கடன் நிதிக்கான கேள்வி என்பவற்றின் அடிப்படையில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகின்றது (1 புள்ளி)




(2 புள்ளி)

(ii) 1. நட்ட அச்சமட்டத்தில் காணப்படும் வேறுபாடு
2. முதிர்ச்சி அடைதல்
3. நிர்வாகச் செலவு
4. சந்தையின் நிறைவின்மை

(1புள்ளி வீதம் 3புள்ளி)

(iii) பணத்தின் பெயரளவுப் பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தப்படும் வட்டி வீதம் (புள்ளி 1)
பணத்தின் நிலையான பெறுமதியை அடிப்படையாக கொண்டு வெளிப்படுத்தப்படும் வட்டி வீதம் மெய்வட்டி வீதம் (புள்ளி 1)
மெய்வட்டிவீதம் பேரளவு வட்டி வீதம் பொதுவிலைமட்ட மாற்றுச் சதவீதம் (புள்ளி 2)

(iv) மேலதிக உள்ளீட்டைப் பயன்படுத்துவதனால் உற்பத்தியாளரின் மொத்த வருமானத்தில் சேர்க்கப்படும் அளவு எல்லைவருமான உற்பத்தியாகும்.
MRP = MPP x MR (புள்ளி 2)
மாறும் காரணியை மேலதிகமாக பயன்படுத்தும் போது மொத்த உற்பத்தியில் சேர்க்கப்படும் அளவு எல்லைபொருள் மயஉற்பத்தியைக் குறிக்கின்றது.

$MPP = \frac{TP}{L} \longrightarrow MPP = \frac{\Delta TP}{\Delta L}$ (புள்ளி 2)

| உழைப்பு | மொத்த பொருள் மயஉற்பத்தி TPP | மொத்த வருமானம் TR | எல்லைப்பொருள் மயஉற்பத்தி MPP | எல்லைவருமான உற்பத்தி MRP | மொத்த காரணி செலவு TFC | எல்லைக்காரணி செலவு MFC |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | - | - | - | - |
| 1 | 50 | 500 | 50 | 500 | 100 | 100 |
| 2 | 90 | 900 | 40 | 400 | 200 | 100 |
| 3 | 120 | 1200 | 30 | 300 | 300 | 100 |
| 4 | 140 | 1400 | 20 | 200 | 200 | 100 |
| 5 | 150 | 1500 | 10 | 100 | 500 | 100 |

(i), (ii), (iii) க்கான விடைகள் அட்டவணையில்

(iv) நிறுவனத்தின் உச்ச இலாபம் அடையும் சமநிலை நிபந்தனை.
MRP = MFC
5ம் காரணி இணைப்பின் போது நிறுவனம் உச்ச இலாபம் உழைக்கும்.

4) (i)
1. சந்தைப் படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்
2. சட்ட விரோத பொருளாதார நடவடிக்கை
3. முறைசார பொருளாதார நடவடிக்கை
4. உற்பத்தியின் தரவிருத்தி
5. சூழலுக்கான தாக்கம் கவனத்தில் எடுக்கப்படாமை
6. அரச கடனுக்கு செலுத்தப்படும் வட்டி பூரணமாக தவிர்க்கப்பட வேண்டும்.

(ii)
1. முறையாக ஆவணப்படுத்தப்பட்டமை
2. குடும்ப உழைப்பில் தங்கியிருத்தல்
3. வரிசெலுத்தல், சமூக பாதுகாப்பு முறைகளுக்கான பங்களிப்பில் இருந்து விடுபட்டிருத்தல்.
4. அரசின் பல்வேறு கட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்குவதற்கு விருப்பமின்மை.

(iii)

1. வீட்டுத்துறையின் இல்லத்தரிசிகளால் செய்யப்படட்ட சேவைகள்
2. நுகர்வு பொருளாதாரம் நடவடிக்கைகள்.

(iv)

1. C + I + G = 5100 MR
2. C +I +G (X - M) = 4800 MR
3. மொத்த உள்நாட்டு உற்பத்தி + தேறிய காரணி வருமானம் 4744MR.
4. 5081 MR
5. 4244MR
6. 6100MR (கணிப்பீட்டு முறை காட்டப்படல் வேண்டும்)

5) (i) Y = E வருமானம் = செலவு

AS = AD மொத்தக்கேள்வி = மொத்தசெலவு

J = W = உட்பாய்ச்சல் = வெளிப்பாய்ச்சல் (புள்ளி 3)

(ii) சராசரி சேமிப்பு நாட்டம் வருமானத்தில் சராசரியாக சேமிப்பின் பங்கு சராசரி நுகர்வு நாட்டம் வருமானத்தில் சராசரியாக நுகர்வின் பங்கு (புள்ளி 2)

(iii) C = a + by (புள்ளி 2)

(iv) 1) உற்பத்திக் காரணிகளை வீட்டுத்துறையினரிடம் இருந்து பெற்றுக் கொள்ளல்
2) காரணி வருமானத்தை வீட்டுத்துறைக்கு வழங்கல்
3) பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல்.
4) சேமிப்பு முதலீட்டை மேற்கொள்ளல்
5) அரசிற்கு வரி செலுத்தல்

(ஏதாவது 3ற்கு 3 புள்ளி)


(v) அ) C = 250 + 0.75y


ஆ) S = -250 + 0.25y

இ) 3000m

(vi) C = 175 + 0.825y

(vii)




6) (i) -கெயின்சிய அணுகுமுறை கேள்வி நிரம்பில் அடிப்படையில்

- பணக்கணிய அணுகுமுறை MV = PT

(ii) பொது விலை மட்டம் தொடர்ச்சியாக நீண்ட காலத்தில் அதிகரித்துச் செல்லுதல் பணவீக்கமின்மை ஆகும்

(iii) - குறிப்பட்ட அளவு பணவீக்கம் பொருளியலாளர்களால் அனுமதிக்கப்படுகின்றது.

- விலைமட்டங்கள் சிறிய அளவால் அதிகரிக்கும்.
  (உள்ளீட்டு விலை அதிகரிப்பு வீதத்தை விட பொருட்களின் விலை அதிகரிப்பு வீதம் உயர்வாக இருக்கும்)
- உற்பத்தியாளருக்கு இலாபத் தூண்டலை ஏற்படுத்தும்
- இது நீண்ட காலத்தில் அனுமதிக்கப்படுவதில்லை. (புள்ளி 3)

(iv) சப்பாத்து தோற் செலவு - பணத்தை வங்கியிலிடச் செல்லும் போது ஏற்படும் நானாவித அமையச் செலவு

பட்டியல் செலவு- (விலைப்பட்டியல் மாற்றும் செலவு விலை அட்டவணை மீண்டும் அச்சிடும் செலவு, விலை இடும் இயந்திரங்களைப் பொருத்தும் செலவு) 3 புள்ளி)

(v) - புதிய கொழும்பு நுகர்வோன் விலைச்சுட்டி
- மொத்த விற்பனை விலைச்சுட்டி
- மொத்த தேசிய உற்பத்தி சுருக்கி

(vi). அ) சென்மதி நிலுவை -

பணவீக்கம் காரணமாக ஏற்றுமதிக்கான கேள்வி குறைந்து ஏற்றுமதி குறையும் அதே போல் பணவீக்கத்தினால் ஒப்பீட்டளவில் இறக்குமதி விலை மலிவாகக் காணப்படுவதால் இறக்குமதிகள் அதிகரிக்கும் இதனால் சென்மதி நிலுவை பாதகமாகும்.

(2 புள்ளி)

ஆ) நிலையான வருமானம் பெறுவோர் -
- நிலையான வருமானம் பெறுவோருக்கு வருமானம் விலை அதிகரிப்புக்கு ஏற்ப அதிகரிப்பதில்லை. (1 புள்ளி)
- நிலையான வருமானம் பெறுவோரது மெய் வருமானம் வீழ்ச்சி அழையும்
- வாழ்க்கைத் தரம் குறைவடையும் (1 புள்ளி)

இ) முதலீட்டாளர்
- பணவீக்கமும் வட்டிவீதமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டன. பணவீக்கத்தினால் பெயரளவு வட்டி வீதம் உயர்வடையும். (1 புள்ளி)
- உயர்வான வட்டி வீதம் முதலீட்டாளர்களை ஊக்க மிழக்கச் செல்கிறது. (1 புள்ளி)

7) i

| அ | ஆ | இ |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்<br>ரூபாய் கடன்பத்திரம் | வணிகப்பத்திரம்<br>தொகுதிக்கடன்கள் | அழைப்புக்கடன்<br>வைப்புச்சான்று<br>வணிகப்பங்குகள் |

வாடகை கொள்வனவு வசதி

ii. 1. இலங்கை மத்திய வங்கி
2. நடுவர் நிதி நிறுவனங்கள்
3. நிதிச் சேவை வழங்கும் நிறுவனங்கள்
4. நிதிக் கண்காணிப்பு முகாமை நிறுவனம்

iii. 1. வணிக வங்கிகன் இரு பிரதான நோக்கம் திரவத்தன்மை, இலாபத்தன்மை பேணுதல்
2. திரவத்தன்மையின் முக்கியத்துவம்
3. இலாபத்தன்மையின் முக்கியத்துவம்
4. முடிவு

iv. 1. வங்கி முறைமைக்கு வெளியே புழக்கப்பணம் செல்லுதல்
2. வங்கி அல்லாத நிதி நிறுவனங்களை நோக்கி வங்கிகளின் நிதி செல்லுதல்.
3. வணிக வங்கிகள் சட்ட ரீதியான ஒதுக்கினை விட அதிகளவான ஒதுக்கினை பேணும் பொழுது
4. கடன் பெறுவதற்கு தனிப்பட்டவர்களும் அரசும், நிறுவனங்களும் ஆயத்தமாக இல்லாத நிலையில்.

v. 1. மீள் கொள்வனவு வீதம் என்பது வணிக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தமதுமிகை நிதியை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களிலும் திறைசேரி முறிகளிலும் முதலீடு செய்து பெற்றுக்கொள்ளக்கூடிய வட் டிவீதம் ஆகும்.
2. நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பது வணி வங்கிகளும் முதனிலை வணிர்களும் திறைசேரி உண்டியல்களையும்ட திறைசேரி முறிகளையும் பிணையாக வைத்து மத்திய வங்கியில் நிதி பெற்றுக்கொள்ளும் போது செலுத்த வேண்டிய வட்டி வீதம் ஆகும்.

08) i. * வளங்களை வினைத்திறனாகப் பங்கிடல்.

* வருமானம் சொத்து என்பவற்றை நியாயமாகப் பங்கிடல்
* சட்டங்களை ஆக்குதலும் நல்லாட்சி முறையும்
* பொருளாதார உறுதி
* கீழ்க் கட்டமைப்பு வசதி
* சந்தைப் பொறிமுறை வினைத்திறனாக்கல்
* நியாயத்துவத்தை ஏற்படுத்தல்


(ஏதாவது நான்கிற்கு 4 புள்ளி)

ii. * நிறைதொழில் மட்டம்

* பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்தல்
* விலை உறுதிப்பாடு
* சென்மதி நிலுவைச் சமநிலை
* நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி

(ஏதாவது நான்கிற்கு 4 புள்ளி)

iii




iv. * பேரளவு கீழ் கட்டுமான வசதி அபிவிருத்தி திட்டங்கள்

* தென்மாகாண அபிவிருத்திட்டம்
* சிறிய நீர்ப்பாசனைத்திட்டம்
* மறுசீரமைப்பு மற்றும் உள்ளூராட்சித் திட்டம்

v. * வரிச்சீரமைப்பு

* தனியார் மயப்படுத்தல்
* சட்ட திட்டங்களை தளர்த்துதல்
* ஊழியர் சந்தை மறு சீரமைப்பு

09)

i. இல்லை காரணம் இந்திய நாடு இரு பொருள் சார்பாகவும் முழுநன்மையை அனுபவிக்கின்றது?

ii. இலங்கை துவிச்சக்கரவண்டியையும் இந்தியா கணனி உற்பத்தியையும் உற்பத்தி செய்ய முடியும்.

கணிப்பீடு காட்டப்பட வேண்டும்.

iii.

| நாடுகள் | சைக்கிள் | கணனி |
|---|---|---|
| இலங்கை | 200 x5 = 1000 | 800 x 2 =1600 |
| இந்தியா | 200 x 6= 1200 | 800 x 3 = 2400 |
| உலகம் | 2200 | 4000 |

iv.

| நாடுகள் | சைக்கிள் | கணனி |
|---|---|---|
| இலங்கை | 1000 x5 = 5000 | |
| இந்தியா | 200 x 6= 1200 | 1000 x 3 = 3000 |
| உலகம் | 5000 | 3000 |

v. - நிலையான நன்மைகள்
- மாற்றமடையும் நன்மைகள்

vi. இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்த நன்மைகள்
- பாரிய சந்தை கிடைத்தல்
- போக்கு வரத்துச் செலவு குறைதல்
- உள்நாட்டுச் சந்தையில் நுகர்பொருட்களில் விலை குறைதல்
- வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவுக்கு இலங்கைக்கு வரல்
- வெளிநாட்டு சவால்களுக்கு தைரியமாக முகங்கொடுக்கக் கூடியதாக இருத்தல்.
- இந்தியாவில் உற்பத்தியாகும் புதிய கைத்தொழில் பண்டங்களை குறைந்த விலையில் பெறல்.

vii. - IMF கடன் வகைகள்
- நீடிப்பு செய்யப்பட்ட நிதி வசதிகள்
- கட்டமைப்பு சீராக்கல் வசதிகள்
- நட்ட ஈடு
- இருப்பு நிதி வசதி 100
- எண்ணெய்க் கடன் வசதி
- முறையான வசதிகள்

10)

i வறுமை என்பது மிகக்குறைந்த கலோரிப் பெறுமானத்தைப் பெற்றுத்தருகின்ற உணவுப் பொருட்கள் உள்ளடங்கிய அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்குக் கூட வருமானம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை வறுமையாகும். (2 புள்ளி)

சார்பு வறுமை என்பது சமூகத்தில் நிலவும் சராசரி வாழ்க்கை நிலைமையைப் பேண முடியாத ஒரு நிலைமையாகும். அல்லது வருமானப் பரம்பலின் ஏற்றத்தாழ்வு காரணமாக ஏற்படுவதாகும்.

ii. * பொருளாதார சமூக உட்கட்டமைப்பில் குறைந்த அபிவிருத்தி
* வளங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளில் காணப்படும்ட குறைபாடு
* பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் குறைந்த வருமானத்தைப் பெறும்
* கிராமியத்துறையை நோக்கிச் செல்லாமை.
* கிராமியத் துறையில் காணப்படும் குறைந்தளவிலான சேமிப்பு

iii. $$\text{குறைதொழில் மட்ட வீதம்} = \frac{\text{குறைதொழில் மட்டத்தில் உள்ளோர் தொகை}}{\text{வேலைவாய்ப்பில் உள்ளோர் தொகை}} \times 100$$

* பொருளாதாரத்தில் உற்பத்தி குறைவடைதல்
* உழைப்பு விணாகுதல்
* வருமானப் பரம்பலில் ஏற்றத்தாழ்வு ஏற்படல்
*. உழைப்பின் வினைத்திறன் குறைவடைதல்
* உழைப்பாளியின் வருமானம் குறைவதால் வறுமை ஏற்படல்
* சமூக விரோதச் செயற்பாடுகள் அதிகரித்தல்
* வேலையின்மையில் பல வகைகள் காணப்படும்

iv. * உயர் பொருளாதார வளர்ச்சியொன்றை அடைந்து கொள்ளல்
* கீழ்க்கட்டமைப்பு வசதிகள் அதிகரித்தல்
* கைத்தொழிலுக்கான அடிப்படையை விரிவாக்குதல்
* கிராமிய சிறுகைத்தொழில்களை ஆரம்பித்தல்
* தொழிற் பயிற்சிகளை வழங்குதல்
* வெளிநாட்டு வேலைவாய்ப்பை அதிகரித்தல்
* சுயதொழில் வாய்ப்புக் சந்தர்ப்பங்களை விரிவடையச்செய்தல். (6 புள்ளி)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# பொருளியல் | 21 | T | I |

மாதிரி வினாத்தாள்- 2

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்


**கவனிக்க**

* இப்பகுதியில் 50 வினாக்களுள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவிற்கும் 02 புள்ளிகள் வீதம் இப்பகுதியில் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.
* மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
* விடைஎழுதுவதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்.

1) 1 மனித தேவைகள் விருப்பங்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

1. தேவைகளும் விருப்பங்களும் வரையறுக்கப்பட்டவை
2. விருப்பங்கள் வரையறுக்கப்பட்டவை. தேவைகள் வரையறுக்கப்படாதவை
3. தேவைகள் வரையறுக்கப்பட்டது. விருப்பங்கள் வரையறுக்கப்படாதவை
4. தேவைகளும் விருப்பங்களும் வரையறுக்கப்படாதவை.
5. தேவைகளும் விருப்பங்களும் ஒரே எண்ணக்கருக்களாகும்.

2) X, y ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரத்தின் நேர் கோட்டு உற்பத்தி சாத்திய வளையினை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது?




மேற்காட்டிய படத்தில் 50 அலகு y பொருள் உற்பத்திக்காக விட்டுக்கொடுக்கப்பட்ட x பொருளுக்கான அளவு

1. 100 2. 10 3. 200 4. 1000 5. 150

3) செலவேதும் இன்றி உலகில் எதுவும் இல்லை (There are no free lunch ) என்ற கூற்றுடன் தொடர்புடைய பொருளியல் எண்ணக்கரு.

1. அருமை 2. தெரிவு 3. பணச்செலவு
4. அமையச்செலவு 5. மாற்றுப்பயன்பாடு


4) பொருளாதார வளங்களின் விளைதிறன் மட்டத்தை அதிகரிக்கச் செய்யக்கூடிய வழிமுறைகள் எவை?

1, உற்பத்திக் காரணிகளின் அளவினை அதிகரித்தல்.
2. ஊழியருக்குப் பயிற்சி வழங்கல், தொழில் நுட்ப விருத்தியும்
3. குறைவான உள்ளீட்டைப் பயன்படுத்தி கூடுதலான வெளியீட்டை பெறுதல்.
4. ஊழியப்படை அதிகரிப்பு, மூலதன அதிகரிப்பும்
5. தொழில் நுட்ப முன்னேற்றமும், மூலதன அதிகரிப்பும்

5) பொருளாதாரமொன்றின் நுகர்வோர், உற்பத்தியாளர், வள உரிமையாளர், அரசு எனும் பிரதான துறைகள் காணப்படும் பொருளாதார முறைமை பின்வருவனவற்றுள் எதுவாகும்?

1. சமூகச் சந்தைப் பொருளாதாரம்　　2. சந்தைப் பொருளாதாரம்
3. மாறுநிலைப் பொருளாதாரம்　　4. கலப்புப் பொருளாதாரம்
5. திட்டமிடற் பொருளாதாரம்

6)




மேல் காட்டப்படுள்ள நேர்மாற்று கேள்விச் சமன்பாட்டில் 10 /= விலையில் கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக.

1. 0.146　　2. 0.142　　3. 0.416　　4. 0.147　　5. 0.140

7) வேறுபட்ட பண்டம் ஒன்றின் விலைமாற்றத்திற்கு ஏற்ப குறிப்பிட்ட பண்டத்தின் போது கேள்வி மாற்றம் அடையும் விதத்தை அளவிட்டுக் கூறுவது?

1. வில் நெகிழ்ச்சி　　2. புள்ளி நெகிழ்ச்சி　　3. குறுக்குகேள்வி நெகிழ்ச்சி
4. வருமான நெகிழ்ச்சி　5. அலகு நெகிழ்ச்சி

8)

| | X | Y | Z |
|---|---|---|---|
| Edp | -0.6 | +1.3 | -1.4 |
| Edy | +0.4 | -1.4 | 1.7 |

மேற்காட்டப்பட்ட அட்டவணையில் X, Y, Z என்ற மூன்று பண்டங்களின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி, வருமானம், சார்கேள்வி நெகிழ்ச்சி என்பன தரப்பட்டுள்ளது. நெகிழ்ச்சிக் குணகங்களில் அடிப்படையில் X, Y, Z என்பன முறையே

1. அரிசி, கார், றொட்டி　　2. அரிசி, றொட்டி, கார்　　3. கார், அரிசி, றொட்டி
4. அரிசி, கோதுமை மா, எண்ணெய்　　5. அரிசி, எண்ணெய், கோதுமை மா

9) ஐந்து நிறுவனங்களினுடைய உற்பத்தி பண்டங்களுக்கான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி வருமாறு

P + 0.1
Q + 0.7
R + 1.6
S + 1.2
T + 1.1


இவ்நிறுவனங்களில் மிகக்குறைந்த சந்தை சக்தியைக் கொண்ட நிறுவனம் எது?

1. P　　2. Q　　3. R　　4. S　　5. T

10) ஒரு பண்டத்தின் கேள்விக்கோட்டை இடப்புறம் நகர்த்தக்கூடிய காரணி எது?

1. நுகர்வோர் வருமானத்தில் ஓர் அதிகரிப்பு
2. அப்பண்டத்தின் விருப்பத் தெரிவில் ஓர் அதிகரிப்பு
3. பதிலீட்டுப் பொருளின் விலையின் ஓர் வீழ்ச்சி
4. நிரப்புப் பொருளின் விலையின் ஓர் வீழ்ச்சி
5. பதிலீட்டுப் பொருளின் விலையின் ஓர் அதிகரிப்பு

11)




மேலுள்ள வரைபடத்தின் பிரகாரம் 8ஆவது அலகினை நுகர்வு செய்யும் பொழுது விலைசார் கேள்வி நெகிழ்ச்சி குணகம்

1. நெகிழ்வற்றது
2. நெகிழ்வுள்ளது
3. அலகு நெகிழ்ச்சி
4. பூரண நெகிழ் வற்றது
5. பூரண நெகிழ்வுள்ளது

12) 1. பின்வருவனவற்றுள் காரணி அல்லாத உள்ளீடு

1. காணி
2. உழவியந்திரம்
3. நீர்ப்பாசன வாய்க்கால்
4. தொழில் நுட்பம்
5. ஊழியம்.

13) எல்லை உற்பத்தி பூச்சியமாக அமையும் சந்தர்ப்பம்?

1. மொத்த உற்பத்தி உற்சமாக இருத்தல்
2. மொத்த உற்பத்தி கோட்டுச்சரிவு எதிர்கணியமாக இருத்தல்
3. சராசரி உற்பத்தி உச்சமாக இருத்தல்
4. மொத்த உற்பத்தி கோட்டின் சரிவு நேர்க்கணியமாக இருத்தல்.
5. சராசரி உற்பத்திக்கோட்டின் சரிவு பூச்சியமாக இருத்தல்.

14) நிறைபோட்டி நிறுவனம் ஒன்று நீண்ட காலத்தில் சாதாரண லாபத்தை மட்டும் உழைப்பது ஏன்?

1. ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்கள் காணப்படுதல்.
2. விளம்பரம் காணப்படாமை
3. எண்ணற்ற உற்பத்தியாளர்
4. நிறுவனம் விலையை மாற்ற முடியாமை
5. பிரவேச சுதந்திரம்

15) நிறைபோட்டி நிறுவனம் ஒன்று ஏன் சராசரி மாறும் செலவுக்குக் குறைவான வருமான மட்டத்தில் உற்பத்தி செய்வதில்லை?

1. நட்டமடையும் என்ற காரணத்திற்காக
2. நிறுவனத்தின் மொத்த வருமானமானது மொத்தச் செலவைக்கூட ஈடு செய்ய முடியாதிருத்தல்
3. மாறும் செலவில் ஒரு பகுதி மட்டும் வருமானமாகக் கிடைத்தல்.
4. எல்லை வருமானத்தை விட எல்லைச் செலவு உயர்வாக இருத்தல்.
5. சராசரிச் செலவைவிட வருமானம் குறைவாக இருத்தல்.

16) தனியுரிமைச் சந்தைக்கு உதாரணம் அல்லாதது

1. புகையிரதப் போக்குவரத்து
2. நீர்வழங்கல்
3. பிறிமா நிறுவனத்தின் கோதுமை மா உற்பத்தி
4. இலங்கை மத்திய வங்கி
5. லித்ரோ காஸ் (Littro Gaes)

17) நிரம்பல் நெகிழ்சி 0 ஆக காணப்படும்போது அனைத்து வருமானங்களும்?

1. மாற்றல் கொடுப்பனவாகும்.
2. பொருளியல் வாடகையாகும்.
3. இலவசப் பண்டங்களாகும்
4. காரணிச் செலவுகளாகும்
5. கணக்கியல் இலாபமாகும்

18) காரணிச்சந்தையில் நிறுவனத்தில் உச்ச இலாபச் சமநிலை என்பது?

1. MC = MR 2. MFC > MRP 3. MC < MR
4. MFC = MRP 5. MFC > P

19) மொத்த உள்நாட்டுச் சேமிப்பில் இருந்தும் மொத்தத் தேசிய சேமிப்பு பின்வரும் எவ்வடிப்படையில் வேறுபடுகின்றது?

1. தேறிய வெளிநாட்டு முதலீடுகள்
2. தேறிய இறக்குமதிகள்
3. அலுவல்சார் மாற்றல்களின் தேறிய பெறுவனவுகள்
4. தேறிய தனியார் மாற்றல் பெறுவனவு, தேறிய வெளிநாட்டு காரணி வருமானம்
5. தேறிய வெளிநாட்டுக்கடன் பெறுவனவுகள்

20) பின்வருவனவற்றில் தேசிய வருமானத்தைப் பிரதிபலிப்பது

1. சந்தை விலை மொத்த தேசிய உற்பத்தி - பெறுமானத்தேய்வு
2. சந்தை விலையில் தேறிய தேசிய உற்பத்தி - தேறிய நேரில்வரி
3. காரணி விலை தேறிய தேசிய உற்பத்தி + தேறிய நேரில்வரி
4. காரணி விலை தேறிய தேசிய உற்பத்தி - நேரில்வரி
5. சந்தை விலை மொத்தத்தேசிய உற்பத்தி + நேரில்வரி

21) மெய்த்தேசிய உற்பத்தியை கணிப்பிட்டுக்கொள்வதற்கு

1. நடைமுறைவிலை தேசிய உற்பத்தியோடு தேறிய நேரில்வரிகளை சீராக்கம் செய்தல்
2. நடைமுறை விலை தேசிய உற்பத்தியோடு சென்மதி நிலுவைப் பற்றாக்குறையை சீராக்கம் செய்தல்
3. நடைமுறை விலை தேசிய உற்பத்தியோடு பெறுமானத் தேய்வை சீராக்கம் செய்தல்
4. நடைமுறை விலை தேசிய உற்பத்தியோடு மாற்றல்களை சீராக்கம் செய்தல்
5. நடைமுறை விலை தேசிய உற்பத்தியோடு விலை மட்டமாற்றங்களை சீராக்கம் செய்தல்

22) பின்வரும் வருமானங்களில் சுயதொழில் வருமானத்திற்குள் உள்ளடங்காதது?

1. கம்பனிகளாக பதிவு செய்யப்படாத தனி வியாபாரம்
2. பங்குடமையும் கூட்டுறவு முயற்சியும்
3. விவசாயிகள்
4. வாண்மைத்தொழில்கள்
5. கம்பனி வருமானம்

23. மொத்த தேசிய வருமானத்துடன் தேறிய வெளிநாட்டு மாற்றல்களை சேர்த்துப் பெறப்படுவது?

1. தேறிய தேசிய வருமானம்
2. உண்மைத் தேசிய வருமானம்
3. வீட்டுத்துறையினரின் செலவிடக்கூடிய வருமானம்
4. மொத்த தேசிய செலவிடக்கூடிய வருமானம்
5. நிலையான விலைத்தேசிய வருமானம்


24) 1.எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி 0.8 ஆயின் முதலீட்டுப் பெருக்கி யாது? (K)

1. 5 2. 4 3. 3 4..2 5. 8

25) 2. C = 500 + 0.9 yd
வரி (T) = 0.2y
மாற்றல் (R) = 50
வருமானத்தின் சார்பாக நுகர்வுச் சமன்பாட்டைத் தருக?

1. C = 545 + 0.72 y 2. C = 545 + 0.8 y 3. C = 545 + 0.7 y
4. C = 550 + 0.72y 5. C = 550 + 0.8y

26)




400 வருமான மட்டத்தில் சராசரி சேமிப்பு நாட்டம் (APS) யாது?

1. 1 2. –1 3. 2 4. –2 5. 0.

27. சுருக்கத்தாக்கம் தொடர்பான சரியான கூற்று?

1. சேமிப்பு முதலீடு சமனாக இருத்தல்
2. மொத்த நிரம்பலை விட மொத்த கேள்வி அதிகமாக இருத்தல்
3. வெளிப்பாய்ச்சலை விட உட்பாய்ச்சல் அதிகமாக இருத்தல்
4. உட்பாய்ச்சலை விட வெளிப்பாய்ச்சல் அதிகமாக இருத்தல்.
5. ஏற்றுமதியை விட இறக்குமதி குறைவாக இருத்தல்.

28) பின்வருவனவற்றுள் வெளிப்பாய்ச்சல் அல்லாதது?

1. சேமிப்பு 2. வரி 3. அரசசெலவு
4. இறக்குமதி 5. நுகர்வு

29) மையப்பணவீக்கத்தைக் கணிப்பிடும் போது கணிப்பீட்டிற்குள் இருந்து விலக்களிக்கப்படும் இரண்டு பொருட்களாவன?

1. உணவு, பால்மா
2. எரிபொருள், மருந்துப்பொருள்
3. வலுப்பொருட்கள், உணவுப்பொருட்கள்
4. உணவுப்பொருட்கள், மருந்துப்பொருட்கள்
5. புடவைகளும், ஆடைகளும், எரிபொருட்கள்

30) வருமானம் ஏதும் கிடைக்காத போதும் தமது செல்வத்தின் ஒருபகுதியை காசு நிலுவைகளாக வைத்திருப்பதற்கு மக்கள் தூண்டப்படுவது?

1. எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது என்பதால்
2. வருமான வரி செலுத்துவதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக
3. எதிர்காலத்தில் வருமான நிச்சயமின்மை காணப்படும்
4. பணத்திற்கு எல்லையற்ற நிரம்பல் காணப்படும்
5. பூரண திரவத்தன்மையை பணம் கொண்டு இருக்கின்றது என்பதற்காக

31) ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($M_{2b}$) என்பதை சரியாக வரையறுக்கும் சமன்பாடு

1. $M = M_1 +$ கிட்டிய பணம் 2. $M = M_1 + TSD$ 3. $M = M_2$ TSD + RD
4. M = CP + DDP 5. M= CP + DDP + TSD

32. 2009ம் ஆண்டின் இலங்கையின் பணவீக்க வீதம்?

1. 22.6 2. 3.4 3. 4.3 4. 22.8 5. 6.22

33) பின்வருவனவற்றுள் எது $M_5$ பணநிரம்பலில் உள்ளடக்கப்படுவதில்லை?

1. பொதுமக்களின் கையில் உள்ள காசு
2. வர்த்தக உண்டியல்கள்
3. வணிக வங்கியின் கையில் உள்ள காசு
4. நிதிக்கம்பனிகளின் போலிப்பணம்
5. வணிக வங்கியில் பொதுமக்களின் பேரில் உள்ள கேள்வி வைப்பு

34) மத்திய வங்கியானது ஆபரணங்கள் பிணைப்பத்திரங்களை கொள்வனவு செய்யும் போது வட்டி வீதம் பண நிரம்பில் என்பவற்றில் ஏற்படும் தாக்கம் முறையே

| | வட்டி வீதம் | பணநிரம்பல் |
|---|---|---|
| 1. | அதிகரிக்கும் | குறையும் |
| 2. | மாராது | மாராது |
| 3. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4. | குறையும் | குறையும் |
| 5. | குறையும் | அதிகரிக்கும் |

35) பணவீக்கம் காரணமாக நன்மை அடைபவர்

1. சேமிப்பை மேற்கொள்ளல்
2. கடன் கொடுத்தோர்
3. கடன் பெற்றோர்
4. நிலையான வருமானம் பெறுவோர்
5. நுகர்வோர்

36) நாணயக் கொள்கை அமுலாக்க சக்திப் பொறிமுறைக்குள் உள்ளடங்காதது?

1. வட்டி வீதம் 2. வரிகள் 3. நாணய மாற்று வீதம்
4. கடன் வசதிகள் 5. சொத்துக்களின் விலை

37) பின்வருவனவற்றுள் மத்திய வங்கியொன்று மிகக்குறைந்தளவில் பொறுப்பாக இருப்பது?

1. வட்டி வீதங்களின் பொதுமட்டத்தை நிலைப்படுத்தல்
2. வங்கித் தொழிலை ஒழுங்கு படுத்துதல்
3. பொதுத்துறையில் கடன் தேவைப்பாடுகளை நிர்ணயித்தல்
4. வெளிநாட்டு நாணயங்களின் தேசிய ஒதுக்குகளைப் பேணுதல்.
5. நாணயத்தாள், குற்றிகளை வெளியீடு செய்தல்.

38) நுகர்வின் போது தனியார் நலன்களை விட மேலதிகமாக சமூக நலன்களைப் பெற்றுத்தரும் பொருட்கள் சேவைகள்?

1. வீதி வெளிச்சம் 2. வெளிச்ச வீடு 3.பெருந்தெருக்கள்
4. சுகாதாரம் 5. மணிக்கூட்டுக்கோபுரம்

39) சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரசின் தலையீடு தொடர்பாக பொருத்தமற்றது?

1. வளங்களை வினைத்திறனுடன் பங்கீடு செய்தல்.
2. பேரினப் பொருளாதார உறுதியை ஏற்படுத்தல்
3. கீழ்க்கட்டமைப்பு வசதியை வழங்கல்
4. சமூகநலப் பொருட்களை முழுமையாக வழங்கல்
5. பேரினப் பொருளாதார உறுதியை ஏற்படுத்தல்.

40) வரி இசைவு தொடர்பாக சரியாக இனம் காணக்கூடியது

1. அரசின் வரிவிதிப்பு பொருளாதாரத்திற்கு நன்மையளித்தல்.
2. அரசு வரியை விதிக்கும் போது மக்கள் தாமாகவே முன் வந்து வரியைச் செலுத்துதல்.
3. ஏழை பணக்காரர் என்ற வர்க்க வேறுபாட்டை நீக்க சமத்துவத்தைப் பேணல்
4. அரசு வரியை விதிக்கும் போது சந்தைப் பொறிமுறை ஒழுங்காகச் செயற்படல்
5. பணவீக்கம், பணச்சுருக்கம் ஏற்படாதவாறு வரி நிர்வாகம் அமைதல்.

41) மூலதனச் செலவினங்களில் தற்போது மிகக்கூடிய செலவினங்களைக் கொண்ட திட்டம்

1. நுரைச்சோலை அனல் மின் நிலையம்
2. வடக்கின் வசந்தம்.
3. கிழக்கின் உதயம்
4. பேரளவுக் கீழ்கட்டுமான வசதிகள் (ரண்டோரா)
5. சம்பூர் அனல் மின்நிலையம்

42) நிரம்பல் அதிகரிப்புக் கொள்கையாக கருத முடியாதது?

1. வரிச்சீரமைப்பு
2. அரச நிறுவனங்களின் முகாமையை தனியார் துறையிடம் ஒப்படைத்தல்
3. ஊழியச் சந்தை மறுசீரமைப்பு
4. மூலதனச் சந்தை வசதி
5. பொருளாதாரத்தில் அரசாங்க செயற்பாடு அதிகரித்தல்

43) சர்வதேச வர்த்தகத்தினால் அடையப்படும் சிறப்புத்தேர்ச்சி மூலமான நன்மைகள் எதனை அடிப்படையாக கொண்டு அமைந்தவை?

1. தொழில்நுட்ப செல்வாக்குகளை
2. ஏற்றுமதி இறக்குமதி விலையேறுபாடுகளை
3. வர்த்தக விகித வேறுபாடுகளை
4. உற்பத்தி மற்றும் நுகர்வை
5. நாணய மாற்று வீதவேறுபாடுகளை

44)

| உற்பத்தி | நாடுகள் | |
|---|---|---|
| | சீனா | இந்தியா |
| முச்சக்கரவண்டி (அலகு /மனிதமணியில்) | 06 | 04 |
| துவிச்சக்கரவண்டி (அலகு / மனித மணியில்) | 03 | 03 |

மேற்படி அட்டவணைப்படி ஒரு அலகு மனித மணித்தியாளத்துக்கு இரு நாடுகளினதும் உற்பத்தி அளவுகள் தரப்பட்ட நிலையில் ஒரு அலகு முச்சக்கரவண்டி உற்பத்தி தொடர்பான அமையச் செலவு சீனாவுக்கு

1. 0.5 துவிச்சக்கரவண்டி
2. 2 துவிச்சக்கரவண்டி
3. 1.33 துவிச்சக்கரவண்டி
4. 0.75 துவிச்சக்கரவண்டி
5. 1.43 துவிச்சக்கரவண்டி

45) நாடொன்றின் வர்த்தகப் பாதுகாப்புக் கருவியாக கருதப்படமுடியாதது எது?

1. அந்நியச் செலாவணிக்கட்டுப்பாடு
2. ஏற்றுமதி அனுமதிப்பத்திர முறை
3. வர்த்தக ஒப்பந்தக்களைச் செய்தல்
4. ஏற்றுமதி ஊக்குவிப்புக்களை வளங்குதல்
5. குவித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடல்.

46) சென்மதி நிலுவை அட்டவணையில் பின்வருவனவற்றுள் எதுவருமானக் கணக்கில் அடங்கும்?

1. பொருட்கள் ஏற்றுமதி
2. காப்புறுதிப்பணிகள்
3. கப்பற்கட்டணங்கள்
4. அரசாங்கச் சொத்துக்கள்
5. ஊழியர் இழப்பீடுகள்

47) நாணயமாற்று வீதம் குறைமதிப்பீடு செய்யப்படும்போது ஏற்படும் தாக்கம் எதை ஒத்து இருக்கும்?

1. ஏற்றுமதி வர்த்தகம் வீழ்ச்சியடைந்து இறக்குமதி வர்த்தமக் அதிகாரிக்கும் தாக்கங்களை ஒத்திருக்கும்
2. சென்மதி நிலுவையின் பற்றாக்குறை தொடர்ந்து நிலைத்து இருக்கும்
3. பணச்சுருக்க நிலைமையை ஒத்திருக்கும்
4. பணவீக்க நிலமையை ஒத்திருக்கும்.
5. பேரின பொருளாதார மாறிகள் அனைத்தும் முன்னேற்றத்தை காட்டும்.

48) இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவை மேலே கட்டியொழுப்பும் நோக்குடன் மூலதான வளங்களை ஒதுக்கீடு செய்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு

1. ஐரோப்பிய பொருளாதார அமைப்பு
2. ஐரோப்பிய கட்புல்லா வர்த்தக அமைப்பு
3. அபிவிருத்திக்கும் புனரமைப்புக்குமான வங்கி
4. ஆசிய அபிவிருத்தி வங்கி
5. ஒபெக் அமைப்பு

49) ஒரு டொலர் = 120 /= என்ற நாணயமாற்று வீதம் உள்ளபோது இலங்கை தனது நாணயத்தை 20 % மதிப்பிறக்கம் செய்தால் டொலருக்காக பரிமாற்றப்படும் இலங்கை ரூபாவின் அளவு

1. 150 2. 144 3. 140 4. 120 5. 96

50) பொருளாதாரம் ஒன்றின் 2006ம் ஆண்டுக்கான மெய்த்தேசிய உற்பத்தி 10,000 BR பொருளாதார வளர்ச்சி வீதம் 7 % 2016ம் ஆண்டுக்கான மெய்த்தேசிய உற்பத்தி யாது?

1. 5000 BR 2. 10,000BR 3. 15,000BR 4.20,000BR 5.25,000BR

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# பொருளியல் 21 T II

மாதிரி வினாத்தாள் - 2

தரம் -13 பகுதி II மூன்றுமணித்தியாலம்

**கவனிக்க**

* உப பிரிவு "அ" விலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களையும் உப பிரிவு "ஆ" விலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1) i. அகச்சிக்கனங்கள் காணப்படும் பொருளாதாரத்தில் X.Y ஆகிய இரு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது. Y பொருள் நிலைக்குத்திச்சிலும் X பொருள் கிடை அச்சிலும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

a. x பொருள் உற்பத்தியை 1, 2, 3 அலகு என அதிகரித்துச் செல்லும் போது yயின் உற்பத்தி அலகுகள் எவ்வாறு குறைவடையும் என்பதை படத்தில் காட்டுக?

b. இவ்வரைபடம் எத்தகைய அமையச் செலவைக் கொண்டதாக அமைந்துள்ளது?

c. Xற்கான Yயின் அமையச்செலவின் போக்கினைக் குறிப்பிடுக?

d. Yற்கான Xன் அமையச்செலவின் போக்கினைக் குறிப்பிடுக?

ii பின்வருவன ஆதன வளம், மானிட வளம் என்வற்றில் எவ்வகை வளங்களைச் சார்ந்தவை?

இயற்கைக் காடுகள் விவசாய உபகரணங்கள்
சூரிய ஒளி தாதியர் சேவை
நிலக்கரி

iii. பொருளாதார பண்டங்கள், பொருளாதார வளங்கள் என்பவற்றின் ஒத்த இயல்புகள் யாவை?

iv. ஆதன வளம் என்பதனை உதாரணத்துடன் விளக்குக?

2) i. உற்பத்தி நடவடிக்கையில் குறுங்காலம் நீண்டகாலம் என்பவற்றை வேறு படுத்துக?

ii. அளவுத்திட்ட விளைவு விதிகளைக் குறிப்பிட்டு விளக்குக?

iii. மொத்த உற்பத்திக்கும் எல்லை உற்பத்திக்கும் இடையிலான தொடர்பை படத்தில் காட்டி விளக்குக?

iv. மொத்தமாறும் செலவில் ஏற்படும் மாற்றமே எல்லைச் செலவாகும் விளக்குக?

v. நிறைபோட்டிச் சந்தையின் முக்கியமான நிபந்தனைகள் நான்கு தருக?

3) i. காரணிச் சந்தையிலிருந்து பொருட் சந்தை எவ்வாறு வேறுபடுகிறது?

ii. காரணி சந்தையில் கரரணி விலைகள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது?

iii. கூலி என்பதை வரைவிலக்கணப்படுத்தி, மெய்க்கூலிக்கும் பணக்கூலிக்குமிடையிலான வேறுபாட்டை குறிப்பிடுக?

iv. பொருளியல் இலாபம் என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு, அது எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என்பதை காட்டுக?

v. காரணி வருமானம் முழுவதும் மாற்றல் வருமானமாக அமையும் சந்தர்ப்பத்தை வரிப்படம் ஒன்றின் ஊடாக விளக்குக?

4) i. நுகர்வுச்செலவை நிர்ணயிக்கும் காரணிகளைத்தருக?

ii. முதலீட்டுச் செலவு என்பதனுள் உள்ளடங்கும் விடயங்கள் எவை?

iii. பின்வரும் தரவுகள் மூடிய பொருளாதாரம் ஒன்றினுடையதாகும்.

| | |
|---|---|
| C | = 240 + 0.8yd |
| I | = 50m |
| G | = 100m |
| T | = 0.2y |
| R | = 50m |

a. சமநிலை வருமானம் யாது?

b. செலவிடத்தக்க வருமானம் யாது?

c. தன்னிச்சையான செலவு யாது?

d. சமநிலையை வரைபில் காட்டுக?

5) i. வர்த்தக சகட ஓட்டம் என்பதனை விளக்குக?

வர்த்தக சகட ஓட்டத்தின் நான்கு கட்டங்களையும் வரைபட உதவியுடன் விளக்குக.

ii. கருதுகோள் ரீதியான பொருளாதாரம் ஒன்றின் தரவுகள் பின்வருமாறும் தரவுகள் Million தரப்பட்டுள்ளன?

| | |
|---|---|
| தனியார் நுகர்வு | 320 |
| சர்வதேச தேறிய மாற்றல் நன்கொடை | 16 |
| மொத்த உள்நாட்டு முதலீடு | 200 |
| மொத்த தேசிய உற்பத்தி | 586 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 620 |
| அரச கொள்வனவு | 130 |
| இருப்புக்களின் மாற்றம் | 70 |
| இறக்குமதி | 125 |
| அரச நடைமுறை மாற்றம் | 120 |
| சனத்தொகை | 31 |

இத்தரவுகளைக் கொண்டு பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

a. வெளிநாட்டு தேறிய காரணி வருமானம்

b. ஏற்றுமதி

c. வெளிநாட்டு தேறிய முதலீடு

d. தேசிய சேமிப்பு

e. தேசிய சேமிப்பு வீதம்

f. செலவிடக்கூடிய மொத்த தேசிய உற்பத்தி

g. மூலவளங்கள் வளப்பயன்பாடு என்பதனை நிறுவிக்காட்டுக

6) i. மெய்வேதனம் எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக?

ii. மெய்வேதனச் சுட்டி எவ்வாறு கணிக்கப்படுகின்றன?

iii. "மெய்வேதனங்களில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு பணவீக்க விளைவுகளைக் கொண்டதாகும்" இக்கூற்றினனை ஏற்றுக்கொள்வீரா? உமது விடைக்கான காரணம் தருக?

iv. பணவேதனம் மெய்வேதனம் என்பவற்றை வேறுபடுத்துக?

v. "வேதனமட்டம் அதிகரிக்கப்பின் பணவீக்கம் ஏற்படும்" இக்கூற்றை நீர் ஏற்றுக்கொள்வீரா? விளக்கம் தருக?

7) i. பணக்கொள்கையை செயற்படுத்துவதற்கான நோக்கங்களைக் குறிப்பிடுக.

ii. காசு ஒதுக்கு வீதத்திற்கும் வைப்பு விரிவாக்கப் பெருக்கிக் குணகத்திற்கும் இடையே உள்ள தொடர்பை கற்பிதமான உதாரணங்களுடன் விளக்குக?

iii. ஒரு நாட்டின் மத்திய வங்கியானது பணநிரம்பலைக் குறைப்பதற்கு திறந்த சந்தை நடவடிக்கைகளை எவ்வாறு பயன்படுத்துகின்றது?

iv. 2002ம் ஆண்டு திருத்தப்பட்ட நாணயச்சட்டத்தின் படி இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்கள் எவை?

v. மத்திய வங்கி பிணைப்பத்திரங்களை திறந்த சந்தையில் கொள்வனவு செய்கிறது. இச்செயலின் பொருளாதார விளைவுகள் யாவை?

vi. ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள் எவை?

vii. திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் வேறுபடுத்துக?

8) i. நேர்வரி நேரில்வரி என்பவற்றை வேறுபடுத்துக?

ii. இலங்கையின் நடைமுறையில் உள்ள முக்கியமான நேரில் வரிகளைத் தருக

iii. இலங்கையில் வரியரசிறையில் நேர்வரி வருமானங்களின் பங்கு குறைவாக இருப்பதற்கான காரணங்களை தருக.

iv. அரச நடைமுறைச் செலவு அதிகரிப்பதன் முக்கிய பொருளாதார விளைவுகளைத் தருக?

v. மூலதனச் செலவின் பிரிவுகள் எவை?

vi. பாதீட்டுப்பற்றாக்குறைக்கு கடன் பெறும் வங்கி அல்லாத மூலங்கள் எவை?

9) i. BRICS அமைப்பில் உள்ளடங்கும் நாடுகளைத் தருக?

ii. உலகமயமாகுதல் என்றால் என்ன?

iii. உலக மயமாக்களின் பிரதான பண்புகள் எவை?

iv. உலக மயமாதலைத் தூண்டிய காரணிகள் யாவை?

v. உலக மயமாகுதலால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஏற்படும் அனுகூலங்கள் 4 தருக?

vi. "உலக மயமாகுதல் நடவடிக்கைகள் எதிரான தாக்கங்களையும் ஏற்படுத்தவல்லன" இக்கூற்று தொடர்பாக நீர் முன்வைக்கக்கூடிய காரணங்கள் யாவை?

10) i. பொருளாதார அபிவிருத்தி பேண்தகு அபிவிருத்தி என்பனவற்றை வேறுபடுத்துக

ii. பேண்தகு அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு அவசியமான நால்வகை மூலதனங்களும் எவை?

iii. ஒரு நாட்டின் அபிவிருத்தியை மதிப்பிடுவதற்கு மனித அபிவிருத்திச்சுட்டெண் (HDI) போதுமானதா?

iv. இலங்கையின் வறுமையின் அண்மைக்காலப் போக்கு எவ்வாறு காணப்படுகின்றது?

v. வேலையின்மையின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளைதக் குறிப்பிடுக?

vi. வறுமையை அளவிடும் பிரதான அளவு கோல்கள் எவை?

vii. மனித அபிவிருத்தி என்பதன் மூலம் கருதுதப்படுவது யாது?

## பொருளியல் I, II

## மாதிரிவினாத்தாள் - 2


## புள்ளித்திட்டம் - பகுதி I, II

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 5 | 31) 3 | 41) 4 |
| 2) 1 | 12) 4 | 22) 5 | 32) 2 | 42) 5 |
| 3) 4 | 13) 1 | 23) 4 | 33) 3 | 43) 4 |
| 4) 2 | 14) 5 | 24) 1 | 34) 5 | 44) 1 |
| 5) 4 | 15) 3 | 25) 2 | 35) 3 | 45) 5 |
| 6) 2 | 16) 5 | 26) 2 | 36) 2 | 46) 5 |
| 7) 3 | 17) 2 | 27) 4 | 37) 3 | 47) 3 |
| 8) 2 | 18) 4 | 28) 3 | 38) 4 | 48) 3 |
| 9) 3 | 19) 4 | 29) 3 | 39) 4 | 49) 1 |
| 10) 3 | 20) 2 | 30) 5 | 40) 2 | 50) 4 |

### பகுதி II

*1)* a)




b) குறைந்து செல்லும் அமையச் செலவைக் காட்டுகின்றது?

C) $5 > 4 > 3 > 2 > 1$

D) $1 > \frac{1}{2} > \frac{1}{3} > \frac{1}{4} > \frac{1}{5}$

ii. *1. ஆதன வளம்*
*2. ஆதன வளம்*
*3. ஆதன வளம்*
*4.மானிட வளம்*
*5. ஆதன வளம்*

iv *இயற்கை வளங்கள். மூலதனவளங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகை ஆதனவளங்களாகும்?*

| | |
|---|---|
| *உ+ம் :- இயற்கைவளம்* | *மூலதன வளம்* |
| *நிலக்கரி* | *கட்டடங்கள்* |
| *காடுகள்* | *இயந்திரங்கள்* |

*2)*

i. குறுங்காலம்

*நிலையான காரண களும் மாறும் காரணிகளும் மாறும் காலம்*
*எல்லா உற்பத்திக் காரணிகளையும் மாற்ற முடியாத காலம்.*
*குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி காணப்படும்.*

*நீண்ட காலம்*
*மாறும் காரணிகள் மட்டும் காணப்படுதல்*
*எல்லாக் காரணிகளும் மாறும் காரணிகள்*
*அளவுத்திட்ட விளைவு விதி காணப்படுதல்*

(ii) குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி
மாறா அளவுத்திட்ட விளைவு விதி
அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு விதி

அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு விதி
உள்ளீட்டு அதிகரிப்பு வீதத்தை விட வெளியீட்டு அதிகரிப்பு வீதம் கூடுதலாக இருத்தல்
(இதே போன்று முழுமையான விளக்கத்துக்கு 4 புள்ளி)

(iii) படம் வழங்கப்பட வேண்டும்.

TP அதிகரிக்கும் வேகத்தில் MP யும் அதிகரிக்கும்
TP குறைந்த வேகத்தில் அதிகரிக்கும் போது MP வீழ்ச்சியடையும்.
TP உச்சமடையும் போது MP பூச்சியம்
TP வீழ்ச்சியடையும் போது MP எதிர்கணியம்

(iv) *எல்லைச் செலவென்பது ஓரலகு உற்பத்தியை மேலதிகமாக செய்யும்போது மொத்த செலவில் ஏற்படும் மாற்றமாகும்.

* மொத்த செலவுக்குள் மொத்த நிலையான செலவும் மொத்த மாறும் செலவும் காணப்படும்

* நிலையான செலவு மாற்றமடைவதில்லை.

* எனவே மொத்தச்செலவு மாற்றத்துக்கு மொத்த மாறும் செலவே காரணம். இதனால் மொத்த மாறும் செலவின் மாற்றமே எல்லைச் செலவு எனப்படுகின்றது.

(v) * உற்பத்திகளிற்கிடையில் ஓரினத்தன்மை
* கொள்வனவாளரும் விற்பனையாளரும் எண்ணற்றவர்கள்
* பிரவேச சுதந்திரம்
* கொள்வனவாளரும் விற்பனையாளரும் சந்தை பற்றிய அறிவுள்ளவர்கள்.

3)

(i) * காரணிச்சந்தை - உள்ளீடுகள் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் சந்தையாகும்.
* பொருட்சந்தை - முடிவுப்பொருட்களும் சேவைகளும் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் சந்தையாகும்.
* காரணிச்சந்தையில் காரணிகளைக் கொள்வனவு செய்யும் உற்பத்தியாளன் பொருட்சந்தையில் விற்பனையாளனாகத் தொழிற்படுகின்றான். நுகர்வோன் காரணிச் சந்தையில் காரணிகளை விற்பனை செய்து பெற்றுக்கொள்ளும் வருமானத்தைக் கொண்டு பொருட்சந்தையில் பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்கின்றான்.

(ii) காரணிகள் கேள்வி நிரம்பல் சக்திக்கேற்ப காரணிகளின் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே காரணிகளின் கேள்வி, நிரம்பல் கோடுகள் ஒன்றையொன்று வெட்டுபுள்ளியில் விலை தீர்மானிக்கப்படுகின்றது

(iii) யாதாயினும் ஒரு சந்தர்ப்பத்தில் தனிநபர் ஒருவர் மேற்கொள்ளும் பொருளாதார நடவடிக்கை ஒன்றுக்கான பண வடிவில் பெற்றுக்கொள்ளும் வெகுமதி அல்லது சன்மானம் கூலி எனப்படும்.

பணக்கூலி = பணவடிவிலான வெகுமதி


$$\text{மெய்க்கூலி} = \frac{\text{பணக்கூலி}}{\text{நுகர்வோர் விலைச்சுட்டெண்}} \times 100$$

பணவீக்கங்களில் பணக்கூலி அதிகரிக்க மெய்க்கூலி வீழ்ச்சியடையும்.

(iv) பொருளியல் இலாபம் - சாதாரண இலாபத்துக்கு மேலாக முயற்சியாண்மை பெற்றுக்கொள்ளும் வருமானம் பொருளியல் இலாபம் எனப்படும்.

பொருளியல் இலாபம் = மொத்த வருமானம் - நேரடிச்செலவுகள் + மறைமுகச்செலவுகள்

(v)




காரணி நிரம்பல்கோடு

கிடையச்சுக்கு சமாந்தரமாக அமையும் போது காரணி வருமானம் முழுவதும் மாற்றல் வருமானமாகும்.

4)

(i) * செலவிடத்தக்க வருமானம்
 * வீட்டுத்துறையினரின் செல்வம்
 * வீட்டுத்துறையினரின் எதிர்பார்ப்பு
 * வரி

ii) * பொறித்தொகுதியும் உபகரணமும் கொள்வனவு
 * வசிப்பதற்கான வீடு கொள்வனவு
 * இருப்பு பேணுதல்

(முதலாவதற்கு இரு புள்ளி ஏனையவற்றிற்கு 2 புள்ளி)

(iii) a. Y = C+ I+ G

Y = 250 + 0.8yd + 50 + 100

687.5 மில்

b. yd = y- T+R = 600

c. 400

d. வரிப்படம்

5)

i) காலத்துடன் இணைந்து மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நடத்தையைக் காட்டும் வட்டச் செயற்பாடு

(ii) * பின்னடைவு * மந்தம்
 * மீட்சி * பூரிப்பு

2) a) - 34MR
 b) 95MR
 c) -30MR
 d) 220MR
 e) 35. 4%
 f) 602MR
 g) 745 = 745

GDP + இறக்குமதி) = (நுகர்வு +முதலீடு + ஏற்றுமதி)

6) (i) * மெய்வேதனங்களின் மாற்றங்கள் மூலம் உழைப்பாளரின் வாழ்க்கைத்தர நிலைமையை அறிந்து கொள்ளலாம்

* பணவீக்கத்தினால் பணவேதனத்தை நிர்ணயிக்கவும், மாற்றங்கள் செய்யவும் முக்கியம் பெறுகின்றது. அத்துடன் வறியோர் நிவாரண வசதிகளைத் தீர்மானிக்கவும் உதவும்

(ii) பணவேதனத்தை நுகர்வோர் விலைச்சுட்டியால் வகுத்து 100 ஆல் பெருக்குவதன் மூலம் கணிக்கப்படுகின்றது

$$\text{மெய்வேதனச் சுட்டி} = \frac{\text{பணவேதனம்}}{\text{நுகர்வோரின் விலைச்சுட்டி}} \times 100$$

(iii) * மெய்வேதனம் அதிகரிக்க பொருட்கள், சேவைகள் மீதான கொள்வனவு ஆற்றலை அதிகரிக்கும். இதனால் மொத்தக்கேள்வி அதிகரிக்க கேள்வித்தூண்டல் பணவீக்கத்துடன் தோற்றுவிக்கும்.

* பணவேதன அதிகரிப்பு பொருட்கள் சேவைகளின் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்க அது செலவுத்தூண்டல் பணவீக்கத்தையும் ஏற்படமாட்டாது. ஆனால் தொழிலாளர் உற்பத்தி திறன் குறையுமாயின் உற்பத்தி செலவு அதிகரித்துப் பணவீக்கம் ஏற்படும்.

(iv) * ஊழியம் எனும் காரணிக்கு பணவடிவில் வழங்கப்படும் வேதனம் பணவேதனமாகும்.
* பணவேதனத்தைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள், சேவைகளின் பெறுமதி
* மெய்வேதனம் எனப்படும். பணவேதனம் மாறாதபோது பொதுவிலை மட்டம் அதிகரிப்பின் மெய்கூலி வீழ்ச்சியடையும்.

(v) ஏற்றுக்கொள்ள முடியாது
* வேதன மட்ட அதிகரிப்பு ஊழியரின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தி அதிகரிப்பின் பணவீக்கம் ஏற்படாது.

* வேதனமட்டம் அதிகரிக்கும்போது அவ்வதிகரிப்பு முழுவதும் சேமிக்கப்படும் ஆயின் பணநிரம்பல் மாறா நிலையில் பணவீக்கம் ஏற்படாது.

7) (i) * விலை உறுதிப்பாடு
* நிறை தொழில் மட்டம்
* சென்மதி நிலுவையில் சமநிலை ஏற்படுத்தல்

(ii) கா.ஒ. வீ — வை.வி.பெ

10 % $$\frac{1}{\frac{10}{100}} = 10$$

20% $$\frac{1}{\frac{20}{100}} = 5$$

காசு ஒதுக்கு வீதம் அதிகரிக்கும் போது வைப்பு விரிவாக்க பெருக்கியின் குணகம் குறைவடையும்.

(iii) மத்திய வங்கியானது திறந்த சந்தையில் ஆவணங்கள் பிணைகள் என்பவற்றை விற்பனை செய்தல்

(iv) * பொருளாதாரம் மற்றும் விலை உறுதிபேணல்
* நிதியியல் முறைமையின் உறுதி பேணல்

(v) பண நிரம்பல் அதிகரிக்கும்
வணிக வங்கிகளின் கடனாக்கம் அதிகரிக்கும்

(vi) * காப்புறுதி நிறுவனம்
* ஊழியர் சேமலாப நிதியம்
* ஊழியர் நம்பிக்கை நிதியம்

vii. * திறைசேரி உண்டியல் - குறுங்காலம்
திறைசேரி முறி - நீண்டகாலம்
* தி.சே. உ - 3, 6, 9 மாதம்
தி.சே. முறி - 2 – 5 வருட காலம்

8)

| (i) நேர்வரி | நேரில் வரி |
|---|---|
| * வரிச்சுமை மாற்ற முடியாது | வரிச்சுமையை மாற்றலாம் |
| * வருமானம் சொத்துக்கள் மீது விதிக்கப்படும் | பொருட்கள் சேவைகள் மீது விதிக்கப்படும் |
| * செலவிடத்தக்க வருமானம் குறைவு | பணவீக்க விரிவுத்தாக்கம் |
| * வரி ஏய்ப்பு | வரி ஏற்பு இன்மை |
| * வரி செலுத்தும் உணர்வுண்டு | வரி செலுத்துகின்ற உணர்வில்லை |

(ii) * பெறுமதி சேர்வரி
* கலால் வரி
* இறக்குமதி வரி
* ஏனைய வரி

(iii) * உயர்வான வருமானம் பெறுபவர்கள் குறைவாக உள்ளமை
* வரிச்சலுகை வரிவிலக்கு
* வரி ஏய்பு
வரி நிர்வாக செயற்றிறனின்மை
* வரிவிலக்கு எல்லை உயர்த்தப்பட்டமை

(iv) * மூலதனப்பொருள் மீதான முதலீடு குறையும்
* வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைஅதிகரிக்கும்
* நாட்டின் கடன்பழு அதிகரிக்கும்
* வெளிநாட்டுச் செலவு அதிகரிக்கும்
* பணவீக்கம் ஏற்படக்கூடிய நிலை தோன்றும்
* அரச திட்டங்கள் தொடர முடியாத நிலை ஏற்படும்

(ஏதாவது 4ற்கு 4 புள்ளி)

(v) * மெய்ச்சொத்துக்கள் கொள்வனவு
* மூலதனமாற்றல்
* ஏனைய மூலதனச்செலவு (குறைச்செலவுக்கான ஒதுக்கு)

(vi) * ஊழியர் சேமலாப நிதியம்
* தேசிய சேமிப்பு வங்கி

9)

(i) பிரேசில், ரஸ்சியா, இந்தியா, சீனா, தென்ஆபிரிக்கா

(ii) வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு முதலீடு, வெளிநாட்டுத் தொழில் நுட்பம் ஆகிய விடயங்கள் மூலம் நாடுகள் உலகப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைதல் மற்றும் பொருளாதாரம் திறந்து விடப்படல் உலக மயமாகுதல் என அழைக்கப்படும்.

(iii) * வர்த்தக மற்றும் நிதியியல் பாய்ச்சலின் துரித வளர்ச்சி
* உற்பத்திச் செயற்பாடு சர்வதேசமயமாகுதல்
* உழைப்பு சர்வதேச ரீதியில் அசைவுக்கு உட்படல்
* நாடுகள் பொருளாதார ரீதியில் ஒன்றிணைதல்.

(iv) * போக்குவரத்து துறையில் ஏற்பட்ட வளர்ச்சி
* தொழில் நுட்ப வளர்ச்சி
* உலக நிதிச்சந்தையில் ஏற்பட்ட வளர்ச்சி
* நாடுகளின் ஒப்பீட்டு நன்மை மாற்றமடைதல்
* பல்தேசிய கம்பனிகளின் ஆதிக்க நிலைகள்
* பாதுகாப்பு வாதக்கொள்கையின் தளர்வுகள்
* பேரளவுச் சிக்கனங்கள்
* பொருளாதாரங்கள் ஒன்றிணைதல்

(v) * அந்நாடுகளின் வர்த்தகத்தின் அளவு அதிகரிக்கும்
* உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரிக்கும்
* தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கும்
*நேரடி வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கும்
* புதிய தொழில் நுட்பங்கள் உரிமையாகுதல்
* பல்வேறு பண்டங்களின் நுகர்விற்கு சந்தர்ப்பம் கிட்டல்
* உற்பத்தியின் போட்டித்தன்மை அதிகரிப்பதன் காரணமாக தரமான உற்பத்தி உருவாகுதல்.

(vi) * சர்வதேச ரீதியாக வருமானப்பரம்பில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தல்
* சுற்றாடல் சார் பிரச்சனைகள் தலை தூக்கல்
* உள்நாட்டு பொருளாதார முறைகளின் தன்னாதிக்கத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படல்
* கலாச்சார பன்முகத்தன்மை மறைந்து போதல்
* நிதிச்சந்தைகளின் நிலையற்ற தன்மைகள் உருவாகுதல்
* உள்நாட்டு உற்பத்தித்துறையில் பின்னடைவு மற்றும் வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் இழக்கப்படல்
* சர்வதேச பயங்கரவாதம் தலையெடுத்தல்
* சுகாதாரப் பிரச்சனைகள் ஏற்படல்.

10)

(i) பொருளாதார அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியுடன் ஏனைய சமூக நலகுறிகாட்டிகளில் ஏற்படும் முன்னேற்ற கரமான நிலைமையை உள்ளடங்கியது அதாவது பொருளாதார வளர்ச்சியுடன் வேலையின்மை குறைவடைதல், வாழ்க்கைத்தரம் உயர்வடைதல் எதிர்கால சந்ததிகள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றலை விட்டுக்கொடுக்காத வண்ணம் நிகழ்கால தேவைகளைப் பூர்த்தி செய்தல்

(ii) பௌதீக மூலதனம் மனித மூலதனம் இயற்கை மூலதனம் சமூக மூலதனம்

(iii) போதுமானதாக இல்லை. மனித அபிவிருத்தி என்ற எண்ணக்கரு மிகவும் பரந்தது அரசியல் பங்கு கொள்ளல் மற்றும் பால்நிலை சமத்துவமின்மை போன்றவற்றை பிரதி பலிப்பதில்லை GDI GEM போன்ற குறிகாட்டிகள் அவற்றை மதிப்பிட அவசியமாகின்றது.

(iv) இலங்கையின் வறுமைப்படியாக குறைவடைகின்றது. நகர கிராமியத்துறை வறுமை படிப்படியாக குறைகின்றது நகரத்துறையுடன் ஒப்பிடும்போது கிராமியத்துறை பெருந்தோட்டத்துறை வறுமை அதிகமாக உள்ளது பெருந்தோட்டத்துறையில் வறுமை உயர்வாக உள்ளது,

(v) சமூகத்திற்கு கிடைக்க வேண்டிய உச்சமட்ட உற்பத்தி இழக்கப்படல் வேலை யின்மையால் வருமானம் இழக்கப்பட்டு வறுமை அதிகரிக்கும் சமூக விரோதச் செயல்களை அதிகரிக்கும் சமூக செலவு அதிகரிக்கும்

(vi) தேசிய வறுமைக்கோடு தலைக்குரிய வறுமைச்சுட்டெண் சர்வதேச வறுமைக்கோடு மனித வறுமைச் சுட்டெண்

(vii) நாடொன்றில் வாழும் மக்களின் தெரிவுகளின் வீச்செல்லை விரிவாக்கமடையும் செயன்முறை மானிட அபிவிருத்தியாகும் இதன் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரமட்டத்தை அடைவது. நீண்ட ஆயுள், அறிவு, வாழ்க்கைத் தரம் ஆகிய மூன்று அளவைகளினால் இது மதிப்பிடப்படுகின்றது

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# பொருளியல் 21 T I

## மாதிரி வினாத்தாள்-3

தரம் -13 | பகுதி I | இரண்டு மணித்தியாலம்

**கவனிக்க**

* இப்பகுதியில் 50 வினாக்களுள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவிற்கும் 02 புள்ளிகள் வீதம் இப்பகுதியில் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.
* மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
* விடைஎழுதுவதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்.

1) பின்வருவனவற்றுள் ஆதன வளங்களாகக் கருதப்படக்கூடியது?

A.கட்டிடம் B.வைத்தியர்
C.இயற்கைக்காடு D.இயந்திரங்கள்
E.விரிவுரையாளர் F.தொழில் முனைவோர்

1.BEF 2.ABD 3.ACD 4.ADE 5.BCF

2) உற்பத்திச் செயற்திறனை பூர்த்தி செய்தவற்கான இரு நிபந்தனைகளும் எவை?

1.சமூகத்தின் எல்லைநலனும் எல்லைச் செலவும் சமனாக இருத்தல்.
2. எல்லைச் செலவும் எல்லை வருமானமும் சமனாக இருத்தல்.
3. எல்லை நலனும் சமூக நலனும் சமனாகக் இருத்தல்
4. புதியவளக்கண்டு பிடிப்பும் வளங்களின் உச்சப்பயன்பாடும்
5. முழு உற்பத்தி யும் பூரண வேலை வாய்ப்பும்

3) எல்லை அமையச் செலவு என்பது

1. பல்வேறு மாற்றுத் உற்பத்திகளில் ஒன்றின் ஓர் அலகு உற்பத்திக்காக இழக்கப்படும் மற்றைய பொருளின் உற்பத்தியளவு
2.பல்வேறு மாற்றுத்தெரிவுகளில் ஒன்றைத் தெரிவு செய்யும்போது இழக்கப்படும் மற்றைய பொருளின் அதிசிறந்த அளவு
3.ஒரு பொருளின் உற்பத்திக்காக இழக்கப்படும் மாற்று உற்பத்தியின் பெறுமதி
4.மாற்று உற்பத்திகளில் ஒன்றைத் தெரிவு செய்யும்போது கைவிடப்படும் அதற்கும் அடுத்த மாற்றுத் தெரவின் பெறுமதி
5.ஒரு பொருளின் உற்பத்திக்காக தியாகம் செய்யப்படும் அடுத்த பொருளின் அளவு

4) முயற்சியாண்மையின் பண்பு அல்லாதது?

1.மனித வளமாக இருத்தல் 2.காரணி இணைப்பு 3. தலைமைத்துவப் பண்பு
4. பயிற்சி வழங்க முடியுமாயிருத்தல் 5. எதிர்கால நோக்கு

5) பொருளாதார முறையின் செயற்சாதனைகளை மதிப்பிடுவதற்கான அளவீடுகளின் சரியான தொகுதியைக் காட்டி நிற்பது?

1. பூரண வேலைநிலமை விலை உறுதி நிலை, சனத்தொகை உறுதி நிலை, வெளியுறுதி நிலை
2. பொருளாதார நிலை, சூழல் தரம், ஊழிய உற்பத்தி , பால்நிலை வேறுபாடு
3. பூரண வேலைநிலை, பொருளாதார வளர்ச்சி, விலை உறுதி நிலை, சூழல் தரம்
4. விலை உறுதி நிலை, பூரண வேலைநிலை, உயர்கல்வி வாய்ப்புகள், சனத்தொகை உறுதி நிலை
5. சூழல் தரம், விலை உறுதி நிலை, வெளி உறுதிநிலை, மனித அபிவிருத்தி நிலை


6) சந்தை சமனிலையில் உள்ளபோது அலகு வரி விதிக்கப்படுகின்றது இதன்போது ஏற்படும் பொருளாதார விளைவு அல்லாதது

1. நுகர்வோன் வரியை சுமக்க நேரிடும்
2. சமூக நலன் அதிகரிக்கும்
3. அரசிற்கு வரி வருமானம் கிடைக்கும்.
4. நுகர்வோன் மிகை குறைவடையும்
5. உற்பத்தியாளர் மிகை குறைவடையும்.

7) ஒரு பண்டத்திற்கான கேள்வி விலை நெகிழ்வுள்ளதாயின் அப்பண்டத்தின் விலை

1. அதிகரிக்கும்போது கேள்வித்தொகை வீழ்ச்சியடையும் பண்டத்தின் மீதான செலவீடு அதிகரிக்கும்
2. அதிகரிக்கும் போது கேள்வித்தொகை வீழ்ச்சியடையும். அப்பண்டத்தின் மீதான மொத்த செலவீடு குறைவடையும்.
3. அதிகரிக்கும் போது கேள்வித்தொகை வீழ்ச்சியடையும். அப்பண்டத்தின் மீதான மொத்த செலவீடு மாறாது
4. வீழ்ச்சியடையும் போது கேள்வித்தொகை அதிகரிக்கும். அப்பண்டத்தின் மீதான மொத்த செலவீடு குறைவடையும்.
5. வீழ்ச்சியடையும் போது கேள்வித் தொகை அதிகரிக்கும். அப்பண்டத்தின் மீதான மொத்த செலவீடு மாறாது.


8)




மேலுள்ள நிரம்பல் வரைபடம் தொடர்பாக பொருத்தம் அற்ற கூற்று

1. S1 கோட்டில் எல்லாப் புள்ளிகளிலும் நெகிழ்ச்சி 1ஐ விட கூடவாகும் கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் பொழுது நெகிழ்ச்சி குறைந்து செல்லும்
2. S2 கோட்டில் எல்லாப் புள்ளிகளிலும் அலகு நெகிழ்ச்சி காணப்படும்
3. S3 கோட்டில் எல்லாப் புள்ளிகளிலும் நெகிழ்ச்சி 1ஐ விட குறைவாகும்.
4. S3 கோட்டில் கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் போது நெகிழ்ச்சி அதிகரிக்கும்.
5. S1 கோட்டில் கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் பொழுது நெகிழ்ச்சி அதிகரிக்கும்.

9)




மேலுள்ள வரைபானது நிறைபோட்டிச்சந்தையில் அரசு உத்தரவாத விலைக் கொள்கையை அறிமுகம் செய்வதைக் காட்டுகின்றது. இங்கு சமூக நலனின் தேறிய விளைவு என்பது

1. (C + E + G + H + K)என்ற அளவால் குறைவடைகின்றது
2. (C+ E+ G + H + K + J)என்ற அளவால் குறைவடைகின்றது
3. ( B+ C) அளவால் குறைவடைகின்றது
4. (B + C + J + K ) என்ற அளவால் குறைவடைகின்றது
5. (B+ C+ J+ K + H) என்ற அளவால் குறைவடைகின்றது.

10) கோப்பியின் விலை வீழ்ச்சி அடையுமாயின் பின்வருவனவற்றில் நிகழக்கூடியது எது?

1. கோப்பியின் கேள்வித் தொகையில் ஓர் வீழ்ச்சி 2. தேயிலையின் விலையில் ஓர் அதிகரிப்பு
3. குடிநீர் கோப்பைக்கான கேள்வியில் ஓர் வீழ்ச்சி 4. தேனீருக்கான கேள்வியில் ஓர் வீழ்ச்சி
5. சீனிக்கான விலையில் ஓர் வீழ்ச்சி

11) பண்டம் ஒன்றின் மீது வரி விதிக்கப்படும் பொழுது வரிச்சுமையின் பெரும் பகுதியை உற்பத்தியாளர் தாங்கிக்கொள்ளும் சந்தர்ப்பமாக அமைவது

1. நெகிழ்வற்ற கேள்வி நெகிழ்ச்சியும் நெகிழ்வுள்ள நிரம்பல் நெகிழ்ச்சியும்
2. பூச்சிய கேள்வி நெகிழ்ச்சியும் முடிவிலி நிரம்பல் நெகிழ்ச்சியும்
3. நெகிழ்வுள்ள கேள்வி நெகிழ்ச்சியும் நெகிழ்வற்ற நிரம்பல் நெகிழ்ச்சியும்
4. அலகு கேள்வி நெகிழ்ச்சியும் அலகு நிரம்பல் நெகிழ்ச்சியும்
5. முற்றாக நெகிழ்வற்ற கேள்வி நெகிழ்சியும் அலகு நிரம்பல் நெகிழ்ச்சியும்

12) நீண்ட காலம் என்பதிலிருந்து விளங்கிக் கொள்வது

1. அனைத்துக்காரணிகளும் மாறும் காரணிகள்
2. அனைத்துக் காரணிகளும் நிலையான காரணிகள்
3. நிலையான காரணியை மட்டும் கொண்டது
4. மாறும் காரணிகளும், நிலையான காரணிகளும் கொண்டது
5. மேற்கூறிய எவையுமல்ல

13) சராசரி நிலையான செலவின் வடிவம்

1. அகன்ற U வடிவத்தைக் கொண்டது 2. ஒடுங்கிய U வடிவம் கொண்டது
3. உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்கும் 4. செல்வக அதிபரவளையில் கொண்டது
5. கிடையச்சுக்கு சமாந்தரமானது

14) நிறைபோட்டி நிறுவனத்தின் குறுங்கால நிரம்பல் கோடாகக் காணப்படுவது

1. எல்லைச் செலவு வளையி
2. எல்லை வருமானம் கோடு
3. சராசரி நிலையான செலவுக்கு மேற்பட்ட கோடு
4. சராசரி மாறும் செலவுக்கு மேற்பட்ட எல்லைச் செலவுக்கோடு
5. சராசரிச் செலவுக்கு மேற்பட்ட எல்லைச் செலவுக்கோடு

15) நடைமுறைக்குப் பொருத்தப்பாடுடைய சந்தை அமைப்பு யாது?

1. நிறைபோட்டிச் சந்தை 2. தனியுரிமைப் போட்டிச் சந்தை 3. தனியுரிமைச் சந்தை
4. சிலருரிமைச் சந்தை 5. காரணிச் சந்தை

16) பின்வருவனவற்றில் சிலருரிமைச் சந்தையின் பிரதான பண்பு

1. விலை வேறுபடுதல் 2. பொருள் வேறுபடுத்தல் 3.எதிர் நடவடிக்கை
4. பிரவேச சுதந்திரம் 5.விலை நிர்ணயம்

17) பின்வருவனவற்றுள் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பிரதிபலிப்பது

1. மொத்த வளங்கள் + பொருட்கள் காரணி அல்லாத சேவைகளின் ஏற்றுமதி
2. மொத்த வளங்கள் - பொருட்கள் காரணி அல்லாத சேவைகளின் ஏற்றுமதி
3. மொத்த வளங்கள் - பொருட்கள் காரணி அல்லாத சேவைகளின் இறக்குமதி
4. மொத்த வளங்கள் + பொருட்கள் காரணி அல்லாத சேவைகளின் இறக்குமதி
5. பொருட்கள் காரணி அல்லாத சேவைகளின் இறக்குமதி + மொத்த வளங்கள்

18) பின்வருவனவற்றுள் கம்பனி இலாபமாக கருதப்படுவது

1. தேசிய வருமான கணிப்பின் போது வரி அறவிடுவதற்கு முன்னுள்ள இலாபம்
2. தேசிய வருமான கணிப்பின் போது வரி அறவீடுசெய்யப்பட்டதன் பின்பான இலாபம்
3. தேசிய வருமானத்துடன் மானியத்தை சேர்த்ததன் பின்னான இலாபம்
4. தேசிய வருமானத்துடன் மானியத்தை சேர்த்ததன் முன்னான இலாபம்
5. தேசிய வருமானக் கணிப்பின்போது வரி மானியம் என்பவற்றை சேர்க்க வரும் இலாபம்

19) பின்வருவனவற்றுள் முறைசார பொருளாதார நடவடிக்கையாக கருத முடியாதது

1. முறையாக ஆவணப்படுத்தப்படாமை
2. குடும்ப உழைப்பில் தங்கியிருத்தல்
3. வரி செலுத்துதலில் இருந்து விடுபட்டிருத்தல்
4. அரசின் பல்வேறு சட்டம், நிபந்தனைக்கும் இணங்கவிரும்பமின்மை
5. வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட 10 மில்லியன் ரூபா நிலையான சேமிப்பு

20) பின்வருவனவற்றுள் காரணி வருமானங்களாகக் கருத முடியாதது

1. வாடகை வருமானம் 2. தேறிய வட்டி 3. மாற்றல் வருமானம்
4. தொழிலில் உள்ளோரது வருமானம் 5. முயற்சியாளர் வருமானம்

21) எல்லை நுகர்வு நாட்டமும் (MPC) எல்லைச்சேமிப்பு (MPS) நாட்டமும் சமனாகக் காணப்பட்டால் பெருக்கியின் பெறுமதி யாது?


1. 5 2. 4 3. 3 4. 2 5.1

22) கீழ்வரும் அட்டவணைக்குரிய நுகர்வுச் சமன்பாடு யாது?

| Y(வருமானம்) | S(சேமிப்பு) |
|---|---|
| 100 | -50 |
| 500 | 150 |

1.C = -100+ 0.5y 2.C = 100 + 0.5y 3.C = 150 + 0.5y
4.C = -150 +0.5y 5.C = -200 + 0.5Y


23)




எல்லைச் சேமிப்பு நாட்டம் (MPS) பெறுமதி யாது?

1. 0.6 2. 0.5 3. 0.4 4. 0.3 5. 0.2

24)




புள்ளி A யில் APS பெறுமதி சராசரி சேமிப்பு நாட்டம்)

1. 0   2. 1   3. 2   4. 3   5. 4

25) எளிய பொருளாதாரத்தில் பெருக்கி அல்லாதது

1. $\frac{1}{1-b}$   2. $\frac{1}{1-MPC}$   3. $\frac{1}{MPS}$   4. $\frac{OY}{OI}$   5. $\frac{OI}{Oy}$

26) ஒப்பந்தக் கொடுக்கல் வாங்கல்களை மிகவும் செயற்திறனுடையதாக மாற்றும் பணத்தின் தொழிற்பாடு

1. கொடுக்கல் வாங்கல் தொழிற்பாடு
2. பெறுமானத் திரட்டுத் தொழிற்பாடு
3. கணக்கீட்டு நியமத் தொழிற்பாடு
4. பிற்போடப்பட்ட நியமத் தொழிற்பாடு
5. 100 வீத திரவத்தன்மைத் தொழிற்பாடு

27) மத்திய வங்கியின் நேரடி நிதிப்பொறுப்பினுள் உள்ளடக்கப்படும் பணம் எது?

1. வங்கிப் பணம்
2. அண்மிய பணம்
3. ஒருங்கிணைக்கப்பட்ட பணம்
4. மிகவிரிந்த பணம்
5. உயர்வலுப்பணம்

28) மொத்த பண நிரம்பலுக்குச் சமமான ஒதுக்கை வைத்துக்கொள்ளாது குறித்த ஒரு சதவீதத்தை மட்டும் ஒதுக்காக வைத்துக்கொண்டு பணத்தை வெளியிடும் முறை

1. முழுமை ஒதுக்குமுறை
2. பகுதி ஒதுக்குமுறை
3. விகிதாசார ஒதுக்குமுறை
4. நியதி ஒதுக்குமுறை
5. பங்கீட்டு ஒதுக்குமுறை

29) பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் கொள்கை அல்லாதது

1. தனியார் மயப்படுத்தல்
2. மொத்தக் கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல்
3. மொத்த நிரம்பல் அதிகரிப்பு வேகத்தை கட்டுப்படுத்தல்
4. அரசின் நேரடித்தலையீடு
5. செயற்திறனான வளப்பகிர்விலுள்ள தடைகளை நீக்கல்

30) பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு வட்டி வீதத்திலும் உத்தேச நோக்கக் கேள்வியிலும் ஏற்படுத்தும் தாக்கம் யாது?

1. வட்டி வீதம் குறையும், உத்தேச நோக்கக்கேள்வி குறையும்
2. வட்டி வீதம் குறையும், உத்தேச நோக்கக்கேள்வி அதிகரிக்கும்
3. வட்டி வீதம் அதிகரிக்கும், உத்தேச நோக்கக்கேள்வி அதிகரிக்கும்
4. வட்டி வீதம் அதிகரிக்கும், உத்தேச நோக்கக்கேள்வி குறையும்
5. வட்டி வீதம் உத்தேச நோக்கக்கேள்வி என்பன மாறாது

31) பணவீக்கத்தால் உருவாகும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஒன்றான பட்டியல் செலவுகளாகக் கருதக்கூடியது?

1. வங்கியிலிருந்து பணத்தை எடுப்பதற்கு அடிக்கடி செல்வதால் ஏற்படும் கால விரயம்
2. கையில் வைத்திருக்கும் காசு மீதியை குறைப்பதால் ஏற்படும் பாதுகாப்பின்மைக்கிரயம்
3. பொருளாதாரத்தில் அர்ப்பணிக்கப்படும் சந்தர்ப்பச் செலவு
4. வியாபார நிலையங்களில் விலைப்பட்டியலை மாற்றுவதற்கான செலவு
5. விலைகளில் ஏற்படும் தளம்பலினால் வாழ்க்கைச் செலவில் ஏற்படும் மாற்றம்

32) பின்வரும் கூற்றுக்களில் எது நாணயக் கொள்கையை சரியாக வரைவிலக்கணப்படுத்துவது?

1. வரியிடலையும் அரச செலவையும் கட்டுப்படுத்தல்
2. வட்டி வீதங்களையும் பண நிரம்பல்களையும் கட்டுப்படுத்தல்
3. விலைகளையும் வருமானங்களையும் நேரடியாகக் கட்டுப்படுத்தல்
4. அரச பதீட்டை முகாமை செய்தல்
5. வெளிநாட்டு நாணய மாற்று வீதம்

33) மிக உயர்ந்தளவில் சுற்றோட்டத்தில் பயன்படுத்தப்படும் வங்கித் தாள் எது?

1. 10 2. 500 3. 1000 4. 20 5.50

34) இலங்கையில் அபிவிருத்தி சுபீட்சம் மற்றும் இலங்கையின் நடனக் கலைஞர்கள் எனும் தொனிப் பொருளில் வெளியிடப்பட்டது?

1. காசோலை 2. காசுக்கட்டளை 3. நாணயத்தாள் 4. உண்டியல்கள்
5. வங்கி வரைபு

35) பணவீக்கம் நிலவுகின்றபோது மத்திய வங்கியால் பின்பற்றப்படும் கொள்கை எது?

1. வங்கி வீதம், ஒதுக்குவீதம் என்பவற்றை உயர்த்துதல்
2. பிணைகளை கொள்வனவு செய்தலும் ஒதுக்குத் தேவையை குறைத்தலும்
3. பிணைகளை விற்பனை செய்தலும் ஒதுக்குத் தேவையை குறைத்தலும்
4. வங்கி வீதத்தை குறைத்தலும் அறிவுறுத்தலும்
5. ஒதுக்கு வீதத்தை குறைத்தலும், வங்கி வீதத்தை அதிகரித்தலும்

36) பின்வருவனவற்றுள் மரபு ரீதியான நாணயக்கொள்கையின் ஊடுகடத்தற் பொறிமுறை எது?

1. வட்டி வீதம் 2. சொத்து விளைவு 3. நாணய மாற்று வீத பொறிமுறை
4. கடன் நிரம்பல் 4. எதிர்பார்க்கை

37) இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய கொள்கை வீதங்களில் அமையாதது எது?

1. மீள்கொள்வனவு வீதம் 2. நேர்மாற்று கொள்வனவு வீதம் 3. வங்கி வீதம்
4. சட்டப்படியான ஒதுக்கு வீதம் 5. வட்டி வீதம்

38) சமூக நீதி என்பதனால் குறிக்கப்படுவது

1. வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் 2. வருமான ஏற்றத்தாழ்வை இல்லாதொழித்தல்
3. வறியோருக்கு மானியம் வழங்கல் 4. செல்வந்தரிடம் வரி அறவிடல்
5. பொதுப் பொருட்கள் வழங்கல்

39) பின்வருவனவற்றுள் நிறுவனக் கீழ் கட்டமைப்பு வசதியைக் குறிப்பது

1. சட்ட அமைப்புக்கள் 2. பெருந்தெருக்கள் 3. பாலங்கள்
4. துறைமுகங்கள் 5. கட்டிடங்கள்

40) வெளித்தள்ளுகை விளைவு (croding out effect) என்பதை சரியாக வெளிப்படுத்துவது
1. சமூக நலச்சேவையை அனைத்து மக்களுக்கும் வழங்கும் செயற்பாடு
2. தனியார் துறை அரசு வழங்காத சேவைகளை உயர்ந்த விலையில் வழங்குதல்
3. வறியோருக்கு நிவாரணம் வழங்குதல்
4. அரசானது கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற சேவைகளை வழங்கும் போது தனியார் துறை பாதிக்கப்படல்
5. அரசு தனி உரிமைச் சக்தியை தடுக்கும் செயற்பாடு

41) பின்வருவனவற்றுள் விரிவாக்க விளைவை ஏற்படுத்தும் கடன் மூலம்
1. சேமிப்பு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கடன்கள்
2. காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கடன்கள்
3. ஊழியர் சேமலாப நிதியக்கடன்
4. அரச ஆவணங்களை விற்றுப்பெறும் கடன்
5. அரச முயற்சிகளின் லாபம்

42)

| | |
|---|---|
| வரியல்லா வருமானம் | 2000 மி.ரூ |
| வரி வருமானம் | 4000 மி.ரூ |
| நடைமுறைச் செலவு | 7000 மி.ரூ |
| மூலதனச் செலவு | 3000 மி.ரூ |

அரச சேமிப்பு யாது?
1. -1000 2. 1000 3. -4000 4. 40000 5. 3000

43) உயர் பணவீக்கத்தையும், சென்மதி நிலுவைப் பற்றாக்குறையையும் எதிர்நோக்கும் இலங்கை போன்ற நாடொன்றின் அரசு மேற்கொள்ள வேண்டிய பொருத்த மான நடவடிக்கை யாது?
1. பணத்துக்கான கேள்வியைக் குறைத்தல்
2. நாணயப் பெறுமதியிறக்கம் செய்தல்
3. இறக்குமதிகள் மீதான தீர்வைகளை நீக்குதல்
4. வட்டி வீதத்தை அதிகரித்தல்
5. பண நிரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தல்

44) சுதந்திரமாக மிதக்க விடப்பட்டுள்ள நாணய மாற்றுவீதத்தைப் பின்பற்றி வரும் நாடொன்றின் சென்மதி நிலுவைக் கணக்கில் பின்வரும் எவ்விடயம் பூச்சியமாக இருக்கும்
1. பண்டங்கள், சேவைகள், வருமானக் கணக்கு நிலுவை
2. நாட்டின் உத்தியோகபூர்வமான வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படும் மாற்றம்
3.நடைமுறைக் கணக்கு நிலுவை
4. வியாபார நிலுவை
5. உள்நாட்டவர்களின் மேற்கொள்ளப்படும் தேறிய வெளிநாட்டு முதலீடுக்ள்

45) சர்வதேச வர்த்தகம் நிகழுமாயின் நீடித்திருக்க கூடிய நிபந்தனை
1. உள்நாட்டு மட்டத்தில் உற்பத்திக் காரணிகளின் வரையறுக்கப்பட்ட இடநகர்வு
2. நாடுகளுக்கிடையே உற்பத்திக் காரணிகளின் வரையறுக்கப்பட்ட நகர்வு
3. சமமான சந்தர்ப்பச்செலவு விகிதம்
4. எல்லாத் தொழில்களிலும் மாறா அளவுத்திட்ட விதி காணப்படல்
5. போக்குவரத்துச் செலவுகள் இல்லை

46) பொருளாதார வளர்ச்சியில் செலவை காட்டத்தவறுவது?
1. பணவீக்கம் ஏற்படும் அபாயம்
2. உற்பத்தி மற்றும் நுகர்வு அதிகரிப்பினால் சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள்
3. வருமானம் மற்றும் சொத்துப் பரம்பலின் வேறுபாடு
4. பிரதேச ரீதியான வேறுபாடு
5. பேண்தரு அபிவிருத்திக்கு இட்டுச்செல்லல்

47) பின்வருவனவற்றுள் எது பொருளாதார வளர்ச்சியின் அமையச் செலவாக அமையாதது?

1. நிகழ்கால நுகர்வு
2. மீளமைக்க முடியாத வளங்கள்
3. எதிர்காலச் சந்ததிக்கு கிடைக்கக்கூடிய வளங்களின் அளவு
4. மக்களின் வருமான அதிகரிப்பு
5. சூழல் மாசுபடுதல்

48) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் சனத்தொகையில் ஏற்படும் மாற்றத்தினை பிரதி பலிக்கத்தவறுவது?

1. சிறுவர்களின் வீதம் குறைவடைதல்
2. முதியோர் சனத்தொகை அதிகரிப்பு
3. இயற்கை வளர்ச்சி வீதம் குறைவடைதல்
4. வேலை செய்யும் வயதிலான சனத்தொகை அதிகரிப்பு
5. வயதமைப்பில் வேறுபாடு ஒன்றைக் காணக்கூடியதாக இருக்கும்

49) அண்மைய ஆண்டில் இலங்கைக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் மூன்று முதன்மை நாடுகளும் முறையே

1. சவூதி, கட்டார், குவைத்
2. கட்டார், சவூதி, குவைத்
3. சவூதி, ஐக்கிய அரசு இராச்சியம், குவைத்
4. சவூதி, குவைத், கட்டார்
5. மேற்கூறிய எதுவுமல்ல

50) வயது முதிர்ந்தோர் தொகை இலங்கையில் அதிகரிக்கக் காரணம்

1. குறைந்த ஆயுட் காலமும் உயர் கருவள வீதம்
2. குறையும் கருவளவீதமும் குறையும் மரண வீதம்
3. குறையும் கருவள வீதமும் குறையும் ஆயுட் காலமும்
4. உயர் கருவள வீதமும் உயர் மரண வீதமும்
5. தாழ் கருவள வீதமும் தாழ் மரண வீதமும்

**வடமாகாணக் கல்வித் திணைக்களம்**

**கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011**

# பொருளியல் 21 T II

**மாதிரி வினாத்தாள்-3**

தரம் -13 பகுதி II மூன்று மணித்தியாலம்

**கவனிக்க**

* உப பிரிவு "அ" விலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களையும் உப பிரிவு "ஆ" விலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**1)** i. பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி விளக்குக?

அ. அண்மையில் ஜப்பானில் ஏற்பட்ட சுனாமியால் ஜப்பானுக்கு ஏற்பட்ட பேரழிவு.

ஆ. இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் மனித உரிமையை மீறுவதாக கருதி ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் தேயிலை இறக்குமதிக்குத் தடை விதித்தமை.

இ. இறக்குமதி உள்ளீடுகளைப் பயன்படுத்தும் ஒரு பொருளாதாரத்தின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது.

இ. ஒரு நாடு பொருளாதார மந்தத்தை அனுபவிக்கும் நிலமை

ஈ. எதிர்கால சந்ததிக்குரிய வள ஒதுக்கீடு (10 புள்ளிகள்)

ii. ஓய்வு எடுத்தல் என்பது ஏன் பொருளாதாரப் பண்டமாகக் கருதப்படுகின்றது? (4 புள்ளி)

iii. எல்லை அமையச் செலவு என்றால் என்ன? (3 புள்ளி)

iv. இயற்கை வேலையின்மை விகிதம் என்றால் என்ன? (3 புள்ளி)

**2)** "வரையறுக்கப்படாத மனித விருப்பங்களை பூர்த்தி செய்ய முற்படும்போது சமூகத்திடம் உள்ள வளங்கள் ஒப்பிட்டளவில் போதியதாக காணப்படுவதில்லை".

i. இக்கூற்றிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? (4 புள்ளி)

ii. மேற்குறித்த கூற்றுக்கான அடிப்படைக் காரணங்களாக நீர் எவற்றைக் குறிப்பிடுவீர்? (4 புள்ளி)

iii. வளங்கள் அருமையானதும் மாற்றுப்பயன்பாடு உடையவையாகவும் காணப்படுவதனால் சமூகம் எதிர்நோக்கும் தேர்வுகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது? அவை எவை?

iv. பொருளியற் கிரயம் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (4 புள்ளி)

v. அமையச் செலவு பூச்சியமாக அமையும் நான்கு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளி)

**3)**

i). பின்வரும் சோடிப்பதங்களை வேறுபடுத்துக

அ. கேள்வி, கேள்வித்தொகை

ஆ. நிரம்பல், நிரம்பல் தொகை (2 x 2 புள்ளிகள்)

ii). ஓர் நேரான கேள்விக்கோட்டின் மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் பொழுது கேள்வி நெகிழ்ச்சி குணகமானது முடிவிலியில்லிருந்து பூஜ்ஜம் வரை வேறுபடும் என்பதை வரைபடம் மூலம் விளக்குக?

iii). பண்டச் சோடிகள் — குறுக்கேள்வி நெகிழ்ச்சி

| பண்டச் சோடிகள் | குறுக்கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|
| P, Q | +1.8 |
| Q, R | + 0.7 |
| R, S | -0.9 |
| S, T | 0 |

(4 புள்ளி)

அ. எவை பிரதியீட்டுப் பண்டங்கள்?

ஆ. எவை நிரப்புப் பண்டங்கள்?

iv).

| நெகிழ்ச்சி | விலை | கேள்வி | மொத்த செலவு | மொத்த வருமானம் |
|---|---|---|---|---|
| Ed>1 | கூடும் | குறையும் | ............................... | ............................... |
| Ed>1 | கூடும் | குறையும் | ............................... | ............................... |
| Ed=1 | கூடும் | குறையும் | ............................... | ............................... |
| Ed=0 | கூடும் | குறையும் | ............................... | ............................... |

(4 புள்ளி)

v). அ. Qs= 100 + 10p என்ற நிரம்பல் சார்பில் 2 ரூ அலகு வரி விதிக்கப்படுமாயின் புதிய நிரம்பல் சார்பு யாது?

வரி விதிக்கப்படுமாயின் புதிய நிரம்பல் சார்பு யாது?

ஆ. மேற்படி சமன்பாட்டில் 10 வீத பெறுமான வீத வரி விதிக்கப்படும் பொழுது புதிய சமன்பாட்டினை தருக.

2.5p = 44

## 4)

i. மாற்றல் வருமானம் என்பது உண்மையில் ஒரு காரணியின் சந்தர்ப்பக் கிரயமாகும் விளக்குக? (4 புள்ளி)

ii. ஒரு நிறுவனம் காரணிச் சேவையை சேர்த்துக் கொள்ளல் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் முறையை வரைபடத்தில் காட்டுக? (4 புள்ளி)

iii. சம்பள முரண்பாடு என்றால் என்ன? அதற்கான காரணிகள் யாது? (4 புள்ளி)

vi. உழைப்பின் விளைதிறனைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (4 புள்ளி)

v. சந்தையில் ஊழியத்துக்கான நிரம்பற் கோடு மேல் நோக்கிச் செல்வதற்கான காரணங்கள் யாவை? (4 புள்ளி)

## 5)

i). காரணி விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை கணிப்பீடு செய்வதற்கு பின்வரும் மூலங்களில் எத்தகைய சீராக்கங்களைச் செய்வீர்?

1. தேசிய வருமானம்
2. மொத்த வளங்கள்
3. செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம்
4. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு வருமானம்

ii). 2009 ஆண்டுக்கான பொருளாதாரம் ஒன்றின் தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| தனியார் நுகர்வு | 500 மி .ரூ |
| மூலதன நுகர்வு | 50 மி .ரூ |
| அரச நுகர்வு | 400 மி .ரூ |
| மொத்த முதலீடு | 300 மி .ரூ |
| மாற்றல் நிலுவை | 20 மி .ரூ |
| தேறிய ஏற்றுமதி | 50மி .ரூ |

| | |
|---|---|
| தேறிய நேரில்வரி | 20 மி .ரூ |
| தேறிய வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருவாய் | 120 மி .ரூ |
| பொருட்கள் காரணி அல்லாத சேவைகளின் இறுதி | 30 மி .ரூ |
| சேவைகள் கணக்கு நிலுவை | 20 மி .ரூ |
| பண்ட நிலுவை | 40 மி .ரூ |

மேற்கூறிய தரவுகளைக் கொண்டு பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

1. மொத்த உள்நாட்டுச் செலவு
2. மொத்த உள்நாட்டுற்பத்தி (காரணி விலை)
3. தேறிய தேசிய செலவு
4. மொத்த வளங்கள்
5. செலவிடத்தகு மொத்தத் தேசிய வருமானம்
6. தேசிய வருமானம்

## 6)

i. பேரினப் பொருளாதார சமநிலை என்பதனால் கருதப்படுவது யாது?இது தொடர்பான நிபந்தனைகளைக் குறிப்பிடுக?

ii. பேரினப் பொருளாதாரம் தொடர்பான தரவுகள் கிழ்வருமாறு

| | | |
|---|---|---|
| முதலீடு (I) | 230 | I = 230 |
| அரசசெலவு (G | 150 | G =150 |
| நுகர்வு | 1000 0.8 | C = 1000+0-8yd |
| வரிகள் | 100 | T = 100 |

அ. இங்கு சமநிலையில் மொத்த வருமானத்தின் பெறுமதி யாது?

ஆ அரச வரவு செலவுத்திட்டமீதி எவ்வாறு அமையும்?

iii. மேலே காட்டிய விடயங்களுடன் ஏற்றுமதி 100 மில்லியன் எனவும் இறக்குமதி 150 மில்லியன் தரப்படுகிறது எனவும் இந்நிலையில்

அ). புதிய சமநிலை வெளியீடு யாது?

ஆ). உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் மதிப்பீட்டைக் காட்டுக

இ). வருமானப் பெருக்கி, வரிப்பெருக்கிகளை மதிப்பிடுக.

## 7)

i. பண நிரம்பல் தொடர்பான தரவுகள் பின்வருமாறு (யாவும் மில்லியன்ரூபா)

| | |
|---|---|
| வெளிநிற்கும் நாணயம் | 750 |
| பொதுமக்களின் பெயரில் வணிக வங்கியில் உள்ள தவணை வைப்பு | 325 |
| பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள சேமிப்பு வைப்புக்கள் | 125 |
| வணிக வங்கிகளால் மத்திய வங்கிகளில் பேணப்படும் வைப்புக்கள் | 150 |
| பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்கள் | 250 |
| நாட்டின் வதிவற்றோர் வெளிநாட்டு புழக்கப் பண வைப்பு | 700 |
| வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளில் உள்ள வதிவோரின் வைப்புக்கள் | 300 |
| பொதுமக்களின் கையிலுள்ள காசு | 250 |
| உரிமம் பெற்ற விசேட வங்கிகளின் போலிப்பணம் | 250 |
| பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனி களின் போலிப்பணம் | 75 |
| நாணய உண்டியல் | 150 |
| வர்த்தக உண்டியல் | 50 |
| அரசை பிரிதி நிதித்துவப் படுத்தும் நிறுவனங்களுக்குரிய மத்திய வங்கி வைப்பு | 100 |

பின்வருவனவற்றை கணிப்பிடுக

அ. வணிக வங்கிகளிலுள்ள காசு

ஆ. அடிப்படைப் பணத்தின் அளவு

இ. குறுகிய பணநிரம்பலின் அளவு
ஈ. ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல் அளவு
உ. M4 விரிந்த பணநிரம்பல்
ஊ. M5 விரிந்த பணநிரம்பல்
எ. பணப்பெருக்கி $(M_{3b})$
ஏ. குறுகிய பணப்பெருக்கி

ii. உயர்வலுப்பணத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் 4 தருக
iii. பணநிரம்பலுக்கும் உயரவலுப் பணத்திற்கும் இடையிலான தொடர்பு யாது?

## 8)

i. அண்மை ஆண்டுகளில் இலங்கையின் வரவு செலவுத்திட்டக்குறை நிலைக்கு ஏதுவான காரணிகள் எவை?
ii. நல்ல வரிமுறைமையின் பண்புகள் எவை?
iii. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை குறைத்துக் கொள்வதனால் அரசிற்குக் கிடைக்கும் நன்மைகளைத் தருக?
iv. கணக்கின் மீதான வாக்கெடுப்பு என்பதிலிருந்து விளங்கிக்கொள்வது யாது?
v. விரிவாக்க விளைவு கொண்ட கடன் என்பதை உதாரணங்களுடன் விளக்குக?

## 9) "சர்வதேச வர்த்தகம் தொடர்பாக பல்வேறு தடைகள் வர்த்தகத்தை கட்டுப்படுத்துகின்றன

i. சர்வதேச வர்த்தகத்தின் மீது விதிக்கப்படும் தீர்வையில்லாத் தடைகள் நான்கு தருக?
ii. சர்வதேச வர்த்தகப்பாதுகாப்பின் அனுகூலங்கள் யாவை?
iii. சர்வதேச வர்த்தக பாதுகாப்பின் பிரதி கூலங்கள் யாவை?
iv. வளர்முக நாடுகளுக்கு சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பு ஏன் அவசியமானது?
v. செயற்பாடு பாதுகாப்பு வீதம் என்றால் என்ன?

## 10)

i. உண்மையான பொருளாதார வளர்ச்சி மற்றும் சாத்தியமான பொருளாதார வளர்ச்சி இரண்டையும் வேறு படுத்துக
ii. அ. மானிட அபிவிருத்தி என்பதை வரைவிலக்கணம் செய்க
ஆ. மானிட அபிவிருத்தி என்பதற்குள் உள்ளடங்கும் விடயங்கள் யாவை
iii. சூழல்சார் குஷ்நெற்ஸ் வளையியை (EKC Enviromental kuznets eurve) என்றால் என்பதைக் குறிப்பிட்டு அதனைவரைபடம் மூலம் விளக்குக?
iv. 2009 ஆம் ஆண்டிற்குரிய பின்வரும் குறிகாட்டிகளின் அளவினைக் குறிப்பிடுக?

1. கல்வி அறிவு வீதம்
2. குடித்தொகை வளர்ச்சி வீதம்
3. வேலையின்மை வீதம்
4. இறப்பு வீதம்

v. மானிட அபிவிருத்தியில் மிக உயர்நிலையில் உள்ள நாடுகள் இரண்டையும், மிக குறைநிலையில் உள்ள நாடுகள் இரண்டையும் தருக?

# பொருளியல்
## மாதிரிவினாத்தாள் - 3
## புள்ளித்திட்டம் - பகுதி I, II


### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 3 | 11) 3 | 21) 4 | 31) 4 | 41) 4 |
| 02) 5 | 12) 1 | 22) 2 | 32) 2 | 42) 1 |
| 03) 1 | 13) 4 | 23) 3 | 33) 1 | 43) 2 |
| 04) 2 | 14) 4 | 24) 1 | 34) 3 | 44) 3 |
| 05) 3 | 15) 2 | 25) 5 | 35) 1 | 45) 3 |
| 06) 2 | 16) 3 | 26) 4 | 36) 1 | 46) 5 |
| 07) 2 | 17) 3 | 27) 5 | 37) 5 | 47) 4 |
| 08) 5 | 18) 1 | 28) 2 | 38) 1 | 48) 4 |
| 09) 1 | 19) 5 | 29) 1 | 39) 1 | 49) 1 |
| 10) 4 | 20) 3 | 30) 2 | 40) 4 | 50) 2 |

### பகுதி II

***1)***

i.




ii. உழைப்பு எனும் உற்பத்திகாரணி உற்பத்தியில் ஈடுபடுவதிலிருந்து ஓய்வெடுப்பதனால் உற்பத்தியினால் பெறக்கூடிய வருமானத்தை இழக்கின்றது. *(2 புள்ளி )*

வருமானத்தை இழப்பதானது ஓய்வுக்கான அமையச்செலவு *(1 புள்ளி )*

எனவே ஓய்வு எடுத்தல் பொருளாதாரப் பண்டமாகும். *(1 புள்ளி )*

iii. பல்வேறு மாற்று உற்பத்தித் தெரிவுகளில் ஓர் உற்பத்தியின் ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பதற்காக இழக்கப்படும் அதற்கடுத்த சிறந்த மாற்று உற்பத்தித் தெரிவின் பெறுமதி *(3 புள்ளி )*

iv. பூரண வேலை நிலமையிலும் குறித்தளவான வேலையின்மைச் சதவீதம் தவிர்க் முடியாததாக இருந்தவே இயற்கை வேலை இன்மை வீதம் ஆகும். *(3 புள்ளி )*

**2)**

i. இக்கூற்றிலிருந்து மனித விருப்பங்களோடு ஒப்பிடும் பொழுது வளங்கள் அருமையாக உள்ளன என்பது வெளிப்படுத்தப்படுகிறது. இது எல்லா சமூகங்களாலும் எதிர்நோக்கப்படும் ஒரு அடிப்படைப் பிரச்சனை ஆகும். இவ் அருமையான வளங்கள் மாற்றுப் பயன்பாட்டினைக் கொண்டதாக காணப்படுகின்றது.

(4 புள்ளி)

ii. பொதுவாக வளங்கள் தமது பருமனிலும் அளவிலும் நிலையானவை. மனித நடவடிக்கையின் பொருட்டு இவை தேய்விடயக்கூடியவை. ஆனால் மனித விருப்பங்கள் விருத்தியடையக் கூடியவை எல்லையற்றுக் காணப்படக்கூடியவை. அதேவேளை ஒரு வளம் பல விருப்பங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய மாற்றுப்பயன்பாட்டினைக் கொண்டு காணப்படுபவை. இதனாலேயே வளங்கள் மனித விருப்பங்களோடு ஒப்பிடும் போது போதாமையாக காணப்படுகின்றன. (4 புள்ளி)

iii.
- ☞ அடிப்படை பொருளாதார பிரச்சனைகள் (1 புள்ளி
- ☞ எதனை, எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் (1 புள்ளி)
- ☞ எப்படி, எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும் (1 புள்ளி)
- ☞ யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும் (1 புள்ளி)

iv. இது அமையச் செலவையே குறித்து நிற்கின்றது. அருமை காணப்படும் போது தெரிவு தவிர்க்க முடியாததாக காணப்படுகின்றது. இத்தேர்வினால் கைவிடப்பட்ட மாற்றுப்பயன்பாடுகளில் அடுத்த முக்கியத்துவம் உடையதும் கைவிடப்பட்டதுமான மாற்றுப்பயன்பாட்டின் பெறுமதியே அமையச்செலவு ஆகும்.


v.
- ☞ இலவசப் பண்டங்கள் காணப்படும்போது
- ☞ ஒரு வளம் ஒரு பயன்பாட்டினை மட்டும் கொண்டிருக்கும்போது
- ☞ வேலையின்மை காணப்படும்போது
- ☞ பொதுப்பண்டங்களின் நுகர்வின் போது

**3)**

i.

அ. கேள்வி - வரைவிலக்கனம்
கேள்வித்தொகை - வரைவிலக்கனம் (2 புள்ளி)

ஆ. நிரம்பல் - வரைவிலக்கனம்
நிரம்பல் தொகை வரைவிலக்கனம் (2 புள்ளி)




- ☞ வரைபடம் (1புள்ளி)
- ☞ தலைகீழ் சரிவு qd /p மாறாது
- ☞ மேல் இருந்து கீழ் நோக்கி வரும் போது விலைகுறையும்
- ☞ மேல் இருந்து கீழ் நோக்கி வரும் போது கேள்வி அளவு அதிகரிக்கும்

(4 புள்ளி)

iii.

அ) P, Q , R பிரதியீட்டுப்பண்டம்

ஆ) P, S நிரப்புப்பண்டம் (2 புள்ளி )

iv.

1. குறையும், குறையும்

2. கூடும் கூடும்

3. மாறாது மாறாது

4. வீதாசாரமாககூடும் வீதாசாரமா கூடும் (4 புள்ளி )


v. அ. QS = 100 + 10 P
= 100 + 10 (P-2)
= 100 + 10 P -20
= 80 +10P (2 புள்ளி )


ஆ. QS = 100 + 10P
= 100 + 10 P
$= 100 + 10\left(\frac{P}{1+T}\right)$
$= 100 + 10\left(\frac{P}{1+\frac{10}{100}}\right)$
$= 100 + 10\left(\frac{P}{1.1}\right)$ (2 புள்ளி )

**4)** i. குறித்த காரணியின் இப்பொழுது இருக்கும் பயன்பாட்டில் தொடர்ந்து வைத்திருப்பதற்கு எதிர்பார்க்கும் இழிவு விலை அக்காரணயின் மாற்றல் வருமானம் ஆகும்.

ஒரு காரணிக்கு அந்த இழிவு அளவை உழைக்க முடியாதெனில் அக்காரணி மேலும் தொடர்ந்து அக்கருமத்தில் ஈடுபடுவதை நிறுத்தி அத்தகைய வருமானத்தை உழைக்கக்கூடிய வேறு பயன்பாட்டிற்கு மாற்றிச் செல்லும். எனவே வேறு பயன்பாட்டில் பெறும் வருமானத்தை இழப்பதன் மூலமே குறித்த கருமத்தை ஆற்றுவதனால் குறித்த கருமத்தில் கிடைக்கும் மாற்றல் வருமானம் ஒரு காரணியின் சந்தர்ப்பக் கிரயம் ஆகும். (4 புள்ளி )

ii.




ஒவ்வொரு நிறுவனமும் தத்தமது எல்லை வருமான உற்பத்தியும் எல்லைக் காரணிக் கிரயமும் சமனடையும் நிலையில் சம்பள விகிதத்தை ஒப்பிட்டு எல்லை வருமான உற்பத்திக்கு சம்பள விகிதம் சமமாகும் உழைப்பின் அளவைத் தீர்மானிக்கும் (2 புள்ளி )

iii. ஊழியர்களின் வேறுபட்ட தன்மை, வேலைகளின் வேறுபட்ட கவர்ச்சித்தன்மை, உழைப்புச் சந்தை நிறைபோட்டித் தன்மையைக் கொண்டிராமை போன்ற காரணிகளால் ஊழியர்கள் வேறுபட்ட சம்பள மட்டத்தைப் பெறுதலே சம்பள முரண்பாடு ஆகும்.

(2 புள்ளி )

☞ உடல் உள ஆற்றல் வேறுபடல்
☞ கல்வி பயிற்சி என்பன வேறுபடல்
☞ ஊழியத்தின் அசைவிற்குத் தடை காணப்படல் (2 புள்ளி )

iv. ☞ மூலதனம்
☞ தொழில்நுட்பம்
☞ உழைப்பின் பண்புத்தரம்
☞ ஏனைய காரணிகள்

v. சம்பளம் அதிகரிக்கும் போது அதிகமான ஊழியர் ஊழியப்படையில் சேர்த்துக்கொள்ளும் போக்கு காணப்படும். மேலதிக ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக அதிகமான சம்பள மட்டத்தை வழங்க வேண்டியதால் சந்தையில் உழைப்புக்கான நிரம்பல் கோடு மேல் நோக்கி சரிந்து செல்வதாகக் காணப்படும்

**5)**

i 1. GDP காரணி விலை = தேசிய வருமானம் + பெறுமானத்தேய்வு தேறிய வெளிநாட்டு காரணி வருமானம்

2. GDP காரணி விலை = மொத்த வளங்கள் - பொருட்கள காரணி அல்லா சேவைகளின் இறுதி

3. GDP காரணி விலை = செலவிடத்தகு மொத்த தேசிய வருமானம் - வருமான கணக்கு மீதி - தேறிய மறைமுகவரி

4. GDP காரணி விலை = மொத்த உள்நாட்டு வருமானம் (சந்தை விலை) தேறிய நேரில் வரிகள்

ii. 1. மொத்த உள்நாட்டு செலவு = தனியார் நுகர்வு + முதலீடு + அரசநுகர்வு
=500 + 300 + 400
= 1200MR

மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு = மொத்த உள்நாட்டுச் செலவு + தேறிய ஏற்றுமதி
=1200 + 50
=1250MR

2. GDP காரணி விலை மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு - தேறிய நேரில்வரிகள்
=1250 - 20
1130MR

3. தேறிய தேசிய செலவு =மொத்த தேசிய செலவு - பெறுமான தேய்வு
=1250-120
= 1130MR

4. மொத்த வளங்கள் = GDP சந்தை விலை ஸ்ரீ பொ. கா. அல்லாத சேவைகளின் இறுதி
= 1250 -30
= 1280MR

5. செலவிடத்தகு மொத்த தேசிய வருமானம் = 1200+ 40+ 20 (120) +20
= 1160MR

தேசிய வருமானம் = மொத்த தேறியஉற்பத்தி மீதான செலவு - தேறிய நேரில் வரிகள் - பெறுமான தேய்வு
= 1130 - 20 50
= 1060 MR

**6)**

i. உட்பாய்ச்சல் = வெளிப்பாய்ச்சல்

J = w

மொத்த நிரம்பல் = மொத்த கேள்வி

AS = AS

மொத்த வருமானம் = மொத்த செலவு

Y = E

ii . அ. 6500

ஆ. பற்றாக்குறை 50

iii.

அ. 6250

ஆ.

| W | | J | |
|---|---|---|---|
| S | = 230 | I | = 230 |
| T | = 100 | G | = 150 |
| M` | = 150 | X | = 100 |
| | 480 | | 480 |

$K = \frac{1}{1-b}$     $Kt = \frac{-b}{1-b}$

$= 5$     $= -4$

**7)** i

அ. வெளிநிற்கும் நாணயம் – பொதுமக்கள் கையிலுள்ள காசு = வணிக வங்கியில் உள்ள காசு

750 – 250 500

ஆ. அடிப்படைப்பணம் வணிக வங்கிகளால் மத்திய வங்கியிடம் பேணப்படும் வைப்புக்கள் அரசை பிரதி நிதித்துவப் படுத்தும் நிறுவனங்கள் மத்திய வங்கியின் வைப்புக்கள்

750 + 150 + 100 = 1000

இ. $M_1 = 250 + 250$

$= 500$

ஈ. $M_2 = M_1 + Sd + td$

$500 + 125 + 325$

$= 950$

$M_{2b} = M_2 + NRFC + FCBV$

$950 + 700 + 300$

$= 1950$

உ - $M_4 = M_{2b} + LSB + Fin.\ comk$

$1950 + 250 + 75$

2325 மி.ரூ

ஊ - $M_5$ = M4 + நாணய உண்டியல் + வர்த்தக உண்டியல்

$2325 + 150 + 50$

= 2525 மி.ரூ

எ. பணப்பெருக்கி $= \frac{M_{2b}}{\text{தளப்பணம்}}$

ஏ. குறுகிய பணப்பெருக்கி $= \frac{M_1}{\text{தளப்பணம்}}$

$= \frac{500}{1000}$

(ஒவ்வொரு பகுதிக்கும் தலா 2 புள்ளிகள் வீதம் 16 புள்ளிகள்)

ii. ☞ ம.வ. அரசுக்கு கொடுத்த தேறிய கடன்
☞ ம.வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்து
☞ ம. வங்கியின் தேறிய ஏனைய சொத்துக்கள்
☞ ம.வங்கியால் வணிக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.

iii. K = MS/B

இதன்படி உயர்விலும் பணத்தை பணப் பெருக்கியால் பெருக்குவதன் மூலம் பண நிரம்பலைப் பெற்றுக் கொள்ளலாம். அதாவது பணநிரம்பலுக்கும் உயர்வலுப்பணத்திற்குமிடையிலான விகிதம் பணப்பெருக்கியாகும்.

8) i.
☞ பல்வேறு வரிச்சலுகைகளால் வரி வருமானங்கள் குறைவடைந்தமை
☞ வருமானங்களை ஈட்டித்தரக்கூடிய அரசின் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தியது தாமதமாகியமை இதனால் வருமானங்கள் குறைவடைந்தன.
☞ அரச முயற்சிகளின் செயற்திறனின்மையால் லாபங்கள் குறைவடைந்தமை
☞ அதிகரித்த பாதுகாப்புச் செலவீனம்
☞ வட்டிக்கொடுப்பனவுகள் அதிகரித்தமை
☞ மாற்றல் செலவுகள் அதிகரித்தமை
☞ தேர்தல் செலவுகள் அதிகரித்தமை

(ஏதாவது 4ற்கு 4புள்ளி)

ii. நீதித்தன்மை, நடுநிலமைத்தன்மை, சிக்கனத்தன்மை, இலகுதன்மை

iii.
☞ அரசு கடன் சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்
☞ பணவீக்கம் பாதிப்புக்கள் குறையும்
☞ அரசு தனது முதலீடுகளை அதிகரித்துக் கொள்ளலாம்
☞ வட்டி வீதங்களை தாழ்ந்த மட்டத்தில் பேணிக்கொள்ளலாம்
☞ பொதுமக்கள் மீதான வரிச்சுமையைக் குறைக்கலாம்.
☞ பேரினப் பொருளாதார உறுதி நிலையை அடையலாம்

(ஏதாவது 4ற்கு நான்கு புள்ளி)

iv. வருடாந்த வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கான சூழ்நிலை இல்லாதிருககும் போது குறுகிய காலத்திற்காக அரசு நிதியியல் ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ளுவதற்கு ஆளும் கட்சியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தீர்மானம்

(4 புள்ளி)

v. வரவு செலவு திட்டப்பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்காக பெறப்படும் கடன் நாட்டின் பண நிரம்பலை அதிகரிப்பதற்கு ஏதுவாகுமாயின் அது விரிவாக்க விளைவு கொண்ட கடன் என அழைக்கப்படும்.

(2 புள்ளி)

உதாரணம்:- அரசு மத்திய வங்கியிடம் கடன் பெறல் வர்த்தக வங்கியிடம் கடன் பெறல்.

(2 புள்ளி)

**9)** i.

- ☞ அனுமதிப்பங்குகள்
- ☞ அனுமதிப்பத்திர நடைமுறை
- ☞ தன்னார்வ ஏற்றுமதிக் கட்டுப்பாடு
- ☞ உள்ளூர் மூலப்பொருள் தேவைப்பாடு
- ☞ அரச கொள்வனவு நடைமுறை
- ☞ சுற்றாடல் சுகாதார நடைமுறை
- ☞ சிவப்பு நாடா நடைமுறை (4 புள்ளி)

ii.

- ☞ உள்நாட்டு இளநிலைக் கைத்தொழில்களை வெளிநாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாத்தல்.
- ☞ குவித்தலைத்தடுத்தல்
- ☞ வேலையின்மையைத் தவிர்த்தல்
- ☞ பாதகமான சென்மதி நிலுவையைத் தவிர்த்தல்
- ☞ சுயதேவைப் பூர்த்தியை அடைதல்.
- ☞ பிறநாடுகளின் வர்த்தக கட்டுப்பாடுகளுக்கு எதிர்நடவடிக்கையாக வர்த்தகத்தடைகளைக் கையாளல்

(4 புள்ளி)

iii. ☞ உள்நாட்டு உற்பத்தியின் தரத்தை உயர்த்தவோ அல்லது செலவினைக் குறைக்கவோ தூண்டுதல்கள் இன்மையால் உள்நாட்டில் திறனற்ற கைத்தொழில்கள் உருவாகும்.

- ☞ உள்நாட்டு நுகர்வோர் மீது வரிச்சுமையை அதிகரித்தல். அதாவது குறைந்த விலையில் இறக்குமதி செய்யத்தக்க நிலையிலிருந்தும் உயர்விலை செலுத்தி உள்நாட்டுப் பொருட்களை நுகரவேண்டிய கட்டாயம் நுகர்வோருக்கு ஏற்படும்.

- ☞ உள்நாட்டுச் சந்தையில் தனியுரிமைகள் தோற்றம் பெறலாம்.

- ☞ முன்னேற்றமான புதிய தொழில்நுட்பப் பரிவர்த்தனை இடம்பெற முடியாது போகலாம்.

iv.

- ☞ உற்பத்தி மட்டத்தில் ஏற்படும் அனுகூலங்கள்
- ☞ பொருட்கள் சேவைகளின் உற்பத்தித் தரம் உயர்வடைதல்
- ☞ நுகர்வு வாய்ப்புக்கள் அதிகரித்தல்
- ☞ உற்பத்தி செய்ய முடியாதவற்றை பிறநாடுகளிலிருந்து மலிந்த விலையில் இறக்குமதி செய்து நுகர முடிதல்.
- ☞ சர்வதேச பல்கலாச்சார பண்பாட்டுக் கோலங்கள் விருத்திபெற
- ☞ சர்வதேச நட்புறவுகள் விருத்தி பெறல்

v.

- ☞ இளம் பருவத்தொழில்களைப் பாதுதுகாத்தல்
- ☞ தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதிகளை ஊக்குவிக்க முடிதல்
- ☞ தேவையற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துதல்
- ☞ சுயசார்புப் பொருளாதாரத்தை உருவாக்குதல்
- ☞ வரிகள், தீர்வைகள் மூலம் வருமானத்தை பெற்றுக்கொள்ளல்
- ☞ சட்ட விரோத செலாவணிப் பிரயோகத்தைக் கட்டுப்படுத்துதல்

**10)**

i.மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பே உண்மையான /நிஜமான பொருளாதார வளர்ச்சியாகும். இது முன்பு வேலையின்றியிருந்த வளங்களைப் பயன்படுத்துதல் இருக்கின்ற வளங்களை மிகவும் உற்பத்தித் திறன் வாய்ந்த துறைகளுக்கு மீள் ஒதுக்கீடு செய்தல் புதிய அல்லது முன்னேற்றமான வளங்களை பயன்படுத்துதல் மூலமாக ஏற்படும்.

பொருளாதாரத்தின் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்கான ஆற்றலில் அதாவது உற்பத்தி இயலளவில் ஏற்படும் அதிகரிப்பே சாத்தியமான பொருளாதார வளர்ச்சி இது வளங்களின் அளவில் அல்லது தரத்தில் அல்லது அளவிலும் தரத்திலும் ஏற்படும் அதிகரிப்பின் விளைவாக ஏற்படுவது.

ii அ. மக்களால் மக்களுக்காக மக்களில் ஏற்படும் அபிவிருத்தியே மனித அபிவிருத்தி அதாவது நாடொன்றில் வாழும் மக்களின் தெரிவுகளின் வீச்செல்லை விரிவாக்க மடையும் செயல்முறை (4புள்ளி)

ஆ. 1.நீண்ட ஆயுள் 2. அறிவு மட்டம்
3. பொருத்தமான வாழ்க்கைத்தரம் 4. பாதுகாப்பு உறுதி
5. உத்தரவாதப்படுத்தப்பட்ட மனித உரிமை
6. சுயமரியாதை (4 புள்ளி)

iii. தலா வருமானத்திற்கும் இயற்கை வளங்களின் பயன்பாடு மற்றும் வெளிவிடப்படும் கழிவுகளாலான சூழல் சீரழிவிற்கும் இடையிலான தொடர்பினை விளக்கும் தலைகீழான U வடிவ வளையியே சூழல்சார் குஸ்நெற்வளையியாகும். குறைந்த தலா வருமான மட்டங்களில் இயற்கை வளப்பயன்பாடும் கழிவுகளின் வெளியேற்றமும் வருமானத்துடன் அதிகரித்துச் செல்லும் ஒரு திருப்பு முனைப்புள்ளிக்கப்பால் இயற்கை வளப்பயன்பாடும் கழிவுகளின் வெளியேற்றமும் வருமானத்துடன் வீழ்ச்சியடைந்து செல்லும்

iv. 1. கல்வி அறிவு வீதம் 91 .3
2. குடித்தொகை வளர்ச்சி வீதம் 1.1
3. வேலையின்மை வீதம் 5.8
4. இறப்பு வீதம் 5.9

v. மானிட அபிவிருத்தியில் மிக உயர்நிலை நாடுகள் :
1. ஐஸ்லாந்து 2. நோர்வே 3. அவுஸ்ரேலியா
4. கனடா 5. அயர்லாந்து

மிகக் குறைந்த நிலை நாடுகள்:
1. நைகர் 2. ஆப்கானிஸ்தான்
3. சியராலியோ 4. மத்திய ஆபிரிக்க குடியரசு 5. மாலி

இலங்கை நடுத்தரமான அபிவிருத்தியில் உள்ளது.

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2011

# பொருளியல்

21 | T | I

மாதிரி வினாத்தாள்- 04


தரம் - 13 பகுதி – I இரண்டுமணித்தியாலங்கள்


**கவனிக்க**

- *இப்பகுதியில் 50 வினாக்களுள்ளன.*
- *எலல்ா வினாகக்ளுக்கும் விடை எழுதுக.*
- *ஒவ்வொரு வினாவிற்கும் 02 புள்ளிகள் வீதம் இப்பகுதியில் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.*
- *மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*
- *விடை எழுதுவதற்கு பல்தேர்வு வினாத்தாள் வழங்கப்படும்.*

1) பொருளாதார மொன்றின் அடிப்படைப்பிரச்சனைக்கு மிகப் பிரதானமான காரணியாக அமைவதுஎது?
   1) மனித தேவைகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றமை
   2) மனித தேவைகளோடு ஒப்பிடும் இடத்து வளங்கள் அருமையாக இல்லாமை.
   3) பொருளாதாரத்தில் வளங்கள் குறைவாகக் காணப்படுகின்றமை.
   4) மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான வளச்சம்பாத்தியம் போதுமானதாக இல்லாமை
   5) மனித விருப்பங்களை நிறைவேற்றமுற்படும் போது மனித வளங்கள் வரையறையற்று இருக்கின்றமை

2) ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்தியவளையினையும் சமூகத்தின் எல்லை நன்மை எல்லைச் செலவினையும் வரைபடங்கள் காட்டுகின்றன. இதன் படி பொருளாதார வினைத் திறனுக்கான நகர்வு




1) G.H 2). E,F 3) C,D 4).H,E 5).A,B

3) உற்பத்தி சாத்திய வளையி ஒன்றின் இடப்பக்க நகர்விற்கான பிரதான காரணியாக அமைவது எது?
   1) தொழில்நுட்ப முன்னேற்றம்
   2) இறக்குமதி உள்ளீட்டைப்பயன்படுத்தும் நாடொன்றின் மீதான பொருளாதாரத் தடை விதிப்பு
   3) இறக்குமதி உள்ளீட்டைப்பயன்படுத்தும் வளங்களின் ஓர் அதிகரிப்பு
   4) இறக்குமதி உள்ளீடுகளின் விலைகள் வீழ்ச்சியடைதல்
   5) நாட்டின் முதலீட்டுச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு


4) பணம் ஏன் ஒரு மூலதனமாகக் கருதப்படுவதில்லை?
1) பணம் இலகுவில் அழிவடைந்து விடும் என்பதனால்
2) பணத்தின் வெளிநாட்டு பெறுமதி நிலையானதன்று.
3) உற்பத்தியை மேற்கொள்வதற்கு பணம் ஓர் உள்ளீடு அன்று
4) நாளாந்த கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைக்குப் பயன்படுவதால்
5) பணத்தின் மெய்ப்பெறுமதி தொடர்ந்து குறைவடைந்து செல்லுவதால்

5) சந்தைப் பொருளாதார முறையில் தீர்மானம் எடுக்கும் அலகினை அதிக அளவில் பாதிக்கும் காரணி
1) பொருள் வடிவிலான ஊக்குவிப்பு
2) அதிகார அடிப்படையிலான ஊக்குவிப்பு
3) நாட்டுப்பற்று, தேசிய வாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு
4) .ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஊக்குவிப்பு
5) ஒப்பந்த ஊக்குவிப்பு.

6) நிரம்பல் விதிக்கான பிரதான காரணமாக அமைவது எது?
1) விலை அதிகரிக்கும் பொழுது பொருளை வழங்கும் உற்பத்தியாளர் ஆற்றல் அதிகரித்தல்
2) கூடிச் செல்லும் சந்தர்ப்பச் செலவாகும்
3) உற்பத்தி அதிகரிக்கும் பொழுது உள்ளீட்டுச் செலவு அதிகரித்தல்
4) விலை அதிகரிக்கும் பொழுது உற்பத்தியாளருக்கு இலாபத்தின் அளவு தொடர்பான சைகை கிடைக்கின்றது
5) குறைந்து செல்லும் எல்லை விதி தொழிற்படுதல்

7) பொருள் ஒன்றுக்கான கேள்வியை ஏற்படுத்துவதில் அடிப்படையாக அமையக்கூடியது எது?
1) குறிப்பிட்ட பொருளில் விலை
2) ஏனைய பொருட்களின் விலை
3) வருமானம்
4) சனத்தொகை
5) கொள்வனவு செய்வதற்கான ஆயத்தம்

8) விலை 10 % அதிகரிக்கும்போது பண்டத்தின் மீதான மொத்தச் செலவீடு 10% ஆல் அதிகரிக்குமாயின் அப்பண்டத்தின் கேள்வி நெகிழ்ச்சியை பிரதிபலிப்பது எது?
1) பூரண நெகிழ்வற்ற கேள்வி
2) பூரண நெகிழ்வுள்ள கேள்வி
3) அலகு நெகிழ்ச்சி
4) நெகிழ்ச்சியுள்ளது
5) நெகிழ்ச்சியற்றது

9) 



மேலுள்ள நேர்மாற்றுக்கேள்வி கோட்டின் சமன்பாடு
1) P = 80 - 0.5Qd
2) Qd = 160 -2p
3) P = 160 - 20
4) Qd = 80 - 0.5 p
5) P = 80 - 0.5Qd

10) உற்பத்தி நிறுவனங்களின் வகைகளை மட்டும் கொண்டமைந்த தொகுதி எது?
1) தனிவியாபாரம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அரச முயற்சிகள்
2) தனியார் கம்பனி, பங்குடமை, கூட்டுஸ்தாபனம்
3) கூட்டுறவு அமைப்புக்கள், பொதுக்கம்பனி அரசமுயற்சிகள்
4) அரச முயற்சிகள், திணைக்களங்கள், தனிவியாபாரம்
5) அரச முயற்சிகள், கூட்டு வியாபாரம், பங்குடமை வியாபாரம்

11) மொத்த உற்பத்தி உச்ச நிலையில் இருக்கும் போது எல்லை உற்பத்தி
1) நேர்க்கணியமானது
2) எதிர்க்கணியமானது
3) அதிகரித்துச் செல்லும்
4) பூச்சியம்
5) உச்ச நிலையிலிருந்து

12) பின்பவருவனவற்றுள் நிறை போட்டி பண்பு அல்லாதது எது?
   1) சந்தையின் கேள்விக் கோடு கிடையச்சுக்கு சமாந்தரமானது
   2) நிறுவனம் விலை ஏற்போனாகக் காணப்படுவார்.
   3) சராசரி வருமானம் எல்லை வருமானம் விலை என்பன நிறுவனத்தில் சமனாகக் காணப்படும்
   4) பூரண பதிலீட்டுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்
   5) பிரவேச சுதந்திரம் காணப்படும்.

13) நிறைபோட்டி நிறுவனம் ஒன்று உற்பத்தியை நிறுத்தும் புள்ளி





1) A   2) B   3) C   4) D   5) E

14) நிறுவனம் எந்தப் பொருளையும் உற்பத்தி செய்யாத போது ஏற்பட்ட மொத்தச் செலவு 200 ரூபா ஆகும். இந்நிறுவனம் 5 அலகுகளை உற்பத்தி செய்த போது ஏற்பட்ட மொத்தச்செலவு 300 ரூபா ஆகும். 4வது அலகு உற்பத்தி செய்வதற்கான சராசரி நிலையான செலவு யாது?
1) 75   2) 25   3). 60   4). 50   5) 125

15) உற்பத்திக்காரணியின் விளைதிறனை அளவிடும் பண அடிப்படையிலான அளவீடு
   1) எல்லை வருமானம் ஆகும்.   2) .சராசரி வருமானமாகும்.
   3) எல்லை வருமான உற்பத்தியாகும். 4) எல்லை உற்பத்தியாகும்.   5) சராசரி உற்பத்தியாகும்.

16) பொருளாதார இலாபம் என்பதை வரையறுக்கும் போது
   1) மொத்த வருமானத்திலிருந்து மொத்தப்பணச் செலவைக் கழித்து பெறப்படும்.
   2) மொத்த வருமானத்திலிருந்து அமையச் செலவைக்கழித்து பெறப்படும்.
   3) மொத்தச் சந்தர்பபச் செலவிற்கும் பணச் செலவிற்கும் இடையிலான வேறுபாடு.
   4) பொருளியல் செலவிற்கும் கணக்கியல் செலவிற்கும் இடையிலான வேறுபாடு.
   5) மொத்த வருமானத்தில் இருந்து மொத்த கணக்கியல் செலவை நீக்க வருவது.

17) உற்பத்திக்காரணகளுக்கான சந்தைசமநிலையினை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது





இன்நிலையில் காணப்படுவது

| | மாற்றல் கட்டணம் | சிக்கன வாடகை |
|---|---|---|
| 1) | 750/= | 1250/= |
| 2) | 1250/= | 750/= |
| 3) | 1250/= | 1250/= |
| 4) | 750/= | 1750/= |
| 5) | 250/= | 1750/= |

18) எதிர்கணிய மெய்வட்டி வீதம் என்பது?
   1) பணவட்டி வீதத்திலும் பார்க்க பணவீக்க வீதம் குறைவாக இருந்தல்
   2) பணவட்டி வீதத்திலும் பார்க்க பணவீக்க வீதம் உயர்வாக இருத்தல்
   3) எல்லை முதலீட்டின் பெறுமதியிலும் பார்க்க வட்டி வீதம் உயர்வாக இருப்பது
   4) முதலீட்டின் வட்டி வீதத்திற்கம் சேமிப்பு வட்டி வீதத்திற்கும் உள்ள வேறுபாடு
   5) பண வட்டி வீதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும்.

19) ஊழிய நிரம்பல்கோடு எத்தகைய விடயங்களுக்கு இடையிலான தொடர்பினை அடிப்படையாக்க கொண்டு வரையப்படுகின்றது?,




   1) வேலை நேரமும், வேதன மட்டமும்
   2) ஊழியத்தின் கேள்வியும், ஊழியத்தின் நிரம்பலும்
   3) சம்பள மட்டமும், ஊழிய எண்ணிக்கையும்
   4) காரணிவிலையும், ஊழியத்தின் அளவும்
   5) ஊழியத்தின் உற்பத்தி திறனும் வேலை நேரமும்

20) காரணி விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தியை சிறப்பாக விபரிப்பது எது?
   1) ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொருளாதாரம் ஒன்றில் உருவாக்கப்பட்ட மொத்த பொருட்கள் சேவைகள் அளவு.
   2) உள்நாட்டில் உருவாக்கப்பட்ட பொருட்கள சேவைகள் மீது நுகர்வோர் மேற்கொண்ட மொத்தச் செலவு
   3) ஒரு நாட்டின் வதிவுள்ளோர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் காரணச்சேவைகளை வழங்கி பெற்றுக்கொள்ளும் அனைத்து வருமானம்
   4) . உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மொத்த வெளியீட்டின் பெறுமதியோடு தேறிய வெளிநாட்டு காரணி வருமானத்தையும்ட கூட்டி பெறுமான தேய்வாக கழித்தல்
   5) மொத்த உள்நாட்டு உற்பத்தியோடு தேறிய வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானத்தைக் கூட்டி நேரில் வரிகளை கழிப்பதன் மூலம் பெறப்படுவது

21) தேசிய கணக்குகளின் நடைமுறைப் பயனாக கருதப்படாதது எது?
   1) பொருளாதார கட்டமைப்பு மாற்றத்தை அறிய முடிகின்றது.
   2) வருமான சமத்துவமின்மையை அறிய முடிகின்றது
   3) தேசிய வருமானம் காரணி உரிமையாளரிடையே பங்கிடப்படும் விதத்தை அறிய முடிதல்
   4) தலா வருமானத்தை அறித்து கொள்ள முடியும்
   5) பொருளாதார வளர்ச்சி வேகத்தை அறிந்து கொள்ள முடிதல்

22) பொருளாதாரம் ஒன்றின் பேரினப் பொருளாதாரம் நடத்தையை விளக்கும் வர்த்தக சகட ஓட்டத்தின் நான்கு கட்டங்களும் முறையே
   1) பின்னடைவு, மந்தம், மீட்சி, பூரிப்பு
   2) பின்னடைவு, மீட்சி, மந்தம், பூரிப்பு
   3) பின்னடைவு, பூரிப்பு, மந்தம், மீட்சி
   4) மீட்சி, பூரிப்பு, மந்தம், பின்னடைவு
   5) மீட்சி, பின்னடைவு, மந்தம், பூரிப்பு

23) தீர்வை வரி இறக்குமதி பங்கீடு வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தை சரி செய்தல் ஆகிய கருவிகள் மூலம் முகாமைத்துவம் செய்யப்படும் அரச பொருளாதாரச் கொள்கை
   1) பணக் கொள்கை
   2) வருமானக் கொள்கை
   3) அரச நிதிக் கொள்கை
   4) வெளிநாட்டு வியாபாரக் கொள்கை
   5) நிரம்பல் ஊக்குவிப்பு கொள்கை

24) பின்வருவனவற்றுள் பேரினப் பொருளாதார மாறியாக கொள்ளப்பட முடியாதது?
   1) தேசிய உற்பத்தி
   2) 2) விலைமட்டம்
   3) சென்மதி நிலுவை
   4) விலைக்கோட்பாடு
   5) வெளிநாட்டு நாணய மாற்று வீதம்

25) பின்வரும் விடயங்களில் தேசிய கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்படும் விடயம் எது
1) மாற்றல் கொடுப்பனவு
2) நிதிச்சந்தை கொடுக்கல் வாங்கல்
3) கணக்கீட்டுக் காலத்திற்குள் உட்படாத உற்பத்தி செலவுகள்
4) இடைநிலைப்பண்டங்களின் பரிமாற்றம்
5) அரசு பெறும் வட்டி வருமானம்

26) பின்வருவனவற்றுள் வெளிப்பாய்ச்சலாக கருதப்படக்கூடியது
1) முதலீடு 2) சேமிப்பு 3) அரச செலவு 4) ஏற்றுமதி 5) தனியார் நுகர்வு

27) C = 100 + 0.75 yd எனின் சேமிப்பு சார்பு யாது?
1) S = 0.25y – 100 2) S = 0.75yd – 100 3) S = 0.25 (y - t) -100
4) S = 0. 25 (y- t) + 100 5) S = 100 + 0.25 yd

28) திறந்த பொருளாதார தொடர்பான தகவல்கள் வருமாறு
செலவிடக்கூடிய வருமானம் (yd) = 3400 m
தனியார் நுகர்வு (C) = 3000m
அரசாங்க நுகர்வு (G) = 400m
மொத்த முதலீடு (I) = 500m
தேறிய ஏற்றுமதி = - 100m

வரியின் அளவு யாது?
1). 550 2). 500 3). 400 4). 350 5) 300

29) எளிய பொருளாதாரம் ஒன்றில் முதலீடு 150 மில்லியனால் அதிகரிக்க சமநிலைத் தேசிய வருமானம் 600 மில்லியனால் அதிகரித்தது எனின் எல்லை நுகர்வு நாட்டம் (MPC)
1) 4 2). 0.25 3) 0.75 4). 2 5) 0.45

30) ஒரு பொருளாதாரத்தில் எல்லை நுகர்வு நாட்டம் (MPC) 0.6 ஆகக் காணப்படுகின்றது. இப்பொருளாதாரத்தில் செலவிடத்தக்க வருமானம் அதிகரிக்கின்றது எனின் பின்வருவனவற்றில் எது நிகழும்?

| | நுகர்வு | சேமிப்பு |
|---|---|---|
| 1) | அதிகரிக்கும் | குறையும் |
| 2) | குறையும் | குறையும் |
| 3) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4) | அதிகரிக்கும் | மாற்றமில்லை |
| 5) | மாற்றமில்லை | குறையும் |

31) பணவீக்கமானதுகேள்விப்பக்கத்திலும், அதே போன்று நிரம்பல் பக்கத்திலும் தோற்றமெய்த முடியும். பணவீக்கத்தைத் தோற்றுவிக்கும் கேள்விப்பக்கக் காரணியினை பின்வருவனவற்றி லிருந்து தெரிவு செய்க.
1) உற்பத்திக் காரணியின் விலைகள் அதிகரித்தல்
2) அரசு மானியை உதவிகளைக் குறைத்தல்
3) பண நிரம்பல் அதிகரித்தல்
4) இறக்குமதி செய்த பொருட்களின் விலையதிகரித்தல்
5) அரசு வரிகளை விதித்தல்

32) ஒரு நாட்டின் பொதுவிலைமட்டம் என்பதனைச் சிறப்பாக வெளிப்படுத்தும் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுக
1) குறிப்பிட்ட காலப்பகுதியில் சந்தையில் நிலவும் விலைகளின் சராசரி விலை மட்டமாகும்.
2) குறிப்பிட்ட காலப்பகுதியில் பொதுவிலை மட்டம் அதிகரித்துச் செல்வதனைக் குறிக்கும்.
3) சந்தையில்பொருட்கள்,சேவைகளின் பொதுவிலைமட்டம் வீழ்ச்சியடைந்துசெல்வதைக் குறிக்கும்
4) பொருட்கள், சேவைகள் சராசரி விலைமட்டம் வீழ்ச்சியற்று செல்வதனைக் குறிக்கும்.
5) இரு வேறுபட்ட காலப்பகுதியில் பொதுவிலைமட்டம் எவ்வாறு உள்ளது என்பதனைக் குறிக்கின்றது.

33) வணிக வங்கி கட்டமைப்பு ஒன்றில் கொண்டுள்ள காசு ஒதுக்கு 600 billion அக்கட்டமைப்பிலுள்ள வைப்பு, பொறுப்புக்கள் 4000billion ஒதுக்கு வீதம் 10 % ஆயின் வங்கி அமைப்பு கொண்டுள்ள மிகை ஒதுக்களவு யாது? அதனால் வழங்கக்கூடிய புதிய உச்சக்கடன் அளவு யாது?

1) 100 billion, 1000 billion
2) 100 billion, 2000 billion
3) 200 billion, 2000 billion
4) 2000 billion, 200 billion
5) 2000 billion, 100 billion

34) சட்டப்படியான ஒதுக்கு வீதம் உயர்த்தப்படுமாயின்

1) வங்கிகள் தமது கடன்களை அதிகரிக்க வேண்டும்
2) பணநிரம்பல் அதிகரிக்கும்
3) பணநிரம்பல் வீழ்ச்சியடையும்
4) கழிவு வீதம் அதிகரிக்கும்
5) வங்கிகள் தமது கேள்வி வைப்புக்களை அதிகரிக்கும்

35) இலங்கையில் காணப்படும் வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

1) 11 2) 20 3) 22 4) 25 5) 32

36) பின்வருவனவற்றுள் அரைகுறைப் பொதுப்பண்டமாகக் கருதக்கூடியது எது?

1) மாணிக்கூட்டுக்கோபுரம்
2) தேசிய பாதுகாப்பு
3) பெருந்தெருக்கள்
4) வீதி வளக்கு
5) சூழல் பாதுகாப்பு

37) பின்வருவனவற்றுள் சரியானது எது?

1) தனியார் செலவு + தனியார் நலன் = சமூக நலன்
2) வெளிவாரி விளைவு +வெளிவாரி நலன் = சமூகச் செலவு
3) தனியார் நலன் + வெளிவாரி நலன் = சமூக நலன்
4) வெளிவாரிச் செலவு +தனியார் நலன் = சமூக நலன்
5) தனியார் செலவு பணச்செலவு = சமூகச்செலவு

38) பின்வருவனவற்றுள் வரிவிதிப்பின் நீதித் தன்மையில் கிடையான சமத்துவத்தைக் காட்டுவது எது?

1) விருத்தி முறையில் வரிவிதித்தல்
2) நேரில் வரிகளைக் குறைவாக விதித்தல்
3) நேர்வரிகளை அதிகமாக விதித்தல்
4) ஒரே வருமான வகுப்பினருக்கு ஒரே வரிவிதிப்பு
5) ஒரே வருமான வகுப்பினருக்கு வேறுபட்ட வரி விதித்தல்

39) 2009 ஆம் ஆண்டின் இலங்கை அரசின் நடைமுறைச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எத்தனை சதவீதமாக இருந்துள்ளது.

1) 15.8 2) 16.9 3) 18.2 4) 24.9 5) 22.6

40) மொத்த உள்நாட்டுக்கடனில் கூடிய பங்கைக் கொண்டுள்ள கடன் பத்திரம் எது?

1) திறைசேரி உண்டியல் 2) ரூபாய் பிணைகள் 3). அரச பிணைகள்
4). வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் 5) திறைசேரி முறிகள்

41) உண்மைப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் அதிகரிப்பதற்கு ஏதுவான காரணி எது?

1) சென்மதி நிலுவையில் பற்றாக்குறை
2) குறித்த நாட்டின் பணவீக்கவீதம் ஏனைய நாட்டு பணவீக்கத்தை விட அதிகமாக இருத்தல்
3) ரூபாவை மிதக்கவிடல்
4) ஒரு நாட்டின் நாணயத்தின் பெறுமதியை மற்றைய நாட்டு நாணயத்தின் பெறுமதியில் கூறல்
5) ஏனைய நாடுகளின் பணவீக்க வீதம் குறிப்பிட்ட நாட்டு பணவீக்க வீதத்தை விட அதிகமாக இருத்தல்.

42) நாணயத்தின் மிகைப் பெறுமதி மதிப்பீடு என்பது
   1) உள்நாட்டின் நாணயத்தின் பெறுமதி அதிகரித்தல்
   2) குறித்த நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியை வெளிநாட்டு நாணயத்துக்கான சமநிலையை விட உயர்வாகத் தீர்மானித்தல்.
   3) முகாமை செய்யப்பட்ட நாண மாற்றுவீத முறைமையின் கீழ் வெளிநாட்டு நாணயத்துக்கான கேள்வி சமநிலையை விட கீழாக நாணயமாற்று வீதத்தை நிர்ணயித்தல்
   4) உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியை குறைத்துக்காட்டும் செயற்பாடு
   5) வெளிநாட்டு நாணயத்தின் உள்நாட்டு பெறுமதியை அதிகரிக்கும் செயற்பாடு.

43) குறித்த ஒரு காலப்பகுதிக்குள் ஏற்றுமதி விலைகள் 20% அதிகரித்தபோது வர்த்தக மாற்று வீதம் 20% வீழ்ச்சியடைந்ததாயின் இறக்குமதி விலைகள் உயர்திருக்க வேண்டியது?
   1. 20 %   2) 25%   3). 30%   4). 40%   5) 50%

44) முன்னோக்கிய நாணயமாற்று வீதம் என்பது
   1) இரண்டு நாடுகளிக்கிடையில் நாணயமாற்று வீதத்தை தீர்மானிக்கும் போது சந்தை விலைக்கு அமைவாக தீர்மானித்தல்.
   2) நாணய மாற்று வீதத்தை தீர்மானிக்கும் போது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவற்றை தொடர்தல்
   3) நாணய மாற்றுவீதத்தை தீர்மானிக்கும் போது பணவீக்கத்தை கருத்தில் கொள்ளல்
   4) ஒரு நாட்டு நாணயத்தை கொள்வனவு அல்லது விற்பனை செய்ய எதிர் கால விலையில் இன்றே நிர்ணயம் செய்து ஒப்பந்தம் செய்தல்.
   5) நாணய மாற்றவீதத்தை ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து பேணல்.

45) விசேட எடுப்பனவு உரிமை சார்பாக சரியான கூற்று எது?
   1) தனி ஒரு நாட்டின் நாணயப் பெறுமதியை காட்டி நிற்கின்றது.
   2) சர்வதேச வர்த்தகத்தில் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்களால் பயன்படுத்தப்படுவது
   3) அங்கத்துவ நாடுகளுக்கு இடையில்மத்தியவங்கிகளால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படுவது
   4) அங்கத்துவ நாடுகளுக்கு இடையில் ஏற்றுமதி இறக்குமதி முகவர்களினால் பயன்படுத்தப்படும் நாணயம்
   5) எல்லா நாடுகளிலும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் பயன்படுத்தப்படும்.

46) பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சிக்கான மூலாதாரமாக அமையாதது
   1) வளங்களின் கிடைப்பனவு அதிகரித்தல்   2) வளங்களின் விளைதிறன் அதிகரித்தல்
   3) பொருளாதார உறுதிப்பாடு   4) அரசியல் உறுதிப்பாடு
   5) கலாசார முன்னேற்றம்

47) பொருளாதாரம் ஒன்றின் குறித்த ஆண்டின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 2% பொருளாதார வளர்ச்சி 8% ஆயின் தலா உற்பத்தி வளர்ச்சி வீதம் யாது?
   1) 5%   2) 6%   3) 7%   4) 8%   5)9%

48) 2010ம் ஆண்டுக்கான இலங்கையின் கினிக்குணகத்தை சரியாக காட்டுவது எது?
   1) 0.43   2) 0.46   3) 0.47   4) 0.49   5) 0.51

49) இலங்கையின் 2009ம் ஆண்டு வேலையின்மை வீதம், பொருளாதார வளர்ச்சி வீதம் என்பன முறையே?
   1) 5.8%, 3.5%   2) 5.9% , 3.4%   3) 5.8%, 3.8%
   4) 5.5%, 3.5%   5) 3.4%, 5.2%

50) மொத்தக் கேள்வியில் ஏற்படும் பற்றாக்குறைக்கு எவ்வகை வேலையின்மை நேரடியான காரணமாகவுள்ளது?
   1) பருவகால வேலையின்மை   2) உராய்வு வேலையின்மை
   3) அமைப்பு ரீதியான வேலையின்மை   4) சகட ஒட்ட வேலையின்மை
   5) மறைமுக வேலையின்மை

**வடமாகாணக் கல்வித் திணைக்களம்**

**கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2011**

**பொருளியல்** | 21 | T | II |

**மாதிரி வினாத்தாள் - 04**

**தரம் - 13** மூன்று மணித்தியாலங்கள்

கவனிக்க:

❖ உப பிரிவு "அ" விலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களையும், உப பிரிவு "ஆ" விலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## உபபிரிவு – "அ"

01)

1) பொருளாதார அமைப்பொன்றில் தீர்மானம் எடுக்கம் பிரிவினராக கருதப்படுபவர்கள் யாவர் என்பதனையும், அவர்களுக்கிடையில் காணப்படும் தொடர்பாடல் வடிவங்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

(புள்ளி 6)

2) பொருளாதார முறைமைகள் வேறுபடுதற்கான அடிப்படைக் காரணிகள் 3 தருக.

(புள்ளி 3)

3) சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் காணப்படும் பிரதி கூலங்கள் 4 குறிப்பிடுக.

(புள்ளி 4)

4) பொருளாதார முறைமையின் வெற்றியை மதிப்பிடுவதில் சூழல் தரம் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது?

(புள்ளி 3)

5) கலப்பு பொருளாதாரத்தில் வீட்டுத்துறை தொடர்பாக அரசினுடைய பணிகள் 4 குறிப்பிடுக?

(புள்ளி 4)

02)

1) நுகர்வோன்மிகை, உற்பத்தியாளன் மிகை என்பவற்றை வரைபட ரீதியாக விளக்குக?

(4புள்ளிகள்)

2) அ. கேள்வி விதிக்கு முரண்பாடான சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக?
ஆ. இழிவுப் பண்டத்தையும், கிபன் பண்டத்தையும் வேறுபடுத்துக?

(2x2 = 4 புள்ளிகள்)

3) பண்டம் ஒன்றுக்கான கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு

$Qd = 600 - 10p$

$Qs = 10p$

அ) கேள்வி நிரம்பல் சமன்பாடுகளைக் கொண்டு சமநிலை விலை தொகை என்பவற்றைக் காண்க?

ஆ) இப்பொருளின் மீது அலகு ஒன்றுக்கு 10 /= வரி அறவிடப்படுமாயின் புதிய சமநிலை விலை தொகையைக் கணிப்பிடுக.

இ) வரிவிதிப்பினால் நுகர்வோன் செலவில் ஏற்பட்ட மாற்றத்தை கணிப்பிடுக.

ஈ) வரி விதிப்பிற்கு முன் நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை என்பவற்றைக் கணிப்பிடுக

உ) வரிவிதிப்பிற்கு பின் நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை என்பவற்றைக் கணிப்பிடுக

ஊ) சமூக நல இழப்பினை மதிப்பிடுக.

(6x2 = 12 புள்ளிகள்)

03)

1) உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையிலான தொடர்பை தொழிற்பாடு ரீதியாகக் காட்டுக

(4புள்ளி)

2) ஆழ்ந்த செலவு (Sunk cost) என்பதால் கருதப்படுவது யாது?

(4புள்ளி)

3) சாதாரண லாபத்தை வரையறுத்து அதனை உற்பத்திச் செலவில்உள்ளடக்குவதற்கான காரணங்கள் விளக்குக?

(4புள்ளி)

4) நிறைபோட்டி நிறுவனம் ஒன்று நீண்ட காலத்தில் சாதாரண லாபத்தை மட்டுமே உழைக்க முடியும் விளக்குக?

(4புள்ளி)

5) பின்வருவன எத்தகைய சந்தையைச் சார்ந்தது?
   1) விலைவேறு படுத்தல் கொண்டது.
   2) எதிர் நடவடிக்கை காணப்படுதல்.
   3) ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்கள்
   4) பொருள் வேறுபடுதல்

(4புள்ளி)

04)

1) அ. பயன்தரு கொடுப்பனவுகள் என்றால் என்ன?
   ஆ. தேசிய உற்பத்தியினைக் கணிப்பிடும் பொழுது எவ்வகைப்பட்ட பயன்தரு கொடுப்பனவு கள் விலக்கப்படுகின்றன?

(4புள்ளி)

2) ஒரு நாட்டின் வீட்டுத்துறையினரின் வருமானத்தைக் கணிப்படுவதற்கு மொத்த தேசிய வருமானத்தில் நீர் செய்ய வேண்டிய சீராக்கங்கள் எவை?

(4புள்ளி)

3) தேசிய கணக்கீட்டிற்கும் சென்மதி நிலுவைக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக?

(4புள்ளி)

4) பொருளாதாரம் ஒன்றின் 2008ம் ஆண்டிற்கான தரவுகள் வருமாறு தொகை **Million** தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கூலிகள், சம்பளங்கள், மேலதிக ஊழிய வருவாய்கள் | 500 |
| தேறிய மானியம் | 100 |
| அரச கடன் வட்டி | 50 |
| கம்பனி இலாபம் | 100 |
| தேசிய காரணி வருமானம் | 100 |
| பகிரப்படாத இலாபம் | 30 |
| கம்பனி பங்கிலாபம் | 50 |
| தேறிய வட்டி | 100 |
| மூலதன நுகர்வு | 20 |
| உயர்தொழில் வருமானம் | 30 |
| வாடகை | 400 |
| வருமான வரி | 50 |

இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைக் கணிப்பீடு செய்க.

   1) சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியை கணிப்பிடுக
   2) மொத்த தேசிய வருமானம்
   3) தனிநபர் வருமானம்
   4) செலவிடத்தக்க தனிநபர் வருமானம்

(8புள்ளி)

05)

1) பேரினப் பொருளாதார சமநிலை என்பதனை விளக்குக (4புள்ளி)

2) வரி (T) = 50 + 0.2y எனும் வரிக் கோட்டினை வரைக (2புள்ளி)

3) ஒரு எளிய பொருளாதாரத்தில் முதலீட்டுப் பெருக்கி எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதை விளக்குக (2புள்ளி)

4) மூடப்பட்ட பொருளாதாரம் பற்றிய மாறிகள்வருமாறு (தரவுகள் மில்லியன் ரூபாய்களில்)

I. (முதலீடு) - 200
G (அரச செலவு - 400)
C. (நுகர்வு) செலவுக்கான வருமானத்தில் 80%
தன்னிச்சையான நுகர்வு 3000
வரி வருமானத்தில் 20%

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) சமநிலை வருமானம்

ஆ) செலவிடக்கூடிய வருமானம்

இ) பாதீட்டுப் பற்றாக்குறை / மிகை

ஈ) வீட்டுத்துறைச்சேமிப்பு

உ) சேமிப்பு பூச்சியமாகும் வருமான மட்டம்

ஊ) வரிப்பெருக்கியின் அளவு

(6x2 = 12 புள்ளிகள்)

## உபபிரிவு – "ஆ"

06) குறித்த ஒரு பொருளாதாரத்தில் அரசி, மா, சீனி ஆகிய பண்டங்களின் மூன்று ஆண்டு விலைகள் உமக்குத் தரப்படுகின்றன.

| பொருள் | 1ம் வருடம் | 2ம் வருடம் | 3ம் வருடம் |
|---|---|---|---|
| அரசி | 25 | 40 | 60 |
| மாவு | 20 | 30 | 40 |
| சீனி | 35 | 42 | 56 |

1) முதலாம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டு மூன்று பொருட்களுக்குமான விலைச் சார்பினைக் கணிக்குக? (3புள்ளி)

2) அரிசி, மாவு, சீனி போன்ற பொருட்களுக்கு 50, 30, 20 என நிறையிடப்பட்டால் அதன் பின்னரான நிறை யூட்டப்பட்ட விலையினைக் கணித்து அதனூடாக பொதுவிலை மட்டப் போக்கினைக் கணித்து கருத்துரைக்குக? (3புள்ளி)

3) 2ம் 3ம் வருடங்களில் அரிசியின் விலை அதிகரிப்பு பொதுவிலை மட்ட அதிகரிப்புக்குச் செய்த பங்களிப்பு யாது? (2புள்ளி)

4) புதிய கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண்ணுக்கும் பழைய கொழும்பு நுகர்வோன் விலைச்சுட்டெண்ணுக்கும் இடையிலான வேறுபாடு யாது? (4புள்ளி)

5) பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (2புள்ளி)

6) ஊக வியாபாரத்தில் ஈடுபடும் இரு பிரிவினரைக் குறிப்பிட்டு அவர்களின் செயற்பாட்டினை விளக்குக? (4புள்ளி)

07)1)

அ) இலங்கையில் அனுமதிப்பத்திரம் பெற்ற விடே வங்கிகள் 4 தருக?

(2புள்ளி)

ஆ) வணிக வங்கிகளின் பிரதான பணிகள் எவை?

(3புள்ளி)

இ) வணிக வங்கி ஒன்று தனது வியாபார நடவடிக்கையில் கருத்தில் கொள்ளும் இரு பிரதான நோக்கங்களையும் குறிப்பிடுக?

(2புள்ளி)

ஈ) திரவத்தன்மை, இலாபத்தன்மை அடிப்படையில் வணிக வங்கியின் சொத்துக்களைப் பட்டியல் படுத்துக?

(2புள்ளி)

உ) கடனாக்கத்திறனை தீர்மானிக்கின்ற காரணிகள் எவை?

(2புள்ளி)

(7x2 = 14 புள்ளிகள்)

2) காசு ஒதுக்கு வீதம் 20% எனவும் வங்கிகள் எவையும் மிகை ஒதுக்கினைப் பேணுவதில்லை எனவும் கருதுக.வங்கி முறையின் காசு 1000MR மிகுதிமுழுவதும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

1. வங்கி முறையின் ஐந்தொகையை தருக?

2. காசு ஒதுக்கு வீதம் 25 % இருப்பின் வங்கி முறைமையின் ஐந்தொகை எவ்வாறு இருந்திருக்கும்?

3)அ) மரபு ரீதியான கடன்கட்டுப்பாட்டு கருவிகள் எவை? இவற்றுள் எக்கருவி செயற்திறன் வாய்ந்தாக கருதப்பகிறது?

(3புள்ளி)

ஆ) சட்டப்படியான (நியதி) ஒதுக்குத்தேவை நியதிக்காசுத்தேவை சரிவரசெயற்பட முடியாமைக் காண காலம்?

(2புள்ளி)

08)1)அ)

1. பிரதேச அபிவிருத்தி வங்கிகள்
2. தேசிய சேமிப்பு வங்கிகள்
3. நீண்ட கால கடன் கொடுக்கும் நிறுவனங்கள்
4. வீடமைப்புக் கடன் வழங்கும் நிறுவனங்கள்
5. தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள்

(3புள்ளி)

ஆ) வைப்புக்களை ஏற்றல்
கடன் வழங்குதல்

(2புள்ளி)

இ) இலாபத்தன்மை
திரவத்தன்மை

ஈ)

| திரவத்தன்மை | இலாபத்தன்மை |
|---|---|
| 1. வணிக வங்கியின் கையில் உள்ள காசு | கடன்கள் |
| 2. மத்திய வங்கியில் இருந்து வசூலிக்க வேண்டிய மீதி | முற்பணங்கள் |
| 3. திரட்டப்பட்டுக்கொண்டிருக்கும் மீதி | நிலையான சொத்துகள் |
| 4. திறைசேரி உண்டியல் | ஏனைய சொத்துக்கள் |

உ) 1. ஆரம்ப வைப்பின் அளவு
2. சட்டப்படியான ஒதுக்கு வீதத்தின் அளவு
3. வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான தொடர்பு

2)அ)

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 5000 | காசு | 1000 |
| | | கடன் | 4000 |
| | 5000 | | 5000 |

ஆ)

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 4000 | காசு | 1000 |
| | | கடன் | 3000 |
| | 4000 | | 4000 |

3) அ) வட்டி வீதம்

வங்கி வீதம் / ஒதுக்கு வீதம்

பகிரங்கச் சந்தை நடவடிக்கை

ஆ) . வங்கிகளில் மிகை ஒதுக்கு காணப்படுதல்

பணச்சந்தை வளர்ச்சி அடையாத நிலை

8) 1) வரிவிதிப்பில் எவ்வாறு நீதிதன்மையைப் பேண முடியும்? (4புள்ளி)

2) வரியின் அளவைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை? (4புள்ளி)

3). பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு 26000

| | |
|---|---|
| வட்டிக்கொடுப்பனவு | 14000 |
| நடைமுறை மாற்றல் | 7000 |
| மூலதனச் செலவு | 9000 |
| வெளிநாட்டு கொடைகள் | 4000 |
| வெளிநாட்டு கடன் உதவி | 6000 |
| உள்நாட்டுச் சந்தை அல்லாக்கடன் | 3000 |
| வங்கியல்லாகடன் | 2000 |
| வங்கிக்கடன் | 5000 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | 2500 |

**மேற்படி தரவுகளின்படி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.**

அ) நடைமுறைக் கணக்கு மீதி

ஆ) மொத்த மீதி

இ) முதன்மைப் பற்றாக்குறை

ஈ) தேறிய பற்றாக்குறை


உ) கடன்பெற வேண்டிய பற்றாக்குறை

ஊ) பற்றாக்குறை நிதியிட்டம் செய்யப்பட்ட முறை

எ) தேறிய விரிவுத்தாக்கம்

(7x2=14புள்ளி)

09) ஒரு பொருளாதாரம் உலகச் சந்தைவிலையில் குறிப்பிட்ட பொருளினை இறக்குமதி செய்யும் நிலமையினை வரைபடம் காட்டுகின்றது.




1) தீர்வைக்கு முன்பு:-
   அ) உள்நாட்டு உற்பத்தி யாது?
   ஆ) இறக்குமதியளவு யாது?

2) தீர்வைக்குப்பின்:-
   அ) நுகர்வு விளைவு யாது?
   ஆ) உற்பத்தி விளைவு யாது?
   இ) வருமான விளைவு யாது?

3) தீர்வையினால் சமூக நலனின் ஏற்பட்ட இழப்பு யாது?

4) தீர்வைக்கு முன்னும் பின்னும் நுகர்வு மிகையாது?

5) சர்வதேசவர்த்தகம் மீதான வர்த்தகத்தடைகளில்
   அ) தீர்வைத் தடைகள் 2 தருக
   ஆ) தீர்வை அல்லாத் தடைகள் 2 தருக

6) சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பிற்கான ஆதரவான கருத்துக்களை தருக

10) 1)
அ பொருளாதார அபிவிருத்தி என்பதற்குரிய நவீன வரைவிலக்கம் யாது? (2புள்ளி)

ஆ. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு காரணி வளங்களின் விளைத்திறன் அதிகரிப்பாகும். விளைத்திறன் அதிகரிப்பை ஏற்படுத்தும் 4 காரணிகளும் எவை? (4புள்ளி)

2) பேண்தகு அபிவிருத்தி என்பதை விளக்கி, அதன் குறிக்கோள்கள் 4 தருக? (4புள்ளி)

3) அ) வறுமையை அளவிடும் பிரதான அளவு கோல்கள் எவை?
ஆ) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வறுமையின் போக்கினை பரிசீலிக்குக? (2x2=4 புள்ளி)

4) சிசு மரண வீதம் என்றால் என்ன? அண்மையாண்டில் இலங்கையில் சிசு மரண வீதத்தின் போக்கை குறிப்பிட்டு விளக்குக.

5) இலங்கையில் வயது முதிர்ந்தோர் சனத்தொகை அதிகரிப்புக்கான இரு காரணிகள் தருக. (2புள்ளி)

# பொருளியல் – மாதிரி வினாத்தாள் - 04
## புள்ளித்திட்டம்
### பகுதி –I, II

பகுதி – I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 4 | 11) 5 | 21) 2 | 31) 3 | 41) 2 |
| 2) 5 | 12) 1 | 22) 1 | 32) 1 | 42) 3 |
| 3) 2 | 13) 5 | 23) 4 | 33) 3 | 43) 5 |
| 4) 3 | 14) 4 | 24) 4 | 34) 3 | 44) 4 |
| 5) 1 | 15) 3 | 25) 5 | 35) 3 | 45) 3 |
| 6) 2 | 16) 2 | 26) 2 | 36) 3 | 46) 5 |
| 7) 5 | 17) 1 | 27) 3 | 37) 3 | 47) 2 |
| 8) 1 | 18) 2 | 28) 3 | 38) 4 | 48) 3 |
| 9) 1 | 19) 1 | 29) 3 | 39) 3 | 49) 1 |
| 10) 1 | 20) 3 | 30) 3 | 40)5 | 50) 4 |

(50x2 = 100 புள்ளிகள்)

## பகுதி – II

01)

1) வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை, விலை பொறிமுறை, திட்டமிடல் பொறிமுறை,சம்பிரதாயங்கள்
விளக்கம் (3புள்ளி)
(6புள்ளி)

2) வளங்களின் உரிமை
தீர்வு காணும் வழிமுறை
ஊக்குவிப்புக்கள்
(3புள்ளி)

3) வளப்பகிர்வு வினைத்திறனற்றதாக மாறுதல்
பொதுப்பண்டங்களையும் சமூக நலப்பண்டங்களையும் வழங்காமை
வெளிவாரி விளைவுகள் தோற்றம் பெறுதல்
பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் தோற்றம் பெறுதல் (புள்ளி4)

4) விரைவான பொருளாதார வளர்ச்சியால் சூழல் வளம் அழிதல், எதிர்கால சந்ததி பாதிக்கப்படுதல், பொருத்தமற்ற உற்பத்தியால் வளம் அழிதல் இவை பாரதூரமானசூழல் பிரச்சனைகளைத் தோற்றுவிக்க முடியும் இத்தகைய செயற்பாடுகளை இழிவாக்குதல் மூலமே பொருளாதார முறைமை ஒன்றின் வெற்றியை மதிப்பிட முடியும்.

5) வீட்டுத்துறை வருமானத்தின் மீது வரி விதித்தல்.
பொதுசன சமூக நல வேலைத்திட்டங்களை அமுல்படுத்துதல்
பொதுப்பண்டங்களையும் சமூக நலப்பண்டங்களையும் வழங்குதல்
வேலைப்பயிற்சி திட்டங்களை அமுலாக்கல்

02)

1) நுகர்வோன் மிகை

வரைபடம் மூலம் (2புள்ளி)

சமன்பாடு (1புள்ளி)

உற்பத்தியாளன் மிகை

வரைபடம் மூலம் (2புள்ளி)

சமன்பாடு (1புள்ளி)

2) அ) கிபன் பண்டங்கள்

காட்சிப்படுத்தக் கூடிய பண்டம்

உத்தேச நோக்கப்பண்டம்

செலுத்தப்படும் விலையின் மூலம் அதன் தரம் நிர்ணயிக்கப்படும் பண்டம்

(2புள்ளி)

ஆ. (இழிவுப்பண்டம்) விலைக்கும் கேள்விக்கும் இடையே எதிர்கணியத்தொடர்பு வருமானம், கேள்வித் தொகைக்கு எதிர்கணியத் தொடர்பு

(2புள்ளி)

(கிபன்பண்டம்)விலை, கேள்வி நேர்கணியத்தொடர்பு வருமானம், கேள்வித் தொகைக்கு எதிர்கணியத்தொடர்பு

(2புள்ளி)

3) அ). சமனிலை விலை = 30/= (1புள்ளி)

சமனிலை தொகை = 300 அலகு (1புள்ளி)

ஆ. வரியின் பண்நிரம்பல் சமன்பாடு

Qst = -100 + 10p (1புள்ளி)

வரியின் சமனிலை விலை = 35/=

சமனிலை தொகை = 250 அலகு (1புள்ளி)

இ. ஆரம்ப நுகர்வோன் செலவு = 30 x 300

= 9000/=

வரிக்குப் பின் நுகர்வோன் செலவு = 35 x 250

= 8750

செலவு மாற்றம் = 9000 - 8750

= 250/= (வீழ்ச்சி ) (2புள்ளி)

ஈ. வரிக்கு முன் நுகர்வோன் மிகை = 4500/=

உற்பத்தியாளன் மிகை = 4500/=

(2புள்ளி)

உ. வரிக்குப் பின் நுகர்வோன் மிகை = 3125/=

உற்பத்தியாளன் மிகை = 3125/=

(2புள்ளி)

ஊ. சமூக நல இழப்பு (ஆரம்ப நுகர்வோன் மிகை + ஆரம்ப உற்பத்தியாளன் மிகை) (வரியின் பின் நுகர்வோன் மிகை +வரியின் பின் உற்பத்தியாளன் மிகை +அரசின் வருமானம்)

= 9000 - (6250+ (10 x 250) )

= 9000 - (6250 + 2500)

= 9000 - 8750

= 250/= (6x2 = 12 புள்ளிகள்)

03)

1) குறுங்காலம் $Q = f(K, L)$
நீண்ட காலம் $Q = f(L)$

(3புள்ளி)

$Q =$ வெளியீடு
$F =$ தொழிற்பாடு
$K =$ நிலையான காரணி
$L, =$ மாறுங்காரணி

(1புள்ளி)

2) (Sunk cost)

- சந்தர்ப்பக்கிரயத்தை கருத்தில் கொள்ளாது மேற்கொள்ளப்படுகின்ற செயற்திறன் அற்ற தீர்மானத்தால் ஏற்படும் செலவு ஆழ்ந்த செலவாகும்.
- இது அமையச் செலவாகக் கருதப்படுவதில்லை
- பொருத்தமில்லாத கிரயங்களைச் சேர்த்துக் கொள்ளல்
- உதாரணம் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்து பயன்படுத்தப்படாதிருத்தல்

(4புள்ளி)

3) முயற்சியாளர் ஒருவர் உற்பத்தி செயற்பாட்டில் நிலைத்திருப்பதற்காக எதிர்பார்க்கும் குறைந்தளவு இலாபம் சாதாரண லாபமாகும்.

(2புள்ளி)


- முயற்சியாளர் எனும் உற்பததிக்காரணியின் சன்மானமாக சாதாரண இலாபம் காணப்படுகின்றது.


(1புள்ளி)

- உற்பத்திக் காரணிகளுக்கான கொடுப்பனவு உற்பத்திச் செலவாகக் கருதப்படுவதால் சாதாரண லாபம் உற்பத்திச் செலவில் சேர்க்கப்படுகின்றது.

(1புள்ளி)

4)




(1புள்ளி)

(விளக்கப்படம் 2 புள்ளி)

- தனியுரிமை
- சில உரிமைச் சந்தை
- நிறைபோட்டிச் சந்தை
- தனியுரிமை போட்டிச் சந்தை

(4புள்ளி)

04)

2) அ) உற்பத்திச் செயற்பாடுகளின் பொழுது காரணிச் சேவைகளுக்கான மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் இதற்குள் முடிவுப் பொருட்களுக்கான கொடுப்பனவும் இடைத்தரப் பொருட்களுக்கான கொடுப்பனவும் அடங்கும்

(2புள்ளி)

ஆ) இடைத்தரப் பொருட்களுக்கான கொடுப்பனவுகள் தவிர்க்கப்படும்.

(2புள்ளி)

3) நிறுவனங்கள், பெறுமானத் தேய்வு ஒதுக்கு, பகிரப்படாத இலாபம், வரி அல்லாத வருமானம் போன்றவற்றை நீக்கி விட்டுத்துறைக்கான மாற்றங்கள் அரசிற்கு கடன் கொடுத்து வீட்டுத்துறை பெறும் வட்டி என்பவற்றைக் கூட்டுதல்.

(4புள்ளி)

4) மொத்த உற்பத்தியோடு சென்மதி நிலுவையில் உள்ள வருமானக் கணக்கு நிலுவை கணக்கை கூட்டுவதன் மூலம் UNP யை கணிப்பிடலாம் மொத்த உள்நாட்டு செலவுடன் பொருட்கள் சேவைகள் வருமான கணக்கு நிலுவையில் கூட்டுவதன் மூலம் மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவை கணித்தல். (2புள்ளி)

5)

1) 500 +100 + 30 + 100 + 50 + 20 + 30 + 400
= 1330 MR

2) 1330 + 100 = 1430 MR

3) 1430 - (30 +20) + 50 = 1430 MR

4) 1430 - 50 = 1380 MR


(4x2 = 8 புள்ளிகள்)

05)

1) ஒரு நாட்டின் உற்பத்தி (y) மொத்த வேலை மட்டத்திற்கு சமமாகின்ற நிலைமை (2புள்ளி)

சமநிலையினை கீழ்வரும் இரண்டு படிமுறைகளில் அணுக முடியும்.
1) வருமான செலவு அணுகுமுறை
2) வெளிப்பாய்ச்சல் உட்பாய்ச்சல் அணுகுமுறை (2புள்ளி)

2)




(2புள்ளி)

3) $\frac{1}{1-b} = \frac{1}{1-MPC} = \frac{1}{MPS} = \frac{\triangle Y}{\triangle I}$

(ஏதாவது ஒன்றிற்கு 2 புள்ளி)

4). அ)10,000 MR

ஆ) 8000 MR

இ) 1600 மிகை

ஈ) 1400

உ) 18750

ஊ). 2.2

06)

1)

| பொருள் | 1ம் வருடம் | 2ம் வருடம் | 3ம் வருடம் |
|---|---|---|---|
| அரசி | 100 | 160 | 240 |
| மாவு | 100 | 150 | 200 |
| சீனி | 100 | 120 | 160 |
| | | 430 | 600 |

(உ +ம்) அரிசி (கணிப்பீடு)

$\frac{100}{25} \times 25 = 100$

$\frac{100}{25} \times 40 = 160$

$\frac{100}{25} \times 60 = 240$

(3புள்ளி)

2)

| பொருள் | 1ம் வருடம் | 2ம் வருடம் | 3ம் வருடம் |
|---|---|---|---|
| அரிசி | 50 x 100 = 5000 | 8000 | 12000 |
| மா | 30 x 100 = 3000 | 4500 | 6000 |
| சீனி | 20 x 100 = 2000 | 2400 | 3200 |
| | | 14900 | 21200 |
| | | 149 | 212 |

இதன்படி விலைச்சுட்டி 2ம் வருடத்தில் 149 ஆகவும் 3ம் வருடத்தில் 212 ஆகவும் அதிகரிப்பு அடைந்துள்ளது. (3புள்ளி)

3). 2ம் வருடத்தில்

$\frac{50}{100} \times 60 = 30$

3ம் வருடத்தில்

$\frac{50}{100} \times 80 = 40$

இதன் படி பொறுவிலை மட்டமானது 2ம் வருடத்தில் 30 வினாலும் 3ம் வருடத்தில் 40/= வினாலும் அதிகரிப்பு அடைந்துள்ளது.

(2புள்ளி)

4)

| <u>புதிய</u> | <u>பழைய</u> |
|---|---|
| • அடியாண்டு 2002 | 1952 |
| • பண்டக்கூடை 5வகை பண்டங்கள் | 10 வகைப்பண்டங்கள் |
| • கொழும்பு மாவட்டம் முழுவதும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. 220 பொருட்கள் | கொழும்பில்குறிப்பிட்டபிரதேசம் மட்டும் 334 பொருட்கள் |
| • விலை சேகரிக்கும் இடங்கள் அதிகம் | குறைவு. |

5). **விலைமட்டம்**
வட்டி வீதம்
நிதி முறைமையின் புதுமை
நிறுவன ரீதியான காரணி (4புள்ளி)

6). எதிர்காலத்தில் ஊக வியாபாரத்தில் எதிர்காலத்தில் விலை குறையும் என எதிர்பார்ப்போர் விற்பனை நோக்க ஊக வியாபாரிகள் கரடிகள் (Bears) எனவும்

எதிர்காலத்தில் விலை உயரும் என எதிர்பார்ப்போர் கொள்வனவு நோக்க ஊக வியாபாரிகள் (Bulls) எனவும் அழைக்கப்படும்.

(4புள்ளி)

07) 1) பிரதேச அபிவிருத்தி வங்கிகள்
2) சேமிப்பு வங்கிகள்
3) நீண்ட கால கடன் கொடுக்கும் நிறுவனங்கள்
4) வீடமைப்புக் கடன் வழங்கும் நிறுவனங்கள்
5) தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள்

2) வைப்புக்களை ஏற்றல்
கடன் வழங்குதல்

3) இலாபத் தன்மை
திரவத்தன்மை

4)

| திரவத்தன்மை | இலாபத்தன்மை |
|---|---|
| 1) வணிக வங்கியின் கையில் உள்ளது. | கடன்கள் |
| 2) மத்தியவங்கியால் இருந்து வசூலிக்க வேண்டியமீதி | முற்பணங்கள் |
| 3) திரட்டப்பட்டுக் கொண்டிருக்கும் மீதி | ஏனைய சொத்துக்கள் |
| 4) நிறைசேரி உண்டியல் | |

5) 1) ஆரம்ப வைப்பின் அளவு
   2) சட்டப்படியான ஒதுக்கீடு விதத்தின் அளவு
   3) வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான தொடர்பு

2)

| | |
|---|---|
| வைப்பு 5000 | காசு 1000 |
| | 4000 |
| 5000 | 5000 |

| | |
|---|---|
| வைப்பு 4000 | காசு 1000 |
| | 4000 |
| 4000 | 4000 |

3)1) வட்டி வீதம்
வங்கி வீதம் / ஒதுக்கு வீதம்
பகிரங்கச் சந்தை நடவடிக்கை

2)1) வங்கிகளில் மிகை ஒதுக்கு காணப்படுதல்
2) பணச்சந்தை வளர்ச்சி அடையாத நிலை

08) அ)
1) நேரில் வரிகளை குறைந்தளவில் விதிப்பது
2) நேர் வரிகளை விருத்தி முறையில் விதித்தல்
(விளக்கம் 4 புள்ளி)

ஆ)1) வரித்தளம்
2). வரி இசைவு
3) வரி வீதம்

இ)
1) 11000 பற்றாக்குறை
2) 20000 பற்றாக்குறை
3) 13000
4) 17500
5) 16000

6) பற்றாக்குறை 20000
கொடைகள் 4000
உள்நாட்டுச் சந்தைப்படுத்தல் 3000
வெளிநாட்டு உதவி 6000
வங்கியல்லா கடன் 2000
வங்கிக் கடன் 5000

7). 5000

09) 1)
அ). 100 அலகுகள்
ஆ). 400 அலகுகள் (2புள்ளி)

2). அ) 100 அலகுகள்
ஆ). 100 அலகுகள்
இ) 1000/= (5x200) (4புள்ளி)

3). A+ B = 500 /= (2புள்ளி)

4). தீர்வைக்கு முன்:-

நுகர்வு மிகை $\frac{(30 - 5) 500}{2}$

$= 6250/=$

(2புள்ளி)

தீர்வைக்கு பின் :-

நுகர்வு மிகை $= \frac{(30 - 10) 400}{2}$

$= 4000/=$

5) அ) ஏற்றுமதி வரி
இறக்குமதி வரி

(2புள்ளி)

ஆ) கோட்டாமுறை
அனுமதிப்பங்குமுறை
தன்னார்வ ஏற்றுமதிக்கட்டுப்பாடு (2புள்ளி)

6)

- வெளிநாட்டு மலிவான ஊழியத்தில் இருந்து உள்நாட்டு ஊழியத்தைப் பாதுகாத்தல்.
- உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து வேலைவாய்ப்பை பெருக்கல்
- சென்மதி நிலுவை பிரச்சனையினை தீர்த்துக் கொள்ளல்
- குழந்தை நிலை உற்பத்திகளை வளர்ச்சியடைய செய்தல் போன்றவற்றிற்கு வர்த்தகப் பாதுகாப்பு அவசியம்.

(4புள்ளி)

10) 1)

அ. பொருளாதார அபிவிருத்தி என்பது கீழ்மட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரிக்கும் அதே நேரம் மேல் மட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் குறையாதிருப்பது

ஆ.

- தொழில்நுட்ப முன்னேற்றம்
- புத்தாக்கம்
- ஆய்வு,அபிவிருத்தி நடவடிக்கைகள் (R&D)
- முகாமைத்துவ முன்னேற்றங்கள்

2) எதிர்கால சந்ததிகள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றலை விட்டுக்கொடுக்காத வண்ணம் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் அல்லது பொருளாதார சமூக மற்றும் சூழல் ஆகிய மூன்று பக்கங்களும் சமநிலையாக அபிவிருத்தி அடைவதே ஆகும்.

இதன் குறிக்கோள்கள்

1. புத்துயிரளிக்கும் வளர்ச்சி
2. வளர்ச்சியின் தரத்தை மாற்றுதல்
3. அடிப்படைத் தேவைகளை எதிர்கொள்ளல்
4. பேண்தகு சனத்தொகையை உறுதிப்படுத்தல்
5. வளங்களின் அடிப்படையைப் பேணுதலும் அதிகரித்தலும்.

3)அ) தேசிய வறுமைக்கோடு தலைக்குரிய வறுமைச் சுட்டெண் சர்வதேச மனித வறுமைக் கோடு

ஆ. வறுமை குறைவடைந்துள்ளது. தலைக்குரிய வறுமைச் சுட்டெண்
95/96 -28.8, 2005 -22.7, 2006/07-15.2

4. சிசுமரணவீதம் $= \frac{\text{வருடத்தினுள் 1வயதுக்கு குறைந்தஇறப்புக்களின் தொகை}}{\text{உயிரோடு பிறந்த குழந்தைகளில் தொகை}} \times 1000$

2004 = 12

2010 இல் = 8.5 வீழ்ச்சியடைந்து வருகிறது.

இலங்கையில் கல்வி, சுகாதார மருத்துவ வசதிகள் முன்னேற்றம் காரணமாக சிசு மரண வீதம் குறைவாக உள்ளது.

5)

- குறைவான கருவள வீதம்
- ஆயுட்காலம் உயர்வு
- சுகாதார மருத்துவ வசதிகள் முன்னேற்றம்

பிள்ளையார் அச்சகம், நல்லூர்